# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு



CPL 638174

## மாணவர் மலர்

தஞ்சாவூர் - 1995

-ரவி

CONNEMARA PUBLIC LIBRARY
13 JUN 2001
CHENNAI-600 008

எட்டாவது

# உலகத்தமிழ் மாநாடு

தஞ்சாவூர்
1995

# மாணவர் மலர்



உலகுக்கே பொதுமறை தந்த
ஒப்பில்லாப் பேரறிஞர் திருவள்ளுவர்

NNEMARA PUBLIC L



His Excellency Dr. Shanker Dayal Sharma,
President, Republic of India



His Excellency Shri K.R. Narayanan,
Vice-President of India

NNEMARA



Hon'ble Thiru P.V. Narasimha Rao,
The Prime Minister of India

CHENNAI-600 001



மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

सत्यमेव जयते

राष्ट्रपति
भारत गणतंत्र
PRESIDENT
REPUBLIC OF INDIA

## MESSAGE

I am very glad to learn that the VIII International Conference - Seminar of Tamil Studies is being held at Thanjavur in Tamil Nadu from 1-5 January, 1995.

The history of Tamils has been a source of pride not only for the Tamil people but for the entire nation. Tamil culture has been characterized by rich language, a body of literature spanning two millennia, and exquisite religious and secular music and art. The creativity of Tamil people found expression in various fields of human endeavour and has significantly contributed to our composite heritage.

Among the oldest living languages, Tamil grammatical works date back to 3rd century B.C. The language itself has an extraordinary continuity, both in its classical and colloquial forms. Its vitality is supported by a great tradition of written and oral expression. The poetry of the Sangam period, the Thirukkural, Cilappatikaram and Manimekalai are works unrivalled in their fame. The hymns of Nayanmars and Alvars, epics like Civakachintamani or the Kambaramayanam, testify to a quality of literary outpouring that has been the hallmark of Tamil society in every phase of its evolution. In the modern era too, our National Movement found no better voice than in the great poet Subramania Bharatiyar.

The values emphasised in their history underlines a society committed to humanity and its progress. While appreciating valour and glory, Tamils have sought greater attributes in their heroes: the integrity of a Nedunceliyan, the intellect of a Mahendravarman or the culture of a Rajaraja Chola.

Pluralism has long been part of Tamil cultural tradition. Tamil Nadu is a source of both Saivite and Vaishnavite philosophies. It has produced masterpieces reflecting Jain and Buddhist belief. A substantial body of work exists on Islam and Christianity as well. Thus an example has been set of different faiths coexisting in harmony, enriching each other through their interaction.

....2/-

सत्यमेव जयते

राष्ट्रपति
भारत गणतंत्र
**PRESIDENT**
**REPUBLIC OF INDIA**



In the course of their long history, Tamils have an impressive list of achievements to their credit. They built great temples, constructed irrigation systems, and established early urban settlements. Their dynamism was evident in domestic and international commerce. Even in ancient times, Tamils traded with Greece and Rome, with the Arabs, South East Asia and China. Their adventurous spirit led them to settle in various corners of the globe. To the 60 million Tamils in India can be added communities in Malaysia and Myanmar (Burma), Thailand and Indo-China. South and East Africa, Sri Lanka, Fiji and Mauritius and in distant West Indies.

Wherever they may be, Tamils have maintained their identity. This is but natural to a people whose ancient heritage shapes contemporary values. Intellect and industry are qualities associated with them. They are in the forefront of our efforts in national reconstruction, in economic and social advancement, in development of human resources and in facing global competition.

This conference provides an opportunity for Tamil intellectuals from all corners of the globe to come together. In addressing the theme of the conference - "The contribution of Tamil culture to the 21st Century", they must draw on the traditions of a rich culture to meet the challenges of the future.

I send my best wishes on the occasion of this Conference.

(SHANKAR DAYAL SHARMA)

New Delhi,
December 24, 1994

उप - राष्ट्रपति, भारत
नई दिल्ली
VICE-PRESIDENT
INDIA
NEW DELHI

December 23, 1994.

**MESSAGE**

I am glad to know that the International Association of Tamil Research under the aegis of the Government of Tamil Nadu is holding the Eighth International Conference of Tamil Studies at Thanjavur from 1st to 5th January, 1995.

One of the most rich and ancient languages of the world, Tamil has contributed to literature, music and culture. Its impact on society has been manifold and enriched our composite culture.

It is a dynamic and creative language with a vast treasure of ideas that has fascinated the Indian genius and provided inspiration as well as thought to many. In a world of fast diminishing frontiers, the bonds of language have to reaffirm the spirit of international understanding. I am sure that the Conference will dwell upon the achievements made and also provide an impetus to the growth of Tamil language the world over.

I have great pleasure in sending my good wishes to the organisers and greetings to the participants for the success of the Conference.

Narayanan K.R.

(K.R. NARAYANAN)

ஜெ. ஜெயலலிதா

முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 10.12.1994

## எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, தஞ்சாவூர்

## வாழ்த்துச் செய்தி

"தமிழ்கூறு நல்லுலகம்" புகழ்ந்து போற்றிடும் வண்ணம், தமிழ் மண்ணிற்கும், தமிழ்மொழிக்கும் தகைமை சேர்த்திட, தஞ்சைத் தரணியில் கொண்டாடப்படுகின்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு மேலும் சிறப்புச் சேர்க்க 'மாணவர் மலர்' ஒன்று வெளியிடப்படுவதை அறிந்து நான் பெரிதும் அகமகிழ்கின்றேன்.

தமிழ்மொழி வளர்ச்சியில், இளைய தலைமுறையினரின் ஆர்வமும் ஈடுபாடும், மிகவும் அவசியமாகும். புதுமைக் கண்ணோட்டத்தில் எதையும் அணுகும் இளைய தலைமுறையினர் தமிழ்மொழியை 21ஆம் நூற்றாண்டிற்கு உகந்ததாக உருவாக்கிட, இந்த மாநாடு ஒரு தூண்டுகோலாக அமையும் என்று நம்புகின்றேன்.

வளர்ந்து வரும் தலைமுறைக்கு, இளமை உணர்வு மிக்க தமிழ் இலக்கியங்கள் என்றும் வழிகாட்டிகளாகத் திகழ்ந்து வருகின்றன. அந்த வகையில், இந்த மாநாடு மாணவ மாணவிகளிடையே ஒரு புதிய உணர்வினை ஏற்படுத்தி, தமிழுக்கு மேலும் இளமையைச் சேர்க்கும் என்று நம்புகின்றேன்.

மாணவப் பருவம் என்பது வாழ்க்கையின் ஓர் இனிமையான வசந்த காலம் ஆகும். இளைய தலைமுறைக்கு உற்சாகமூட்டும் வண்ணம், "ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா!" என்று பாடிய மகாகவி பாரதியார் அவர்களும், "புதியதோர் உலகம் செய்வோம்" என்று அறைகூவல் விடுத்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களும் வாழ்ந்த நாட்டில், தமிழ் இலக்கியம் என்றென்றும் இளமையோடும், இளமை உணர்வோடும் விளங்கும் என்பது உறுதி.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி உலகமெங்கும் வாழ்கின்ற தமிழ் உணர்வு மிக்க இளைய சமுதாயத்தினரின் தமிழ்ப் பற்றை உலகிற்கு வெளிப்படுத்தும் 'மாணவர் மலர்', நன்முறையில் அமைந்து, புகழ்மணம் பரப்பும் என்று நம்புகிறேன். இந்தப் புனிதப்பணியில் ஈடுபட்டுள்ள இளம் நெஞ்சங்களுக்கு எனது உளங்கனிந்த நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஜெ. ஜெயலலிதா,

தமிழக முதலமைச்சர்

# அறிமுகம்

**மாண்புமிகு எஸ்.டி. சோமசுந்தரம்**

வருவாய்த்துறை அமைச்சர்

மாநாட்டு மலர்க்குழுத் தலைவர்

இமயத்தின் எல்லை கண்ட
நம்தமிழ் என்றும் வாழ்க!

தமிழ் அறிஞர்களும் வல்லுநர்களும் கூடி உரையாடுவதும் ஆய்வுசெய்வதுமே மாநாடுகளில் நடைமுறை நிகழ்ச்சி. அதற்கென ஒரு மலர் வெளியிடுவதும் வழக்கத்தில் உள்ள ஒன்று.

ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமக்கே உரித்தான தொலைநோக்கோடு ஒரு மகிழ்ச்சிக்குரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். எதிர்காலத்தில் தமிழின் ஆக்கமும், தமிழகத்தின் உயர்வும் இன்றைய மாணவ மாணவியரின் சீரிய பணியைப் பொறுத்தே அமையும் என்ற உண்மையை நன்கறிந்த புரட்சித்தலைவி அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாணவ சமுதாயம் தனக்குரிய பங்கினைப் பெறவும், பணியினை ஆற்றவும் வழிசெய்துள்ளார்கள். அதன் விளைவுதான் இந்த மாணவர் மலர்.

மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தவும், மாணவ சமுதாயத்தில் உள்ள பிற்கால அறிஞர்களையும், வல்லுநர்களையும் அடையாளம் காணவும், மாணவர்களிடையே கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவை ஏற்படுத்தி, பரிசுகள் வழங்கி, மாணவர்களை ஊக்கப்படுத்தியுள்ளார்கள். இந்த மலரில் கண்ட மாணவமணிகளின் சிறந்த படைப்புகள் நமக்கு வருங்காலத் தமிழகத்தைப்பற்றிய நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

இன்றைய மாணவர்கள்தாம் நாட்டின் நாளைய தலைவர்கள். அவர்களின் கல்வியறிவும், பயிற்சியும், ஊக்கமும், மொழிப்பற்றும், தொண்டு உள்ளமும்தான் தாய்மொழியின் வளர்ச்சிக்கு உரம்; மொழிக்கு வரும் இன்னல்களுக்கு அரண்; தமிழகத்தின் எழுச்சிக்கும், ஏற்றத்துக்கும் அடிப்படை.

இந்த உயர்ந்த நோக்கோடு இம் மலர் மலர்கின்றது; மணம் தருகிறது. போட்டிகளில் பங்குபெற்ற மாணவமணிகளுக்கும், அவர்களுக்கு ஊக்கம் அளித்த கல்வி நிலையத்தார்க்கும் பெற்றோர்க்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

மாணவர் மலரைக் கண்கவர் அழகு பெட்டகமாக உருவாக்கும் பணியில் ஈடுபட்ட அனைவரும், மலர்க்குழு உறுப்பினர்களும் நம் பாராட்டுக்குரியவர்கள்.

இம் மலரை உருவாக்கும் பணியினை எனக்களித்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கட்கு நான் கடப்பாடுடையேன்.

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் வாழ்வு கண்டார்.

(எஸ். டி. சோமசுந்தரம்)
தலைவர்
மாநாட்டு மலர்க்குழு.

# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு
## தஞ்சாவூர் - 1995

## மலர்க்குழு

| | |
|---|---|
| *தலைவர்* | மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்<br>**திரு. எஸ். டி. சோமசுந்தரம்** |
| *துணைத் தலைவர்* | மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்<br>**திரு. மு. ஆனந்தன்** |
| *உறுப்பினர் செயலர்* | திரு. சா. பா. இளங்கோவன், இ. ஆ. ப.<br>*செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை* |
| *தனி அலுவலர்* | திரு. வெ. இறையன்பு, இ. ஆ. ப. |
| *அலுவல் உறுப்பினர்* | திருமதி. ஈ. வெ. கி. சுலோச்சனா சம்பத்<br>*தலைவர் - நிர்வாக இயக்குநர்*<br>*தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்* |
| *மாணவர் மலர் ஒருங்கிணைப்பாளர்* | முனைவர் சி. செல்வராசு, எம். ஏ., எம். ஏ., பிஎச். டி.<br>*தமிழ் வளர்ச்சி இயக்குநர்* |
| *உறுப்பினர்கள்* | திரு. கடம்பூர் எம். ஆர். ஜனார்த்தனன்<br>*நாடாளுமன்ற உறுப்பினர்*<br>திரு. கு. தங்கமுத்து<br>*சட்டமன்ற உறுப்பினர்*<br>திரு. இராம. இராமநாதன்<br>*சட்டமன்ற உறுப்பினர்*<br>திரு. ஒ. எஸ். மணியன்<br>திரு. சேக்கிழார் அடிப்பொடி தி. ந. இராமச்சந்திரன், பி. காம்., பி. எல்.<br>டாக்டர் இரா. நாகசாமி, எம். ஏ., பிஎச். டி.<br>திரு. டி. வி. கோபாலய்யர், எம். ஏ.<br>பாவலர் பாலசுந்தரனார்<br>திரு. எம். தேனப்பன்<br>முனைவர் பழனி அரங்கசாமி, எம். ஏ., பிஎச். டி.<br>திரு. குடவாயில் பாலசுப்பிரமணியன், எம். ஏ.<br>புலவர் ப. வே. நாகராசன்<br>திரு. சி. கோவிந்தராசனார்<br>திரு. மீ. இராமதாசு<br>பன்மொழிப் புலவர் மு.கு. ஜகந்நாதராஜா<br>முனைவர் ச. கண்ணையன்<br>முனைவர் ராசம்மாள் பா. தேவதாஸ்<br>கவிஞர். அ. மறைமலையான்<br>டாக்டர் பி. பி. ராஜன்<br>டாக்டர் எம். முகமது அபிபுல்லாகான்<br>முனைவர் டி. நடராசன் |

# மலர் இதழ்கள்


1. தமிழிலக்கியத்தில் வரலாற்றுக் கூறுகள்
   செல்வி ஆ. மேரி இமாகுலேட் ... *1*

2. தமிழிலக்கியத்தில் சமயப் பொறை
   செல்வன் மா. கு. விநாயகம் ... *6*

3. யாதும் ஊரே யாவரும் கேளிர்
   செல்வி தி. தமிழ்க்கொடி ... *11*

4. தமிழிலக்கியத்தில் சமயப் பொறை
   செல்வன் அ. செந்தில் குமரன் ... *13*

5. நாட்டுப்புற இலக்கியங்கள் காட்டும் சமுதாய நிலை
   செல்வி எஸ். செல்வசுந்தரி ... *18*

6. யாதும் ஊரே யாவரும் கேளிர்
   செல்வன் ஆ. காமராசு ... *24*

7. திரைப்படப் பாடல்களில் இலக்கியப் பாங்கு
   செல்வன் ஆ. கோதண்டபாணி ... *26*
   செல்வன் ஆர். ஸ்ரீதர் ... *32*

8. யாதும் ஊரே யாவரும் கேளிர்
   செல்வி. தி. பண்பழகி ... *39*

9. புதுக்கவிதைகளில் சமுதாய நோக்கு
   செல்வன் ச. மகாதேவன் ... *41*

10. தமிழில் 'ஐக்கூ' கவிதைகள்
    செல்வன் மு. சண்முகராசன் ... *49*

11. இனி ஒரு விதி செய்வோம்
    செல்வன் செ. முத்தரசப்பன் ... *53*

12. தமிழும் கலைகளும்
    செல்வன் க. தமிழ்ச்செல்வன் ... *55*

13. இன்றைய நாடக வளர்ச்சி
செல்வன் பா. அருண்குமார் ... 61

14. இனி ஒரு விதி செய்வோம்
செல்வன் ந. சுந்தரமூர்த்தி ... 69

15. தமிழும் அறிவியலும்
செல்வி சௌ. கீதா ... 71
செல்வி ம. கண்ணம்மாள் ... 76

16. இனி ஒரு விதி செய்வோம்
செல்வன் போ. மணிவண்ணன் ... 81

17. தமிழ்ப் பயிற்று மொழி - சிக்கல்களும் தீர்வுகளும்
செல்வி சே. செந்தமிழ்ப் பாவை ... 83
செல்வி அ. மாதவி ... 88

18. இக்காலக் கவிதைகளில் உணர்த்தப் பெறும் சமுதாயச் சிந்தனைகள்
செல்வன் இராம. இரவிச்சந்திரன் ... 95
செல்வி இரா. பெ. செயலெட்சுமி ... 101

19. ஆன்மீகமும் அறிவியலும்
செல்வன் இ. சேனாவரையன் ... 107

20. தமிழிலக்கியங்களில் அறிவியல் கோட்பாடுகள்
செல்வன் த. இளஞ்செழியன் ... 113
செல்வி ந. தேவி ... 120

**(முகப்போவியம் - காலத்தால் அழியாத கற்சுவடுகள்)**
**கல்லூரி மாணவர்கள் ஓவியப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.**
**பா. பாரிவள்ளல்,**
கவின்கலை, இளங்கலை, முதலாம் ஆண்டு,
பாரதியார் பல்கலைக் கூடம்,
பாண்டிச்சேரி.

**(பின்புற ஓவியம்)**
**கல்லூரி மாணவர்கள் ஓவியப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது.**
**ஆர். செந்தில்குமார்,**
கவின்கலை, இளங்கலை, நான்காம் ஆண்டு,
அரசு கலைத் தொழிற் கல்லூரி.
கும்பகோணம்.

# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சாவூர் - 1995

## பள்ளி மாணவர்கள் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

முதற்பரிசு



செல்வன் கே. கமலக்கண்ணன்,
11 ஆம் வகுப்பு, அரசு ஆண்கள்
மேனிலைப் பள்ளி,
திருச்செங்கோடு,
சேலம் மாவட்டம்.

இரண்டாம் பரிசு



செல்வி ஜே. சுல்தானா திவ்ரஷ்
6 ஆம் வகுப்பு,
விஜய் வித்யாலயா
மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி,
தருமபுரி, தருமபுரி மாவட்டம்.

மூன்றாம் பரிசு



செல்வன் எஸ். சிராஜுதீன்,
11 ஆம் வகுப்பு,
தேசிய மேனிலைப் பள்ளி,
மன்னார்குடி.

# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சாவூர் - 1995

## கல்லூரி மாணவர்கள் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

முதற்பரிசு



**செல்வன் கே. தர்ப்பகராஜ்,**
குற்றவியல் துறை,
முதுகலை முதலாம் ஆண்டு,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

இரண்டாம் பரிசு



**செல்வி ஜி. கற்பகம்,**
முதலாம் ஆண்டு வேதியியல்,
எப். பி. சி. மகாலட்சுமி கல்லூரி,
தூத்துக்குடி - 628 002.

மூன்றாம் பரிசு



**செல்வன் எம். சத்தியன்,**
வணிகவியல் முதலாம் ஆண்டு,
அரசினர் கலைக் கல்லூரி,
மேலூர் - 625 106.
மதுரை மாவட்டம்.

# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் 1995

## தொழிற்கல்வி மாணவர்கள் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

முதற்பரிசு



**செல்வி ப. காயத்திரி**
எஸ். ஆர். எம். உடலியக்கவியல்
கல்லூரி, இராமாவரம்,
சென்னை - 600 089.

இரண்டாம் பரிசு



**செல்வன். தே. ச. சரவணன்,**
இரண்டாம் ஆண்டு, கால்நடை
மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி
நிலையம், நாமக்கல்.

மூன்றாம் பரிசு



**செல்வன் இ. பரந்தாமன்,**
முதலாம் பி. எல். சி.,
டாக்டர் அம்பேத்துக்கர்
சட்டக் கல்லூரி,
சென்னை - 600 104.

# தமிழிலக்கியத்தில் வரலாற்றுக் கூறுகள்

செல்வி ஆ. மேரி இமாகுலேட்

கடந்தகால நிகழ்வுகளின் பதிவு வரலாறாகும். உலகோர் வியக்கும் இலக்கியங்களையும் உரைகளையும் பழந்தமிழர்கள் உருவாக்கியுள்ளனர். எனினும் பழந்தமிழர் தம் வரலாற்று நிகழ்வுகளை ஏடுகளில் எழுதிவைக்கும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை; இருப்பினும் தமிழ்ச் சான்றோர் பாடல்களில் மிகுதியான வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

உலகில் பெரும்பான்மையான நாடுகளின் வரலாறு பாடல்கள், கதைகள் வாயிலாக உருவாக்கப்பெற்றுள்ளது. அப்பாடல்களும் கதைகளும், காலஞ்சென்ற வீரர்கள், அரசர்கள், நல்லோர், தீயோர் ஆகியோரின் வரலாறுகளையோ, வரலாறுகளில் காணத்தக்க சிறப்பான நிகழ்ச்சிகளையோ கொண்டுள்ளன. அத்தகைய பாடல்களும், கதைகளும், பிற்கால அறிஞர்கட்கு வரலாறு காட்டும் அடிப்படையாக விளங்கின. தமிழ்மொழியில், பழங்காலத்தில் தோன்றிய பாடல்கள் அக்கால நாட்டு வரலாற்றினையும், சமுதாய வாழ்வியலையும், நாகரிகப் பண்பினையும் நன்கு விளக்கும் கருவூலமாகத் திகழ்வதை அறிய முடிகிறது. தமிழர் வாழ்வியலோடும், தமிழ் இலக்கியத்தோடும் பின்னிப் பிணைந்துள்ள வரலாற்றுக் கூறுகளை இக் கட்டுரை விளக்குகிறது.

### அயல்நாட்டவர் பற்றிய வரலாற்றுக் கூறுகள்

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தில் அயல்நாட்டவர் குடியேறியிருந்தனர் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள. பல நாடுகளிலிருந்து வந்த, பலமொழி பேசும் மக்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் கலந்து வாழ்ந்தனர் என்பதை,

> "மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
> புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
> முட்டாச் சிறப்பின் பட்டினம் "[1]

என்னும் அடிகளால் அறியலாம். இவர்கள் வணிகர்களாகவும் வேந்தர்களின் பணியாள்களாகவும் பணிபுரிந்தனர்.

கிரேக்க நாட்டினரை 'யவனர்' என்று தமிழ் மக்கள் அழைத்தனர். பாசறையில் அரசனுக்குக் காவலாயிருந்த யவனரைப் பற்றி,

> "மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
> வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் "[2]

என்று முல்லைப்பாட்டுக் கூறுகிறது. அரசர்கள், தங்கள் அந்தப்புரத்தில் அந்நிய நாட்டு ஊமையர்களையே

அறிவு அற்றம் காக்கும் கருவி.
- திருக்குறள் : 421

**MERIDIAN APPARELS,** 149, Eldams Road, Teynampet, Madras - 600 018. Phone : 452813

காவலர்களாக நியமித்திருந்தனர். இவர்கள் 'மிலேச்சர்' என்று அழைக்கப்பட்டனர். இதனை,

"உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர் உழைய ராக "[3]

என்னும் அடிகள் உணர்த்தும். யவன நாட்டில் செய்யப்பட்ட பாவை விளக்குகள் தமிழகக் கோயில்களையும் அரண்மனைகளையும் அலங்கரித்தன என்னும் செய்தியை,

"யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந்து ஐயகல் நிறையநெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர்எரி "[4]

என்று நெடுநல்வாடை கூறுகிறது. யவன நாட்டிலிருந்து தமிழகம் வந்த பலபொருள்களுள் மதுவும் ஒன்று என்பதை,

"யவனர், நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப "[5]

என்று புறநானூறு கூறுகிறது.

யவன நாட்டு மரக்கலங்கள் பொன்னை ஏற்றிவந்து அதற்குப் பதிலாகத் தமிழகத்திலிருந்து மிளகை ஏற்றிச் சென்றன. இதனை,

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும் "[6]

என்று அகநானூறு கூறுகிறது. இவ்வாறு யவனர் போன்ற அயல்நாட்டவர் தமிழர்களோடு தொடர்பு கொண்டிருந்த வரலாற்று உண்மையைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த அழகிய மண்டபம் பல நாட்டு வினைஞர்களாலும் கட்டப்பட்டது என்பதனை,

"மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடுங் கூடி "

என்னும் அடிகளால் அறியலாம். இதனால் அயல்நாட்டவர் தமிழகத்திற்கு வந்து தமிழக மக்களோடு கலந்து வாழ்ந்திருந்தனர் என்ற வரலாற்று உண்மையையும் அறிகிறோம்.

## இந்திய வரலாற்றுக் கூறுகள்

இந்திய வரலாற்றோடு தொடர்புடைய சில நிகழ்ச்சிகளும் பெயர்களும் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. நந்தர்கள் என்போர் பாடலியை ஆண்ட அரசருள் ஒரு பிரிவினர் ஆவர். நந்தருள் ஒருவனால் ஈட்டப்பட்டுப் பாடலியில் திரண்டிருந்த பெரும் பொருளைப் பின்னர் மாற்றார் படையெடுப்பினால் அழியாவண்ணம் கங்கையாற்றின் அடியில் சுருங்கை செய்து மறைத்துவைத்தனர் என்ற வரலாற்றுச் செய்தியை,

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇ, கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ? "[7]

என்று மாமூலனார் பாடுகின்றார்.

நந்தனது பெருஞ்செல்வம் 'மகாபதுமம்' என்னும் பேரெண் அளவு நிதியம் படைத்தது. அப் பெருஞ் செல்வத்தால் அவன் 'மகாபதும நந்தன்' என்று வடநூல்களால் அறியப்படுகின்றான். இதனை அகநானூறும்,

"நந்தன் வெறுக்கை "[8]

என்று சுட்டுகிறது.

தமிழகத்தில் மோரியர் படையெடுப்பு நிகழ்ந்த வரலாற்றுச் செய்தி சங்க இலக்கியத்தில் குறிக்கப் பட்டுள்ளது. சந்திரகுப்த மோரியன் மகனான பிந்துசாரன் காலத்தில் இப் படையெடுப்பு நிகழ்ந்திருக்கலாமென வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இப்படையெடுப்பை,

"முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு "[9]

என்று அகநானூற்று அடிகள் சுட்டும். மோரியர் படையெடுப்பைப் பற்றிய குறிப்புகளும் இந்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க செய்திகளாகும். சங்ககாலப் புலவர்கள் இச் செய்திகளை நன்கு அறிந்திருந்தனர் என்பதற்கு மேற்குறித்த காட்டுகளே சான்றுகளாகும்.

சேரமன்னருள் ஒருவனான பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் பாரதப்போரில் இருதிறத்துப் படைகட்கும் பெருஞ்சோறு அளித்த செயலை,

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய் "[10]

என்று புறநானூறு கூறுகிறது.

பாணர்கள் என்போர் தமிழகத்தின் வடக்கே இருந்து ஆட்சி செய்துள்ளனர். வடஆர்க்காடு மாவட்டத்தின்

நமது மேன்மைக்கு - நமது தகுதிக்கு - நமது முறபோக்குக்கு ஏற்றமொழி,
தமிழைவிட மேலான மொழி இந்நாட்டில் இல்லை.

- தந்தை பெரியார்

**WACZECH LEATHER PRODUCTS,** 96/2, Anna Salai, Nagalkeni, Chromepet, Madras - 600 044. Phone : 2351411

வடமேற்குப் பகுதியும் சித்தூர் மாவட்டத்தின் மேற்குப் பகுதியும் அடங்கிய நிலப் பரப்பு 'பெரும்பாணப்பாடி' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது. இப்பகுதியைக் கல்லாடனார்,

"விழவயர்ந் தன்ன கொழும்பல் திற்றி
எழாஅப் பாணன் நன்னாடு " [11]

என்று வருணிக்கின்றார்.

ஆர்க்காடு பண்டைக்காலத்தில் சோழமன்னர் களால் ஆட்சி செய்யப்பட்டது என்ற குறிப்பு,

"படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மறுகின் ஆர்க்காட்டு ஆங்கண் " [12]

என்று காணப்படுகிறது. மேலும், கங்கர்கள் தழைக்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்றும், திரையர் தொண்டை மண்டலத்தை ஆண்டனர் என்றும் அகநானூறு கூறுகிறது.

## வடவர் தொடர்பு பற்றிய வரலாற்றுக் கூறுகள்

வடநாட்டவர்கள் தமிழ் மக்களோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்னும் செய்தியைத் தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. வடநாட்டிலுள்ளார் கொண்டு வந்த வெள்ளிய நிறத்தையுடைய சிலாவட்டம் தென்திசைச் சந்தனத்தோடு பயன்படாமல் கிடந்தது என்னும் செய்தியை,

"வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்ப " [13]

என்னும் நெடுநல்வாடை அடிகள் உணர்த்தும்.

யானைப் பாகர்கள் யானையை அடக்க வடமொழியைப் பயன்படுத்தினர். அம் மொழியை அவர்கள் செவிவாயிலாகக் கேட்டறிந்திருந்தனர். இதனை,

"கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்ப " [14]

என்னும் அடிகள் காட்டும்.

ஆரியப் படையினரைத் தமிழ் வேந்தர்கள் முறியடித்து இமயத்தில் விற்பொறித்த வரலாற்றுச் செய்தி பல இலக்கியங்களில் காணப்படுகிறது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேரமன்னன் வடவரை அடக்கி வெற்றி கொண்ட செய்தி,

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி " [15]

என்று பரணரால் புகழப்படுகிறது. மேலும், புலவர் குமட்டூர்க் கண்ணனார் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வடவரை வெற்றிகொண்ட சிறப்பை,

"பேரிசை மரபின் ஆரியர் வணக்கி " [16]

என்றும்

"ஆரியர் துவன்றிய பேரிசை இமயம் " [17]

என்றும் பாடுவதால், வடநாட்டுப் படையெடுப்புப் பற்றிய வரலாற்றுக் குறிப்பை அறிகின்றோம்.

சோழ நாட்டிலுள்ள வல்லத்தின் புறத்தே, ஒருகால் ஆரியர் படையெடுத்து வந்தனர். அவர்களைச் சோழர்கள் விரட்டியடித்து வெற்றி கொண்டனர் என்பதை,

"மாரி அம்பின் மழைத்தோற் சோழர்
வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
ஆரியர் படையின் " [18]

என்று அகநானூறு குறிப்பிடுகிறது.

## பேரரசர்கள் பற்றிய வரலாற்றுக் கூறுகள்

தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவரும் ஆண்டனர். சோழ மரபிலும், பாண்டிய மரபிலும் வீரர் பலர் இருந்துள்ளனர். அவர்கள் புலவர் பாடும் பெருமைக்குரியவர்களாகவும் விளங்கினர். இருப்பினும் சோழரைப் பற்றியோ பாண்டியரைப் பற்றியோ தனித்தனி நூல்கள் அமையவில்லை. ஆனால், சேரமன்னர்களைப் பற்றிய முறையான வரலாற்றைப் பதிற்றுப்பத்தின் வாயிலாக அறியமுடிகிறது. பதிற்றுப்பத்து, பெயரால் நூறு பாடல்களின் தொகுப்பு என அறியப்படினும், இன்று முதற்பத்தும், இறுதிப்பத்தும் நீங்கலாக, எண்பது பாக்களே கிடைக்கப் பெற்றுள்ளன. இப் பாடல்களின் மூலம் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் முதல் இளஞ்சேரல் இரும்பொறை ஈறாக ஆண்ட சேர மரபினரை வரலாற்றுக் கண்கொண்டு ஆராய இந்நூல் பெருந்துணை புரிகிறது.

கரிகாற் பெருவளத்தான் வெண்ணிப்பறந்தலையில் சேரமான் பெருஞ்சேரலாதனோடு போரிட்டு அவனையும் அவனுக்குத் துணையாக வந்த பாண்டியனையும் வென்றான். போரில் தோற்ற சேரலாதன் புறப்புண்பட்டு நாணி வடக்கிருந்தான் என்னும் குறிப்பை,

"தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன் " [19]

மாணவர்கள் காளைப் பருவத்தினர்; கலை பயிலும் நிலையினர்;
போர்ப்படையின் ஈட்டி முனைகள்.

- பேரறிஞர் அண்ணா

**TTK PHARMA LIMITED,** Printing Division, 328, GST Road, Chrompet, Madras - 600 044. Phone : 401824, 401865

என்று கழாத்தலையார் கூறுகிறார். இவ் வரலாற்றுச் செய்தியை வெண்ணிக் குயத்தியார்,

"கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலக மெய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே "[20]

என்று பாடுகிறார்.

வாகைப்பறந்தலை என்னும் போர்க்களத்தின்கண் கரிகாற் பெருவளத்தான் தன்னை எதிர்த்த ஒன்பது மன்னர்களையும் தோற்றோடச் செய்த வரலாற்று நிகழ்ச்சி,

"வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
பீடில் மன்னர் போல
ஓடுவை "[21]

என்று பரணரால் பாடப்பெற்றுள்ளது.

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் இளம்பருவத்தில் தலையாலங்கானம் என்னுமிடத்தில், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையோடு போர் செய்து அவனைச் சிறைப்படுத்தியதோடு அவனைச் சார்ந்தோரையும் வென்றான் என்ற குறிப்பு,

". . . . . . . . . . . . . . . . . . . . மலர்தார்
மையணி யானை மறப்போர்ச் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை
உடன்இயைந்து எழுந்த இருபெரு வேந்தர்
கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி "

என்று பாடப்படுகிறது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடல் நடுவே பகைவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்து அவர் காவல் மரமாகிய கடம்பினை வெட்டி இமயமலையில் தன் முன்னோரை ஒப்ப வளைந்த வில் இலச்சினையைப் பொறித்தான் என்பதை,

"வலம்படு முரசிற சேர லாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து இமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து "[22]

என்று மாமூலனார் பாடுகின்றார். செங்குட்டுவன் எடுத்த கண்ணகி விழாவில்,

"அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்"

கலந்துகொண்டனர் என்ற குறிப்பு, சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.

குறுநில மன்னர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளையும் தமிழ் இலக்கியங்களில் காணமுடிகிறது. தமிழகத்தில் வாழ்ந்த வள்ளல்கள் எழுவரைப் பெருஞ்சித்திரனார்,

"பறம்பிற் கோமான் பாரி"

"கொல்லி யாண்ட வல்வில் ஓரி"

"மாரி ஈகை மறப்போர் மலையன்"

"கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினி"

"பெருங்கல் நாடன் பேகன்"

"மோசி பாடிய ஆய்"

" . . . . தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளி "[23]

என்று புகழ்ந்து கூறும் வகையில் அவர்களைப் பற்றிய வரலாற்றுச் சிறப்பை அறியமுடிகிறது.

மலையமான் திருமுடிக்காரி ஓரியைக் கொன்றான். இதனை,

"ஓரிக் கொன்ற ஒருபெருந் தெருவில்
காரி புக்க நேரார் புலம்போல் "[24]

என்று கபிலர் பாடுகின்றார்.

கொல்லிமலையின் தலைவன் ஓரி; அம்மலையில் அருவி உண்டு; சிறந்த பல செல்வங்கள் உண்டு; தெய்வததால் காக்கப்படுவது அம்மலை; அம்மலையின் மேற்குப் பகுதியில் எப்போதும் அழியாமல் வாழ்கின்ற கொல்லிப்பாவை என்னும் தெய்வம் உண்டு என்ற வரலாற்றுச் செய்திகளை,

"செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வம் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு "[25]

என்று பரணர் பாடுகின்றார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்களைத் தலைவியின் எழிலுக்கு ஒப்பிட்டுக் கூறுவதன் மூலம் பண்டைத் தமிழ் நகரங்களின் மாண்பினை அறியமுடிகிறது:

"துறைகெழு மாந்தை அன்ன இவள்நலம்
கடல்கெழு மாந்தை"

எந்த ஒரு மொழியின் சிறப்பும் பெரும்பாலும் அம் மொழியின் மூலம்
அறியக் கிடைக்கும் கருத்துகளைப் பொறுத்துதான் இருக்கும்.

- தந்தை பெரியார்

SORNAM TANNERS, 249, GST Road, Chrompet, Madras - 600 044. Phone : 402539

"தொண்டி யன்ன பணைத்தோள
ஒண்டொடி யரிவை"

"வெல்போர்ச் சோழர் ஆமூரன்ன இவள்நலம்"

என்னும் அடிகள் இதற்குச் சான்றாவன.

பிற்கால இலக்கியங்கள் பலவற்றிலும் வரலாற்றுக் கூறுகள் காணப்படுகின்றன. பாவேந்தர் பாரதிதாசன்,

"ஆண்டநாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப்
பாண்டிய மன்னர் மீண்டது போல "

என்னும் குறிப்பைக் 'குடும்ப விளக்கு' என்னும் காப்பியத்தில் கூறுகின்றார். இவ்வாறு தமிழிலக்கியங்களில், அயல்நாட்டவர் பற்றியும், வடநாட்டவர் பற்றியும், இந்திய நாடு பற்றியும், தமிழக மன்னர்கள் பற்றியும், பல வரலாற்றுக் குறிப்புகளைப் புலவர்கள் புதைபொருளகளாக விட்டுச் சென்றுள்ளனர். மண்ணில் மறைந்திருக்கும் மணிபோலத் தமிழ் இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் இவ்வரலாற்று மணிகளை நாம் இனம்கண்டு, முறையான தமிழக வரலாற்றினை உருவாக்க முயலவேண்டும்.

---

1. பட்டினப்பாலை, 216 - 218
2. முல்லைப்பாட்டு, 60 - 61
3. முல்லைப்பாட்டு, 65 - 66
4. நெடுநல்வாடை, 101 - 103
5. புறநானூறு, 56 : 18 - 20
6. அகநானூறு, 149 : 9 - 10
7. அகநானூறு, 265 : 4 - 6
8. அகநானூறு, 251 : 5
9. அகநானூறு, 281 : 8 - 9
10. புறநானூறு, 2 : 13 - 16
11. அகநானூறு, 113 : 16 - 17
12. நற்றிணை, 227, 5 - 6
13. நெடுநல்வாடை, 51 - 52
14. முல்லைப்பாட்டு, 35 - 36
15. அகநானூறு, 396 : 16 - 19
16. பதிற்றுப்பத்து, இரண்டாம்பத்து பதிகம், வரி 7
17. பதிற்றுப்பத்து, 11 : 23
18. அகநானூறு, 336 : 20 - 22
19. புறநானூறு, 65 : 9 - 11
20. புறநானூறு, 66 : 6 - 8
21. அகநானூறு, 125 : 17 - 22
22. அகநானூறு, 127 : 3 - 5
23. புறநானூறு, 158 : 4 - 16
24. நற்றிணை, 320 : 5 - 6
25. நற்றிணை, 201 : 5 - 6.

செல்வி ஆ. மேரி இமாகுலேட்,
தமிழ் இளங்கலை, இரண்டாம் ஆண்டு,
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர்,
கலைக் கல்லூரி,
தஞ்சாவூர் - 613 007.



பெண்கள் வெறும் கூண்டுக் கிளிகளாக இருக்கும் மட்டும் நாட்டு வாழ்வு நிமிராது ; நல்ல நிலை ஏற்படாது.

- பேரறிஞர் அண்ணா

**SRI LAKSHMI JEWELLERY,** 508, 509, M.K.N. Road, Alandur, Madras - 600 016. Phone : 234 8749, 234 1086

# தமிழிலக்கியத்தில் சமயப் பொறை

செல்வன் மா. கு. விநாயகம்

**முன்னுரை**

இறைவனை வழிபடுவதற்கு வழங்கப்பட்ட நெறிகளே சமயங்கள். இதனை, சமைத்தல் என்று பொருள் கொண்டு மனம், உடல், அறிவு, ஆன்மா ஆகிய அனைத்தும் இறையுணர்வில் பக்குவப்படுவதைக் குறிக்கும் என்பர். ஆனால் பதப்படுத்திப் பக்குவப்படுத்தத் தோன்றிய சமயங்களைச் சார்ந்தோரோ, நெறிநிலையை விட்டு வெறி நிலை கொண்டு பூசலும் போரும் விளைவிக்கின்றனர்; காக்கப்படவேண்டிய மனித உயிர்களைப் போக்கி வருகின்றனர். பெரும் பொருளிழப்பையும் ஏற்படுத்தி வைக்கின்றனர். இதனால் அமைதி குலைந்து ஆரவாரம் பெருகுகிறது. இக்கட்டான இச் சூழ்நிலையில் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் காலம் முதல் இக்காலம் வரையில் தோன்றியுள்ள தமிழ் இலக்கியக் கடலில் இடம் பெற்றுள்ள சமயப் பொதுமைகளை ஆராய்ந்து, மக்களினத் தினர் பிற சமயத்தினர் மீது காட்டும் பகைமை யையும், வெறுப்பையும் நீக்கி, அன்பும், அமைதியும் ஓங்க வழிவகை செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**இலக்கியம் என்றால் என்ன?**

இலக்கியம் என்பது சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு அதன் முன்னேற்றத்திற்கு அவ்வவ்காலத்தில் தேவையான கருத்துகளை எடுத்துக் கூறுவதாகும். படிக்கப் படிக்க நம் நெஞ்சைக் கவரும் நடையுடையதாய், உள்ளத்திற்கு மகிழ்ச்சியையோ துன்பத்தையோ உண்டாக்கும் கருத்துக் கொண்டதாய், நம்மைச் சிந்திக்கத் தூண்டும் சிறந்த மொழிகள் கொண்டதாய், ஒருமுறை படித்தபின் வீசியெறிந்து விடாமல் மீண்டும் படிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை எழுப்பும் தன்மையதாய், படித்தபின் அதில் உள்ள பல செய்திகள் அப்படியே நம் உள்ளத்தில் தங்கிவிடும் இயல்பினதாய், நமது வாழ்க்கையிலே தவறு நேராமல் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தை உண்டாக்குவதாய்த் திகழ்வதே இலக்கியமாகும். இதனை முன்னோர்கள் 'நூல்' என்றனர். இவை அறம், பொருள், இன்பம் கூறுவதாக அமைய வேண்டும் என்பதை,

"அந்நிலை மருங்கின் அறம்முத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப"

எனத் தொல்காப்பியரும்,

"அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே"

என நன்னூலாரும் கூறியுள்ளனர். அவ்வகையில் இலக்கியம் என்பது இலக்கு, நோக்கம், குறிக்கோள்

தமிழுக்கும் அமுதென்று பேர்.
- பாவேந்தர் பாரதிதாசன்

SRESAN PHARMACEUTICALS (P) LTD., 12, Lady Madhavan Road, Mahalingapuram, Madras - 600 034. Phone : 8274967

என்பவற்றைக் கொண்டு வாழ்க்கைக்கு வழிகாட்ட எழுந்ததாகும்.

### சமயம் ஒரு விளக்கம்

சமைக்கப்படுவது சமயம். சமைத்தல் என்றால் பக்குவப்படுத்தல் என்பது பொருள். உணவு செரிப்பதற்கேற்பச் சமைக்கப்பட்டுப் பக்குவப்படுத்தி உண்டாலே வாழ முடியும். ஆகவே, சமயம் மக்களைப் பக்குவப்படுத்தவேண்டும். சமயச் சான்றோர்கள் விலங்காய்ப் பிறந்த மனிதனை, மனிதனாக வாழ்வதற்குப் பக்குவப்படுத்தவே சமய நெறிகளைத் தோற்றுவித்தனர். மக்களின் அறியாமை இருளை நீக்கி இவ்வுலகியல் தன்மைகளும், உயிர்கள் இயல்பும், பிறவி நோக்கமும் உணர்த்தி, எல்லோரையும் சமமாகவும் உடன்பிறப்புகளாக வும், குழந்தைகளாகவும் கருதி ஒருவருக்கொருவர் அன்பாய் வாழ்வதற்கு வழிவகை செய்வதே சமயமாகும். மனிதர் மட்டுமன்றி உயிர்கள் அனைத்தையும் உடன்பிறப்புகளாக எண்ண வேண்டும். இதற்கு மனத்தை அறிவு கொண்டு நெறிப்படுத்தி அவ்வழியில் செலுத்த வேண்டும். இவ்வாறு அமைதல் தக்க பயிற்சியால் மட்டுமே இயலும். ஆகவே, ஒவ்வொருவரும் இப் பயிற்சி பெற்றுத் தம்மைத் தாமே செம்மைப்படுத்திக்கொள்ள வழிவகைகளைச் செய்வதே சமயமாகும்.

### சிலப்பதிகாரத்தில் சமயப்பொறை

சிலப்பதிகாரம் ஒரு சமணக் காப்பியமாக இருந்தும் இளங்கோவடிகள் பல துன்பங்களை உருவாக்கும் சமய வேறுபாடுகள் வளராமலிருக்கக் கருதிப் பிற சமயக் கடவுள்களான திருமால் வழிபாடு பற்றி ஆய்ச்சியர் குரவையிலும், கொற்றவை வழிபாடு பற்றி வேட்டுவ வரியிலும், குமரக்கடவுளின் வழிபாடு பற்றிக் குன்றக் குரவையிலும், இந்திரவிழவூரெடுத்த காதையில் இந்திர வழிபாடு பற்றியும், வரந்தரு காதையில் கண்ணகி வழிபாடு பற்றியும் கூறியுள்ளார். இதன்வழி இளங்கோவடிகள் 'எம்மதமும் சம்மதம்' என்னும் கொள்கையாளர் என்பது தெளிவாகிறது. இவர் தமது காப்பியத்தில் சிவபெருமானை, "ஆலமர் செல்வன்", "பிறைமுடிக்கண்ணிப் பெரியோன்", "ஆனேறூர்ந்தோன்", "செஞ்சடைவாணன்" எனவும்,

> "நீலப் பறவைமேல் நேரிழை தன்னோடும்
> ஆலமர் செல்வன் புதல்வன் வரும்"

என முருகனைப் பற்றியும்,

> "சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்
> குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி"

எனக் கொற்றவை பற்றியும், கூறியதோடு காப்பியத்தின் மங்கல வாழ்த்தில் வள்ளுவனைப்போல உலகம் தழுவித் திங்கள், ஞாயிறு, மழை முதலான இயற்கைச் சக்திகளையே பாடியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். மேலும் காப்பியத்தின் இறுதியில் இளங்கோவடிகள் இலக்கியத்தின் தெளிபொருளாக,

> "தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
> பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
> ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
> தானஞ் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
> செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;"

என்பன போன்ற அறங்களை வற்புறுத்துகின்றார்.

### சைவ இலக்கியத்தில் பொறை

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். இச் சைவ சமயத்தின் முதன்மையான கொள்கை யாதெனில் இவ்வுலக இயக்கம் அனைத்துக்கும் மூலக் காரணம் சிவனே என்பதாகும். அவன் பல அல்ல ஒருவனே என்பதனைத் திருவாசகத்தில் மாணிக்கவாசகர்,

> "தென்னா டுடைய சிவனே போற்றி
> எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

என்று கூறியுள்ளார். அதாவது, தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் (அல்லது) எந்நாட்டவர்க்கும் இறைவன் தென்னாடுடைய சிவன் என்பதாகும்.

> "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

எனும் திருமூலர் மொழியும் ஈண்டு உன்னற்பாலது. பெரியபுராணம் பாடிய சேக்கிழார், சிவபெருமான் பௌத்த சமய அன்பரான சாக்கிய நாயனாருக்குக் காட்சியளித்ததைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றைச் சைவ சமயப்பொறைக்குச் சான்றுகளாகக் கூறலாம்.

### கம்பன் காட்டும் சமயப்பொதுமை

கம்பர் சிறந்த வைணவ பக்தராக இருந்தும் தமது காப்பியத்தைக் கூற முயலும்போது, அதனுள் முதலாகப் பரம்பொருளை ஒரு குறிப்பிட்ட சமயம் என்ற குறுகிய வட்டத்துள் அடக்கக் கூடாது என எண்ணி உலகம் உள்ளளவும் எந்தச் சமயத்தாரும் விரும்பி ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் கடவுள் வாழ்த்தை அமைத்திருக்கின்றார்.

> "உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
> நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
> அலகி லாவிளை யாட்டுஉடை யார்அவர்
> தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே"

புதுவாழ்வு பெற, முழுவாழ்வு பெற மாணவர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதை உணர்ச்சியும் தேவை.

- பேறிஞர் அண்ணா

SALMA INTERNATIONAL, "Salma House", 142, Purasawakkam High Road, Kellys, Madras - 600 010. Phone : 6421907, 6426063

எனக் கடவுள் பொருளை நம்பும் உலகிலுள்ள அனைவரும் ஏற்கக் கூடிய கடவுள் வாழ்த்தாக அமைத்துள்ளார். மேலும் இறைவன் ஒருவனே என்பதை,

"கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்
இயம்பஅரும் பொருள் ஈது, என்னத்
தொல்லையில் ஒன்றே யாகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
பொருளும்போல் பரநதது அன்றே"

"தாதுஉகு சோலை தோறும்
சண்பகக் காடு தோறும்
போதுஅவிழ் பொய்கை தோறும்
புதுமணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக
வனம்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும்
உயிர்என உலாயது அன்றே"

என்ற இப் பாடல்களில், மலையிலே பிறந்து கடலிடைப்புகும் ஆறு முதலில் ஒரு பெயரைப் பெற்றிருந்தாலும் (இறைவன்) எல்லையற்ற முதல் நூல்களும் அறுதியிட்டுச் சொல்வதற்கரிய பொருள் ஒன்றே என்றாலும், பலவாகிய வேறுபட்ட சமயங்கள் வெவ்வேறு பெயர்களால் அதனைக் கூறுவது போல், இந்த ஆறு, செல்லும் இடந்தோறும் வெவ்வேறு பெயர்களைப் பெற்றுத் திகழ்ந்தது எனவும், சோலை, காடு, குளம், மணல்திட்டு, கமுகந் தோட்டம், வயல்கள் ஆகிய அனைத்திலும் புகுந்து வெளிப்பட்டு ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய பல்வேறு உடம்புகளிலும் புகுந்து பல்வேறு பெயர்களைப் பெறும் ஒரே உயிர்போலப் (இறைவன்) பல பெயர்களைப் பெற்றது எனவும், உவமை நயம்படக் கூறிய பாங்கு கம்பருக்கே உரியதாகும். இப் பாடல்களில் இறைவன் ஒருவனே என்பதைக் கம்பர் இவ்வாறு நயமுறக் கூறியுள்ளார். வைதிக சமயங்களுள் சைவம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது. வைணவம் திருமாலை முழுமுதற் கடவுளாக வைத்து வழிபடுகிறது. சிவபெருமானும், திருமாலும் முழுமுதற் கடவுள்கள் என்பதைக் கம்பர் மிக அழகாகக் காட்டுவார். இராவணனது மூல பலம் யாவும் இலங்கையில் வந்து திரளுகின்றது. இராமனது கணைமாரியால் மூலபலம் நிர்மூலமாகிவிடுகின்றது. இந்நிலையில் இராமனது தோற்றத்தைக் காட்ட வந்த கவிஞர் இராமனை, சங்காரத்தை முடித்த நிலையில் சுடுகாட்டில் காணப்பெறும் சிவபெருமானுடன் ஒப்பிட்டுக் காட்டுவார்,

"பேய்மொய்த்து நரிகள் ஈண்டிப்
பெரும்பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தமியின் நின்ற
கறைமிடற்று இறைவன் ஒத்தான்"

சங்காரக் காரணனே முழுமுதற் கடவுள் என்ற சித்தாந்த உண்மை இவ்வாறு காட்டப் பெறுகின்றது. அடுத்து இராமனைத் திருமாலுடன் ஒப்பிடுவான்,

"மண்டுநாள் மறித்தும் காட்ட
மன்னுயிர் அனைத்தும் வாரி
உண்டவன் தானே ஆன
தன்ஒரு மூர்த்தி ஒத்தான்"

இந்தப் பாடலில் உலகம் உண்ட பெருவாயனே முழுமுதற் கடவுள் என்ற வைணவ சித்தாந்தத்தை நிலைநாட்டிச் சமய சமரச நோக்குடன் தம் காப்பியத்தைப் படைத்துள்ளதை நன்கு அறியலாம்.

### வில்லியின் சமயப்பொறை

வில்லியார் தாம் செய்த பாரதத்தில் கண்ணனின் பத்து அவதாரங்களையும் ஒரே பாடலில் பாடிக் கண்ணன்மேல் தாம் கொண்டுள்ள பக்தியினைப் புலப்படுத்திக் கொள்கின்றார். திருமாலின் பெருமையோடு ஆழ்வார்களின் பெருமையைப் பற்றியும் பாடியிருப்பது அவரின் வைணவப் பற்றினைப் புலப்படுத்துகிறது. இவர் சிறந்த வைணவ பக்தர் என்றாலும் மத வெறியின்றி ஒரளவு கதைகளில் வழங்கும் செய்திகளுக்கேற்பச் சிவபெருமானைப் போற்றியும் இருக்கின்றார். நூலின் தொடக்கத்தில் இரண்டு பாடல்களில் விநாயகர் வணக்கமும், மற்றோர் இடத்தில் சிவபெருமானைப் பற்றிக் கூறும்போது "சிவபிரான் நாலுமறைகளு மோலமென ஆகவான மௌனமுழு ஞானமே போலுமென வொளிர் மேனியுடையர்'' எனப் புகழ்ந்தும் கூறியதோடு சிவபெருமானுருவில் பெண்வடிவங் கலந்த விவரமும் கூறுகின்றார். இந்நெறியில் வில்லிபுத்தூராழ்வார் சிவனைப் பற்றி 270 பாடல்கள் பாடியுள்ளார். அருச்சுனன் நீராட்டுச் செலவில் சிதம்பரம் சென்று வணங்கியதையும் குறிப்பிடுவதோடு முருகன் பிறப்பு, அவன் வள்ளியோடு கொண்டொழுகிய காதல் நெறி பற்றியும் பாடியுள்ளார். இவை அவரின் சமயக் காழ்ப்பில்லாப் பண்பை வெளிப்படுத்துகின்றன.

### தாயுமானவரும் - மஸ்தான் சாகிபும்

மஸ்தான் சாகிபு சமயம் இசுலாம்; தாயுமானவர் ஒரு சைவ சித்தாந்தி. ஆனால், இருவரும் சமயப்பொதுமை

செய்வன துணிந்து செய.

- புதிய ஆத்திசூடி - பாரதியார்

REVATHEE ENTERPRISE, DEV, Plot No.30, Industrial Estate, Guindy, Madras - 600 032



**கல்லூரி மாணவர்கள் ஓவியப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றது.**

**ஜெ. சத்தியநாராயணன்,**
கவின்கலை, இளங்கலை, இரண்டாம் ஆண்டு,
31-அ, சுவாமிமலை முதன்மைச் சாலை,
மேலக்காவேரி அஞ்சல், கும்பகோணம் - 2.

## தஞ்சை ஓவியம்

இராமன் முடிசூட்டு விழா



பள்ளி மாணவர்கள் ஓவியப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.

J. உம்மு சலீனா பேகம்,
மேனிலை இரண்டாம் ஆண்டு, 'அ' பிரிவு,
பெண்கள் கிறித்துவ மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்.

போற்றியுள்ளனர். சமயங்கள் அனைத்தும் இறைவனையே மூலமாகக் கொண்டுள்ளன என்று கூறுகின்றனர்.

"அறியாமல் என்தெய்வம் உன்தெய்வம்
என்பார்க்கும் அவ்வகைக் காரணத்தை"

என்று மஸ்தான் பாடுகின்றார். தாயுமானவர் இதே கருத்தை,

"சமயகோ டிகள்எலாம்
தந்தெய்வம் எந்தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது"

என்று கேட்கின்றார். மஸ்தான் சமயத் தர்க்கம் புரிபவரை,

"மதபேத மோதி மதிகெட்டவர்"

எனக் கடுமையாகச் சாடுகின்றார். தாயுமானவரும்,

"வாதமிடு பரசமயம் யாவுக்கும் உணர்வரிய
மகிமைபெறு பெரிய பொருளே"

எனச் சமய வாதங்களை வெறுக்கின்றார்.

இறைக் கோட்பாட்டில் இருவரும் ஒன்றுபடும் இடங்கள் பல உள. இறைவன் ஒருவனே; நிகரற்றவன்; முற்றும் அறிந்தவன்; வல்லவன்; அருளாளன்; இன்பமயமானவன்; கடந்தும் கலந்தும் உள்ளவன் என்பன போன்ற இறைக் கோட்பாடுகளை இருவரும் போற்றிப் பாடியிருக்கின்றனர். தமிழ்நாட்டில் மலர்தூவி மாலையிட்டுக் கடவுளை வழிபடுவது இந்து சமய மரபாகும். இதனைத் தாயுமானவர்,

"பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்திஅப்
பனிமல ரெடுக்க மனமும் நண்ணேன்"

என்று இறைவன் எங்கும் கலந்திருப்பதைக் காட்டுகின்றார். இதனையே மஸ்தானும்,

"எப்பொருளுந் தானா யிலங்குமுனைப் பூசைசெய்யப்
புட்பம் எடுக்கவும்தான் போமோ நிராமயமே"

என்று இறைவன் எங்கும் எதிலும் நிறைந்த நிலையினைப் போற்றிப் பாடியுள்ளமை இசுலாம் மார்க்கத்திற்கும் இந்து சமயத்திற்கும் உள்ள சமயப் பொதுமையைக் காட்டுகின்றது.

## பாரதியின் சமயக் கண்ணோட்டம்

பாரதியார் சக்தி வழிபாட்டில் ஊறி நின்று சக்திப் பாடல்கள் பலவற்றை ஈடுபாட்டோடு பாடியிருக்கின்றார். 'சக்திதாசன்' என்ற புனைபெயர் வைத்துக்கொண்டு சக்தி மட்டுமன்றி விநாயகர், முருகன், கலைமகள், திருமால் முதலிய பல சமயக் கடவுளரையும் போற்றிப் பாடியுள்ளார். கண்ணபிரானைப் பல நிலையில் பாவனை செய்து பாடிய பாடல்கள் தனித்தன்மையுடையன. இந்து சமய மரபு வழிப்பட்ட இப் பாடல்களோடு பாரதியார் அமைந்துவிடவில்லை. புத்தர், ஏசு, அல்லா ஆகியோர் பற்றியும் பாடல்கள் பாடியுள்ளார். "ஆரிய தரிசனம்" என்ற கவிதையிலே,

"புத்த பகவன் - எங்கள்
புத்த பகவன் - அவன்
சுத்தமெய்ஞ் ஞானச் சுடர்முகங் கண்டேன்"

எனப் புத்தரைப் பற்றிப் பாடியதும் அவரின் சமயப் பொதுமையை வெளிப்படுத்துகின்றது.

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் - பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ"

என்ற வரிகளில் இறைவன் ஒருவனே என்றும், அவ்வொருவன் தந்த அறிவே சிவன் என்றும் பாடுகின்ற பாரதியார்,

"வேடம்பல கோடியொரு உண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே"

என்றும்,

"நாமம் பல கோடியொரு உண்மைக் குளவென்று
நான்மறை கூறிடுமே"

என வடிவத்தால் - பெயரால் பலவாக உணரப்படும் தெய்வங்களெல்லாம் ஒன்றே என்பதை உணர்த்தியுள்ளதை, இலக்கியங்களின் சமயப் பொறைக்குச் சிறந்த சான்றாகக் கொள்ளலாம்.

## சமயப் பொறையில் கொல்லாமை

கொல்லாமை என்பதைத் தலையாய அறமாக அனைத்துச் சமய இலக்கியங்களும் எடுத்துப் பேசுகின்றன. பௌத்த நூல்களும் கொல்லாமையை வலியுறுத்துகின்றன. ஆனால், கொல்லாமைக் கோட்பாட்டை முழுமையாக வலியுறுத்திய பெரும்பான்மை நூல்கள் சமண இலக்கியங்களே என்றால் மிகையாகாது.

இந்தக் கோட்பாட்டை வாழ்க்கையில் தவறாது பின்பற்ற வேண்டும் என்று பேசிய பிற சமய இலக்கியங்களும் தமிழில் பல உள்ளன.


உமை ஒன்று வேண்டுகிறேன். மாசில்லாத
உயர்தமிழை உயிரென்று போற்று மின்கள்

- பாவேந்தர் பாரதிதாசன்

**NIRMAL ALUMINIUM INDUSTRIES,** 10/76-A Avanashi Road, Arasur P.O. Coimbatore - 641 407

கொல்லாமை என்பது அனைத்து உயிர்களிடத்தும் கருணை காட்டும் ஆன்ம நேய ஒருமைப்பாடு என்றே கூறலாம். இதனைச் சிலம்பு,

"ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்"

எனவும், வளையாபதி,

"உயிர்கள் ஓம்புமின் ஊன்விழைந்து உண்ணன்மின்"

எனவும், சீவகசிந்தாமணி,

"தன்னுயிர் தான்பரிந்து ஓம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்"

எனவும், யசோதரகாவியம்,

"இவ்வுலகத்தில் எவ்வுயிரும் எம்முயிரின் நேர்என்று"

எனவும், கூறுகின்றன.

பட்டினத்தடிகளும்,

"கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல்"

எனக் கூறுகின்றார். இவ்வாறு பல்வேறு சமயச் சான்றோர் பெருமக்களும் கொல்லாமையாகிய சமயப் பொறையினைத் தம் படைப்புகளில் வெளிக் காட்டியுள்ளனர்.

## முடிவுரை

இவ்வாறு; பல்வேறு சமய மக்களையும் ஒன்றாக இணைத்து உலக அமைதிக்கு வழிகோலும் வகையில் நம் இலக்கியச் சான்றோர் பெருமக்கள் தம் படைப்புகளில் "இறைவன் என்பவன் அனைத்துச் சமயங்களுக்கும் பொதுவான ஒருவன்; அவனைத் தங்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப வேறு பெயர்கள் இட்டு வழங்குகின்றனரே அன்றி அவன் பல அல்லன்" என்ற சமயப் பொதுமையினைப் புகட்டி மக்களின் நல்லுறவிற்குப் பெரும் பங்காற்றியுள்ளனர் என்பது முடிவாம்.

**செல்வன் மா. கு. விநாயகம்,**
முதுகலை முதலாம் ஆண்டு,
தருமை ஆதீனம் கல்லூரி,
தருமபுரம்,
*மயிலாடுதுறை - 609 001.*



அஞ்சுவது அஞ்சாமை பேதைமை.
- திருக்குறள் : 428

**MADRAS CABLE INDUSTRIES,** No.16, IInd Street, Lakshmipuram, Madras - 600 014. Phone : 8270448

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

செல்வி தி. தமிழ்க்கொடி

யாதும் ஊரே யாவரும் கேளிர்
ஓதுமித் தமிழ்நெறி உலகம் உய்யவே
வேதப் பிழிவும் இதன்பின் னவையே
கோதற உணர்க குவலயம் வாழ்க!
கல்லா மக்களை விலங்கினம் என்றல்
கல்வியின் பொருட்டுக் கழறிய தன்றி
விலங்கினம் யாவும் மக்களைக் காட்டிலும்
நலங்கெடு வாழ்வைப் பெற்றவை யல்ல
புலிதன் பசிக்குப் புலியை யடித்தல்
எலிதன் பசிக்கு எலியை யழித்தல்
சிங்கம் பசிப்பின் தன்னினம் சீறல்
எங்கே யாகினும் கண்டது முண்டோ
கல்லா பேசா விலங்குதன் பசிக்குக்
கொல்லத் தன்னினம் தேர்வதே யில்லை
அடக்கம் கல்வி அனைத்துயிர் பேணல்
ஒடுங்கா தீட்டல் உறுநர் ஓம்பல்
அனைத்தும் மக்கட் கறைந்தவை யன்றி
எனைத்தும் விலங்கிற் கிசைத்தவை யல்ல
சங்கப் புலவோர் சார்பறு புத்தர்
மங்கா இயேசு மகம்மது நபிகள்
அறிவுரை யாவும் மக்களுக் கன்றி
நெறிபிறழ் கில்லா விலங்கிற் கில்லை
வருந்தல் மகிழ்தல் வேட்டல் வெறுத்தல்
பொருந்தும் யார்க்கும் என்பதை யுணர்க.
மொழியில் நிறத்தில் இனத்தில் நாட்டில்
வழிவழிப் பண்பில் வாழும் முறையில்
என்னதான் மாற்றம் காணினும் அவரும்
அன்னையின் வயிற்றில் பிறந்தவ ரதனால்
நாடெனும் கூறுகள் உலகம் என்னும்
மேடவல் நிலத்தின் பாத்தியென் றுணர்க.
மாந்தர் நிறங்கள் தாவர மீந்த
ஏந்தொளிர் மலரின் நிறமென் றுணர்க.
மக்கள் இனங்கள் மாபலா வாழை
தொக்கதோர் பெற்றியாய்த் துகலிற் றுணர்க.
முரண்படு மொழிகள் ஆயிர மாயினும்
முரசும் குழலும் யாழுமென் றுணர்க.
வாழும் முறையும் வழிவழிப் பண்பும்
சூழ்நிலை மாற்றம் என்னலா லவற்றைத்
துவர்ப்பு காரம் இனிப்பு கசப்பும்
உவர்ப்பு புளிப்புச் சுவையென் றுணர்க!

நம்முடைய ஊனோடும் உயிரோடும் இரண்டறக் கலந்துவிட்ட தமிழ்மொழிக்கு உரிய ஏற்றத்தைத் தருவோம்.

- பேரறிஞர் அண்ணா

**MADRAS CABLE INDUSTRIES,** 16, II Street, Lakshmipuram, Madras - 600 014. Phone : 8270448

இவ்வணம் உணரும் இயல்பைப் பெற்றிடின்
தெவ்வர் எனும்சொல் தேய்பிறை யாகும்
கண்முன் காணும் மாந்தர் யாவரும்
நண்பிற் குரியராய் நாளும் தோன்றுவர்

எம்முடைத் தென்னும் இயற்கை மாறித்
தம்முடைத் தென்னும் தகைமை செழிக்கும்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
கோதற வுணர்க குவலயம் வாழ்க!

செல்வி தி. தமிழ்க்கொடி,
பி.லிட். முதலாம் ஆண்டு,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்,
தமிழ்க் கல்லூரி, மயிலம்,
விழுப்புரம் இராமசாமி
படையாச்சியார் மாவட்டம்.



ஒரு மனிதன் தன்னிடத்தில் மற்றவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறானோ, எதிர்பார்க்கின்றானோ அப்படியே இவன் மற்றவர்களிடமும் நடந்துகொள்வதுதான் ஒழுக்கமாகும்.
- தந்தை பெரியார்

**TAMILNADU SAMLL INDUSTRIES DEVELOPMENT CORPORATION LTD.**, Paulwel's Road, Kathipara Junction, Madras - 600 016. Phone : 2341215

# தமிழிலக்கியத்தில் சமயப் பொறை

**செல்வன் அ. செந்தில் குமரன்**

முன்னுரை

உலக மொழிகளுள் காலத்தால் வரையறுக்கப்படாததும், உயர்தனிச் செம்மொழியாய் விளங்குவதும், அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழியே ஆகும். இம்மொழியின்கண் தோன்றிய இலக்கிய நூல்கள் பற்பல. அவை நவிலும் பொருள்களும் பற்பல. அவ்வகையில் சமயத் தொடர்பான இலக்கியங்கள், பல்வேறு சமயப் புலவர்களால் காலந்தோறும் சமைக்கப்பட்டுள்ளன. எனினும் அவர்களிடையே, "தம் சமயம் உயர்ந்தது, தம் கடவுள் உயர்ந்தவர்" என்ற "சமயக் காழ்ப்புணர்ச்சி" இருந்ததில்லை. எனவே, அவர்கள் இயற்றிய இலக்கியங்களிலும் அத்தகைய உணர்வுகள் இல்லை. மாறாக, "சமயப் பொறை" இருந்திருக்கிறது. இத்தகைய் உணர்வினை அந்தந்தக் கால இலக்கியங்கள் சிலவற்றின் வாயிலாகச் சுட்டிக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சமயம் என்னும் சொல்லின் தோற்றம்

உலகத்துள் தோன்றிய உயிர்கள் அனைத்தும் இன்ப நிலையை அடையவே விரும்புகின்றன. யாவும் தமக்குத் துன்பம் நேர வேண்டும் என்று விரும்புவதே இல்லை. எனவேதான் தொல்காப்பியரும்,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉம் மேவற்றாகும்"

- தொல் - பொருளியல் : 219.

என்னும் நூற்பாவினால் இவ்வுண்மையை எடுத்து உரைக்கின்றார்.

இத்தகைய இன்ப நிலையை உயிர்கள் அடைவதற்கான நெறிகள் யாவை என்பதை முறைப்படுத்தித் தருவதே சமயம் ஆகும்.

'சமயம்' என்னும் சொல், 'சமையம்' என்னும் சொல்லின் திரிபாகும். 'சமையம்' என்னுஞ் சொல் 'கடமையுணர்ச்சி'யைக் குறிக்கும் என்று ஆங்கில அகராதி நவில்கின்றது.

'சமைத்தல்' என்னும் தொழிற்பெயரின் பகுதியே 'சமை' என்பதாகும். 'சமை' எனும் வினைப்பகுதிக்குப் 'பக்குவப்படுத்து' என்பது பொருளாகும்.

தமிழனாகப் பிறந்து தமிழ்ச் சுவையுணர்ந்த ஒருவன் வீடுபேற்றையும் காதலியான்.
- தமிழ்த்தென்றல் திரு. வி. க.

**TAMILNADU PETROLEUM DEALERS ASSOCIATION**, 8, Rajaji Salai, Madras - 600 001. Phone : 513668

### சமயத்தின் பணி

மனிதர்களைத் தீமையிலிருந்து விடுவித்து, இன்பநிலையை அடையச் செய்வதே சமயமாகும். மேலும் மனிதனை 'விலங்குப் பண்பிலிருந்து விடுவித்து, மனிதப் பண்பில் மலர்ச்சியுறச் செய்வதே' சமயத்தின் குறிக்கோளாகும்.

மனிதன் தன் புலன்களை அடக்கிப் பொறிகளில் தூய்மையைக் காத்துத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்கு உதவுவதே சமயமாகும்.

### சமயங்கள் பல

"பொங்குபல சமயமெனும் நதிகள் எலாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே"

என்பது வள்ளலார் வாக்கு.

'ஆறுகள் எல்லாம் எங்குத் தோன்றினாலும், எத்திசை நோக்கி ஓடினாலும், முடிவில் கடலினையே சென்றடைவது போல உலகத்தில் தோன்றிய சமயங்கள் எல்லாம் முடிவில் பரம்பொருளினிடத்தே சென்றடைகின்றன' என்பது அவ்வருளாளர் தம் கருத்து.

'சைவம், வைணவம், பௌத்தம், கிறித்தவம், சமணம், இசுலாமியம்' என்னும் பற்பல சமயங்கள், தமிழிலக்கியவுலகில் காணப்படுகின்றன. அவை காட்டும் நெறிவழிச் சென்றால், முடிவில் 'பரம்பொருள் ஒன்றே' என்ற கருத்திலேயே நிறைவுறுகின்றன.

பள்ளியில் பயிலும் மாணவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு பாடத் திட்டம் அமைவதுபோல, மக்களின் மனநிலைக்கு ஏற்றவாறு இச்சமயங்கள் எல்லாம் தத்தம் கருத்துகளைத் தெரிவிக்கின்றன.

### இலக்கியங்களும் சமயங்களும்

இலக்கியங்களும் சமயங்களும் சமுதாயத்தில் இருந்து முகிழ்க்கின்றன; சமுதாய வாழ்வியலிலிருந்து வெளிவருகின்றன. இதனால் அந்தந்தக் காலத்து மக்களின் ஒழுக்க முறைகளை, பழக்க வழக்கங்களை, பண்பாடுகளைத் தெற்றென விளக்குவன இலக்கியங்களும் சமயங்களுமே என்பதை அறியலாம்.

சிற்சில இலக்கியங்கள் சமயக் கொள்கைகளின் மாறுபாடுகளை, வேறுபாடுகளை, ஊறுபாடு தோன்றும் வகையில் எடுத்துரைப்பனவாக அமைந்தாலும், பெரும்பாலான இலக்கியங்கள் காட்டும் சமயப் பொறையினைக் கண்டு தெளிந்து, வாழ்வில் மேற்கொள்ள வேண்டியது இக்காலத்து இன்றியமையாத தேவையும் சேவையுமாகும்.

அவ்வகையில், தொல்காப்பியம் முதல் தற்காலத்துத் தோன்றிய தமிழிலக்கியங்கள் வரையில், சமயத் தொடர்பான செய்திகளையும், அவை வலியுறுத்தும் சமயப் பொறையினையும், முறையாகக் காண்பதே 'தமிழிலக்கியங்களில் சமயப்பொறை' என்னும் இத் தலைப்பிற்குப் பொருத்தமாக அமையும்.

### தொல்காப்பியர் காலத்துச் சமயப் பொறை

தன்னேரில்லாச் செந்தமிழின் முதன்மையான நூல் 'தொல்காப்பியம்' ஆகும். இஃது ஓர் இலக்கண நூலாகும். எழுத்து, சொல் முதலியனவற்றின் இலக்கணங்களையும் சொற்களால் உண்டாகும் பொருண்மையினை, மக்கள் வாழ்வினை 'அகம்' என்றும் 'புறம்' என்றும் வகுத்துப் பல்வேறு செய்திகளைத் தொகுத்துச் சொல்வதால் வாழ்வியல் கூறும் இலக்கியமாகவும், ஆன்றோர் இந் நூலினைப் போற்றி உரைப்பர்.

தொல்காப்பியர் காலத்தும், அவர்க்கு முந்தைய காலத்தும் இறைவனை வழிபடும் முறை இருந்துள்ளது. அவர்கள் காலத்து மக்கள், ஐம்பூதங்களையும், முருகன், திருமால், கொற்றவை முதலான தெய்வங்களையும் வணங்கி வழிபாடு செய்தனர் என்பதை,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

- தொல். அகத். 5

எனும் தொல்காப்பிய நூற்பா வாயிலாக அறியலாம்.

இதனால் அக்காலத்தில் பல கடவுளரை வணங்கும் நிலை இருந்தது என்பதையும், அவர்களுக்குள் 'சமயக் காழ்ப்புணர்ச்சி' இல்லை என்பதையும் அறியலாம்.

### சங்க இலக்கியங்களில் சமயப் பொறை

சங்க இலக்கியங்களுள் சமயத் தொடர்பான இலக்கியங்கள் பரிபாடலும், திருமுருகாற்றுப்படையும் ஆகும். வேறு சிற்சில இலக்கியங்களும் சமயச் செய்திகளை நவில்கின்றன.

பரிபாடலில் திருமாலைப் பாடிய இளவெயினனார், முருகனையும் பாடியுள்ளார்.

வாழ்க என்பது தமிழ்ச் சொல் மட்டுமல்ல, அது தமிழ்ப் பண்பு.
- பேரறிஞர் அண்ணா

**SALEM SAGO & STARCH MERCHANTS' ASSOCIATION,** 23, Ayyasamy Road, Shevapet, Salem - 636 002. Phone : 52354

தொல்காப்பியத்தின் வாயிலாகவும், சங்க இலக்கியங்களின் வாயிலாகவும், 'அக்காலத்து மக்கள், உலகியல் வாழ்வியலுக்கு அளித்த முதன்மையினைச் சமயத்துக்கு அளிக்கவில்லை, எனவே சமய உணர்வு இருந்ததே தவிர, சமயக் காழ்ப்புகள் இடம்பெறவில்லை' எனத் தெளியலாம்.

## இடைக்கால இலக்கியங்களில் சமயப் பொறை

சைவமும் வைணவமும் தமிழகத்தின் இயல்பான சமயங்களாகும். பின்பு 'இருண்ட காலம்' எனப்படும் களப்பிரர் காலத்தில்தான் பௌத்தம், சமணம் முதலிய வேற்றுச் சமயங்கள் நுழைந்தன. இதனால் 'சமயக் காழ்ப்புணர்ச்சி' அக் களப்பிரர் காலத்து ஏற்பட்டது.

எனினும், மக்களை அவ்வுணர்ச்சியில் இருந்து மீட்க அருளாளர்கள் தோன்றினர். அதன் பயனாக முகிழ்த்தவையே நீதி இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள் முதலியன. இதனால்,

"ஒன்றே குலம் ; ஒருவனே தேவன்"

என்ற முழக்கங்கள் எழுந்தன. அம் முழக்கங்கள் சமயக் காழ்ப்பினை நீக்கிச் சமயப் பொறையை வளர்த்தன.

## நீதி இலக்கியங்கள்

சமயக் கருத்து வேறுபாடு நிலவிய காலத்தில் மக்களை, அறவழிக்குட்படுத்த எழுந்தவையே நீதி இலக்கியங்கள் ஆகும். அவ்வகையில் 'திருக்குறள்' முதலான நீதி இலக்கியங்கள் எழுந்தன. இந் நீதி இலக்கியங்களெல்லாம், 'குறிப்பிட்ட கடவுளைக் குறிப்பிடவில்லை' என்பது குறிப்பிடத்தக்கது.

"ஆதி பகவன் முதற்றே உலகு"

என்னும் திருக்குறள் 'இறைவன் ஒருவன்; அவன்தான் பரம்பொருள்; முழு முதற் பொருள்' என்று குறிப்பிடுகிறது.

உருவ அடிப்படையில், தெய்வ வேறுபாடுகள் கொள்ளலாகாது என்பதை வலியுறுத்துவதற்காகவே, திருவள்ளுவர் திருக்குறளில், 'கடவுள் வாழ்த்து'ப் பகுதியில் சமயப் பொதுமை நிலையில் இறைவனின் திருவடிச் சிறப்பையே சுட்டிக் காட்டியுள்ளார். திருவடி வழிபாடு, திணை, பால் கடந்த பொதுமை வழிபாடாகும். இவ்வழிபாட்டின் வழி, சமயப் பொதுமையை உலகிற்குக் காட்டவே, ஏழாம் நூற்றாண்டில் அப்பர் பாடிய 'திருவடித் தாண்டகமும்' பதினைந்தாம் நூற்றாண்டில், அருணகிரிநாதர் பாடிய 'சீர்பாத வகுப்பும்', பத்தொன்பதாம் நூற்றாண்டில் வள்ளலார் பாடிய 'திருவடிப் புகழ்ச்சியும்' அமைந்து சமயப் பொறையை வலியுறுத்துகின்றன.

## காப்பிய இலக்கியங்கள்

காப்பிய உலகில் சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், சீவகசிந்தாமணி போன்ற குறிப்பிடத்தக்க இலக்கியங்கள் அந்தந்தக் காலத்துச் சமயப் பொறையினை எடுத்து இயம்புகின்றன.

## சிலப்பதிகாரம் காட்டும் சமயப் பொறை

சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ் நூல் ஆகும். முத்தமிழையும் இயம்பும் தலைமை நூல் இதுவே ஆகும். இந்நூலின் ஆசிரியர் இளங்கோவடிகள், ஒரு சமணர். ஆனால் அவர்தம் நூலில் சைவம், வைணவம், பௌத்தம் முதலிய சமயங்களையும் எடுத்துக் கூறுவதன் மூலம் சமயச் சார்பற்ற காலமாகச் சிலப்பதிகார காலம் திகழ்ந்தமையை அறியலாம்.

## சிலம்பில் சிவன்

சைவ சமயக் கடவுள் சிவனைப் பற்றிப் பல இடங்களில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மதுரைக் காண்டத்துள் வேட்டுவ வரியில், 'சிவனுக்கு நெற்றிக்கண் உண்டு என்பதையும், தேவர்களுக்காக நஞ்சுண்டு நீலகண்டன் ஆனான் என்பதையும், வாசுகியை நாணாகவும், இமயத்தை வில்லாகவும் கொண்டு திரிபுரத்தை எரித்தான் என்றும், யானைத் தோலைப் போர்த்தியவன் என்றும், கொன்றை மாலையைத் தரித்தவன்' என்றும் கூறப்படுகிறது.

மேலும் சிவனை,

'பிறவா யாக்கைப் பெரியோன்'

என்றும் போற்றுகின்றது.

## சிலம்பில் வைணவம்

வைணவ சமயக் கடவுள் திருமாலைப் பற்றிச் சிலம்பில், ஆய்ச்சியர் குரவையிலும், காடுகாண் காதையிலும் காணலாம். ஆய்ச்சியர் குரவையுள்,

'கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்'

என்ற குறிப்பும், திருமாலின் பெரிய கோயில் எனப்படும் 'திருவரங்கம்' பற்றிய குறிப்பும், திருமால் ஆதிசேடன் மீது பள்ளி கொண்டுள்ளான் என்ற குறிப்பும் 'காடுகாண் காதை'யில் காணப்படுகிறது. மேலும் அவனுடைய திருவுருவ நலன்களும், அவன் ஆயுதங்கள் ஏந்தி நிற்கும்

சொல்வது தெளிந்து சொல்.
- புதிய ஆத்திசூடி - பாரதியார்

சேலம் வெள்ளிச் செயின் உற்பத்தியாளர் சங்கம் (பதிவு)
33, கபிலர் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம் - 636 002. தொலைபேசி : 53066

திறமும், நின்ற கோலமும், கிடந்த கோலமும் கூறப்பட்டுள்ளன.

### சிலம்பில் சமணம்

சிலம்பின் கதை மாந்தர்கள் சிலர் சமணக் கதை மாந்தர்களாகவே பயன்படுத்தப்பட்டுள்ளனர். கோவலன், கவுந்தி அடிகள், மாங்காட்டு மறையோன் முதலானோர், அக்கதை மாந்தர்கள் ஆவர். கோவலனையும், கண்ணகியையும் கண்ட கவுந்தி அடிகள்,

"உருவும் குலனும் உயர்பேர் ஒழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையீர் என்னோ உறுக ணாளரின்
கடைகழிந்து இங்ஙனம் கருதிய வாறு?"

என்று வினவும்போது, 'பெருமகன்' என்பது அருகனைக் குறிக்கும் சொல்லாகும். கோவலன், கண்ணகி இருவரும் அருக தருமத்தைப் பின்பற்றி நடப்பவர்கள் என்பதாகவும் குறிப்பிடப்படுவதனை அறிகிறோம்.

இவ்வாறே ஆய்ச்சியர் குரவை வாயிலாகத் திருமாலின் சிறப்பையும், வேட்டுவவரி வாயிலாகக் கொற்றவை வழிபாட்டினையும், குன்றக்குரவையால் முருக வழிபாட்டினையும் அவ்வச் சமயஞ் சார்ந்த, அடியார்களைவிடச் சிறப்பான முறையில், இளங்கோவடிகள் பாடியிருப்பதைக் காணும்போது, அவரிடத்திருந்த சமயப் பொறையுணர்வினைக் காண முடிகின்றது.

இவ்வாறு சமுதாயம், சமயத்தால் வேறுபாடு கொள்ளாமல் வாழவேண்டும் எனக் கருதிய அவர்தம் குறிக்கோள் புலப்படுகின்றது. மேலும் சிலம்பின் கதை மாந்தர்களுள், கோவலன் - கண்ணகி இருவரும் அருக சமயத்தவர்களாகவும், மாதவிக்குப் பிறந்த மணிமேகலை பௌத்தச் சமயத்தவளாகவும், காட்டப் பெறுவதைக் காணும்பொழுது ஒரு குடும்பத்துள்ளார் எத்தெய்வமும் வணங்கலாம் என்றும், அதே சமயத்தில் ஒரே குடும்பத்தினராய்ச் சமயக் காழ்ப்பற்று வாழ வேண்டும் என்றும் கூறுவதைக் காணலாம்.

### கம்ப இராமாயணத்தில் சமயப் பொறை

வைணவக் காப்பியமான இந்நூல் சைவம் முதலான பிற சமயக் கடவுள் பற்றியும் கூறுகின்றது. இக்காப்பியத்துள் இராவணன், வாலி முதலானோரைச் சைவ சமயக் கடவுளான சிவனின் பக்தர்களாகவே படைத்துள்ளார். வாலியைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

"பஞ்சின் மெல் அடியாள்
பங்கன் பாதுகம் அலாது யாதும்
அஞ்சலித்து அறியாச் செங்கை"

உடையவன் என்றும், 'அட்டமூர்த்தி தாள் பணியும் அன்பன்' என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் இராவணனைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது 'சிவபெருமானால் முக்கோடி வாழ்நாள் வழங்கப் பெற்றவன்' என்றும், 'துள்ளுநீர் வெள்ளம் சென்னி ஏற்றவன்' என்றும் குறிப்பிடுகின்றார்.

அவ்வகையில் கம்பர், புதிய சமுதாயமாக, சமயக் காழ்ப்பற்ற சமுதாயத்தை ஏற்படுத்த முயன்றிருக்கிறார் என்று கூறலாம். அதனால்தான் கம்பரை "திறவோர் காட்சியில் தெளிந்தவர்" என்று குறிப்பிடுவார்கள்.

மேலும் சிந்தாமணி, மணிமேகலை முதலிய காப்பியங்களும், சமயக் காழ்ப்பற்ற நிலையினை விளக்கப் பல தெய்வங்களைக் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு காப்பிய உலகில், குறிப்பிட்ட ஒரு சமயம் உயர்ந்தது என்றில்லாமல், மக்கள் இறையுணர்வில் திளைப்பதற்குப் பல்வேறு கடவுளரைக் குறிப்பிட்டு ஒரு சமயச் சார்பற்ற நிலையினைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

### அருளாளர்களின் சமயப் பொறை

மனித இனத்தைத் தீமைகளிலிருந்து விலக்கி, நல்வழிப்படுத்துவதற்கு ஒவ்வொரு கால கட்டத்திலும், அருளாளர்கள் பலர் தோன்றுகின்றனர். அவர்களெல்லாரும், சமுதாயத்திற்குச் சமயம் தேவையென்றும் 'பரம்பொருள் ஒன்று, அதனை அடையும் வழிகளே இச்சமயங்கள்' என்றும் எடுத்துரைக்கின்றனர்.

"ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்
ஒன்றது பேரூர், வழியாறு அதற்குள"

என்று திருமூலரும்,

'யாதொரு தெய்வம் கொண்டீர்; ஆங்கேஅத் தெய்வமாகி
மாதொரு பாகனார்தாம் வருவர்"

என்று அருணந்திச் சிவாச்சாரியாரும்,

'அங்கிங் கெனாதபடி எங்கும்பிர காசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி அருளொடு நிறைந்தது"

என்று தாயுமானவரும்,

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!
அலைந்து அலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே

உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே!
- பாவேந்தர் பாரதிதாசன்

**THAMBBI MODERN SPINNING MILLS LIMITED**, Omalur Road, Jagir Ammapalayam, Salem - 636 302. Phone : 447988, 447049



நீர்கனல் நல்லநிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே! - உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே! - பாவேந்தர்

**பள்ளி மாணவர்கள் ஓவியப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது.**

ச. சித்தார்த்தன்,
ஒன்பதாம் வகுப்பு,
சாந்தி மெட்ரிகுலேஷன் பள்ளி,
முசிறி - 621 211.

நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே"

என்று வள்ளலாரும்,

"அரியலால் தேவி யில்லை ஐயன்ஐ யாற னார்க்கே"

என்று அப்பர் பெருமானும்,

"அரியும், சிவனும் ஒண்ணு,
அறியாதவன் வாயில் மண்ணு"

என்ற பழமொழியாலும், அரியையும், சிவனையும் சங்கர நாராயண மூர்த்தமாக வழிபடும் முறையாலும் காணலாம்.

இவ்வாறு அருளாளர்கள் சமய வேறுபாடற்ற சமயப் பொறையுடைய சமுதாயத்தை உருவாக்கியவர்களாகத் திகழ்ந்தனர் என்பதை அறியலாம்.

### தற்கால இலக்கியங்களில் சமயப் பொறை

தற்கால இலக்கியங்கள் என்றதுமே பாரதியார் தாம் நினைவுக்கு வருவார். அவரும்,

"எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேனொரு சித்தன் இந்தநாட்டில்"

எனப் பாடுவதால் அவரும் தம் ஆன்றோர் நெறிவழியே சமயச் சார்பற்ற உலகினை உருவாக்க நினைத்தார் என்பதனை,

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்!"

என்பதன் வாயிலாக அறியலாம்.

### முடிப்புரை

இவ்வாறு தொல்காப்பியர் கால இலக்கியங்கள் முதல், தற்கால இலக்கியங்கள் வரை சமய வேறுபாடற்ற ஒரு சமூகத்தினைக் காட்டுகின்றன என்பதை, நாம் தமிழிலக்கியங்கள் வாயிலாக அறியலாம். அறிந்த அவ்வகையில் நாம், சமய வேறுபாடற்ற ஒரு சமூகத்தினை உருவாக்கக் கடமை உணர்வுடன் செயல்படுவோமாக!

**செல்வன் அ. செந்தில்குமரன்,**
பி.லிட். மூன்றாம் ஆண்டு,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்க் கல்லூரி, மயிலம் - 604 304.



எண்ணித் துணிக கருமம்
- திருக்குறள் : 467

KUMBAKONAM **ANS** JEWELLERS, 385, Bazaar Street, Salem - 636 001. Phone : 414221, 415180

# நாட்டுப்புற இலக்கியங்கள் காட்டும் சமுதாயநிலை

செல்வி எஸ். செல்வசுந்தரி

*1. முன்னுரை*

நாட்டுப்புற இலக்கியங்கள் உயர்ந்த இலக்கியத் தரம் வாய்ந்தவை. கற்பனை அழகுடன் கருத்தைச் சொல்வதில் கவித்துவம் பெற்றவை. இனிய இசையும் எளிய சொல்வளமுங் கொண்டு, கேட்போர் சிந்தையில் உறையத் தக்கவை. தங்குதடையற்ற உணர்ச்சியோட்டம் இவற்றிற்கு உண்டு. பொங்கிப் பெருகும் புதுப் புனல் போல், பெருகிக் கிளம்பும் ஆற்றல் இவற்றிற்குண்டு.

ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தமிழ் நிலத்தில் தோன்றி வளர்ந்த சமூக, பொருளாதார மாற்றங்களையும் அவற்றின் விளைவுகளையும் நாட்டுப் புற இலக்கியங்கள் மிகத் தெளிவாகச் சொல்லுகின்றன.

தனி மனித உணர்ச்சிகள் சமூகக் கட்டுப் பாடுகளால் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டிருக் கின்றன; ஆங்காங்கே தோன்றிய மக்கள் தலைவர் ஒரு சிலரின் வளர்ச்சி வேகம் சமூகத்தின் இயக்கத்தை எப்படியெல்லாம் பாதித்திருக்கிறது என்பன போன்ற பல அரிய செய்திகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவற்றோடு நின்றிடாமல் வர்க்கப் போராட்டத்தை ஓர் அழுத்தமான பாடுகளமாகத் தமிழ் இலக்கியத்திற்கு வழங்கிய பெருமை நாட்டுப்புற இலக்கியங்களுக்கு உண்டு என்பதை இக் கட்டுரையின் வாயிலாக நோக்கலாம்.

## 2. நாட்டுப்புற இலக்கியங்களில் தொழிலாளர் நிலை

கல்வி அறிவு இல்லாத பாமர மக்கள் இனிய பேச்சு மொழியில் தங்களுடைய இன்ப துன்பங்களை நாட்டுப்பாடல் அமைப்பில் கூறுகின்றனர். இவ்வகை யான பாடல்கள் மேடையில் பாடுவதற்காகவோ, ஒரு கூட்டத்தை மகிழ்விப்பதற்காகவோ பாடப்படுபவை அல்ல. பாடுவோரின் இன்பத்தையும் துன்பத்தையும் வெளிப்படுத்துவனவாகவே அவை அமைந்திருக்கும்.

ஏட்டில் எழுதப் பெறாது காற்றில் உலா வருகின்ற நாட்டுப் பாடல்களில் கவிதை நயம் மட்டுமன்றி வாழ்க்கை நிலைகளும் படம்பிடித்துக் காட்டப்படு கின்றன. அவற்றுள் படிந்து கிடக்கும் வாழ்வியல் உண்மைகளையும் இழையோடியிருக்கும் தொழிலாளர் நிலையினையும் காண்போம்.

தோட்டத் தொழிலாளர்கள் சார்பான நாட்டுப் பாடல்களை மனித வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திச்

கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே.

- திருமந்திரம் : 285

NARASU'S ROLLER FLOUR MILLS, 16-A Court Road, Post Box No.725, Johnsonpet, Salem - 636 007. Phone : 66434

சில தலைப்புகளில் காணலாம். அப் பாடல்களில் சமுதாய நிலைகளை நன்குணர முடிகிறது.

தோட்டப் பகுதியில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், சேலம் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்தோரே அதிகம் குடியேறி இருக்கின்றனர். இந்தக் கொழுந்துக் கூலிச் சனங்களிடம் தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய வகுப்பினர் போன்ற இனத்தவரும் இருக்கின்றனர். எந்தப் பிரிவைச் சேர்ந்தவராக இருந்தாலும் தொழிலாளர் நிலையும், பொருளாதார நிலையும் வறுமையும் ஒன்றாகவே காணப்படுகின்றன. உழைத்தால்தான் இவர்களது வயிற்றை அன்றாடம் கழுவ முடியும் என்ற நிலையே காணப்படுகிறது. ஆகையால், மிகக்குறைந்த கூலி பெறுகின்ற தொழிலாளர்கள் தோட்டத் தொழிலாளர் களிடையே மிகுதி. இவர்கள் குறைந்த கூலி பெறுவதைப் பாடல் மூலம் அறியலாம்.

"அஞ்சு ரூபா கூலியைத்தான்
ஆறுமாசம் பிடிச்சாரே
பிடித்துத்தான் வைத்திருக்காங்க
பத்தாதுன்னு கேட்டதற்கு
பட்டுண்ணுதான் சொல்ல
வெளியே பிடிச்சு தள்ளுறாரு"

என்ற பாடல் மூலம் ஒரு தொழிலாளியின் குறைந்த கூலியையும், உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கேட்பதனையும், அந்தத் தொழிலாளிக்கு நேர்ந்த நிலையையும் அறிகின்றோம்.

தேவிகுளம் தேயிலைத் தோட்டத்தில் வாழும் மக்களையும் அவர்தம் வாழ்க்கை நிலைகளையும் எண்ணிப் பார்த்தால் அன்னார் வறுமை நிலை கேட்போரையும் நெஞ்சுருக்குவதாக அமையும். இந்தியப் பெருநாட்டிற்கு அதிகமான அந்நியச் செலாவணியைத் தேடித்தரும் தொழிலாளர்களின் நிலை பரிதாபத்திற் குரியதாக உள்ளது.

ஒளிவிடும் மெழுகுவர்த்தியின் அடியில் இருள் தேங்கிக் கிடப்பதுபோல், பெயர் பெற்ற தேயிலையும், ஏலமும் விளையும் மண்ணில் பட்டினியும், அடக்குமுறையும் மனிதாபிமானச் சீரழிவுகளும் கொத்தடிமை முறையும் தலைவிரித்தாடுகின்றன. இவற்றிற்குப் பலவித காரணங்களைக் கூறலாம். நிரந்தரமற்ற வேலை, குறைந்த கூலி, முதலாளித்துவ அமைப்பு எண்ணிக்கையில் குறைந்த தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ள முடியாதபடியான ஒரு சூழ்நிலை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நாள்தோறும் உழைத்துத் தங்களது உடலை இழைத்துக்கொள்ளும் தொழிலாளிக்கு வழங்கப்படும் கூலி மிகக் குறைவானது. மேலும், குடும்பத்தில் உள்ளவர்கள் சாப்பிட்டும், சாப்பிடாமலும் இருக்கின்றனர். இந்நிலையில் முதலாளியிடம் நல்ல பெயர் எடுக்க வேண்டும்; அத்துடன் தாங்கள் மேற்கொண்ட வேலையும் தடைபடக்கூடாது என நினைக்கின்றனர். அவர்களது எண்ணம் அவ்வட்டாரக் கொழுந்துக் கூலிகளின் நிலையையும் அவர்களின் வறுமையையும் காட்டுகிறது. முதலாளிக்கு அடிபணிந்து நடக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இக் கருத்துகளை ஒரு தொழிலாளி நாட்டுப்பாடல் மூலமாக வெளிப்படுத்துகிறான்.

"பஞ்சகாலப் பாட்டக் கேளுங்க பாட்டாளி மக்கா
பாத்துணா்ந்து வேலை செய்யுங்க
ஒரு பிடி அரிசி வாங்கி உலையிலேதான் போட்டு
புருஷனுக்கு ஊத்திப்புட்டு
பொஞ்சாதி கஞ்சில்லாமல் கிடக்கிறாளே"

என்ற இப்பாடல் அவர்களின் பொருளாதார நிலையில் அவர்கள் படும் வறுமை நிலையையும், தொழிலாளர் நிலையையும் குறிப்பிடுகிறது.

## 2. பெரட்டுக் களத்தில் பொம்மை

தொழிலாளர்கள் தங்களுடைய வறுமை நிலையையும் வர்க்க வேறுபாட்டினையும் தெளிவாக உணர்த்துகின்றனர்.

முதலாளியின் ஆடம்பர மாளிகை; அதன் வாசலே பேரேடு களம். அதன் நடுவில் நிருவாணமாக நிற்கிறது ஒரு பொம்மை. கிரேக்க தேவதைகளின் சிலைகள்; இப்படிப்பட்ட பொம்மைகளைக் குறிப்பாகக் கிரேக்கப் பெண் தெய்வங்களையும் புராண அழகிகளையும் சிலையாக வடித்து வைத்து, கலை உணர்ச்சியைத் தலை குனிய வைக்கிறது முதலாளித்துவம். அதன் ரசனை தொழிலாளி வர்க்கத்தைக் கிண்டல் செய்கிறது; அவமானப்படுத்துகிறது. இதை எதிர்க்கத் துணிவற்ற நிலையில் உழைப்பவர்கள் உள்ளனர். இவர்களால் கண்ணீர் விடவும், முகம் சுளித்து வருந்தவும்தான் முடிகிறது என்பதைப் பாடல் வழியாகக் கூறுகிறான்.

"பெரட்டுக் களத்திலே பொம்மையை நிறுத்த
பொம்பள யெல்லாம் சுளிக்கிறாக . . . இந்தக்
கலியாணம் முடியாத வாலிபரெல்லாம்
கண்ணீர் விட்டு மயங்குராக . . . . . . . எங்க
ஏ . . . ஏசு . . . . . . முதலாளித் தோட்டம் . . . எங்க"

அறிவு ஒரு தொடர்கதை ; அதற்கு ஆசிரியர்கள் தொடர்ந்து தோன்றியபடி இருப்பார்கள்.

- பேரறிஞர் அண்ணா

NARASU'S SPINNING MILLS, 16, Court Road, Salem - 636 007. Phone : 68066, 66609

பிரபுத்துவ சமுதாயத்தின் கொடுமைகள் இத்துடன் நின்றுவிடவில்லை. உழைப்பாளிகளின் கற்பிலும் கை வைத்திருக்கிறது. வயிற்றைக் கழுவ வேண்டுமென்றால் இந்த இழப்புகளை மகிழ்ச்சியொடு அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தை எந்தளவுக்குக் கொடுமைப் படுத்துகிறார்கள் என்பதைப் பேசவைக்கிறது.

கண்ணகி பிறந்த நாடு இது என்றும், இராமனின் ஏகபத்தினி விரதத்திற்கு ஏற்றம் கொடுத்து வரும் நாடு என்றும் பெருமைப்படுகிறோம். நடைமுறையில் அவ்வாறு இல்லை. முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம் உடல் நலம் பெறுவதை விரும்பாது இருக்கின்றது. அந்த அப்பாவித் தொழிலாளர்களின் கற்பு இந்நிலையில் இருக்கிறது. இவ்வாறாக நாட்டுப்புற இலக்கியத்தில் வர்க்க வேறுபாடுகள் சமுதாய நிலை பேசப்படுகிறது.

### 2.2 வர்க்க வேறுபாட்டில் தொழிலாளர்கள் நிலை

வர்க்க நிலையில் வேறுபாடுகள் காணப்படு கின்றன. அதில் தொழிலாளிகளின் நிலை மிக ஏழ்மையில் வாடிக்கிடக்கிறது. தான் பெற்ற குழந்தைக்குக் கூடத் துணி எடுத்துக் கொடுக்க இயலாத நிலை. அவன் பிறந்த மேனியுடன் திரிகிறான். ஆனால், முதலாளிகளின் குழந்தைகள் செல்வச் செருக்கினால் புது வகையான ஆடைகளை அணிகின்றார்கள். தொழிலாளியின் குழந்தைகள் அதைப் பார்த்து ஏங்குகின்றனர். இங்கே ஒரு குழந்தை தன் அப்பாவிடம் முதலாளியின் மகன் அணிந்திருக்கும் ஆடையைச் சுட்டிக் காட்டுகிறான். "அவனைப் போல எனக்கு ஒரு துணிகூட இல்லை அப்பா" என்பதைப் பாடல் மூலம் கூறுகிறான்.

"அப்பா பாரு அவனைத்தான்
அழகாய்ச் சொக்காய் போட்டிருக்கான்
நீ எப்ப வாங்கித்தார
எனக்கு ஒன்றும் இல்லையப்பா"

என்ற பாடல் மூலம் காணமுடிகிறது. தன் மகன் கேட்ட துணிகளை வாங்கிக் கொடுக்கக்கூட இயலாத நிலை. இந்த நிலையில் முதலாளி வர்க்கத்தையும் அவனுடைய செல்வச் செருக்கையும் தந்தை தன் பாடல் வாயிலாக வர்ணிக்கிறான்.

"கண்ணே மணியே தெரியாதோ
அவன் காசுக்காரன் பிள்ளையின்னு"

இந்தச் சமூக அமைப்பில் உழைக்கும் வர்க்கம் எப்படிப் பணிவாக இருக்கவேண்டுமென்று விரும்புகின்றதோ அப்படி இருக்க வைத்திருக்கிறது.

### 3. சமுதாய நிலையில் பசியின் கொடுமை

பசி என்பது இன்றியமையாத ஒன்று. மானிட வர்க்கமாகப் பிறந்த ஆண், பெண் மற்றும் விலங்குகள், உயிர்ப் பிராணிகள் அனைத்திற்கும் பசி என்பது இயற்கையானது. ஆனால், குழந்தைகள் பசி சொல்லொணாப் பசியாக இருக்கிறது. தனது தகப்பனிடம் பசியை எடுத்துக் கூறுகின்றான்.

"அப்பா அங்கே ஆமவடை . . . ஆகா
எச்சில் ஊறுதப்பா
வயிறு ரொம்ப பசிக்குதப்பா . . . நீ
வாங்கித் தந்தா பிடிக்குமப்பா"

என்ற பாடல் மூலம் பசியின் நிலையை நாட்டுப்புற இலக்கியங்கள் சித்திரித்துக் காட்டுகின்றன.

### 4. பொதுவுடைமை பற்றிய செய்திகள்

நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துப் பொருள் களும் எல்லாருக்கும் பொதுவானவை. ஜனநாயக நாட்டில் பொதுவுடைமை பற்றிப் பேசுவோர் பலர். ஆனால், நடைமுறை வாழ்க்கையில் இல்லை. பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக இருக்கின்றனர். ஏழைகள் ஏழைகளாகவே காலம் கழிக்கின்றனர். இதில் முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாடு உள்ளன. பொதுவுடைமை பற்றிய செய்திகளை நாம் பாமர மக்களிடம் அறிந்துகொள்ள முடிகிறது. பொதுவுடைமை பற்றிப் பின்வரும் பாடல் மூலம் கூறுகிறான்.

"சொத்தை எல்லாம் பொதுவாக
சுகத்தை எல்லாம் சமமாக . . . வச்சா
நம்மிடம் வருமப்பா
மக்கள் வாழ்க்கை எல்லாம் வளருமப்பா"

தேயிலைத் தோட்டக் கூலிகளின் வாழ்வையும் அவர்களின் பாடல்களையும் சகோதர எண்ணத்தில் உற்று நோக்கினால் இந்த நாட்டில் ஒரு பெரிய அடிப்படை மாற்றம் தேவைப்படுகிறது. அவ்வாறு இல்லை என்றால் ஒரு ஜார் காலத்து ருஷ்யாவையோ, பதினான்காம் லூயி காலத்து பிரான்சையோ நாம் வரலாறுகளில் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலை இராது என்பது புலனாகும்.

### 5. சமூக நிலையில் பாலுறவுச் சிக்கல்

மனிதன் தனி வாழ்க்கை, கூட்டு வாழ்க்கை என்று இரண்டு நிலையில் வாழ வேண்டியிருக்கிறது. தன்

நகுதற் பொருட்டன்று நட்டல்.
- திருக்குறள் : 784

**SALEM FOOD PRODUCTS,** (Roller Flour Mills), 67/2B Calicut Main Road, Nethimedu, Salem - 636 002. Phone : 50949

உள்ளத்தில் எழும் இன்ப துன்பங்கள், காதல் கனவுகள் போன்ற உணர்ச்சிகளுக்கு அவன் சொந்தக்காரன். ஆகையால், அவன் தனக்குள்ளே பாடிக்கொள்கிறான். தானாக ரசித்துக் கொள்கிறான். அவன் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்கும் நாட்டுப் பாடல்களைப் பாடுகிறான். இந்த நிலைக்கு எல்லாம் காரணம் குடும்பத்தில் எழும் அன்றாடப் பிரச்சினைகள்தாம். கணவனை, மனைவி 'போடா வாடா'' என்று தரம் கெட்ட சொற்களால் திட்டுகிறாள். இதன் காரணமாக மன அமைதியைத் தேடுகிறான். தனக்கு நிம்மதி கிடைக்க வேறு பாதையில் செல்கிறான். அவ்வாறு செய்யும்போது பாலுறவுச் சிக்கல்கள் அமைந்துவிடுகின்றன. வீட்டின் நிலைமையை மனைவி அறிந்து பேசுகிறாள். இதை அறியாத ஆண்கள் தங்களது மனத்தை மாற்றிக்கொள்கிறார்கள். இதனை மையமாகக் கொண்டு பாலுறவுச் சிக்கல் நிகழ வாய்ப்பாக இருக்கிறது. இதை,

"கஞ்சிக்கு உப்புமில்ல  
காத்தம்படியும் கையிலில்ல  
நஞ்சு குடிச்சு சாகணும்  
ஏ . . . நீசன் பெத்த வேசி மகனே  
உனக்கு ஓர் பெண்டாட்டி - ஒன்  
ஒழுங்குக்கோர் வைப்பாட்டி !"

என்ற இப் பாடல் மூலம் காணமுடிகிறது. இந்தப் பாடலில் குடும்பத்தில் நிகழும் சண்டைகளுக்கும் வேறுபாடுகளுக்கும் காரணங்களான கணவன் குடித்துவிட்டு வருதல், வைப்பாட்டி வைத்துக் கொள்ளுதல், ஊதாரிச் செலவு செய்தல், அதிகம் உணவு உண்ணுதல், சோம்பேறியாய்க் கிடத்தல் ஆகியவற்றைக் கண்டித்தல் போன்றவை இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான சண்டைகள் கணவன் மனைவி இடையே இருப்பினும் கொடூரமான குணத்தையுடைய கணவன் மனைவியாய் இருந்தாலும் விவாகரத்து செய்து கொள்வதாக இல்லை. இப்படிச் செய்வதன் மூலம் தன் கணவனை எப்படியும் மீட்டுவிடலாம் என்றே மனைவி கருதுகிறாள். இவ்வாறு இருப்பதால் தன் குடும்பப் பொறுப்பும், சமுதாயப் பொறுப்பும் நன்கு உணரப்படுகின்றன. இதுதான் நாட்டுப்புற இலக்கியத்தில் பொது மரபு.

### 6. நாட்டுப்புற இலக்கியங்கள் காட்டும் சாதி வேறுபாடு

நாட்டுப்புற இலக்கியங்களில் சாதி பற்றிய செய்திகளையும் காணமுடிகிறது. எனினும், ஒவ்வொரு சாதியினரும் தங்களுக்குரிய சாதி, சமயப் பழக்க வழக்கங்களை விட்டுவிடாமல் அவற்றைக் காப்பாற்றப் போட்டியிட்டுக்கொண்டும் இருக்கின்றனர். சாதிச் சண்டைகள் ஏற்பட வழி இல்லை. ஆனால், சாதிப் பற்றும் இன உணர்வும் மறையவில்லை. இருந்தாலும் இந்தக் கொடிய நோயைச் சுட்டுப் பொசுக்குவது போலக் கலப்புத் திருமணங்கள் நடந்துவருகின்றன. நாட்டுப்புற இலக்கியத்தில் கலப்புத் திருமணம் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

சாதி வேறுபாடு என்பது கொடிய நச்சுத் தன்மை போன்றது. சாதி என்ற அமைப்பில் 'ஆண், பெண்' என்ற இரண்டு சாதிகளே உண்டு. இதை விடுத்துச் சாதியின் பின்னணியில்தான் செல்லவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஒத்த மனம் கொண்டவர்கள் கலப்புத் திருமணம் செய்துகொள்வது தவறு இல்லை. அதனடிப்படையில் நாட்டுப்புற இலக்கியங்களில் கலப்புத் திருமணம் பற்றிப் பேசப்படுகிறது.

உயர்ந்த சாதி என்று கருதப்படும் 'பிராமணர்' வகுப்பைச் சேர்ந்தவன், தாழ்ந்த குடியில் பிறந்த 'மாதரி' என்ற பெண்ணை விரும்புகிறான். அவள் "என்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றால் என் சாதியின் பழக்கத்தை எல்லாம் நீ கடைப்பிடிக்க வேண்டும்'' என்கிறாள். மேலும், "என்னை, இல்லறத் துணைவியாக அடைய வேண்டும் என்பது இயலாத ஒன்று'' என்றும் கூறுகிறாள். அவனோ, "அவளையே திருமணம் முடிப்பேன்" என்கிறான். "அதனால் ஏற்படும் எல்லா விளைவுகளையும் தாங்கிக்கொள்கிறேன்", என்றும் கூறுகிறான். ஆனால், அவளோ வாழ்க்கையில் தான் வாழாவெட்டியாகி விடக்கூடாது என்பதற்காகச் சில விதிமுறைகளைக் கூறுகிறாள். "நீ என்னைத் திருமணம் முடிக்க வேண்டும் என்றால் உன் இன பந்துக்களை மறக்க வேண்டும்" என்று கூறுவதைப் பாடல் வாயிலாகச் சொல்கிறாள்.

"எங்ககூட வந்தாலே பாப்பாரையா  
உன்சாதி சனத்தை எல்லாம் மறக்கணுமே"

என்பது அப் பாடல். சமுதாயத்தில் கலப்புத் திருமணங்களை ஆதரிக்கின்றார்கள். ஆனால், அது நிலையான ஒன்றாக இல்லை. ஆண்கள், பெண்களைப் பணத்திற்காகவும் ஆசையைத் தீர்த்துக் கொள்வதற்காகவும்தானே இன்றைய கலப்புத் திருமணங்கள் நடைபெறுகின்றன. ஆனால், நாட்டுப்புற இலக்கியங்கள் காட்டும் கலப்புத் திருமணங்கள் நிலையானவை. போலிக் கலப்புத் திருமணத்தை அது பேசவில்லை. உண்மையை மட்டுமே வெளிப்படுத்துகின்றது.

சாதிய வேறுபாடு மறையவில்லை. மாறாக ஆங்காங்கே கலப்புத் திருமணங்கள் நடைபெறுகின்றன.

அச்சம் தவிர்ந்தது வாழ்வு - நல்  
அன்பில் விளைவது வாழ்வு.

\- பாவேந்தர் பாரதிதாசன்

VISU PIPES & FITTINGS PRIVATE LIMITED, 83, C.V. Market Road, Salem - 636 001. Phone : 64300

இன்றைய சமுதாயத்திலும், இந்திய ஆட்சியிலும் கலப்புத் திருமணத்தை ஆதரிக்கிறார்கள். கலப்புத் திருமணத்தை வரவேற்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கிறார்கள். சாதிய நிலை என்று மாறுமோ அன்றுதான் கலப்புத் திருமணம் அதிகமாக நடைபெற வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு நாட்டுப்புற இலக்கியங்களில் கலப்புத் திருமணம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

## 7. பிற சமுதாயப் பிரச்சினைகள்

### 7.1 வரதட்சணைக் கொடுமைகள்

வரதட்சணை என்பது இன்று மக்கள் இரத்தத்தோடு கலந்துவிட்ட ஒன்று. இக் கொடுமை பற்றிய செய்திகளை நாட்டுப்புற இலக்கியங்கள் மூலமாகவும் அறியமுடிகின்றன. இன்றைய திரைப்படங்களில் வரதட்சணை பற்றிய கருத்துகளை எடுத்துக் கூறினாலும், அதை மக்கள் நம்புவதாக இல்லை. காரணம் திரைப்படம் என்பதால் கற்பனை கலந்து கூறுவார்கள் என்ற எண்ணம். ஆனால், நாட்டுப்புற இலக்கியத்தில் இடம்பெறும் செய்திகளுக்கும் கற்பனை மட்டுமே காரணமாக இருக்க முடியாது. ஏதாவது ஓர் உண்மை நிகழ்ச்சியும் அமைதல் வேண்டும்.

தாய், தந்தை இல்லாத பெண், அவளைத் தன் அண்ணன் சீராட்டி வளர்க்கிறான். அவளுக்குத் திருமண நாள் குறித்து எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுவிட்டன.

ஆனால், வரதட்சணை கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறான். அங்குமிங்கும் பணத்திற்கு அலைந்தும் கிடைக்கவில்லை. தன் அண்ணன் படும் துன்பத்தைப் பார்த்து அவள் இறந்துவிடுகிறாள். அவ்வாறு தங்கை இறந்த செய்தியைப் பாடல் மூலம் கூறுகின்றான்.

"தங்கச்சிய தள்ளி வச்சு
தாலிகட்ட நேரங்குறிச்சு
அழுகிறே பணத்தை நினைச்சு
சீர் கொடுக்கவே பிணமாச்சு
தங்கச்சி பிணமாச்சு"

தாலாட்ட தாய் இல்லை ; சீராட்டத் தந்தை இல்லை. இருந்தபோதிலும் தன் தங்கையைச் சீர்தூக்கிப் பார்க்கப் பணமில்லையே! அதனால், நான் தவிக்கிறேன் என்பதனைக் கூறுகிறான்.

பொருள் இன்மையால் ஏற்படும் நிலைமையின் காரணமாக இச் சமுதாயத்தில் வாழ முடியாமல் இறந்துவிடுகிறாள். வரதட்சணை இன்மையால் திருமணம் ஆகாத பெண்கள் ஏராளம். இதனால், வாழாவெட்டிகள் எண்ணிக்கையில் அதிகம். இதற்கு முக்கியக் காரணம் பொருளாதாரப் பற்றாக்குறை, உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை. பெண்ணாகப் பிறந்த ஒருத்திக்குத் தன் தாலிக் கயிறே தூக்குக் கயிறு ஆகிவிடுகிறது. இவ்வாறு நாட்டுப்புற இலக்கியங்களில் வரதட்சணைக் கொடுமை பற்றிய செய்தியை அறிய முடிகிறது.

### 7.2 களவின் விளைவு

சமூகத்தில் 'களவு' என்பது ஒரு குற்றம். இக்குற்றம் செய்பவருக்குத் தெய்வம் தண்டனை அளிக்கும் என்பது ஒரு நம்பிக்கை. இந் நம்பிக்கையின் வெளிப்பாடு நாட்டுப்புற இலக்கியத்தில் காணப்படுகிறது.

"காளியம்மன் கோவிலிலே
கருணை சித்தூணுதாயே
களவாட வந்தவனுக
கண்ணவிஞ்சு நிப்பான்"

என்ற நாட்டுப்புறப் பாடல் சான்றாகும். பிழைப்பு நோக்கித் தேயிலைத் தோட்டத்தில் குடியிருக்கும் தொழிலாளர்களை முதலாளிகள் தெய்வத்தின் பெயரால் பயமுறுத்துகிறார்கள். தீமைகளை வேரறுக்கும் செயல்களைக் காளி செய்வாள் என்று புராணங்கள் சொல்லுகின்றன. எனவேதான், காளியின் உருவம் கொடுமையாகவும், கைகள் கொடிய ஆயுதங்கள் தாங்கினவாகவும் காட்டப்படுகின்றன. 'காளி' உண்மையில் ஒரு வெளிப்பாடுதான்.

திருடுவது பாவச் செயல். அதிலும் கோவிலில் திருடுவது கொடியதும் பாவமும் நிறைந்த செயல் என்று பாமர மக்கள் நம்புகிறார்கள். கிராமங்களில் காளியம்மன் கோவில்கள், ஓர் ஒதுக்குப்புறமாக அல்லது கிராமங்களுக்கு வெளியே அமைந்துள்ளன. இந்தத் தன்மையே திருடர்களுக்கு வாய்ப்பானதாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் காளி கடுமையாக நடந்துகொண்டால்தானே வாழமுடியும். இது வேடிக்கை தான். களவு செய்தால் காளி கண்ணைப் பிடுங்கி விடுவாள் என்று தெய்வத்தின் பேராலான அச்சுறுத்தல் நாகரிகமானதன்று. நில உடைமைச் சமூகம், தன் உடைமைகளைப் பாதுகாத்துக்கொள்ள இவ்வாறு தெய்வங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறது. குற்றவாளிகள் களவுக்கும் தெய்வம் துணை நிற்கிறது. இதன் மூலம் தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டப்படுகிறது. தெய்வத்தின் பெயரால் நடக்கும் களவின் விளைவுகளை நாட்டுப்புற இலக்கியங்கள் இவ்வாறு மிகத் தெளிவாகச் சொல்கின்றன.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே.

- புறநானூறு : 165

SHA MADANRAJ SUBHRAJ, No.6, Police Patrol Road, Shevapet, Salem - 636 002. Phone : 50578

## முடிவுரை

சமுதாய நிலையில் பொருளாதாரப் பற்றாக் குறையினால் ஏற்படும் நிலையினை நாட்டுப்புற இலக்கியங்கள் கூறுகின்றன.

வர்க்க வேறுபாடுகளின் மூலம் முதலாளி, தொழிலாளி ஆகியோர் நிலை விரிவாக உணர்த்தப்படுகின்றது.

பாலுறவுச் சிக்கலால் ஏற்படும் நிலை, குடும்பத்தில் எழும் பிரச்சினைகள் குறித்தும் நாட்டுப்புற இலக்கியங்கள் காட்டுகின்றன.

இவ்வாறாக நாட்டுப்புற இலக்கியங்களில் சமுதாய நிலையை நன்கு உணரமுடிகின்றது.

செல்வி எஸ். செல்வசுந்தரி,
இளம் இலக்கியம் மூன்றாம் ஆண்டு,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - *625 001.*



எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

- புறநானூறு : 187

**SREE UMA PARAMESWARI MILLS LTD.,** 30, sugavaneswara Road, Balaji Nagar, P.B.No.415, Salem - 636 004. Phone : 447466

# யாதும் ஊரே யாவரும் கேளிர்



## செல்வன் ஆ. காமராசு

சில்லென்ற பூங்குன்றம் என்ற ஊரில்
சீராக வாழ்ந்திட்ட கணியன் உள்ளம்
தொல்லுலக உறவோடு பார்த்த பார்வை
தூயவொரு சிந்தனையில் உதித்த முத்து;
"எல்லோரும் ஓர்குலம்தான் உலகில் வாழும்
எல்லோரும் ஓரினம்தான்" என்ற சொல்லை
நல்லதொரு நோக்கினிலே சொன்ன தாலே
நாடின்றும் அவன்பெயரை மறக்க வில்லை!

அறிவியலில் பல்லாய்வு வளரும் நாளில்
அணுகுண்டுச் சோதனையைச் செய்வ தென்ற
நெறிவிட்டு உலகத்துத் தலைவ ரெல்லாம்
நேர்கூடி ஒருமித்துக் கலந்து பேசிக்
குறிக்கோளாய் ஒருலகம் சமைத்து விட்டால்
குவலயத்தில் அன்புமலர் பூக்கும் என்ற
செறிவினிலே பன்னாளாய் ஆய்ந்து தேர்ந்து
சிந்தித்தே இத்தொடரைச் சொன்னான் போலும்!

மதங்களிலே தனிச்சண்டை; வேற்று நோக்கில்
மாற்றாரின் நாடதனைப் பிடிக்கும் வேட்கை;
இதமான மொழிபேச இசைவே இல்லை
என்றைக்கும் தொடர்கின்ற சாதிப் பூசல்;
பதம்கெட்டுப் போய்விட்ட பதார்த்தம் போன்று
பாரெல்லாம் சிதறுண்டு பாகு பட்டு
நிதம்மாறும் நிலைவேண்டா என்று தானோ
நெடுநாளின் முன்னிதனைப் பாடி வைத்தான்!

எவ்வூரும் நம்மூரே என்று பேசி
எல்லோரும் ஒருசுற்றம் ஆவோ மென்றான்;
வெவ்வேறு எண்ணங்கள்; கருத்து மோதல்;
வேறாக்கும் பிரிவினைகள்; உலகி னுக்கே
ஒவ்வாது; ஒற்றுமையே வலிமை என்னும்
உயர்கொள்கைத் தொடராகத் தமிழின் ஏட்டில்
பவ்வியமாய் எழுதிவைத்துப் படிக்கச் செய்தான்;
பாரெங்கும் தொடர்ந்ததனை முழங்க
வைப்போம்!


இன்னாது அம்மஇவ் வலகம்
இனிய காண்கிதன் இயல்புஉணர்ந் தோரே.

- புறநானூறு : 194

**SRI NACHAMMAI COTTON MILLS LTD.**, 30, Sugavaneswara Road, Balaji Nagar, Salem - 636 004. Phone : 44 8847



தண்டலை மயில்க ளாட, தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண் விழித்து நோக்க
தெண்டிரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கு மாதோ!

**பள்ளி மாணவர்கள் ஓவியப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றது.**

கே. இராமஜெயம்,
8ஆம் வகுப்பு, 'இ' பிரிவு
வெங்கடேசா மேனிலைப் பள்ளி,
ஆலங்குடிப்பள்ளம்,
ஆனைக்காரன்சத்திரம் அஞ்சல்: 609 102.

என்றுமுள தென்தமிழின் வளர்ச்சி வேண்டி
ஏற்றமுடன் மொழியாய்வு வளர்க்கும் நோக்கில்
இன்றுலகத் தமிழறிஞர் கூட்டம் தன்னை
இனிதுடனே வரவழைத்து மகிழும் நேரம்
தொன்றுதொட்டுப் பாடிவரும் கணியன் கூற்றைத்
தொழுதிடுவோம்; உலகத்து வீதி யெங்கும்
நின்றிடவே செய்திடுவோம்; உலக மக்கள்
நேசமுடன் பழகிடவே வழிகள் காண்போம்!

சங்கத்துத் தொகைநூலாம் புறநா னூற்றில்
சால்புடனே பதிவான கருத்துக் கோட்டை
மங்காது சொல்லிடுதல் மட்டு மன்றி
மாட்சிமிகு செயல்தன்னில் காட்டல் நன்று;
தங்குதடை வந்திடினும் அஞ்சி டாமல்
தடுத்ததனை உலகமொழி ஆக்கல் ஒன்றே
பொங்குபுகழ் தமிழன்னை பாரதத் திற்குப்
புனிதமுடன் நாம்சூட்டும் மலர்க ளாகும்!

**செல்வன் ஆ. காமராசு,**
இளங்கலை நுண்ணுயிரியல் இரண்டாம் ஆண்டு,
செங்குந்தர் கலை & அறிவியல் கல்லூரி,
திருச்செங்கோடு,
சேலம் மாவட்டம் - 637 207.



உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
- புறநானூறு : 215

**M/S JAYASOORYA TRADERS,** 98-C, Narashiman Road, Shevapet, Salem - 636 002.

# திரைப்படப் பாடல்களில் இலக்கியப் பாங்கு

செல்வன் ஆ. கோதண்டபாணி

## முன் விளக்கம்

இலக்கியம் என்பது ஓர் இனிய கலை. சிற்பக் கலைக்குக் கல்லும் உலோகமும் அடிப்படைகள். ஓவியக் கலைக்குக் கீற்றுகளும் வண்ணமும் அடிப்படைகள். இலக்கியக் கலைக்கு மொழி - மொழியின் சொற்களே அடிப்படை ஆகின்றன. அந்த மொழி கலைக்குரிய தன்மை அல்லது கலையாக்கம் பெறுகின்றபோதே இலக்கியம் உருவாகின்றது. குறிப்பிட்ட உண்மையைச் சில செய்திகளின் மூலமாக விளக்கும் மொழிக் கூறுகள், உத்தி முறைகள் அம்மொழியை இலக்கியமாக்குகின்றன. அவையே இலக்கியக் கூறுகள் எனப்படுகின்றன. இலக்கியத்திற்குக் கற்பனை, உணர்ச்சி, சுவை, மானிட உண்மைகள், செய்திகள், ஒலிநயம், சொல்லமைப்புகள், குறியீடு, வடிவம் முதலானவை இன்றியமையாதன. அக்கூறுகள் திரைப்படங்களில் சிறந்து பொருந்தி அமைந்துள்ளன. இலக்கியங்களில் காணப்படும் தன்மைகள் திரைப்படப் பாடல்கள் பலவற்றில் காணப்படுகின்றன. திரைப்படப் பாடல்களில் இலக்கியப் பாங்கு எவ்வாறு பொருந்தி உள்ளது என்பது பற்றி இக் கட்டுரையில் காண்போம்.

## திரைப்படப் பாடல்களில் கற்பனை

கற்பனை என்பது படைப்பாளரின் அனுபவத்தைப் படிப்போரின் மனக்கண்முன் படைத்துக் காட்டுவதாகும். திரைப்படக் கவிஞன் ஒருவனின் கற்பனையைக் காண்போம். ஓர் ஏழை இளைஞன் தன் சகோதரி திருமணத்தினை எவ்வாறெல்லாம் நடத்த வேண்டும் என்று நினைக்கும்போது தன்னிடம் பொருள் இல்லாமல் மிகவும் துன்பம் அடைகிறான். அப்பொழுது அவன் பாடுகிறான்,

“தங்க நிலவே உன்னை உருக்கித்
தங்கச்சிக்கு தங்கநகை செய்திடவோ
நட்சத்திரமே உன்னை உடைச்சி
விதவிதமாய் வைரநகை போட்டிடவோ”

எனக் கேட்கிறான்.

“நிலவே என் தங்கையின் திருமணத்தை முடிக்க என்னிடம் பொருள் இல்லை. எனவே உன்னை உருக்கித் தங்க நகைகள் செய்து அணிவிக்கட்டுமா” என்றும்,

நம்மக்கள் வாழ்வே தமிழ்வாழ்வு. அவர்கள் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்த்தது தமிழ்; உற்றது தமிழ்; அத்தமிழ் அமிழ்தங் கொண்ட நாடு இந் நாடு.
- தமிழ்த்தென்றல் திரு. வி. க.

SOLO INTERNATIONAL, 96/1, Narashima Chetty Street, Shevapet, Salem - 636 002. Phone : 53590

நட்சத்திரங்களைப் பார்த்து "உங்களை உடைத்து என் தங்கச்சிக்கு விதவிதமாய் வைர நகைகள் போடட்டுமா" என்றும் பாடுகிறான். இயற்கைச் செல்வங்களான நிலவையும், நட்சத்திரங்களையும் அணிகலன்கள் செய்ய நினைக்கும் கவிஞனின் கற்பனை, திரைப்படப் பாடலில் இனிமையாகப் பொருந்தியிருப்பதைக் காணமுடிகிறது.

மற்றொரு திரைப்படப் பாடலில் காதலன் காதலியைப் பிரிந்து தனிமையில் ஏங்கிக்கொண்டு இருக்கிறான். அவன் தன் கரங்களில் தண்ணீர் எடுத்துக் குடிக்கப்போகும்போது தண்ணீரில் நிலவு தெரிகிறது. அப்போது அவன் கூறுகிறான் :

"அந்த நிலாவைத்தான் நான் கையில புடிச்சேன்
என் ராசாத்திக்காக"

இயற்கையாகிய தண்ணீரில் நிலவு தெரிகிறது. இதைத் திரைப்படக் கவிஞன் தலைவன் தலைவிக்காக நிலவைத் தன் கையில் பிடித்துவிட்டதாகக் கற்பனை செய்கிறான். இதே நேரத்தில் தலைவியும் தண்ணீரைக் கையில் முகந்தாள். அப்போது அவளும் "அந்த நிலாவைத்தான் நான் கையில புடிச்சேன் என் ராசாவுக்காக" எனப் பாடும்போது கற்பனையில் சிறந்ததாக இப் பாடல் விளங்குகிறது. மற்றொரு திரைப்படக் கவிஞன் நிலவைப் பார்த்து,

"வாராயோ வெண்ணிலாவே - நீ

கேளாயோ எந்தன் கதையை"

என்று தலைவன் ஒருவன் தன் துன்பத்தை நிலவிடத்தில் கூறுவதுபோல் பாடுகிறான். நிலவு இயற்கைப் பொருள். அதனிடம் கவிஞன் பேசுகின்றபோது கற்பனை புலனாகிறது. இதுபோல் பல திரைப்படப் பாடல்களில் இலக்கியங்களில் சிறந்து விளங்கும் கற்பனைக் கூறுகள் சிறந்து காணப்படுகின்றன.

### திரைப்படப் பாடல்களில் உணர்ச்சி

அன்னை நம்மைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்துப் பாசமுடன் பாங்காய் வளர்க்கின்றாள். இதைப் பட்டினத்தடிகள் மிகுந்த உணர்ச்சியுடன் "ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றெடுத்தாள் அன்னை" என்று குறிப்பிடுகின்றார். இதைத் திரைப்படக் கவிஞன்,

"பத்துமாதம் சுமந்திருந்து பெற்றாள்
பகலிரவாய் விழித்திருந்து வளர்த்தாள்"

என்றும்,

"அன்னையைப்போல் ஒரு தெய்வம் இல்லை - அவள்
அடிதொழ மறப்பவர் மனிதரில்லை
-மண்ணில் மனிதரில்லை"

என்றும் பாடும்போது அன்னையைவிட உலகில் சிறந்த தெய்வம் வேறேதும் இல்லை என்ற உணர்ச்சி படிப்போர்க்குப் பீறிட்டு வருகின்றது.

### தலைவியின் அழுகை உணர்ச்சி

ஒரு தலைவன் தன் தலைவிக்குச் சிறந்த மாளிகை ஒன்று கட்டித் தந்தான். அதில் அவள் நல்ல முறையில் வாழ்ந்து வருகிறாள். ஒரு நாள் அவன் திடீரென்று மறந்துவிடுகிறான். அப்போது,

"எட்டடுக்கு மாளிகையில்
ஏற்றிவைத்த என்தலைவன்
விட்டு விட்டுச் சென்றானடி - இன்று
வேறுபட்டு நின்றானடி"

என்று உள்ளம் குமுறும்படி திரைப்படக் கவிஞன் தலைவியைப் பாட வைக்கிறான். அவள் வாழ்வில் நேரப்போகும் அவல நிலையை உணர்ச்சியோடு படைத்துக் காட்டுகிறான். மற்றொரு தலைவி தன் கணவனை இழந்து கதறி அழுகிறாள்.

"குங்குமத்தைக் கலைக்கவா கூந்தலை விரிக்கவா
மஞ்சளுடன் மாங்கல்யம் இழக்கவா"

என்னும் பாடல் மூலம், அளவுக்கு மீறிய கண்ணீரைத் திரைக் கவிஞன் நம் கண்களில் உணர்ச்சியோடு வரவழைக்கிறான்.

### தலைவனின் அவல உணர்ச்சி

வளமோடு வாழ்ந்த தலைவன் ஒருவன் தன் மனைவி, மக்கள், சுற்றத்தார் அனைவரையும் மறந்து தனியாகச் சென்று இறக்க முற்படுகிறான். அவன் அழுது புலம்பியது இன்றும் நம் செவியில் எதிரொலிக்கிறது.

"வீடுவரை உறவு, வீதிவரை மனைவி,
காடுவரை பிள்ளை, கடைசிவரை யாரோ?"

என்று கதறிக்கொண்டு புலம்பும்போது நம் கண்களில் நம்மை மீறிக்கொண்டு கண்ணீர் வருகின்றது. இந்த உணர்ச்சி மனிதனுக்கு மிகச் சிறந்த ஆழமான உண்மையைத் தரவல்லதாக விளங்குகின்றது. இதைப் பட்டினத்தடிகளும் "ஒருவன் இறந்த பிறகு அவன் மனைவியும் சில மங்கையரும் வீதிவரையில் அழுது

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்.

- புறநானூறு : 195

**ANNAMALAI COTTON MILLS PVT. LTD.,** Gajjalnaickenpatti, Salem - 636 201. Phone : 62925, 67791

கொண்டு வருவர், மைந்தர்கள் சுடுகாடு வரையிலும் வருவார்கள், அவன் செய்த பாவமும், புண்ணியமும் அவனைத் தொடர்ந்து செல்லும்" என்று கூறியுள்ளார். காதலர்கள் ஏதோ சந்தர்ப்பச் சூழ்நிலையில் பிரிந்து வாழ்கின்றனர். அவர்கள் ஒருவரை ஒருவர் மாறி மாறிப் பாடிக்கொள்கின்றனர். முதலில் தலைவன் பாடுகிறான்,

"ராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு
காத்தாடி போலாடுது"

என்று பாடும்போது, அவனின் பிரிவு உணர்ச்சியை நாமும் அடைகிறோம்.

### இன்ப உணர்ச்சி

"புதிய வானம், புதிய பூமி
எங்கும் பனிமழை பொழிகிறது
நான் வருகையிலே என்னை வரவேற்க
வண்ணப் பூமழை பொழிகிறது"

ஒருவன் தன்னை வரவேற்கப் புதிய வானமும், புதிய பூமியும் தோன்றியிருப்பதாக மகிழ்ந்து உணர்ச்சி கொண்டு பாடுகிறான். அவனுடைய உணர்ச்சி அவனுக்குப் புத்துணர்வைத் தருவதோடு அப்பாடலைக் கேட்கிற மக்களுக்கும் புத்துணர்ச்சி தருவதைக் காணமுடிகிறது.

### வீர உணர்ச்சி

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடைமையடா
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு,
தாயகம் காப்பது கடமையடா"

என்ற திரைப்படப் பாடலில் நம் தாய்நாட்டை நாம் தான் காப்பாற்றி ஆக வேண்டும்; அச்சம் கொள்ளக் கூடாது; அஞ்சாமை நம் திராவிடர்களின் உடைமை;ஆறு வயதில் இறந்தாலும் இறப்புதான், நூறு வயதில் இறந்தாலும் இறப்புதான்; எனவே நம் தாயகத்தினைக் காப்பாற்ற ஓடி வாருங்கள் எனும் உணர்ச்சி வெளிப்படுகிறது. மற்றொரு பாடல் வீர உணர்ச்சியைச் சித்திரித்துக் காட்டுகின்றது.

"அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு? - தினம்
அச்சப்பட்ட கோழைக்கு உள்ளம் எதற்கு?
கொடுமையைக் கண்டுகண்டு பயம் எதற்கு? - நீ
கொண்டுவந்தது என்னடா மீசை முறுக்கு"

என்ற பாடலின் மூலம், "அடிமையின் உடம்பில் இரத்தம் இருப்பது எதற்கு? அச்சம் கொள்ளும் கோழைகளுக்கு உள்ளம் எதற்கு? இதுவரையில் நீ கொண்டுவந்தது என்ன? மீசையை முறுக்கி வீரத்தைக் காட்டு" என்று இளைஞர்களின் வீர உணர்ச்சியைத் தூண்டுகிறான் கவிஞன்.

### காம உணர்ச்சி

"கார்குழலும் பாய்விரிக்கும், கண் சிவந்து வாய் வெளுக்கும்" என்ற பாடல் மூலம், காம உணர்வை வெளிப்படுத்திக் காட்டுகிறார் கவிஞர். தலைவியின் கறுத்த நீண்ட கூந்தலானது, அவர்களின் காம உணர்வைத் தீர்க்கப் பாயாக அமைகிறது என்றும், கூடலால் கண்கள் சிவந்தும் வாய் வெளுத்தும் காணப்படுகின்றன என்றும் அறிந்துகொள்கிறோம். இதைக் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் செயங்கொண்டார் கடைதிறப்புப் பகுதியில், "வாயின் சிவப்பை விழிவாங்க, மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்க" எனப் பாடியுள்ளார். இவ்வாறு பலவகையான உணர்ச்சிகள் திரைப்படப் பாடல்களின் மூலம் வெளிப்படுகின்றன.

## திரைப்படப் பாடல்களில் அணிநலன்கள்

திரைப்படப் பாடல்களில் உவமை, உருவகம், சிலேடை முதலிய அணிகள் பயின்றுவந்துள்ளமையைப் பல பாடல்களில் காணலாம்.

"அத்திக்காய் காய்காய் ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்காய் காயாதே என்னைப்போல்
பெண்ணல்லவோ"

என்னும் பாடலில், ஒரு பொருள் காய்களின் வரிசையைக் குறிப்பிடுவது போல் அமைந்துள்ளது. மற்றொரு பொருள் துன்புறுத்தாதே என்பது. தலைவி ஒருத்தி 'விஷம் கலந்த வெண்ணிலவே நானே என் தலைவனைப் பிரிந்து பிரிவுத் துன்பத்தில் வாடிக்கொண்டிருக்கிறேன். மேலும் நீ என்னைத் துன்பப்படுத்தாதே' எனப் பாடுகிறாள். இதில் இரண்டு பொருள்கள் அமைந்து இரட்டுற மொழிதல் என்னும் அணி பயின்று வந்துள்ளது.

### உருவக அணி

திரைப்படப் பாடல்களில் நடிக்கும் பாத்திரங் களைப் பலவாறு உருவகித்துக் காட்டுகின்றனர்.

"கண்ணே, என் கார்முகிலே
கண்ணீரும் ஏனடியோ என்
பொன்னே பூங்கொடியே
பூவாசம் ஏனடியோ?"

ஒலி என்பதெல்லாம் செந்தமிழ் முழக்கம்
ஒளி என்பதெல்லாம் தமிழ்க் கலைகளாம்.
- பாவேந்தர் பாரதிதாசன்

**KARUNA STEEL ROLLING MILLS**, Uthamasolapuram, Salem - 636 010. Phone : 52177

என்ற பாடலின்வழித் தலைவன் தன் தலைவியைக் கண்ணாகவும், கருத்த மேகமாகவும், பூங்கொடியாகவும் உருவகித்துப் பாடுகிறான். இதில் உருவக அணி பயின்று வந்துள்ளது.

## திரைப்படப் பாடல்களின் மானிட உண்மைகள்

திரைப்படப் பாடல்களின்வழி மானிடர் உணர்ந்துகொள்ள வேண்டிய உண்மைகள் பல வெளியிடப்படுகின்றன.

"சிரித்து வாழ வேண்டும் - பிறர்
சிரிக்க வாழ்ந்திடாதே
உழைத்து வாழ வேண்டும் - பிறர்
உழைப்பில் வாழ்ந்திடாதே"

என்ற பாடலின் மூலம் 'நாம் உழைத்துத்தான் வாழ வேண்டும், பிறருடைய உழைப்பை நம்பி வாழ்தல் கூடாது. நாம் மகிழ்ச்சியாகச் சிரித்து வாழ வேண்டும், பிறர் நம்மைக் கண்டு சிரித்து வாழும்படி நடந்துகொள்ளக் கூடாது' என்று கூறும்போது மானிடர்களுக்குத் தேவையான கருத்து இதில் பொதிந்துள்ளதைக் காணமுடிகிறது.

"நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே
நம் நாடு என்னும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளே
நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே"

என்னும் இப் பாடலின்வழி 'நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரப் போகும் முல்லைகளாகிய சிறு பிள்ளைகளே நீங்கள் நல்ல பேரை வாங்க வேண்டும். நீங்கள் சிறந்து பெருமை அடைய வேண்டும்' எனும் கவிஞனின் இளைஞர் நல நாட்டம் வெளிப்படுகின்றது. அடுத்து, நாம் ஏன் சாதி பேதம் பாராமல் இணைந்து வாழக்கூடாது என்று கேட்கும் திரைப்படக் கவிஞன்,

"ஒண்ணா இருக்கக் கத்துக்கணும் - இந்த
உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்
காக்கா கூட்டத்தைப் பாருங்க - அதுக்கு
கத்துக் கொடுத்தது யாருங்க?"

என்ற பாடலின் வழி, மானிடர்கள் ஒன்றாக இணைந்து வாழ்வதற்குத் தேவையான கருத்தைக் கூறுகிறான். இவ்வாறு மானிடர்களின் நல்வாழ்விற்குத் தேவையான பல செய்திகள் திரைப்படப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

## திரைப்படப் பாடல்களில் சுவை - தாலாட்டு

"இந்தப் பச்சைக்கிளிக்கொரு செவ்வந்திப் பூவில்
தொட்டிலைக் கட்டிவைத்தேன் - அதில்
பட்டுத் துகிலுடன் அன்னச் சிறகினை
மெல்லென இட்டு வைத்தேன் - நான்
ஆராரோ என்று தாலாட்ட - இன்னும்
யாராரோ வந்து பாராட்ட"

என்ற பாடலின்வழி, தாலாட்டின் சுவை நமக்கு நன்றாகத் தெரிகிறது. தாய் தன் குழந்தைக்குச் செவ்வந்தி மலரில் தொட்டில் கட்டுவதும் அதில் பட்டுத் துகிலுடன் அன்னச் சிறகினை மெல்லென இடுவதும் சுவை பயக்கும் கற்பனையாகும்.

"அத்தைமடி மெத்தையடி ஆடிவிளை யாடம்மா
ஆடிவிளை யாடிவிட்டு அல்லிவிழி மூடம்மா"

என்று குழந்தையின் அத்தை பாடும்போது நம்மையறியாது மெய்மறந்து தாலாட்டின் சுவையை உணர்கிறோம்.

## நகைப்பு

சில திரைப்படப் பாடல்கள் நகைப்பை ஊட்டுவனவாக அமைந்துள்ளன.

"அடங்கொப்ப மவனே கொப்ப மவனே டன்டனக்கர
னக்கற டன்டனக்கற ராவனா நானூறு மில்லி
கேட்குதடா என் வயிறு சொல்லி"

எனப் பாடும்போது, பொருள் புரிவதால் பாமர மக்களும் நகைக்கின்றார்கள்.

## திரைப்படப் பாடல்களில் சபதம்

ஒருவன் போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு, பின்பு தன் மனைவியின் அறிவுரையின்படி திருந்துகிறான். அவன்,

"அன்னத்தைத் தொட்ட கைகளினால் - மதுக்
கிண்ணத்தை இனிநான் தொடமாட்டேன்"

எனச் சூளுரைக்கிறான். இலக்கியப் பாங்குகளில் ஒன்று சூள் உரைத்தலாகும். அது திரைப்படப் பாடலில் பயின்று வந்துள்ளது என்பது இப் பாடலின் மூலம் நமக்குப் புலனாகிறது.

## திரைப்படப் பாடல்களில் முரண்

"பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு"

இது உலக வழக்கு. இத் தொடர் திரைப்படப் பாடலில் முரணாக வந்து அமைகிறது.

ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்.
- பாவேந்தர் பாரதிதாசன்

**NARASU'S COFFEE COMPANY**,16, Court Road, Johnsonpet, Post Box No. 701, Salem - 636 007. Phone : 67560, 62427

"பெத்தவ மனசு கல்லாச்சி,
பிள்ளையின் மனசு பித்தாச்சி
இன்னொரு மனசு என்னாச்சு, அது
முறிந்து போன வில்லாச்சு"

அன்னை மனசைக் கல்லாகவும், அவன் மனத்தைப் பித்தாகவும், கூறுவதால் திரைப்படப் பாடல்களில் முரண் என்னும் இலக்கியப் பாங்கு அமைந்துள்ளதை அறிகிறோம்.

### திரைப்படப் பாடலில் வெறுப்புணர்ச்சி

தலைவன் ஒருவன் தன் தலைவிக்காக அழகு பொருந்திய பெரிய மாளிகையைக் கட்டி வைத்து மகிழ்ச்சியாக இருந்தான். உடன், அவன் மனைவி இறந்தவுடன் அவன் காதலையே வெறுக்கிறான்.

"காதலே! போ! போ! சாதலே! வா! வா!
யாருக்காக இது யாருக்காக
இந்த மாளிகை, வசந்த மாளிகை,
காதல் ஓவியம் கலைந்த மாளிகை"

என்று வெறுப்போடு அழுதுகொண்டு பாடும்போது நம் நெஞ்சம் நெகிழ்வதோடு, காதலை நாமும் வெறுப்போம் என்பதில் மறுப்பில்லை.

இதை மகாகவி சுப்பிரமணிய பாரதியார்,

"காதல்! காதல்! காதல்!
காதல் போயின், காதல் போயின்,
சாதல்! சாதல்! சாதல்!

என்று காதல் போய்விட்டதென்றால் நாமும் போய்ச்சேர வேண்டும், உயிர் வாழ்தல் கூடாது எனப் பாடுகின்றார்.

### திரைப்படப் பாடலில் தொடர்பு

இறைவனிடத்தில் ஒரு பெண் தொடர்பு கொண்டு பேசுவதுபோல் பாடுகிறாள் :

"நீல வண்ணக் கண்ணனே! உனது
எண்ணமெல்லாம், நானறிவேன்
கண்ணா என் கையைத் தொடாதே
மோகனக் கண்ணா என் கையைத் தொடாதே"

கண்ணனே உன்னுடைய எண்ணமெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும் என்று இறைவனிடம் பேசுவதுபோல் அமைகிறது.

இன்னொரு பெண் இறைவனிடம் பேசுவாள் :

"பன்னிரண்டு கண்களிலே ஒன்றிரண்டு மலர்ந்தாலும்
என் இரண்டு கண்களிலே இன்ப ஒளி உண்டாகும்,
உலகமது உள்ளவரை அள்ளித்தரும் நல்லவரை
விண்ணுலகம் வா என்றால் மண்ணுலகம் என்னாகும்"

"ஏழைகளுக்கெல்லாம் உணவளித்துக் காப்பாற்றிவரும் எங்கள் தலைவனை நீ விண்ணுலகத்துக்கு அழைத்துச் சென்றால் மண்ணுலக மக்களாகிய நாங்கள் என்ன செய்வோம்? எனவே, இறக்கும் தறுவாயில் இருக்கும் இவர் உயிரை விட்டுவிட்டு, அதற்குப் பதில் என்னுயிரை எடுத்துக்கொள் இறைவா" எனப் பேசுகிறாள்.

### திரைப்படப் பாடல்களில் எழுச்சி

'தூங்காதே தம்பி தூங்காதே, நீ தூங்கிவிட்டுப் பின்னாடி ஏங்காதே'' என்ற பாடல் மூலம் பிள்ளைகளுக்கு எழுச்சியினை உண்டாக்குகிறான் கவிஞன்.

"வேப்பமர உச்சியில் நின்னு
பேயொண்ணு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க - உன்
வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க"

இப் பாடலின் மூலம், 'குழந்தைகளின் வீரத்தை அழித்துவிடுகின்றனர். மூடநம்பிக்கையை வளர்த்து விடுகின்றனர்' என்பது புலனாகிறது.

"மனுஷனை மனுஷன் சாப்பிடறாண்டா
தம்பிப் பயலே - அது
மாறுவதெப்போ தீருவதெப்போ நம்மக் கவலை"

இப்பாடலில் மனிதர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொள்ளும் அவல நிலையைப் படம்பிடித்துக் காட்டிச் சமுதாயத்தைச் சீர்படுத்த நினைக்கின்றான் கவிஞன் என்பது புலனாகிறது.

### திரைப்படப் பாடல்களில் வறுமையும் வளமும்

திரைப்படப் பாடல்கள் பல சாதிக் கொடுமை, பணக்கார வர்க்கம் என்ற பேதம், உழைப்பாளி, முதலாளி முரண் முதலிய செய்திகளை நமக்குக் காட்டுகின்றன.

"அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி அதன்
அருகினில் ஓலைக் குடிசை கட்டி,
பொன்னான நாடென்று பெயருமிட்டால்
இந்தப் பூமி சிரிக்கும் அந்தச் சாமி சிரிக்கும்."

இந்தப் பாடல் "பணக்காரர்கள் அண்ணாந்து பார்க்கின்ற அளவிற்கு மாளிகை கட்டி வாழ்கின்றனர். ஏழைகள் குடிசைகூட இல்லாமல் அலைகின்றார்கள்'' என்பதைக் குறிப்பாகக் காட்டுகின்றது.

கண்ணும் ஒளியும் போலே எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ.
- பாவேந்தர் பாரதிதாசன்

A.V.R. கும்பகோணம் சில்வர் ஷாப், ஜுவல்லர்ஸ், 364, கடைவீதி, சேலம் - 1. போன : 412146, 418143

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயக்காட்டில்
உயரும் உன்மதிப்பு அயல் நாட்டில்"

உழைப்புத் தேவையானது என்ற உண்மை இப்பாடலில் புலனாகிறது. வெளிநாடு சென்று பிழைக்க வேண்டும் என்ற கட்டாயமோ, அயலாரைக் கையேந்தி நிற்க வேண்டிய நிலையோ உழைத்தால் இல்லை என்பது சொல்லப்படுகிறது.

## முடிவுரை

திரைப்படப் பாடல்களில் இலக்கியத்தின் தன்மைகளாகக் கற்பனை, உணர்ச்சி, அணிநயம் முதலியன பல பாடல்களில் இடம்பெற்றுள்ளன. திரைப்படப் பாடல்களில் இலக்கியத் தன்மை என்னும் தலைப்பு ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுப்பது போன்றதாகும்.

செல்வன் ஆ. கோதண்டபாணி,
பி.லிட் இரண்டாம் ஆண்டு,
ஸ்ரீமத் சிவஞான பாலயசுவாமிகள்,
தமிழ்க் கல்லூரி,
மயிலம் - 604 304.



வையகமே உய்யுமாறு
வாய்த்த தமிழ் என் அரும பேறு !
- பாவேந்தர் பாரதிதாசன்

சேலம் செவ்வாய்ப்பேட்டை மளிகை & ஷாப் வர்த்தக சங்கம், 110, மாரியம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம் - 2



# திரைப்படப் பாடல்களில் இலக்கியப் பாங்கு

**செல்வன் ஆர். ஸ்ரீதர்**

## முகவுரை

இந்த உலகம் சூரியனிலிருந்து தெறித்து விழுந்து பல இலட்சம் ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. ஒருயிர் அணுக்கள் பரிணமித்து இன்றைய மனிதன் தன் முழுப் பரிணாம வளர்ச்சி அடையச் சில நூற்றாண்டுகள் ஆகியிருக்கின்றன. இன்றைய மனிதன் அறிவியல் வாகனத்தில் ஏறி நாளுக்கு நாள் தன்னைப் புதுப்பித்துவருகிறான். அறிவியலின் சிறந்த படைப்பாகக் கருதப்படுவது திரைப்படம். திரைப்படம் என்பது தொடக்கத்தில் பொழுதுபோக்கு அம்சமாகக் கருதப்பட்டது. பின்னர் சமூக மாற்றம் அடைந்தபோது ஏதாவது சொல்லவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது. அத்தோடு தன்னோடு சார்ந்துள்ள மொழி, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் திரைப்படம் பயன்படுத்தப்படுகிறது. தமிழ் இலக்கிய உலகில் ஒரு கருத்துப்போர் நீண்ட காலமாகவே உண்டு: அது என்னவென்றால், திரைப்படப் பாடல்கள் இலக்கியமாகுமா? இக் கருத்துப் போர் இன்றைய கால கட்டத்தில் பேருருவம் எடுத்துள்ளது. திரைப்படப் பாடல்கள் இலக்கியம் ஆகும் என்று உறுதியாகச் சொல்வது இக் கட்டுரையின் நோக்கம் அல்ல. ஆனால், திரைப்படப் பாடல்கள் இலக்கியமாக அனைத்துத் தகுதிகளும் உண்டு என்பதை உணர்த்துவதே இக் கட்டுரையின் நோக்கம்.

## பாட்டு மரபும் நம் பண்பாடும்

இலக்கியம் என்ற ஒன்றை ஆராயும்போது பண்பாடு, நாகரிகம் இவற்றை விலக்கிவிட்டு இலக்கியம் என்பதற்கு இலக்கணம் வகுக்கமுடியாது. இந்தியாவின் கிராம வாழ்க்கை, பாடல்களோடு பின்னிப் பிணைந்து உள்ளது. பாடல்களை விட்டுப் பிரிக்க முடியாத வகையில் நம் வாழ்வும் வாழ்வின் கூறுகளும் சிக்கியுள்ளன. குழந்தை பிறந்தது முதல் மனிதன் இறந்துபோகும் வரை பாடுகிறான்; பாடல்களைச் சுவைக்கிறான். தாலாட்டு, விளையாட்டு, தெம்மாங்கு, கும்மி, காவடி, ஒப்பாரி, தெருக்கூத்து எனப் பல்வேறு பெயர்களை அதற்குச் சூட்டி மகிழ்கிறான். அதனால்தான் கவிமணி அவர்கள் "இறந்தவர்களுக்கு இவர்கள் அழும்போதுகூட இசையோடு அழுகிறார்கள்" என்று வியக்கிறார். இது நம் பண்பாடு. பாட்டு நம்மைத் தூங்கவைக்கிறது, துள்ளவைக்கிறது, துடிக்கவைக்கிறது, தொழவைக்கிறது, திருந்தவைக்கிறது. மொத்தத்தில் மனிதனை இயக்கும் மாபெரும் சக்தியாக விளங்குகிறது. இதே பாட்டு மனிதனின் கலைகளிலும் கால்வைத்துக் கிளை பரப்பி வந்தது, வருகிறது.

பெண்களால் முன்னேறக் கூடும் - நம்
வண்தமிழ் நாடும்எந் நாடும்!

- பாவேந்தர் பாரதிதாசன்

M/S SHREE PRASANTH INDUSTRIES, W-18, North Main Road, Anna Nagar West Extension, Madras - 600 101



தெருக்கூத்து நாடகமானபோது, தெருக்கூத்தின் உயிர்நாடியான இசையும், பாட்டும் நாடகத்துக்குத் தாவின. நாடகம் திரைப்படமானபோதும் அப்படியே. நமது மரபு கூத்துதான். கூத்திலும் கதை முக்கியமல்ல. தெரிந்த கதைதான். பாடல்களே அதன் உயிர். விடிய விடியப் பாடல்களைக் கேட்டுக்கொண்டே இருப்பர் நம் மக்கள். பாடல்களைக் கேட்டுக்கொண்டே தூங்குவது அல்லது தூங்கிக்கொண்டே பாடல்களைக் கேட்பது என்பது நம் மக்களுக்குச் சுகமான அனுபவம்.

ஊமைப்படங்கள் பேசத் தொடங்கியபோது அவை பேசுவதில் காட்டிய அக்கறையைவிடப் பாடுவதில்தான் அதிக அக்கறை காட்டின. தமிழில் திரைப்படங்களின் ஆரம்பம் பாட்டுடன் கலந்ததாகவும், அதிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகவும், அதற்காகவே அமைக்கப்பட்டது என்ற பிரமையுடன் அதிலேயே சுகங்காணும் ஏற்பாடாகவும் இருந்துவந்தது. நமது திரைப்படப் பாடல்கள் வெற்று ஓசைகளில் தொடங்கிப் பொருள் புரியாத ஆனால் புரிவது போன்ற பாவனையுடன் வளர்ந்து இன்றும் கொச்சைப்பட்டுக் குற்றுயிராக வாழ்ந்துகொண்டு இருக்கின்றன. எனினும், இலக்கிய முயற்சிகள் இல்லாமல் இல்லை. வார்த்தைகளை வடித்தவர்கள், வார்த்தைகளில் வாழ்க்கையை வடித்தவர்கள், வார்த்தைகளில் இலக்கியத்தை வடித்தவர்கள், வார்த்தைகளை இலக்கிய மாக வடித்தவர்கள் எனத் திரைப்படப் பாடல்களின் பரிணாமம் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

## திரைப்படப் பாடலில் இலக்கியம்

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வங்காள மொழியில் காவியம் என்ற அங்கம் இல்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலம் என்ற மொழிக்குச் சரியான கட்டுக்கோப்பே கிடையாது. பல மொழிகளுக்குச் சில நூற்றாண்டுகள் வரை சொந்தமாய் எழுத்துமுறை இல்லை. ஆனால், உலக இலக்கியம் அனைத்திற்கும் தலைமை தாங்கத் தகுதியானது தமிழ் இலக்கியம். இத்தகைய தமிழ் இலக்கியம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தன் வளர்ச்சியைக் கவனத்துடன் கண்காணித்துவருகிறது. கவிதை இலக்கியம், உரைநடை இலக்கியம், திரைப்பட இலக்கியம், புதின இலக்கியம், சிறுகதை இலக்கியம் என்று பல்வேறு பரிமாணங்கள் எடுத்து வளர்ந்துகொண்டு இருக்கிறது. இவற்றுள் குறிப்பிடத்தக்கதும் தவிர்க்க முடியாததுமாக விளங்குவது திரைப்பட இலக்கியம். இலக்கியம் என்பது பண்டிதர்களுக்கு மட்டுமே சொந்தம்; அவர்களால் மட்டுமே அதை உணரமுடியும்; சுவைக்க முடியும்; என்பதை மாற்றிப் பாமரனுக்காக இலக்கியம் படைக்கமுடியும், அதையும் அவனால் சுவைக்க முடியும் என்று உணர்த்தியது திரைப்பட இலக்கியம். தமிழ் என்ற ஒரு மொழி, பண்டிதர்களின் மாட மாளிகைகளில் அடைபட்டுக்கொண்டிருந்தபோது, பாமரன் தன் குடிசையில் வந்து வாழாதா என்று ஏங்கித் தவித்தபோது அவன் ஏக்கத்தைப் போக்கி அவனின் காதுகளின் அருகே கவரி வீசச் செய்தது திரைப்படப் பாடல் இலக்கியம். திரைப்படப் பாடல்கள் காதல் இலக்கியம், தத்துவ இலக்கியம், சமூக இலக்கியம், அழகுணர்ச்சி இலக்கியம் என்று பல்வகை இலக்கியங்களைத் தன்னுள் ஈர்த்துக்கொண்டு காற்றில் உலவிவருகின்றன.

## திரைப்படப் பாடலில் காதல் இலக்கியம்

இந்த உலகில் என்றுமே தீர்ந்து போகாத பொருண்மைகளில் முதன்மையானது காதல். காதலைப் பாடாத இலக்கியம் உலகில் இல்லை என்று கூறலாம். இந்தச் சமுதாயத்தை, மானுடத்தைப் புதுப்பித்துக்கொண்டே இருப்பது காதல். இத்தகைய காதலைப்பற்றிச் சங்கத் தமிழ்நூல்கள் ஏராளமாக எழுதி இலக்கியப் பட்டத்தைத் தட்டிச் சென்றன. ஆனால், அவற்றைப் படித்தவன் மட்டுமே களிக்க முடியும் என்ற நிலையும் இருந்தது. அத்தகைய காதல் இலக்கியத்தைப் பாமரனின் காதில் சொட்டுச் சொட்டாய் இறக்கிய பெருமை திரைப்படப் பாடல்களையே சேரும். கிராமங்கள் பலவற்றில் திரைப்படப் பாடல்கள் கேட்டுத்தான் காதல் என்ற ஒன்று இருப்பதை அறிந்தனர். காதல் இலக்கியத்தைச் செழுமையாக வளர்த்து வருபவை திரைப்படப் பாடல்கள். காதலுக்கு வரைவிலக்கணம் சொல்லும்போதும், காதலிக்கு ஆறுதல் சொல்லும்போதும், காதலனுக்குக் கண்ணீரில் கவிதை எழுதும்போதும், சோகத்திலும் இன்பத்திலும் திரைப்படப் பாடல்கள் காதல் இலக்கியத்துக்குப் பெரும் பங்கு ஆற்றியுள்ளன.

காதலின் தத்துவம் துன்பம், இன்பம் இரண்டும் சரிபாதி என்பது ஆகும். இதை ஆயிரம் பக்கங்கள் அச்சிட்டு அனைவருக்கும் இலவசமாகவே கொடுக்கலாம். அவை எல்லாம் கடலில் கரைத்த பெருங்காயம் போன்றவை. இதை,

> "வசந்தங்கள் வாழ்த்தும்போது
> உனது கிளையில் பூவாவேன்
> இலையுதிர் காலமுழுவதும் மகிழ்ந்து
> உனக்கு வேராவேன்"

என்ற திரையிசைப் பாடல் மூலம் சொன்னபோது இளைய தலைமுறைக்குப் புது வேதமாகப் புரிந்தது. துன்பம் வந்தால் பாதியாக்குவது, இன்பம் வந்தால் இரண்டாக்குவது என்ற காதல் தத்துவத்தை இரண்டே வரிகளில் சொல்லத் திரைப்படப் பாடல்களுக்குத் தெரிந்தது.

படியாத பெண்ணினால் தீமை ! - என்ன
பயன் விளைப்பாள் அந்த ஊமை ?

- பாவேந்தர் பாரதிதாசன்

ANDAVAR & CO. AGENCIES, Authorised Dealers : TVS-Suzuki Motor Cycles and Mopeds, 88, Thuraiyur Road, Namakkal - 637002. Phone : 22865

காதலன், காதலி இருவரும் மனவொற்றுமையினால் காதல் ஜோதியில் கலக்கின்றனர். காதலன் நினைப்பான் காதலி தான் பேச நினைப்பதையே பேச வேண்டும், தான் நினைத்ததையே நினைக்க வேண்டும் என்று. இது தவறில்லை. ஏனென்றால் காதலின் ஏற்பாடும் அதுவே. ஆனால், காதலிக்குக் காதலனின் முகம் மட்டுமே போதும். அவள் பாடுவாள்,

"பாவை, உன் முகம் பார்த்துப் பசியாற வேண்டும்"

ஆம் பசியை மறக்கக் கூடிய ஆற்றல் காதலனின் முகத்திற்கு உண்டு.

இந்த இயற்கை இருக்கிறதே, இது காதலுக்கும் இலக்கியத்திற்கும் பெரும் பணி புரிந்துள்ளது. அதனால்தான், திரைப்படப் பாடல்கள் பெரும்பாலும் காதலனை அல்லது காதலியை இயற்கையோடு தொடர்புபடுத்திப் பாடுகின்றன. காதலன் பாடுவான்,

"தாஜ்மகால் தேவையில்லை அன்னமே அன்னமே
காடுமலை நதிகள் எல்லாம் காதலின் சின்னமே"

ஆம், உண்மைதான், இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துமே, சூரியனுக்குக் கீழே உள்ள அனைத்துப் பொருளுமே காதலைப் பெருமைப்படுத்துவதற்குத் தோன்றியவைதானே. ஏனென்றால், இயற்கையோடு இயைந்த காதல் உணர்ச்சி ஆழமானது.

இயற்கையின் சின்னச் சின்ன அசைவுகள்கூடக் காதலியின் நினைவாகும். ஒரு காயம்பட்ட காதலன் பாடுவான்.

"தென்றல் என்னைத் தீண்டினால் சேலை தீண்டும் ஞாபகம்
சின்னப்பூக்கள் பார்க்கையில் தேகம் பார்த்த ஞாபகம்
வெள்ளி ஓடை பேசினால் சொன்ன வார்த்தை ஞாபகம்
மேகம் ரெண்டும் சேர்கையில் மோகம் கொண்ட ஞாபகம்"

இதுதான் இயற்கையோடு இயைந்த காதலோ! காதலின் நினைவாகவே இருந்தால் காணும் பொருள் எல்லாம் காதலியாகவே தெரியும். காதலியின் நிலை? காதலனைப் பற்றிய நினைவுதான் எல்லாம். தோட்டத்திற்கு நீர் வார்க்கும்போதும், ஜன்னலின் ஓரம் நின்று வேடிக்கை பார்க்கும்போதும், எப்போதும் காதலனின் நினைவுகள். அவள் சொல்லுவாள்,

"என் வீட்டுத் தோட்டத்துப் பூவெல்லாம் கேட்டுப்பார்
என் வீட்டு ஜன்னல் கம்பி எல்லாமே கேட்டுப்பார்
என் வீட்டுத் தென்னங்கீற்றை
இப்போதே கேட்டுப்பார்
என் நெஞ்சை சொல்லுமே"

இது எப்படிச் சாத்தியமானது? எப்போதுமே காதலின் நினைவு. காதலில் இன்பம், துன்பம் இரண்டுமே உண்டு. இன்பம்கூட இல்லாமல் இருக்கலாம்; ஆனால், துன்பம் இல்லாமல் இருக்கக்கூடாது. ஏனென்றால், முத்தத்தின் ஈரத்தால் ஒட்டப்பட்ட காதலைவிடக் கண்ணீரால் ஒட்டப்பட்ட காதலுக்கு அடர்த்தி அதிகம், ஆழம் அதிகம். ஆனால், காதலில் அனைவரும் இன்பமே விரும்புவதால் திரையிசைப் பாடல்களில்கூட இன்பமான பாடலே அதிகமாகவும், இனிமையாகவும் ஒலிக்கின்றது. இவையெல்லாம் இலக்கியம் என்பதை ஒப்புக்கொள்ள மறுப்போர் தகுந்த ஆதாரம் இல்லாமல்தான் மறுக்கின்றனர்.

நிலவு என்பது காலங்காலமாய்க் காதலுக்கும், காதலர்களுக்கும் உதவி வந்திருக்கிறது. காதலன் பாடுவான்,

"என்னருமைக் காதலிக்கு வெண்ணிலாவே-நீ
இளையவளா, மூத்தவளா, வெண்ணிலாவே"

என்று காதலியானவள் நிலவிற்குச் சகோதரி என்று காதலன் அறிந்துகொண்டுவிட்டான். ஆனால், இளையவளா மூத்தவளா என்று மட்டும் சந்தேகம். இதைக் காதலியிடமே கேட்கலாமா? கூடாது. காதலியின் வயதினைக் கேட்கக் கூடாது. எனவே நிலவினைப் பார்த்துப் பாடுகிறான்.

ஒரு பெண் பாவம் காதலில் விழுந்துவிட்டாள். ஆனால், காதலில் விழுந்த பின்னர்தான் தெரிந்தது தான் ஒரு பெண் என்று. இதுவரை வாழ்ந்த வாழ்க்கை, வாழ்க்கை அல்ல. ஆனால், இப்போது அவள் வாழ்க்கையை அளக்கிறாள்.

"வானம் இல்லாமலே பூமி உண்டாகலாம்
வார்த்தை இல்லாமலே பாஷை உண்டாகலாம்
காதல் இல்லாமல் போனால் வாழ்க்கை உண்டாகுமா?"

இல்லை, காதல் இல்லாவிட்டால் வாழ்க்கை முழுமையாகாது. காதல் படித்தவன், பாமரன் இருவருக்கும் பொது. இப்பாடல் இருவரின் செவிகளுக்கும் ஒரே நேரத்தில் அமுது வார்க்கிறது. இது கூட இலக்கியம்தான்.

காதல் ஒவ்வொரு மனிதன் மீதும் ஒரு பூவை வீசிவிட்டுத்தான் செல்கிறது. அந்தப் பூவுக்குள் யாரும் விழாமலும் இருப்பது இல்லை. அப்படிக் காதல் வந்த பெண்ணை எப்படிக் கண்டுபிடிப்பது? முடியாது. அவளாகச் சொல்லாமல் கண்டுபிடிக்கவே முடியாது. காதலன் பாடுவான்,

செந்தாமரைக்காடு பூத்தது போலே
செழித்தஎன் தமிழே ஒளியே வாழி!

- பாவேந்தர் பாரதிதாசன்

K.K.P. TEXTILES (P) LTD.,88, Salem Road, Namakkal - 637 001. Salem District. Phone : 20066

"வண்ண வண்ண வானவில் ஒன்று
வானில் வந்தால் ஊருக்குத் தெரியும்
கன்னிப் பெண்ணின் நெஞ்சுக் குள்ளே
காதல் வந்தால் யாருக்குத் தெரியும் ?"

ஆம்; காதலிக்குக் காதல் வந்தது காதலனுக்குத் தெரியவில்லை. ஆனால் காதலிக்கு, காதல் நோய்வாய்ப் பட்டபின் என்ன செய்கிறோம் என்றே தெரியவில்லை. அவள் இவ்வாறு பாடுகிறாள்,

"புடவையோடு விரலைச் சேர்த்து
தைத்துக் கொள்கிறேன்
சாந்துப் பொட்டெடுத்து மூக்கின்மீது
வைத்துக் கொள்கிறேன்
பூப்பறிக்கப் போன நானும் இலை பறிக்கிறேன் - இன்று
பால் குடித்த பின்புதானே பல் துலக்கினேன்"

எப்படி? எல்லாமே தலைகீழ். ஆம்; காதலின் பலமும் அதுதான், பலவீனமும் அதுதான். காதல் வந்துவிட்டால் ஓர் ஆனந்தம். ஆனால், காதலனைப் பார்த்துப் பேச விரும்பினால், காணாவிட்டால், பேசாவிட்டால் சோகம் . . வருத்தம். . .கண்டாகிவிட்டது. பேசப்போனால் . . காதலி சாடுகிறாள்.

"உறங்கும் போதும் உந்தன் பேரைச்
சொல்லிப் பார்க்கிறேன்.
நெருங்கி வந்து பேசும்போது
உச்சி வேர்க்கிறேன்
உன்னை எண்ணி என் மேனி உருக
உருகி உருகி நூலானேன்
உன்னைக் கண்டு ஓர் வார்த்தை மொழிய
உடைந்து உடைந்து தூளானேன்"

இப்படி இசையின் வாயிலாகத் திரையிசைப் பாடலாக உலாவரும்போது உடலெல்லாம் செவியாக மாறக்கூடாதா என்று ஏக்கம் பிறக்கும். இந்த உலகின் அழகை முற்றிலுமாகச் சுவைப்பவர்கள், அதில் வசிப்பவர்கள் இருவருமே காதலர்கள்தான். காதல் அதில் வந்துவிட்டால் வானம் காலடியில். அவர்கள் பாடுவார்கள்:

"லட்சம் வேண்டாம் லட்சியம் வேண்டாம்
அச்சம் வேண்டாம் அழுகையும் வேண்டாம்
இரண்டு கைகளும் சிறகாய்ப் போனால்
இரவும் வேண்டாம் பகலும் வேண்டாம்
பூக்களை மெல்லத் திறந்து பார்ப்போம்
பூமியை மெல்ல முகர்ந்து பார்ப்போம்"

ஆம்; பூமியை முகர்ந்து பார்க்கும் புனிதம் காதல் வந்தால்தான் வருகிறது.

காதல் இல்லாத காமம், காமம் இல்லாத காதல் இரண்டுமே காதல் இல்லை. காமமும், காதலும் சந்திக்கும் புள்ளியே காதல். காதலில் வீழ்ந்த காதலி காமவயப்பட்டுவிடுகிறாள். இப்போது பாடுவாள்,

"தீ தீ தித்திக்கும் தீ தீண்டத் தீண்ட சிவக்கும்
கண்ணுக்குள் தீயிருந்தும்
உன்னை எரித்துக் கொண்டுறக்கமென்ன
கற்பூர தேகந்தான் கரைவதென்ன
பின்னோக்கி உன்கால்கள் நடப்பதென்ன
பிரியத்தை மறைப்பதென்ன
முத்தத்தின் சத்தத்தில் உடைந்து போவோம்
முக்திநிலை அடைந்து போவோம்"

இப்படித்தான் காமம் என்னும் தீயில் சிக்கிவிட்டால் தீண்டக் கூடிய தீக்கூடத் தித்திக்கிறது.

இப்படியாகக் காதலின் இனிமையைத் திரைப்படப் பாடல்கள் படம்பிடித்துக் காட்டிக்கொண்டே இருக்கின்றன. இதைக் கேட்கும்போதெல்லாம் இனம் புரியாத ஓர் இன்பம் மனத்திற்குள் நாற்காலி போட்டு அமர்ந்துகொள்ளும். இப்படியாகக் காதலின் இன்பத்திற்கும், துன்பத்திற்கும் திரையிசைப் பாடல்கள் இயன்றவரை பங்கு ஆற்றியுள்ளன.

### சமூக இலக்கியம்

கலை கலைக்காகவே என்ற வாதம் இன்றைய காலகட்டத்தில் மறுக்கப்பட்டுவருகிறது. கலை சமூகத்திற்காக என்பது ஏற்கப்பட்டுவருகிறது. சமூகத்தை மறந்த கலை இல்லாதிருப்பதே சிறந்தது. இதை உணர்ந்துதான் பல திரைப்படக் கவிஞர்கள் தங்கள் பாடல்களில் சமூக இலக்கியத்தை விதைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். திரைப்படம் என்பது சமூகத்தின் நகலே அன்று வேறன்று. எனவே, திரைப்படப் பாடலில், சமூக இலக்கியம் இருப்பது ஒன்றும் ஆச்சரியமன்று. இல்லை என்றால்தான் வருத்தம் ஏற்பட்டிருக்கும். உண்மையில் திரைப்படப் பாடல்களில் சமூக இலக்கியம் புதைந்துள்ளது. இந்தியாவின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டுதான் கவிதையை வாளாகக் கொண்டு திரைப்பட உலகிற்கு வந்த கவிஞர்கள் அதிகம். அவர்கள் படைத்துச் சென்ற காதலர்கள்கூடப் பிரச்சினைகளை ஆராய்ந்தார்கள். சமூகத்தின் சார்பாளர்களாக இரு காதலர்கள் கேள்வி கேட்கிறார்கள்.

"காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்குக்
கையும் காலுந்தானே மிச்சம் - இப்போ
காடு வெளையட்டும் பெண்ணே - நமக்குக்
காலமிருக்குது பின்னே

மானிடம் என்னுமோர் ஆதிப்பயிர் - தமிழ்
மக்களென்றே குதித்து ஆடுவமே.
- பாவேந்தர் பாரதிதாசன்

VEENA TEXTILES LTD., Post Box No. 110, 11-F, Gandhipuram, Kumarapalayam - 638 183 Phone : 20811 to 20815

மாடா உழைச்சவன் வாழ்க்கையிலே - பசி
வந்திடக் காரணம் என்ன மச்சான் - அவன்
தேடிய செல்வங்கள் வேறு இடத்திலே
சேர்வதி னால்வரும் தொல்லையடி"

இப்படிச் சமூக அக்கறையோடு கூடிய இலக்கியம் திரைப்படப் பாடல்களில் உண்டு. இந்தச் சமூகம் அழுக்கானது. ஒரு நல்லவன் சமூகத்தைத் திருத்துவதற்கு முயற்சிகள் எடுத்தால்கூட அந்தச் சமூகம் திருந்தும் வரைக்கும் வாழ்ந்து தீரவேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஒரு பாடல் இப்படிப் பாடுகிறது,

"சூரியனில் நெருப்பெடுப்பான்
சூழ்ச்சிகளைக் கொளுத்திடுவான்
எரிமலையில் அடுப்பெரிப்பான்
ஏழைகளுக்கு உணவளிப்பான்"

என்று வருங்காலத் தலைமுறைக்குக் கடமையை உணர்த்துகிறது. சமூகத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இலக்கியம் தனித்திருக்க முடியாது. மனிதன் ஒரு சமூக உறுப்பாக இருக்கிறவரை கவிஞனும் இதிலிருந்து மீள்வதில்லை. சமூகப் பொறுப்பும், அக்கறையும் ஒரு கவிஞனுக்கு உடல், உயிர் போல விலகாமல் இருக்க வேண்டும். இன்றைய திரையிசைப் பாடல்களில் சமூகச் சீர்த்திருத்தக் கருத்துகள் முன்னேறி வந்து முரசு கொட்டுகின்றன.

"வளம் இங்கு குறைவில்லை
ஏழைக்கு நிறைவில்லை
வறுமைக்கு வறுமை இல்லை"

"ஏழை வர்க்கம் வேர்வைக்குள்ளும்
முத்துக்குளிக்கும்
பின்பு செத்துப்பிழைக்கும்
ஏழைவீட்டுத் தேனும்கூட
உப்புக்கரிக்கும் - இதில்
கண்ணீர் மிதக்கும்"

மேற்குறிப்பிட்ட திரைப்படப் பாடல்களில் பிரசார நெடி அதிகமா? இலக்கிய நயம் அதிகமா? என்று பார்த்தோமானால் முடிவே கிடைக்காது. இதுதான் அழகு. இலக்கியத்தோடு பிரச்சினையைச் சொல்லுதல் மூலம் சொல்ல வந்ததைச் சொன்ன திருப்தியோடு ஒருவிதச் சேவை மனப்பான்மையும் கிடைக்கிறது.

"குனிந்து குனிந்து நடந்தீர்கள்
கூன் விழுந்தாச்சு
நெசவு செய்து கொடுத்தீர்கள்
அடிமை போல
உடுத்துக்கொள்ள ஆடையில்ல
இடுப்புக்குமேலே"

"மாடிவீட்டு ஜன்னல்கூடச்
சட்டை போட்டிருக்கு
சேரிவீட்டு சின்னப்புள்ள
அம்மணமாயிருக்கு"

என்று சமூகத்தில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வினை எடுத்துக் காட்டுகிறது. உழைக்கும் வர்க்கம் ஏழை வர்க்கமாகவே இருக்கிறது. இவர்கள் உழைப்பால் நாடு வளம் பெறுகிறது. இவர்களோ வறுமையில் உள்ளார்கள். இவர்களின் நிலையைக் கண்ணீரும் வேர்வையும் கலந்து எழுதியுள்ளார்கள். இப்படியாகத் திரையிசைப் பாடல்களில் சமூக இலக்கியம் சிறகடித்துப் பறந்து கொண்டு இருக்கிறது. சமூக இழிநிலைகளையும், அதை மாற்றுவதற்கான வழிமுறைகளையும், புதிய உலகைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கைகளையும் தருகின்றார்கள்.

## அழகுணர்ச்சி இலக்கியம்

அழகு என்பது மனிதனுக்கு மனிதன் வேறுபடும். ஒரு பொருளின் அழகை ஒரு சராசரி மனிதன் பார்ப்பதற்கும், ஒரு கவிஞன் பார்ப்பதற்கும் வேறுபாடு உண்டு. அந்தக் கவிஞனின் பார்வையை உணர்ந்தபின் அதன் அழகு புரியும். இவ்வாறு கவிஞர்கள் தங்களின் கற்பனைகளைத் திரையிசைப் பாடல்களில் அதிகம் வெளியிட்டிருக்கிறார்கள். கற்பனை விழையும் உள்ளம் வாழ்க்கையோடு தொடர்பற்று இருக்க விரும்புவது இயற்கை. ஆயின், வாழ்க்கை என்னும் நிலத்திலிருந்து சிறிது உயர்ந்து பறக்கும் காற்றாடி போன்றது அது. வாழ்க்கையோடு தொடர்பற்று மனம் போனவாறு பறப்பது அன்று,

"முகத்தில் முகம் பார்க்கலாம் - விரல்
நகத்தில் பவழத்தின் நிறம் பார்க்கலாம்"

என்றும்,

"உன்னை எண்ணி வாசல் வந்தால்
ஜன்னல் பூப்பூக்கும்"

"நீ மல்லிகைப் பூச் சூடிக்கொண்டால்
ரோஜாவுக்குக் காய்ச்சல் வரும்"

"மெல்லினங்கள் பாடு கண்ணே
வல்லினங்கள் வாய் வலிக்கும்"

"நீ சூடும் பூவெல்லாம்
மோட்சம் போகுமோ?"

ஞாலமெலாம் தமிழ், தமிழர்களே - புவி
நாம் எனவே குதித்து ஆடுவமே.
- பாவேந்தர் பாரதிதாசன்

TRAVANCORE CHEMICAL & MANUFACTURING CO., LTD., Post Bag No.1, Gonur, P.O. 636 404. Mettur Dam (Tamil Nadu). Phone : 22271

என்றெல்லாம் வார்த்தைகளுக்கு வாசனை பூசிக் காற்று வெளியில் ஏற்றுமதி செய்யும்போது நம் இதயத்திற்குள் சிம்மாசனம் இட்டுக்கொள்ளும். ஒரு மொழியின் வளமுள்ள கற்பனைக் கவிதைகள் திரையிசை கலந்து உலா வரும்போது மொழி செழுமைப்படும். இப்படிப்பட்ட பாடலை எல்லாம் ஒரு பாமரன் கேட்கும்போது அவனையும் அறியாமல் இந்த அழகுத் தமிழ் அவனிடம் ஒட்டிக்கொள்கிறது.

## திரைப்படப் பாடலில் சங்கத் தமிழ்

உலகில் உள்ள மொழிகள் எல்லாம் தவழ்ந்து கொண்டிருந்தபோது சிறகடித்துப் பறந்த மொழி தமிழ் மொழி. தமிழின் இனிமையைத் தன்னகத்தே கொண்டு இன்றுகூட ஏன் நாளைகூடத் தமிழின் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன பழம்பாடல்கள். அத்தகைய பழந்தமிழ் இன்றைய திரைப்படப் பாடல்களில் பிழிந்து விடப்பட்டிருக்கிறது என்பது உண்மை. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கண்ணகியைப் பற்றிக் கூறும்போது அவளது மென்மையான பாதங்களை,

"வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்"

என்று விவரிப்பார். இதுவே திரைப்படப் பாடலாகி,

"உன்பாதம் மண்மங்கை காணாதது"

என்று காற்றில் உலா வந்தது.

"செந்தமிழின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென்று ஆரோ தடவினர்"

என்று நந்திக்கலம்பகம் புலம்புவதை,

"மன்மத அம்புகள் தைத்த
இடங்களில் சந்தனமாய்
எனைப் பூசுகிறேன்"

என்று காற்றில் மிதந்து வந்தது.

திருக்குறளை நேரடியாகக் கற்றுக் கொடுப்பதை விடத் திரைப்படப் பாடல் மூலம் கற்றுக் கொடுப்பது எளிது.

"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல் "

என்ற திருக்குறள் செய்தி,

"மாலைதொடும் தேதி எண்ணிப்
பத்து விரலும் தேயும்"

என்று காதுகளுக்கு அருகே கவரி வீசியது.

மின்சாரம் போலத் திரைப்படமும் வாழ்க்கையோடு பிரிக்கமுடியாத ஓர் அங்கமாகிவிட்டது. எனவே, வாழ்க்கையின் நிழலைப்போல இவ்வளவு நெருக்கமாய் இருக்கிற இந்த ஊடகம்தான் இலக்கியத்தை அறிமுகப் படுத்தவும் ஏற்றது. அதனால்தான் இலக்கியத்தைச் சாறு பிழிந்து சக்கையில்லாமல் கொடுத்துள்ளனர்.

## தத்துவ இலக்கியம்

தத்துவம் என்பது வாழ்க்கையை வார்த்தையால் மொழிபெயர்ப்பது. தமிழில் தத்துவம் என்பதற்கு எப்போதுமே பஞ்சம் ஏற்பட்டது இல்லை. திருமூலர் முதல் சித்தர்கள் வரை, வள்ளுவர் முதல் வைரமுத்துவரை தங்களால் இயன்றளவு தத்துவங்களை விதைத்து இருக்கிறார்கள். தமிழ்த் திரை உலகத்தில் அதன் சுவைஞர்கள் பலரும் தத்துவம் என்று கருதிக் கொண்டிருப்பது "வாழ்க்கை பொய்", "மரணமே மெய்" என்று நீட்டி முழக்குவதைத்தான். தத்துவம் என்பது மெய்யறிவு. "மரணம் மெய்" என்பது மெய்தான். ஆனால், வாழ்க்கை பொய் என்பது பொய்யல்லவா? எழுதுவதற்குக் கதை அனுமதித்தபோது நம் திரைப்படக் கவிஞர்கள் தத்துவங்களை எழுதி வைத்திருக்கிறார்கள்.

"இரவல் தந்தவன் கேட்கின்றான் - அதை
இல்லையென் றால்அவன் விடுவானா ?
உறவைச் சொல்லி அழுவதனாலே
உயிரை மீண்டும் தருவானா ?"

என்றும்,

"எறும்புத்தோலை உரித்துப்பார்க்க
யானை வந்ததடா - நான்
இதயத்தோலை உரித்துப் பார்க்க
ஞானம் வந்ததடா"

என்றும் கண்ணதாசன் அழுதபோது அவரோடு சேர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் அழுதார்கள். இவையெல்லாம் நிலையாமையைப் பாடுவதுதான் தத்துவம் என்று உணர்த்துகிறது. ஆனால், இப்போது தத்துவங்களின் நிறம் மாறத் தொடங்கி உள்ளது.

"இளமை உன் தோளில் இருக்கும்போது
எதுநிசம் என்பதை எட்டிவிடு

உயர்வென்று கொட்டு முரசே - நல்ல
உண்மைத் தமிழர்கள் வாழ்வு.
- பாவேந்தர் பாரதிதாசன்

JANSONS TEXTILE PROCESSORS

எழுதியபடிதான் நடக்கும் எல்லாம்
விதிவசம் என்பதை விட்டுவிடு"

என்ற பாடல் பழைய தத்துவத்திற்கெல்லாம் மாற்றுத் தத்துவமாகத் தவழ்ந்துவருகிறது. திரையிசைப் பாடல் மூலம் தத்துவங்களையும் விதைக்கமுடியும் என்று உணர்த்தப்பட்டது.

முடிவுரை

கவிதை ஒரு மொழிக்கு ஆடைகட்டி விடுகிறது. இசையோ இறக்கை கட்டிவிடுகிறது. எனவே திரையிசைப் பாடல்கள் மூலம் இலக்கியம் வளர்க்கமுடியும், மொழியை வளர்க்க முடியும். எல்லாத் திரைப் பாடல்களும் இலக்கியமாகிவிடும் என்பது மூடநம்பிக்கை. எந்தப் பாடலுமே இலக்கியமாகாது என்பது அவநம்பிக்கை. திரைப்படப் பாடல்கள் இலக்கியமா என்பதைக் காலம் தீர்மானிக்கும். ஆனால், திரைப்படப் பாடல்கள் இலக்கியமாவதற்குரிய அனைத்துத் தகுதிகளையும் கொண்டிருக்கின்றன என்பது தெளிவு.

செல்வன் **ஆர். ஸ்ரீதர்,**
வணிகவியல் முதுகலை இரண்டாம் ஆண்டு,
ஜி.டி.என். கலைக் கல்லூரி,
திண்டுக்கல் - 1.



தனித்தியங்கும் தன்மை தமிழினுக்குண்டு ;
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு !
- பாவேந்தர் பாரதிதாசன்

இராசிபுரம் கடலைக்காய் மற்றும் எண்ணெய் வணிகர்கள் சங்கம், 20-சி, காட்டூர் ரோடு, இராசிபுரம், சேலம் மாவட்டம். போன் : 2610, 2910

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

செல்வி தி. பண்பழகி

சீர்பூத்த செந்தமிழில் மாட்சி யெல்லாம்
சிந்தனையின் திறத்தாலே விளைந்த துண்மை!
பேர்பூத்த பழம்புலவர் வரிசை தன்னில்
பெரியவராம் கணியன்பூங் குன்ற னாரே
கார்பூத்த வானளவு ஓங்கி நிற்கும்
கருத்ததனால் ஞாலமெல்லாம் போற்றப் பெற்றார்!
பார்பூத்த அத்தொடரே "யாதும் ஊரே
யாவருமே கேளிரெ"ன்னும் வைர வார்த்தை!

உலகமெல்லாம் ஒருகுடைக்கீழ் நிற்ப தான
உயரிமயக் கொள்கையிது, சமர சந்தான்
உலவுகின்ற பாட்டையிது, மொழியும் நாடும்
உருப்படாத சாதிகளும் மதங்கள் தாமும்
இலதாகி எல்லோரும் ஒருப டித்தாய்
இணைக்கின்ற ஒற்றுமைக்கு வழியும் ஈதே!
கலகமெல்லாம் இங்கில்லை, கனிவும் பண்பும்
கண்கூடாய் எங்கெங்கும் ஆட்சி செய்யும்!

வையத்து நாடெல்லாம் நமது நாடே
வாழ்கின்ற மக்களெல்லாம் உறவுக் காரர்!
வையத்தின் ஊரெல்லாம் நமக்கும் ஊரே
வாழ்பவர்கள் எல்லோரும் சொந்தக் காரர்!
கையகலத் துண்டுதுண்டாய் உடைந்து வாழும்
காட்சிகளும் இனியில்லை! பரந்த பாரே
மெய்யகலா நல்வழியில் ஒன்றாய் நிற்கும்
மேதினியில் ஒற்றுமையே எங்கும் எங்கும்!

இலட்சியமாம் கனவிதுதான் நடப்பு என்ன?
எங்கெங்கும் போராட்டம் பகைமை பூசல்!
அலட்சியமே கொள்கைகளும் ஆன்றோர் வாக்கும்
ஆனதனால் உலகெங்கும் அமைதி இல்லை!
'தொலைச்சிடுவேன்' எனுமிரட்டல், துரோகம் ஆசை
தொல்லைதரும் சக்திகளாய் இருப்ப துண்மை!
'கலைச்சிடுவேன் நசுக்கிடுவேன்' ஆண வத்தின்
காட்சிகளாய் உலகெங்கும் காணு கின்றோம்!


கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு.
- பாவேந்தர் பாரதிதாசன்

**SKM ANIMAL FEEDS AND FOODS (INDIA) LTD.,** 180, Gandhiji Road, Erode - 638 002. Phone : 75213 to 75217

ஒன்றாகும் குலந்தானும் ஒருவன் தேவன்!
உயர்ந்ததிரு மூலர்தம் வாக்கு ஈதாம்!
நன்றிந்தப் பிறப்பொக்கும் உயிர்க்(கு) எல்லாம்
நவின்றவரோ வள்ளுவராம் ஞானக் கோமான்
"ஒன்றுபரம் பொருள்அதனின் மக்கள் நாமே;
உலகமின்பக் கேணி"எனும் பார தீயம்!
'நன்றோடும் பல்சமய நதிகள் கூடும்
நளிர்கடலே பரம்பொருளாம்! வள்ள லாரே!

கற்றபடி நிற்கவெனும் வழிந டப்போம்!
கடமையுடன் கண்ணியமும் கட்டுப் பாடும்
பற்றுடனே கைக்கொள்வோம் உலக மெல்லாம்
பாராட்டும் வகையினிலே, உண்மை அன்பு
சொற்றிறமாய் நில்லாது செயலில் காட்டிச்
சுடர்மனித நேயத்தின் ஒருமைப் பாடு,
வற்றாத அம்மாவின் கருணை போல
வளர்ந்திடவே உழைத்திடுவோம், வாரீர் யாரும்!

செல்வி தி. பண்பழகி,
இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு,
அ. து. ம. மகளிர் கல்லூரி,
நாகப்பட்டினம் - 611 001.



இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!
- பாவேந்தர் பாரதிதாசன்

RAJ GANESH ENTERPRISES, 314, Perundurai Road, Erode - 638 011. Phone : 77945, 72965

தமிழர் கலை - பண்பாடு



ஜெ. ஜோசப் செல்வராஜா,
மேனிலை முதலாம் ஆண்டு,
வ. உ. சி. அரசு மேனிலைப் பள்ளி,
கோவில்பட்டி, வ. உ. சி. மாவட்டம்.



13. ஏ. அனில் லயோனெல்,
12ஆம் வகுப்பு 'அ' பிரிவு,
மார்கோசிஸ் மேனிலைப் பள்ளி,
நாசரேத், சிதம்பரனார் மாவட்டம்.

# புதுக்கவிதைகளில் சமுதாய நோக்கு



செல்வன் ச. மகாதேவன்

### முன்னுரை

சமுதாயம் மனிதனை உருவாக்குகிறது. சமுதாயத்தைக் கவிஞன் உருவாக்குகிறான். கம்பனின் உருவத்தை நாமறியோம். ஆனால், அவன் வாழ்ந்த சமுதாயத்தை அவன் கவிதை மூலம் தெள்ளத் தெளிவாக அறிகிறோம். வள்ளுவனின் பிறப்பறிய முடியா நம்மால், அவன் பிறந்த சமுதாயத்தைச் சரியாகக் காண முடிகிறது. காரணம்! கவிதை. இன்று அவனது சமுதாயத்தை அடியொற்றி நாம் ஒரு சில கட்டுப்பாடுகளை விதித்து வாழும்போது, கல்லறையில் எழுந்து உட்கார்ந்து கம்பன் கைதட்டுகிறான். இதே செயலைத்தான், சீறி எழும் சிலம்பும், மேவுபுகழ் மேகலையும், சீவகனார் வளம் பாடும் சிந்தாமணியும், நற்றமிழின் வளையாபதியும், பத்து எட்டொடு குண்டலகேசியும், செய்ய நின்றன. ஆனால் இவற்றையெல்லாம் மீறி ஒரு படி மேலே சென்று, சமுதாய அவலங்களைச் செப்பம் செய்ய முனைந்திருப்பவை இன்றைய புதுக் கவிதைகள். "அல்வாவுக்குள் அடக்கம் செய்யப்படும் முந்திரி போல" நம் சமுதாயத்தின் சல்லிவேர்கள் அத்தனையும் புதுக்கவியின் பூமிக்குள்ளே புதைந்துவிட்ட நிலையில், "புதுக்கவிதையில் சமுதாய நோக்கு" என்ற தலைப்புத் தேரேறிக் காகித வீதியைக் கையால் கடக்கின்றேன்.

### எழுந்து நிற்கும் எரிமலைகள்

காட்டு வனத்திடையே, கல்லான மலையிடையே, நாட்டு வளம் விடுத்து, நலம் பல மறந்துவிட்டு, கூட்டுப் பறவையென, கூடி இருந்த காலம் விட்டு மனிதன் சமுதாய அமைப்பில் சங்கடப்படுகிறான். முட்டும் மூடத்தனம், முகம் நிறைய அறியாமை, பட்டுத்திரிந்தாலும் பகைமாறா மதக்கொடுமை, குட்டும் வன்முறைகள், விட்டும் விலகாத வறுமையின் வாள்வீச்சு, சுட்டெரிக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், தட்டும் தீண்டாமை, தட்டு நிறைய இல்லாமை, பற்றும் பெண் அடிமை பாவம் அவள் கொடுமை, இவை யாவும் சமுதாயச் சிக்கல்கள். இவற்றைப் புதுக் கவிதைப் பீரங்கிகள் குறிவைக்கும் போது, அக்கினி நாற்றுகள் அலறி எழத்தான் செய்கின்றன. சிங்கத்தின் சீற்றமொடு, கந்தகத்தின் நாற்றமொடு சிங்கத்தின் தரங்கொண்டு, ஆனாலும் சினங்கொண்டு, இளரத்தம் வழிந்தோட, நாடி நரம்பெல்லாம் நாளும் துடித்தெழுந்து, சமுதாயத்தைச் சலவை செய்வன இந்தப் புதுக் கவிதைப்

நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகாள்!
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்!
- பாவேந்தர் பாரதிதாசன்

PIONEER BAKERIES (P) LTD., Erode - 2.

பூம்புலன்கள். இந்த எரிமலைகள் எச்சரிக்கை செய்தாலும் அணைவதில்லை. ஆம்! சமுதாயத்திலிருந்து பிறந்த புதுக்கவிதை, சமுதாயச் சீர்கேடுகளை நோக்கிக் கந்தக வரிகளைக் கவனமுடன் அனுப்புகிறது. . . முதல் வீச்சு இதோ!

## மௌனத்தின் அலறல் (வறுமைச் சமுதாயம்)

எதுகைகள் ஏதுமின்றி, மோனையின் முகமுமின்றி, சந்தமோ சற்றுமின்றி, சொந்த சுகங்களையும், பாவ பந்தங்களையும் பத்திரப்படுத்தி, புதுக்கவியியற்றும் கவிஞனின் கந்தக வரிகளால் அடிக்கடி அலற வைக்கப்படும் சமுதாயச் சிக்கல் வறுமை. இதுவரை வெளிவந்த கவிதைகளில் எழுபத்தைந்து விழுக்காட்டுப் புதுக்கவிதைகள், சமுதாயத்தையே வறுமையின் வடிவமாகத்தான் காண்கின்றன.

அந்தக் கூழுக்கும், ஆழாக்கு அரிசிக்கும், சித்தே தலை சாய்க்கும் சிறு கூரை நிழலுக்கும் வழியின்றி, வேதனை உணவிட்டு, விழிநீரின் உப்பிட்டு, சோதனைச் சோறிட்டு வறுமைதனை இச்சமுதாய மக்கள் உண்பதனை அத்தனை புதுக்கவிதைகளும் காலத்தின் நெற்றியில் கல்வெட்டாய் எழுத மறக்கவில்லை.

அறுக்கின்ற மாதத்திற்குத் தை என்று பெயர் வைத்ததுபோல, வருமானம் வாரா நிலைக்கு வறுமை எனச் சமுதாயம் பெயர் வைப்பதைப் புதுக்கவிதைகள் புரட்டி எடுக்கின்றன. வார்த்தைகளை மாற்றி, வறுமைதனைத் தூற்றும் நா.காமராசனின் கவிதை ஒன்று,

"குழந்தையின் பசியை நாங்கள் அறிந்ததில்லை -
ஏனென்றால் நாங்கள் பசியின் குழந்தைகள்"

என்று சொல்லும்போது, கற்பக மரங்கள்கூடக் கண்ணீர் வடிக்கின்றன. வறுமை என்ற தலைப்பில் வெளிவரும் கவிதைகளில் பெரும்பாலும் விவசாய சமுதாயத்தினரையும், நெசவுத் தொழிலாளிகளைப் பற்றியுமே மிகுதியாய் வந்துள்ளன. பாமர மக்கள் பசி விண்ணப்பம் எழுதி, வறுமையின் வாடிக்கையாளர்கள் ஆகிவிட்டனரே! பஞ்சத்தால் பதறி நாளும், பட்டினியால் செத்தபோதும், வறுமை வஞ்சத்தால் வகை தடுமாறி, மரண மஞ்சத்தில் மரிப்பவன்தானே ஏழை விவசாயி. நாடு செழிக்க அறுசுவை உணவிடும் ஏழை விவசாயியின் ஒரு சாண் வயிறு என்பதுடன் பட்டினி, அவர்களின் நிகழ்காலக் கண்ணீர் நிராகரிக்கப்பட்ட காரணம் கேட்ட புதுக்கவிஞன் பூகம்பக் கேள்வியொன்றைப் புவியில் எழுப்புகின்றான். அது ஒரு விவசாயியின் வினாவாய் எழுகிறது.

"நாங்கள் சேற்றில் கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில் கை வைக்க முடியுமா?"

எனும் வறுமை வரிகளை வாசிக்கும்போது அனைவரும் அவசரமாய் அழுகிறோம். எது கிடைக்காவிட்டாலும் கவலைப்படாப் பாட்டாளி வர்க்கம், உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும் தட்டுப்பாடு என வந்துவிட்டால் குமுறி எழுகிறது. அப்படிப்பட்ட மௌனம் ஒன்று இப்படி அலறுகிறது :

"எதிர்வீட்டுச் சன்னலிலோ எத்தனை சட்டை?
என் சட்டையிலோ எத்தனை சன்னலென்று"

இமைகளே முட்கள் ஆனால் கண்களுக்கு யார் பாதுகாப்பு? என்ற வினாவோடு, விரல்களைத் தின்னும் மோதிரங்களுடன் மோதுகின்றான் புதுக்கவி ஒருவன்:

"இறந்த பின்னே தாஜ்மகால் வேண்டாம்
இருக்கும்போதே
ஒரு குடிசை கொடுங்கள்."

என்ற அடிகளைப் படிக்கும்போது நம் பார்வைகள்கூட, பனியன் போட்டுக்கொள்கின்றனவே! இன்றைய ஏழையின் நிலைபற்றி எழுதவரும் புதுக்கவிஞன், தாழ்வுற்று, வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டு நிற்கும் பாட்டாளி, கனவு காணும் நிலை கூறி,

"அவன், ஒரு பட்டுவேட்டி பற்றிய
கனவில் இருந்தபோது - கட்டிய
கோவணமும் களவாடப்பட்டது"

என்ற அடிகளின் வார்த்தைகள், பசியின் காரணத்தைப் பத்திரமாய்க் கூறுகின்றது. கஞ்சிக்கு வழியில்லாமல் காரணங்கள் இவையென்று அறியாமல், தன் ஓட்டைக் குடிசை, பிய்ந்த பாய், நெளிந்துபோன தம்ளரோடு மாடுகளோடு மாடுகளாய், புழுக்களின் புகலிடங்களாய், அலைகள் பல அடித்தாலும் பதில் சொல்லாப் பாறை போல இருக்கும் ஏழைகளே! உங்கள் வறுமையின் இருள்களை எந்தச் சூரியோதயமும் விசாரிக்கப் போவதில்லை என்று கூறி இச் சமுதாயச் சாபத்திற்கு, முடிவு முத்தாய்ப்பு ஒன்றையும் வைக்கின்றான் புதுக்கவிஞன்:

"ஏழைப் புறாக்களே! உங்கள் இறகுகளை ஒடித்துக்
கழுகுகளுக்குக் கூடு கட்டினீர்களே!
இனியாவதொரு நாள்
அக்கினி முட்டைகளை இடுங்களேன்"

குன்றினைப் போல உடல்வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப்போ ராடுதல வேண்டும்!
- பாவேந்தர் பாரதிதாசன்

**AGNI STEELS PRIVATE LIMITED,** 58-A, Perundurai Road, G.K. Complex, Opp. : Rana, Erode 11. Phone : 76426, 77871

என்று மூளையின் முனைகளில் முள் விரல்களால் கவிஞன் வருடும்போது, வறுமையின் வாய் வாந்தியெடுப்பது தூரத்தில் தெரிகிறது. சலுகைப் பருக்கைகளுக்காகத் தன்மானச் சட்டியேந்திய ஏழைப் பாட்டாளி, எரிமலையாய் எழுகின்றான் வறுமைக் கோடுடைக்க....

**கலர் பூசப்பட்ட கல்லறைகள்**
**(பெண் அடிமைச் சமுதாயம்)**

தந்தையின் பார்வைக்குத் தண்டச்சோறாய், தாயின் பார்வைக்கு மடி நெருப்பாய், மழலையின் பார்வைக்குப் பால் பண்ணையாய், மாமியாரின் பார்வைக்கு மண்ணெண்ணெய்யாய்ப் பார்க்கப்பட்ட பெண், பெண்ணாகப் பார்க்கப்படவே இல்லை என்பதுதான் புதுக்கவிதை காணும் சமுதாய நோக்கு. காலையில் அவள் தெருக்கூட்டும் தொழிலாளி; பின்னர் சமையலறை வேலைக்காரி; துணி துவைக்கும்போது சலவைத் தொழிலாளி; பரிமாறும்போது ஓட்டல் தொழிலாளி; இரவிலோ கணவனின் சுமைதாங்கி எனச் சீரழியும் பெண்ணோடு பிரசவ விடுதிக்குக் கூடவே செல்லும் புதுக்கவிஞன் இப்படி எழுதுகின்றான்:

"ஒரு சேதி தெரியுமோ? மனைவி பிள்ளை பெறுகிற
மருத்துவமனைக்குப் பெயர் லேபர் வார்டு"

எனும்போது நம் கண்களில் கத்தி செருகியது போன்ற உணர்வை ஏற்படுத்திவிடுகிறான் அக்கவிஞன். அவர்களின் மனங்கள் கனவுகளை நோக்கிச் சஞ்சரித்தாலும் அவர்களின் கால்கள் 'சகாராக்களை நோக்கியே சைக்கிள் ஓட்டுகின்றன.' பெண்நிலை பற்றி இன்னுமொரு புதுக்கவிஞன் கவி இருமல் இருமுகின்றான் . . . . .

"பாவம் மனைவி!
இந்த இல்லறக் கிரிக்கெட்டில்,
கட்டிலறைக்கும், சமையலறைக்கும்
ரன் எடுத்தே ரணமாகிப் போனாள்"

என்ற வரிகளைக் கவாஸ்கர் படித்தாலும் கண்ணீர் சிந்தி விடுவார்! இந்தச் சூடு பறிக்கப்பட்ட சூரியன்களே தாங்கள் யார்? என்பதை அறிமுகம் செய்து கொள்கிறார்கள். கைகுலுக்கும் சாக்கில் சமுதாயச் சக்கரவர்த்திகள், இவர்களின் ஆயுள் ரேகையைக்கூட அழித்துவிட்டனர். உச்சிக்கு வந்த பௌர்ணமி உடைந்துவிட்டால் எப்படி இருக்குமோ, அது போன்ற உணர்வை இந்தப் புதுக்கவிதை தூக்கித் தருகிறது.

"அவள் அழகாயில்லை என்
தங்கையாகி விட்டாள்"

ஆம்! இந்தக் கருவேலங்காட்டுக் கற்பக மரங்கள் இப்படித்தான் கவுரவிக்கப்படுகின்றன. 'என்னை ஏன் அடிக்கடி இடிக்கிறீர்கள்? நான் என்ன பாபர் மசூதியா?' என்று அவர்கள் கேட்கும்போது, மாதர்களின் வரலாற்றை மறுபரிசீலனை செய்துதான் ஆகவேண்டும். ஆணாதிக்கச் சமுதாயம் அந்த இனத்தை இதுவரை வளரவிட்டுள்ளதா? ஒரு பெண் நாட்டை ஆள்வதா? என்ற எண்ணத்தால், அந்தத் தெய்வ இனம் எத்தனை முறை தெருவில் நிறுத்தப்படுகிறது? நொந்து போன சுந்தரமங்கை, சிந்துபாட சினந்து வருகிறாள். .

"ஓ! தெரியவில்லையா?- நாங்கள் உங்களுக்கு
சிறுவயதில் தங்கைகள்
இளம் வயதில் தாரங்கள்
முழு வயதில் தண்டக் கிழங்கள்"

என்ற குரல் ஒலிக்கும்போது, நம் அவமான வரிகள், தேசப்படத்தின் எல்லைகளையும் தாண்டி வங்கக்கடலில் வருந்திக் கண்ணீர் வடிக்கின்றன. பல்லவனில் உரசலில் உக்கிரமடைந்த மங்கை இப்படிக் கேட்கின்றாள்:

"மதுரை நாயகியே! மீனாட்சித் தாயே !
படியேறி நடை தாண்டி, குளம் பார்த்து,
கிளி பார்த்து, உன்னருகே ஓடி வரும்,
உன் மகளை, உன் மகனே
விழி வம்பு செய்கின்றான் கோயிலிலும் காப்பில்லை
உன் காலத்தில் அழகி நீ எப்படியடி உலா போனாய்?"

ஆம்! மயான விடுதியின் மனித எச்சமாகத்தான் ஆணினம் அவளை நடத்துகிறது. கண்ணகியைப் போல் கொங்கையை எறியவேண்டுமானால், நித்தம் ஆயிரம் நிசமாகத் தேவைப்படும். மருத்துவக் கல்லூரியில் எமனே படிப்பதுபோல், பெண் உரிமை பற்றி ஆணும் பேசுகின்றான். பெண்களே! உங்கள் விரல்களுக்கு விறகு வெட்ட வலிமையுள்ளபோது, நீங்கள் ஏன் வீணே பூத்தொடுக்க அனுப்புகிறீர்கள்? என்று புறக்கணிக்கப்படும் பூக்களுக்கு, பூகம்பத்தைக் கற்றுத் தந்தன இந்தப் புதுக்கவிதைகள். "நேர் கொண்ட பார்வை; நிமிர்ந்த நன்னடை" என்ற பாரதியின் கவிதை வரிதானே அன்னை தெய்வங்களை ஆட்சியேற வைத்தது; தொடரட்டும் அவள் பெருமை.

**தள்ளாடும் தண்டுவடங்கள்!**

துள்ளும் கன்றுகளாய், துடித்தெழும் குன்றுகளாய், அள்ளும் உணர்வோடும், ஆர்ப்பரிக்கும் அறிவோடும், நில்லும் துன்பந்தனை, நில்லாமல் ஓட்டிடும் வலிமை படைத்த இளைய பாரதம், இன்று கால் உளைய நடை

அல்லும் பகலும்இந் நாட்டுக் குழைப்பீர்கள் !
அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள் !
- பாவேந்தர் பாரதிதாசன்

**M/S. CHENNI AGENCIES**, 132, Bhavani Road, Erode - 638 004

நடந்து, கையுளைய மனுப்போட்டு, நாலு வேலைதனை நாளும் தேடி நின்று, தேம்பியழும்போது சமுதாயமே சங்கடப்படுகிறது. வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களின் உணர்ச்சி வடிகாலாய்ப் புதுக்கவிதை இருப்பதனால், இதில் கவியின் நெடி சற்று அதிகமாகவே தெரிகிறது. கல்லூரிச் சோலையில் தென்றலாய் நுழைந்தவர்கள், வாழ்க்கைச் சாலையில் சாக்கடைகளாய்ச் சபிக்கப்பட்டுவிட்டார்கள். பாடத்தை எப்படி உண்டு, எப்படிக் கக்குவது? எனக் கக்கச் சொல்லித்தந்த கல்விமுறை, கற்கச் சொல்லித் தர மறந்ததன் காரணத்தால் நம்பிக்கை நட்சத்திரங்கள், கந்தகக் காற்றால் கலங்குகின்றன. இப்படி மாடு விற்று, மனை விற்று, காடு விற்று, கண்டதும் விற்று . . . .

"பட்டப் படிப்புக்குக் கொட்டி அழுத பணத்தில்
பெட்டிக்கடை வைத்தாவது பிழைத்திருப்பேன்"

என்றும், என்ன செய்துவிட்டோம், ஏனிந்த மனக்கொடுமை? கிண்ணத்தில் வெண்ணெய்யென நாளும் கிடந்துருகி, வெள்ளத்தில் ஓடமென வீதியிலே திரிகின்றோம்,

"விண்ணப்பம் எழுதும்
வேலை மட்டும் இல்லாவிட்டால்
வேலை கிடைக்கு முன்னே, அட்சரங்களெல்லாம்
அடியோடு மறந்திருக்கும்"

என்று கவிதைகளைவிட, நம்பிக்கை நாற்றுகளை, சமுதாயச் சகதியில் நடவு செய்யும் வரிகளைத்தான் புதுக்கவிப் புலவர்கள் நிறைய வழங்கி உள்ளார்கள். கதிரவன் என்றாவது கலங்கியதுண்டா? பூமியென்றாவது புலம்பியதுண்டா? தென்றல் என்றாவது தேம்பியதுண்டா? கலங்கினால் கடுகுகூட மலைதான், நிமிர்ந்தால் மலை கூடக் கடுகுதான். உன் புண்களின் மீது புன்னகையைத் தடவு; காயத்தைக் கம்பியில் உலரப்போடு; துன்பத்தைத் துடைப்பத்தால் ஒட்டு; முனங்குவது, தேங்கும் சாக்கடையாகும்; முழங்குவது ஓடும் வெள்ளமாகும். முயற்சியின் முதுகிலேறி, வெற்றியின் விளிம்புக்குப் போ, எரியும் நிமிடங்களை நிரந்தர முதலீடாக்கு, என நன்னம்பிக்கை முனைகளை நோக்கி நடத்திச் சென்று தன்னம்பிக்கை டானிக்கை அளித்தது இந்தப் புதுக்கவிதைப் பெட்டகங்களே!

"விழித்து நீ எழுந்தால், விலங்குகளே
நொறுங்கும் - சின்ன நூல்கண்டா
உன்னைச் சிறைப்படுத்தி வைப்பது?"

என்ற வரிகளால் எழும்பிய இதயங்கள் ஏராளம். தளர்ந்து கிடந்தால் சிலந்திவலைகூட, சிறைதான். கிளர்ந்தெழுந்தால் இமயம்கூட இடுப்பளவுதான், எனச் சுற்றும்வரை பூமி, சுழலும் வரை காற்று, போராடும் வரை மனிதன். நீ மனிதனா? என்ற வினாவால் விழி திறக்கப்பட்டோர் ஏராளம்.

வேலையில்லாத் திண்டாட்டம் என்று சமுதாயச் சாபக்கேட்டைச் சுட்டிக்காட்டிவிட்டு மட்டும் புதுக் கவிதைகள் ஒதுங்கிவிடவில்லை. விரக்தி எல்லையி லிருந்தவர்களை "இளைய பாரதங்களே! நீங்களே சூரியன்கள்தானே! நீங்கள் இன்னொரு சூரியோதயத்தை நோக்கி ஏன் நடக்க வேண்டும்? நீங்கள் ஒளியின் உத்தரவாதங்கள்; இருளின் எதிரிகள். சோகத் தாடிகளை விட்டு வெளியே வாருங்கள்" என நன்னம்பிக்கை முனைகளுக்கு, இளைய பாரதங்களை அழைத்துச் சென்ற பெரும் பெருமை புதுக்கவிப் பூம்புனலுக்கு உண்டு என்பது உண்மையே! இது சமுதாயத்தை நோக்கிய புதுக்கவிதைக்கு மட்டுமே உரித்தான செயலாகத்தான் தெரிகிறது.

### பற்றி எரியுது நம் பாரத தேசம்

வறுமைக்கு அடுத்தபடியாக, மிக அதிகமான புதுக்கவிஞர்களின் பாடுபொருள் சமுதாயச் சுதந்திரம்.

ஆனால் எந்த ஒரு கவிதையும், நாம் முழுச் சமுதாயச் சுதந்திரம் பெற்றுவிட்டதாய் நம்ப மறுக்கிறது.

ஞானத்திலே, பரமோனத்திலே, உயர்மானத்திலே, அன்னதானத்திலே, கானத்திலே, மனங்கவர் கவிதையிலே, தீரத்திலே, படை வீரத்திலே, உபகாரத்திலே உலகுபுகழ் நாடு நம் பாரதம். இங்கு வான்முட்டும் மலையுண்டு, மலை நிறைய வயலுண்டு; வயல் நிறைய நெல்லுண்டு, நெல்லை அள்ளும் மனமுண்டு, கான் நிறையக் கிளியுண்டு, காது நிறைய மொழியுண்டு, மானுண்டு, தித்திக்கும் தேனுண்டு, இத்தனை வளமுங் கண்டு அன்னியர் வந்தனர் அன்று. 47ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றோம். அதன் பலன்பற்றிக் கூறும் வைரமுத்து,

"என்ன தந்ததாம் இந்தச் சுதந்திரம்?
அப்பனின் திருவோட்டை மகனுக்குப்
புதுப்பித்துத் தந்தது"

உண்மைதான்! நகம் வெட்டுவதாய்ச் சொல்லி விரலையே வெட்டிவிட்ட செவிலித்தாயிடம் நம் சுதந்திர அன்னை சிக்கிவிட்டாள். செத்துக்கொண்டிருக்கும் தாயின் அருகே, சிரித்துக்கொண்டிருக்கும் குழந்தை போல நம்

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என்தமிழ்த் தாயே.
- பாவேந்தர் பாரதிதாசன்

**KKSK LEATHERS PVT. LTD.,** Tanners & Exporters, R.N. Pudur, Bhavani Main Road, Erode 638 005. Phone : 517, 518

சமுதாயச் சுதந்திரம் உள்ளதை . . .

"இரவிலே பெற்றோம் - இன்னும்
விடியவே இல்லை."

அன்னிய விலங்கை அகற்றிவிட்டுச் சொந்த விலங்கு பூட்டிய நமக்கு விடியலின் முகவரிகள் எங்கே கிடைக்கும்? சுதந்திர தின விழாவில் இரண்டு மணி நேரம் கழித்துத் தரப்படும் மிட்டாய்களுக்காக மூன்று மணி நேரம் பிஞ்சுக் குழந்தைகள் அடிமைப்படுத்தப் பட்டனர். வெள்ளையனின் தூண்டிலில் சிக்கிவிட்ட ஆத்திரத்தில், இந்தியப் பொன் மீன் துள்ளி, தரையில் விழுந்துவிட்டதாம். காகிதக் கப்பலில் கந்தகத்தை அடைத்தது போன்ற ஒரு கவிதை . . . இன்று வரும் புதுக் கவிதைகளில் பெரும்பாலும், மகாத்மாவையும், காந்தியத்தையும் கேள்விக்குரிய பொருளாக்குகின்றன, இதோ. . .

"அண்ணலே! உன் மேனியை உருக்கிச்
சுதந்திர மோதிரம் செய்து தந்தாய்
அணியும் போதுதான் நாங்கள் அறிந்துகொண்டோம்
விரல்களே இல்லாத தொழுநோயாளிகள் நாங்களென்று!

சுதந்திரத்தைப் பெற்றுத் தந்ததாய்க் கூறுபவர்களே! சுதந்திரத்தைப் பெற்றீர்கள்! உண்மைதான் எங்கே எங்களுக்குத் தந்தீர்கள்? கேட்கும்போது கந்தகக் கழியால் கன்னத்தில் அறைந்தது போன்ற உணர்வு . . .

## நிரந்தரப்படுத்தப்படும் நியாயங்கள்

தனக்கு மேடை வேண்டும் என்பதற்காக, அடுத்தவனின் கல்லறைமீது ஏறிய கதையாய்ச் சமுதாயச் சவாலான சாதிக் கொடுமையை எதிர்த்துப் புதுக்கவிதைகள் எழத்தான் செய்துள்ளன. உருவத்தை வைத்துச் சாதி கண்டவர்களே! உருவத்தில் சிறியதாக இருந்தாலும் ஊசியின் பணி இணைப்பது. தடித்தே இருந்தாலும் கத்தரிக்கோலின் பணி பிரிப்பது. "நான் என்ன மழையா? என்னைக் கண்டு ஏன் ஒதுங்குகிறீர்கள்? என்ற வினாவோடு புதுக்கவிப் பீரங்கி ஒன்று புறப்படுகிறது.

"கோயில் தாழ்வாரத்தில் கோடை மழைக்கு ஒதுங்கினேன்
பட்டர் என்னை - தீட்டு ஒதுங்குடா என்றார்
அந்தக் கோவிலின் சொர்க்க வாசலுக்கு
வாணம் தோண்டியவனின் மகன் நான்"

வாசிக்கும்போது கடவுள் பக்கங்களில்கூட, கண்ணீர் வரிகள் எழுதின. பெரியாரின் காலத்தே மாணவராயிருந்த இன்றைய புதுக்கவிஞர்கள், இந்தச் சமுதாயச் சீர்கேட்டை வன்மையாகவே கண்டித்துள்ளனர். அதுசரி! தேசியக் கொடியில் வேண்டுமானால், வர்ணபேதம் இருந்துவிட்டுப் போகட்டும்; தேசத்தில் எதற்கு?

## சாவுத் துணிகளைச் சலவை செய்வோம்

சமுதாயச் சக்கரத்தின் அச்சாணிகளை உடைக்கும் அடுத்த எதிரி வன்முறை. இந்தச் சமுதாயம் என்பது வன்முறைக்காக வன்முறையினால், வன்முறைகளுடைய கூடமாக மாறி வருவதைக் கவி வரிகள் கவனிக்கத் தவறவில்லை. கம்பம் நடுவதற்கு நடந்த சண்டையில், உயிர் வரிகள் உயரே பறக்க . . .

"ஒரு கொடிக்கம்பம் நடுவதற்காக
நடந்த சண்டையில், ஊரிலுள்ள கொடிகளெல்லாம்
அரைக்கம்பத்தில் பறந்தன"

இதுபற்றி எவருமே கவலைப்படுவதில்லை என்பதைத் "தேசத்தில் பற்றும் தீ, தன் சட்டையில் பற்றும்வரை எவனுமே சப்தமிடுவதில்லை" என்ற வரிகள் விளக்கும். நாலு நொடிதனிலே நானூறு கடல் தாண்டி, மற்ற மலை தாண்டி, பல நூறு பாலை தாண்டி, நாடு விட்டு நாடு செல்லும் ஏவுகணை எமன்களின் காலத்தே,

"காந்தியின் கைத்தடியால் நேருவின் வெண்புறா
அடித்துக் கொல்லப்படுகிறது"

என்ற உண்மை நிலைதனைக் காட்டுகிறது இன்றைய கவி வரிகள். கூட்ஸ் வண்டி மூச்சிறைப்பதுபோல், இச் சமுதாயமே வன்முறை வளையத்தினுள் மூச்சிறைக்கிறது என்பதுடன் கவிஞன் ஒரு வினா எழுப்புகின்றான். அதுவே அவன் வினாவுக்கு விடையாகின்றது.

"மூன்றாம் உலகப் போருக்குப் பின்
உலகம் எப்படி இருக்கும்? - ஆம்!
உலகம் எப்படி இருக்கும்?

வன்முறை கூடாது என்று உபதேசித்தவரின் வாயிலிருந்து தெளித்தது எச்சில் அல்ல, என் தோழனின் இரத்தம். ஆம்! எம் சமுதாயத்தின் கருவேல மரங்கள் புதிய அம்புகளுக்குப் புடம்போட்டது போதும். போதி மரங்களைப் பதியன் போடுவோம், புத்த மரத்தைத் தெருவெங்கும் நடுவோம். நாம் இதுவரை கொன்ற உயிர்களின் உடல்களிலிருந்து எடுத்த துப்பாக்கி ரவைகளைக் கொண்டு, ஆயிரம் கனரகத் தொழிற்சாலை அமைத்துவிடலாம். ஆம்! அடித்தளங்கள் ஆடும்போது, சன்னல்களுக்கு ஏன் வர்ணப்பூச்சு? அதோடு துரியோதனன் ஜெயித்திருக்க வழிவேறு கூறுவான் புதுக்கவி,

சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீஉயிர் நான்மறப் பேனோ.
- பாவேந்தர் பாரதிதாசன்

**S.A. ABDUL AZEEZ & COMPANY**, SAA Tannery, Chunnambu Oodai, Ramanathapuram Pudur (P.O.) Erode - 638 005. Phone : 75856

"இந்தச் சைக்கிள் செயின் மட்டும் - அன்றே
கிடைத்திருந்தால், பதினாலே நொடிக்குள்ளே
பாரதப்போரில் துரியோதனன் ஜெயித்திருப்பான்"

அன்பெனும் ஆடை கட்டி, எளிமைக் கோலேந்தி, நேர்மை நடை நடந்து, வாய்மை வாழ்வு வாழ்ந்த பந்தர் பெற்றெடுத்த பாரதத் தந்தை மகாத்மாவின் நெஞ்சினைத் துளைத்து, அந்த அண்ணலின் இதயத்தை இரத்தத்தில் நனைய வைத்த வன்முறை அரக்கன்கள் சமுதாய வீதியில் நடக்கத்தான் செய்கிறார்கள் என்பதே புதுக்கவிதை காட்டும் சமுதாய உண்மை.

### இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல

பெண்ணடிமை தீருமட்டும், கொடுமை பல மாறுமட்டும் நாமடிமை; நம் குலமடிமை; நம் குடியடிமை; இதை அறியாதிருப்பது நம் மடமை. பெண்! அவள் நிலமெனப்பட்டாள் மிதிக்கப்படுவதற்காக; மலரெனப் பட்டாள் கசக்கப்படுவதற்காக; தாயெனப்பட்டாள், சுமப்பதற்காக; ஆம்! பொருளாதாரம் அவளிடம் இல்லை . . . ஆதலால், பல்காட்டி, சின்ன இடைகாட்டி, சிருங்கார நடைகாட்டி, மேனி எழில்காட்டி, மொந்தைக்கள் மொழி காட்டி, தன் உடல் காட்டிப் பொருள் பெறும் விலைமாதர்களை, சொல்லி வைத்தாற்போல் அத்தனை புதுக்கவிதைகளும் ஆதரித்ததன் காரணம் தெரியவில்லை. அவர்களின் செயலை அத்தனை கவிதைகளும் ஆதரிக்கத்தான் செய்கின்றன. ஏன்? என்ற கேள்வி எழப் பதில் வருகிறது:

"நாங்கள் நிர்வாணத்தை
விற்பனை செய்கிறோம்
ஆடை வாங்குவதற்காக"

சமுதாயப் பசியகற்றுபவர்களாகத்தான் புதுக்கவிஞர்கள் அந்தப் பூக்களை அடையாளம் காட்டுகிறார்கள். ஆம்! அறத்துப்பால்வழி, வாழ நினைத்து, பொருட்பாலால் உதாசினப்படுத்தப்பட்டதால், காமத்துப்பாலின் பட்டியலில் உள்ள இவள், 'இந்தக் கல்லறையில்தான் காசு வாங்காமல் தூங்குகிறாள்' என்று ஒரு கவிஞன் காரணம் கூறுகிறான். விலைமாதர்களைப் பற்றிப் பாடாதவன் புதுக்கவிஞனே அல்லன் என்ற ஒரு வழிமுறையை அவர்களே உருவாக்கிவிட்டனர். ஏன் நீ விபச்சாரம் செய்கிறாய்? என்று கேட்டதற்கு அவள்,

"கண்ணகி கல்யாண மண்டபக் கட்டடத்திற்கு
நிதி வசூல் செய்கிறேன் என்றாள்"

"ஓ! பெண்ணினமே, அறையப்படுவதற்காக நீ அவதரிக்கவில்லையம்மா! உன் ஆளுயரச் சிலுவைகளை அப்புறப்படுத்து. இல்லை ஆணியில் மாட்டு . . .

### விரல்களைத் தின்னும் மோதிரங்கள்

வரதட்சணைக் கொடுமைதனைப் பாடும் புதுக்கவிஞன், தானும் ஆண்தான் என்பதையும் மறந்து தன் இனத்தைக் கந்தக வரிகளால் கலங்க வைக்கிறான். அணைக்காமலா கன்னியவள் அன்னையாவாள்? கழுதை கனைத்தாலா காலை விடியும்? சுவைத்தேனைச் சுவைப்பதற்குச் சில்லறை நீ கேட்கலாமா? அவள் சொல்லாமல் வேலை செய்து, சுவையாக அவளைச் சுமந்து, நில்லாமல் உழைப்பவன்தான் நிஜமான நற்கணவன். உன் சொந்தம் அவளென்று வந்த பின்னே, பொன்னெதற்கு? புரண்டு வரும் பணமெதற்கு? மண் எதற்கு? புற்றிடும் பாம்பெலாம் உன் மனத்திருத்தல் சரிதானோ! காற்றாலை மனத்தவளின் கண்ணீரை நீ துடைக்கச் சற்றேனும் எழுந்து வா நற்குடும்பம் அமைக்க வா. சுடுகாட்டுத் தூக்கங்கள் சுகமாக இருந்திடுமோ? இடுகாட்டில் படுத்த பிணம், எழுந்து நின்று பேசிடுமோ; ஆம்! ஆடவனே,

"எங்கள் கழுத்திலே கயிறு ஏறாததால்
கயிற்றிலே கழுத்தை ஏற்றுகிறோம்"

எனும் நிலையில் மணப்பெண் மரணப் பெண்ணாவது கண்டு, மனம் நொந்து குருதிச்சீழ் வடித்தன புதுக்கவிதை வரிகள். அவளின் விழிகள் நட்சத்திரங்களை வருடினாலும் விரல்கள் என்னவோ சன்னல் கம்பிகளோடுதான்.

"அன்று நீதி வேண்டி கண்ணகி
எரித்தாள் மதுரையை - ஆனால் இன்று
நிதி வேண்டி கண்ணகிகளே
எரிக்கப்படுகிறார்கள் அதே மதுரையில்"

ஆம்! அவர்களின் கண்கள் தவலையின் கருவறைகள்! கைகள் சோகத்தின் சுமைதாங்கிகள்! மனங்களோ நெருப்பைத்தான் நித்தமும் நெசவு செய்கின்றன. இவர்களது கவுரவ முகங்கள் கந்தக வரிகளால் களவாடப்பட்டதால், இவர்கள் தங்கள் இரணங்களைக் கூட இரகசியப்படுத்துகிறார்கள்.

"எங்கள் மாமியார்கள் மகத்தானவர்கள்,
இருக்கும்போது எரிக்கச் 'செய்து சுடுகாட்டு
வேலையைக்கூடச் சுலபமாக்கி விடுகிறார்கள்."

செந்தமிழே ! உயிரே ! நறுந்தேனே !
செயலினை மூச்சினை உனக்களித் தேனே.
- பாவேந்தர் பாரதிதாசன்

**M/S. VISHNU AGENCIES**,129, Bhavani Road, Erode - 638 004. Tamil Nadu. Phone : 211241

கல்யாண மேடையில் கவுரவப்படுத்தப்பட வேண்டிய கன்னிப்பூ, சவப்பெட்டி மேனியில் சரிந்து விழும்போது அவள் விரக நெருப்பில் விறகாகிப் போகின்றாள். ஆம்! அவசரக்காரியான எங்கள் மும்தாஜ், ஷாஜஹான் தாலிகட்டும் முன்பே தாஜ்மகாலாகி விட்டாள். அந்த நிலையை ஒரு கவிஞன் வர்ணிக்கின்றான்.

"காத்திருந்தேன், காத்திருந்தேன்
ராமன்தான் வரவில்லை
ராவணனாவது வரக்கூடாதா ?"

எனும்போது கம்பன்கூட கண்ணீர் வடிக்கின்றான். பெண்ணினமும் மண்ணினமா? இந்திரனின் காலந்தொட்டு, இந்திராவின் காலம் மட்டும், அகலிகைகள் என்றும் ஆணுக்குத்தானே, சீதைகள் என்றும் சிதைக்குத்தானே! பாஞ்சாலிகள் என்றும் பருவப் பசிக்குத்தானே! இனி ஒரு பெண் செய்வோம்; அதில் கொஞ்சம் சூரியன், கொஞ்சம் சந்தகம், கொஞ்சம் கண்ணகி, கொதித்தெழும் சீதை, பாரதியின் பாஞ்சாலி, பலி கேட்கும் பராசக்தி, மூர்க்கம் மிகு துர்க்கை இவர்களைப் பிசைந்து, இனி ஒரு பெண் செய்வோம். அவள்தான் சமுதாய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக இருக்க வேண்டும்... இருக்கிறாள்; இருக்கப் போகிறாள்.

## இரப்பர் மரத்துக்கு இரணங்கள் புதிதல்ல

ஒரு மூங்கில் காட்டை அழித்து ஒரே ஒரு புல்லாங்குழல் செய்தேன். ஊதும்போதுதான் தெரிந்தது, அது ஊமையென்று. ஆம்! சமுதாயத்தைப் புதுக்கவிஞன் சீற்றத்துடன் நோக்கும்போதெல்லாம் கவியின் காலில் மிதிபடுவது இந்தக் கல்விதான்.

"அன்று பிச்சை எடுத்தும் கற்றார்கள் - இன்று
கற்ற பின்னும் பிச்சை யெடுக்கிறார்கள்"

பதினாறு ஆண்டுகள், தான் கற்ற கல்வி தனக்கு ஒரு வேளை சோறுகூடப் போட இலாயக்கற்றது எனும்போது வழிந்த வேதனை வரிதான் இக் கவிதை. பறக்கச் சொல்லித் தருவதாய் வானத்திற்கு அழைத்துச் சென்ற கல்விமுறை, இவர்களின் இறக்கைகளைக் கத்தரித்து விட்டது. அவன் கல்வி அவனைச் சொர்க்கத்தில் நிறுத்துவதாய், நரகத்தில் நட்டு வைத்துவிட்டது. அது 'நியூட்டன் விதிகளைப் பற்றிப் போதித்த அளவுக்கு, வாழ்க்கை விதிகளைக் கற்றுத்தர மறந்துவிட்டது.'

"மனப்பாட மண்டபங்களில் மண்டிய ஓட்டடைகளைச்
சரிகைகள் என்றல்லவா சாதிக்கிறார்கள்."

ஆம்! இன்றைய கல்விமுறை புதைத்த பிணங்களைத் தோண்டியெடுத்துத் துடைத்துக்கொண்டிருக்கிறது. இதயத்தின் பாகங்குறிக்கக் கற்றுத்தந்த இன்றைய கல்வி, இதயத்தோடு எப்படி வாழ்வது என்பதைக் கற்றுத்தர மறந்துவிட்டது. வள்ளுவனின் குறளைக் கற்றுத்தந்த கல்வி, ஒரு குறளை எப்படி வடிக்க வேண்டும் என்பதைச் சொல்லித் தரவில்லை.

## எனவே

கவிதைப் பண்பு சமுதாயத்தில் குறைந்தபோது, எழுத்தாணி முனை கொண்டு, தன் தலையில் குத்திக் கொண்ட புலவன் "சீத்தலைச் சாத்தன்". ஆனால் கவிதையிலே சமுதாயப் பண்பு குறைதல் கண்டு, பேனா முனைகளால் காகிதத் தலைகளில் கடுமையாய்க் குத்தியவன் புதுக் கவிஞன். செல்வந்தர்களின் பொற்கிழிப் பொருளுக்காக அவர்களின் வியர்வைக்குக்கூட வெண்பா பாடியவர்களிடையே, "பணக்காரர்களின் கைகளுக்கு மருதாணி வைக்கப்படுவதற்காக, ஏழையின் இதயம் கசக்கப்படுவது என்ன நியாயம்?" என்ற நக்கீரக் குரலுக்குச் சொந்தக்காரர்கள் இந்தப் புதுக்கவிஞர்கள். 'வால்ட் விட்மனைக் கண்டு, பாரதிக்கவி முரசு கொட்டுகிறது. பாரதியின் பாடம் படித்த புதுக்கவிஞனிடம் இருந்து ஆயிரம் "வால்ட் விட்மன்கள்" உருவாகின்றனர். குற்றால அருவியென, குறிஞ்சிப் பூ மேனியென, வற்றா வரிகளால் சொற்கோலம் பூண்ட பின்னே, இந்தப் புதுக்கவிதைகள் அநியாயங்களுக்கு மௌன சாட்சியாய் இராமல், நியாயங்களுக்கு இரத்தச் சாட்சியாகவே இருந்துள்ளன. கற்றாழைப் பளபளப்பும், கவின்மிகு வரி ஏய்ப்பும் கட்டாயம் இதற்கில்லை. கத்திமுனைப் பளபளப்பும், கலையான இதன் வரியும் சமுதாயப் புத்திமுனை தீட்டுவன.

"காத்திருக்கும் வரை - நம் பெயர்
காற்றென்றே இருக்கட்டும்,
புறப்பட்டால் புயலெனப் புரிய வைப்போம்"

என்று உள்ளாடும் தமிழ் ஒலிகள் ஒலிக்குமிடமெல்லாம், தள்ளாடும் நம் மக்கள் துயரங்கண்டு பல்லாடும், படியாத சொல் ஆடும் வரிகளுக்கு இந்தப் புதுக்கவிதைகளே சொந்தம். தென்றலில் ஒலி வாங்கி, தேனாற்றில் நடை வாங்கி, கொண்டலில் தமிழ் வாங்கி, சந்தகத்தில் வரி வாங்கி, ஒத்தாரும் உயர்ந்தாரும், இனிமை பல பெற்றாரும், ஒன்றெனச் சொல்லிச் சமுதாய நோக்கில் சாம்ராஜ்யம் அமைத்தவை இந்தப் புதுக் கவிதைகள். தண்டவாளத் தலைகளுக்குத் தன்னம்பிக்கை தந்து, சமுதாய வண்டவாளத்து வறுமைதனைக் கடிவாளமிட்டுக் கரைத்த சிறப்புக்குரியவை இவை. தூக்கமே சுகமென்று தூங்கிவிட்டுத் தன்னினத்தார், ஏக்கமகற்றி, தொட்டெழுப்ப வந்திருக்கும் தூய புயல் புதுக் கவிதை. இதன் வேர்கள்

தமிழ்மொழிக்கு எந்தக் காலத்திலாவது, எந்த நோக்குடனாவது, எப்படிப்பட்டவர்களிடமிருந்தாயினும் தனிமரியாதை கிடைக்கவில்லையென்றால், அதைத் தமிழகம் பொறுத்துக்கொள்ளாது.

- பேரறிஞர் அண்ணா

**DHANDAPANI STEELS PRIVATE LTD.**, 106-B, Kongu Engineering College Road, Pichandampalayam (P.O.), Perundurai - 638 052 Phone : 20399

தமிழ் மண்ணில் புதைந்திருந்தாலும் இதன் விழுதுகள் சமுதாய வீதியில் சதுரமாய்ப் பரந்து கிடக்கின்றன. இதற்குச் சவால்கள் சாக்கலேட்டுகள் ; துன்பங்களோ துடைப்பங்கள் ; ஒலிக்கட்டும் கவிமுரசு, அழியட்டும் அடிமையெல்லாம், மூளட்டும் ஊழித்தீ; ஓடட்டும் வறுமையெல்லாம்,

விழிக்கட்டும் நம் விழிகள்
விடியட்டும் நம் இரவு
சாகட்டும் சங்கடங்கள்
சரியட்டும் சவால் யாவும்
வாழட்டும் தமிழ் அன்னை
சிறக்கட்டும் அவள் சிறப்புப்
படைக்கலாம் புது உலகு
துடைக்கலாம் ஏழைக் கண்ணீர்!

*செல்வன் ச. மகாதேவன்,*
இளம் அறிவியல் மூன்றாம் ஆண்டு,
தூய சவேரியார் (தன்னாட்சிக்) கல்லூரி,
பாளையங்கோட்டை - 627 002.




நம்முடைய இடத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதன்மூலம் நாம் அந்தத் தமிழுக்கு ஏற்றவர்களாக நம்மை ஆக்கிக்கொள்ளவேண்டும்.
- பேரறிஞர் அண்ணா

**SHROFF VARTHAGA SANGAM**, 35-45, Pon Street, Erode - 638 001. Phone : 210670



சி. எஸ். ரவிகுமார்,
மேனிலை இரண்டாம் ஆண்டு 'உ' பிரிவு
எஸ். பி. ஜி. மேனிலைப் பள்ளி,
புதுக்கோட்டை.

# தமிழில் ஹைக்கூ கவிதைகள்



## செல்வன் மு. சண்முகராசன்

**முன்னுரை**

மொழி என்பது மனிதனின் உள்ளத்து உணர்வுகளின் உருவம். அந்த மொழியின் ஒரு கௌரவமான வடிவம்தான் கவிதை. ஒரு கவிஞனின் வாழ்க்கை அனுபவங்கள், உணர்ச்சிகள், அதற்கு அவன் கையாளும் வார்த்தைகள் இவற்றின் மொத்த உருவம்தான் கவிதை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மரபுக் கவிதைகளாகவே வாழ்ந்து வந்த கவிதைகள், இந்த நூற்றாண்டில்தான் வசன கவிதைகளாகி, இன்று புதுக்கவிதைகளாகியிருக்கின்றன. இஃது இருபதாம் நூற்றாண்டு. சங்ககால மனிதனைப்போல் இன்றைய மனிதன் வாழமுடியாது. இன்றைய கவிதைகளும் சங்ககால மரபைப் பின்பற்ற இயலாது.

''ஒரு நல்ல கவிதைக்கு வடிவம் மட்டும் முக்கியமன்று. அதன் கருத்து வாசகனைக் கவரவேண்டும். அஃது அவன் மனத்தைத் தொடவேண்டும். அந்த அளவில்தான் அதன் வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்'' என்ற கருத்து இன்று உலகம் முழுவதும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆக, ஒரு கவிதைக்கு வடிவம் என்பது இரண்டாமிடம்தான்.

இந்த அடிப்படையில் உதயமானவைதான் இன்றைய புதுக்கவிதைகள். இவை இலக்கணம் மீறிய கவிதைகள்! அதனால்தான், இவை புதுக்கவிதைகள். வெறும் வார்த்தைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தாலும் சங்கத் தமிழைவிட இந்தத் தமிழ், வாசகனுக்கு ஒரு நெருக்கமான உணர்வை ஏற்படுத்துவது மறுக்கமுடியாத உண்மை. இந்தக் கவிதைகளுக்கு உரைகள் தேவையில்லை. கவிஞனின், வார்த்தைகளில் வடித்த உணர்வுகளை, வாசகன் எண்ணத்தால் நேராகப் பார்க்க முடிகின்றது.

"என்னுடைய சம்பள நாளில்  
எண்ணி வாங்குகிற  
பளபளக்கும் நோட்டுகளில்  
எவரெவர் முகமோ  
தெரியும் என்முகம் தவிர -"

என வரும் 'முதல் தேதி' என்ற மேத்தாவின் கவிதையை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். இந்தக் கவிதை, கவிஞனின் உணர்வை அப்படியே வார்த்தைகளில் காட்டுகிறது. சம்பள நாளின் சோகத்தை ஓர் எதார்த்த சிந்தனையில் வடிக்கின்றது. பொருள் புரியாத

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்  
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்  
- பாரதியார்

**ERODE DYES & CHEMICALS MERCHANTS'ASSOCIATION** M.G. Buildings, 3, Gandhi Market, N.M.S. Compound, Erode - 638 001. Phone : 75500

வார்த்தைகளோ, எதுகை, சந்தமென்ற அலங்காரங்களோ இந்தக் கவிதையில் காணப்படவில்லை.

இப்படிப்பட்ட கவிதைகளில் கவிதையின் கருத்து, தெளிவாக உணர்த்தப்படுகிறது. வார்த்தை அலங்காரங் களின் தேவையில்லாமலேயே கவிதை சிறப்பாக உள்ளது. எளிமையாலும் மொழியிடம் ஒரு நெருக்கத்தை உண்டாக்கும் தன்மையாலும்தான் இன்று புதுக்கவிதைகள் வரவேற்கப்படுகின்றன.

இந்த வகையில் ஜப்பானியக் கவிதைகள் உலகெங்கும் முதன்மையான வரவேற்பைப் பெறுகின்றன. நேரடியான கருத்து, அலங்காரமில்லாத வார்த்தைகள், எதுகை, மோனை என்று கவிதையின் பொருளைக் கெடுக்காத வடிவம் இவைதான் ஜப்பானியக் கவிதைகள். 'ஹெய்கு', 'டான்கா' போன்ற வகைகளில் முறையே மூன்று, ஐந்து அடிகளில் அமைக்கப்படும் மிகச்சிறிய கவிதைகள் இவை. இன்று உலக மொழிகளெல்லாம் இந்தக் கவிதையின் வடிவத்தால் ஈர்க்கப்பட்டுப் பல மொழிகளில் இக் கவிதைகள் வலம் வரத் தொடங்கிவிட்டன.

இன்று தமிழில் 'ஐக்கூ' இல்லாத வார இதழ்களோ மாத இதழ்களோ இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

"கடனோடு
விடியும்
சம்பள நாள் "

என்பது ரவியின் 'முனைகெட்ட தீ ' என்ற தொகுப்பில் இடம் பெற்ற கவிதை. மேத்தாவின் 'முதல் தேதி' போலவே அமைந்திருக்கும் இந்தக் கவிதையில் வார்த்தைகளிலும் வடிவத்திலும் காணப்படும் சிக்கனமே 'ஐக்கூ'வின் தனித்தன்மை. 'முதல் தேதி'யில் இல்லாத ஒரு வடிவ வரம்பு இந்தக் கவிதையில் காணப்படுகிறது. அதனால் கவிதை சொல்ல வந்த கருத்து பாதிக்கப்படுவதில்லை. இதுவே ஐக்கூவின் சிறப்பு. தமிழில் ஐக்கூவின் வளர்ச்சி இனித் தடுக்க முடியாத ஒன்று.

### 'ஐக்கூ' ஒரு வரையறை

ஐக்கூ, ஹைகூ, ஹைக்கூ, ஹெய்கு என்பவை இந்தக் கவிதைக்கு இன்று வழக்கில் இருக்கும் பெயர்கள். தமிழுக்காக இதை 'ஐக்கூ' என்று வைத்துக்கொள்ளலாம் என்றாலும், சரியான உச்சரிப்பாக 'ஹெய்கு'வே இருக்கும். 'ஐக்கூ' என்பது மூன்று அடிகளில் எழுதப்படும் சிறு கவிதை.

இதன் முக்கிய இலக்கணங்கள் என்று பார்ப்போமே யானால் ஜப்பானியப் புலவர்களின் கருத்துப்படி,

1) எண்ணத்தைக் கவிஞன் நேராக வெளியிட வேண்டும்;

2) தேவையற்ற சொற்கள் கவிதையில் இருக்கக்கூடாது;

3) எதுகையோ சந்தமோ கவிதையின் பொருளைப் பாதிக்கும் வகையில் இருத்தல் கூடாது.

இவை அனைத்தும் சேர்ந்த கவிதைகளில் கருத்துச் செறிவும், மனத்தில் எளிதில் நிலைக்கும் வடிவும் இடம் பெறுகின்றன. எண்ணங்களைக் கவிஞன் நேரிடையாகச் சொல்ல வேண்டும் என்பது, கதவில்லாத வீட்டைப்போல் இருக்க வேண்டுமென்ற பொருளில் சொல்லப்பட்டது அல்ல. அப்படிச் சொல்லப்பட்டிருந்தால் வாசிக்கும் வாசகன் உள்ளே அமராமல் தொடர்ந்து பின்புறமாய் வெளியேறிவிடுவான். அது கவிதையின் நோக்கத்தையே பாழ்படுத்தும்.

இங்கு நேரிடை என்பது, பூட்டப்படாத கதவுகளைக் கொண்ட வீட்டைப்போல; அதற்கு ஓர் உரையோ, மற்றவரின் துணையோ தேவையில்லை. வாசகன் தானே புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் அதன் நோக்கம். மேலும், கருத்தைத் தவிர மற்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதும் இங்கு உணர்த்தப்படுகிறது.

தேவையற்ற சொற்கள் இருத்தல்கூடாது. வாசகனின் நேரத்தை வார்த்தைகள் விழுங்கக்கூடாது; வாசகனைத் திசை திருப்பவும் கூடாது. அதே வேளையில் ஆர்வத்தைத் தூண்டி, "அதில் என்ன இருக்கிறது?"என்று சற்று மனத்தை அதில் வைக்கும் அளவிற்கு வார்த்தைகள் இருத்தல்வேண்டும். கருத்தின் உயிரே வார்த்தைகளில்தான் உள்ளது என்பதைக் கவிஞன் உணரவேண்டும்.

எதுகையோ, சந்தமோ பொருளைப் பாதிக்கக்கூடாது என்பதைப் பார்க்கையில் கவிதையின் வடிவம் என்பது இரண்டாம் இடத்தில்தான் இருக்கிறது. அந்த வடிவத்திற்காகவோ உச்சரிப்புக்காகவோ சேர்க்கப்படும் வார்த்தைகள் கவிதையின் கருத்தைப் பாதிக்கும். ஒரு கவிதையில் அலங்காரங்கள் என்பவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியவை. வார்த்தைகளுக்காகக் கவிதை இல்லை; கருத்துக்காகவே கவிதைகள் உள்ளன என்பதே இங்கு உணர்த்தப்படுகிறது.

### இன்று தமிழில் 'ஐக்கூ' வின் நிலை

இன்றைக்கு மக்கள்தொகைப் பெருக்கம்போல் கவிதை நூல்கள் பெருகி வருகின்றன. அதில் புதுக்கவிதைக்குப் பல பக்கங்களும், ஐக்கூவிற்குச் சில

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்.

- பாரதியார்

ஸ்ரீ நடேசர் ஸ்பின்னிங் மற்றும் வீவிங் மில்ஸ் லிமிடெட், ஈரோடு

பக்கங்களும், கட்டாயம் ஒதுக்கப்படுகின்றன. அதற்குப் பிருந்தாசாரதியின் 'நடைவண்டி', ரவி சுப்ரமணியத்தின் 'ஒப்பனை முகங்கள்' போன்ற கவிதை நூல்களை உதாரணமாகச் சொல்லலாம். இன்றைய தமிழ் வார இதழ்களிலும் மாத இதழ்களிலும், கல்லூரி மலர்களிலும் 'ஐக்கூ' இடம் பெறாத நிலையே இல்லை எனலாம். புதுக்கவிதையைப்போல் 'ஐக்கூ'வும் இன்று தமிழில் ஒரு கட்டாயம் ஆகிவிட்டது. அதற்குப் பெரிய காரணம் அதன் எளிமையான வடிவமும், ஆழமான கருத்துச் செறிவும்தான். கவிதைகளின் மூலப்பொருள், சொற்கள்; அந்தச் சொற்களுள் பொருள்கள் புதைந்து கிடக்கின்றன. அந்த அடிப்படையில் கவிதைகள் ஆழமான, அதே சமயம் அளவான சொற்களால் அமையப்பெறுவதையே இன்றைய வாசகர்கள் வரவேற்கிறார்கள். மேலும், இந்த அறிவியல் நூற்றாண்டில் உலகம் மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. மனிதனுக்கு எதற்குமே மிகக்குறுகிய காலம்தான் கிடைக்கிறது. இந்த நிலையில் மனிதன் இலக்கியத்தையோ, கலையினையோ, கல்வியையோ எதையுமே விரைவாகவும் சுருக்கமாகவுமே பார்க்க விரும்புகின்றான். மணிக்கணக்கில் தன் சிந்தனையைச் செலவிட எந்த மனிதனும் தயாரில்லை. 'ஐக்கூ' வேகமாகப் பரவுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

இன்று தமிழில் கவிதைகளைவிடக் கவிஞர்களின் எண்ணிக்கை கூடிவிட்டது. வாழ்க்கையின் சிறு நிகழ்ச்சிகளை, காட்சிகளை, பொருள்களை இனிமையாக 'ஐக்கூ' வில் கொண்டு வரும் முயற்சி தமிழில் விரைவாக வளர்ந்துவிட்டது.

"தட்டான் தலையில்
விசிறி
ஹெலிகாப்டர்"

"மொட்டை மாடியில் முளைக்கும்
எலும்புக்கூடுகள்
ஆண்டெனாக்கள்"

"அடித்தால் அழுவான்
கண்ணீரெல்லாம் தண்ணீர்
கைப்பம்பு"

போன்ற 'ஐக்கூக்கள்' இன்று மலிந்துவிட்டன, இவை மிகப்பெரிய கருத்தை உணர்த்தவில்லை என்றாலும், 'ஐக்கூ வளர்ந்திருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

### தரமான 'ஐக்கூ'க் கவிதைகள்

தரமான 'ஐக்கூ'க்கள் தமிழில் வந்துகொண்டு இருப்பது ஒரு வளமான வளர்ச்சியின் அறிகுறி. 'ஐக்கூ'வின் இலக்கணத்தை நூலளவும் மீறாமல் புனையப்படும் கவிதைகள் இன்று ஏராளம்.

"இருட்டைப் பிழிந்து
எடுத்து வைத்தது போலப்
படுத்திருந்தது ஆட்டுக்குட்டி"

என்ற 'ஐக்கூ'வில் ஓர் இயல்பான உருவத்தையும், நிறத்தையும் கவிஞன் தன் கற்பனையில் ஏற்றி இங்குக் குறிப்பிட்டிருந்தாலும், இந்தக் கவிதையைப் பார்த்தமட்டில், கற்பனையை, வாசகனால் எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இயல்பான வார்த்தைகளில் நேரடியாகக் கருத்தைப் புரியவைத்ததுதான் கவிஞனின் கவித்துவத்தைக் காட்டுகிறது. இந்தக் கவிதை, கருமை நிறத்தை நம் உணர்வுகளுக்கு மிகவும் நெருக்கமாகக் கொண்டு வருகின்றது. 'இருட்டைப் பிழிந்து ' என்ற வார்த்தை வாசகனை வசீகரிக்கின்றது.

"தவளையின் மொழிக்கு
அகராதியில் தேடாதே
அர்த்தம் வானத்தில்"

என்ற 'ஐக்கூ' மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டு. மழை வரப்போகிறது என்பதைத் தன் குரலால் தவளை உணர்த்துகிறது. இந்த நிகழ்ச்சியைக் கவிஞன் இங்கு அழகாக உணர்த்துகின்றான். ஒரு செய்தி, புதிரைப்போன்ற வடிவில் இங்கு வழங்கப்பட்டிருந்தாலும் வாசகனின் மனத்தில் இந்தக் கவிதை இடம்பிடித்து விடுகிறது. இதனைப் படிக்கும் வாசகன் முதல் இரண்டு அடிகளில் நிறுத்திப் பின் தொடர்ந்து படிக்கின்றான். கருத்துச் சற்று யோசித்துப் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்து உள்ளதால் கருத்து நேரிடையாக இல்லை என்று பொருள் கொள்ளக்கூடாது. ஒரு புதிரைப்போன்ற அமைப்பு இந்தக் கவிதையில் கவிஞனால் உருவாக்கப்பட்டிருக் கின்றது. அது கவிஞனின் கவித்துவம், வார்த்தை, வடிவம் கருத்து ஆகிய மூன்றிலக்கணங்களை இக்கவிதை நிறைவு செய்கிறது.

"விரிக்க வேண்டாமென்று
தாலாட்டே பாடும் கரிசனத்தாய்கள்
அரசியல் வாதிகள்

--------

உன்னால் முடிகிறது குயிலே
ஊரறிய அழுவதற்கு
நான் மனிதப் பெண்"

போன்ற தரமான கவிதைகள், தமிழில் 'ஐக்கூ'வின் தரத்திற்குச் சான்றுகள்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

- பாரதியார்

**SHAKTHI TRADING COMPANY,** 6, Mamarathupalayam, Erode, 638 004. Phone : 460, 461

"அரசியல்வாதி ......... யார்.
.........யாரார் .........யாரானார்
.........னார்னார்.......னாரனார்.......ர்ர்ர்"

என்ற 'ஐக்கூ'வில் வார்த்தைகள் ஒரு விளையாட்டைப் போல் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் கருத்தை வாசகன் புரிந்துகொள்ள முடிந்தாலும், இந்த வடிவம் 'ஐக்கூ'வின் இலக்கணத்தை மீறுகின்றது. இதுபோன்ற கவிதைகள் தவிர்க்கப்படவேண்டும்.

"ஸ்பெசல் தோசை
தின்னாதவரெல்லாம்
சாதா மனிதர்கள்"

போன்ற கவிதைகளில் இரண்டு வகையான கருத்துகளை வாசகன் எடுத்துக்கொள்ள வழியிருக்கின்றது. மேலும், அதில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் முரண்பாடாய்த் தெரிகின்றன. 'ஸ்பெசல்', 'சாதா' போன்ற வார்த்தைகள் வழக்கத்தில் அடிக்கடி பயன்படுத்தப் பட்டாலும் கவிதைகளில் தவிர்க்கப்பட வேண்டியவை.

"ஆட்சிக்கு வந்தது அமாவாசை
இருட்டில்
நிலா லீவு"

"அவள் அழகாகச் சீவி முடிந்திருந்தாள்
சிக்கலானது
என் மனம்"

போன்ற கவிதைகள், சில புதுக்கவிதைகளின் தழுவல்களாக இருக்கின்றன. இவை 'ஐக்கூ' வின் வளர்ச்சியைப் பாதிக்கும். எனவே இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

### தேவையான மாற்றங்கள்

தமிழில் 'ஐக்கூ'வைப் பொறுத்தமட்டில் 'ஐக்கூ'வின் இலக்கணம் மீறாமல் பின்பற்றப்படவேண்டும். 'ஐக்கூ'விற்குக் கருத்தைப் போலவே வார்த்தைகளும், குறுகிய வடிவமும் முக்கியத்துவம் கொண்டவை என்பதை 'ஐக்கூ' கவிஞர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

புதுக்கவிதைக்காரர்கள் புதுக்கவிதையின் பாதிப்பை ஐக்கூவில் ஏற்படுத்தக்கூடாது.

கவிஞர்கள் புதிய வார்த்தைகளை உருவாக்கும்பொழுது இயல்புதன்மை மாறாமல் உருவாக்குதல் வேண்டும்; இயல்பை விகாரப்படுத்தும் வகையில் புதிய சொற்கள் இடம் பெறுதலைத் தவிர்த்தல் வேண்டும்.

உவமைகள் கருத்தை விழுங்காமல் கருத்தை விளக்குவதற்கே பயன்படுத்தப்படவேண்டும்.

"கிளைக்குத் திரும்பும்
விழுந்த சருகா
பட்டுப்பூச்சி"

என்பது ஒரு ஜப்பானிய 'ஐக்கூ' கவிதை. இந்தக் கவிதையில் கையாளப்பட்டுள்ள வார்த்தைகளின் இலக்கணம், படிவம், கருத்து ஆகியவற்றைப் பின்பற்றி 'ஐக்கூக்கள்' புனையப்படுமானால் அவை சிறப்பிடம் வகிக்கும்.

இந்த மாற்றங்களோடு வரும் 'ஐக்கூ'க்களால் தமிழ்க் கவிதை வரலாற்றில் ஐக்கூவிற்கு ஒரு நிலையான இடம் இருக்கும்.

---

### இக்கட்டுரைக்குத் துணை செய்த நூல்கள்

புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை - பாலா, அகரம் வெளியீடு 1981.

ஹைக்கூ கவிதைகள் -- மித்ரா, சாரல் வெளியீடு, 1990.

ஒப்பனை முகங்கள் - ரவிசுப்ரமணியம், அன்னம், வெளியீடு, 1990.

நடைவண்டி-பிருந்தாசாரதி - சக்தி, பதிப்பகம், 1992.

நிர்மலா சுரேஷ் கவிதைகள் - நிர்மலா சுரேஷ், பாரி நிலையம், 1990.

முனைகெட்ட தீ - ரவி கவி, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் 1991.

*செல்வன் மு. சண்முகராசன்,*
இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு,
கணிதமேதை இராமாநுசன் அரசினர் ஆடவர் கல்லூரி,
கும்பகோணம்.

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.
- பாரதியார்

**SRI GOWRI & CO,** Bharat Petroleum Dealers, 41, Railway Feeder Road, Tirupur - 641 601. Phone : 700905, 701967




செல்வன் செ. முத்தரசப்பன்

சமய மேடைகள்
பலி பீடங்களாய்ப்
பரிணாமம்!
வரப்புத் தகராறுகளால்
அங்கங்களுக்கு அறுவடை!
தினமும்
மரணப்பட்டியலை
மடிநிறையச் சுமந்துகொண்டு
செய்தித் தாள்கள்!
எட்டுத்திக்கும் சென்று
ஆயுதங்களை மட்டுமே
கொணர்ந்திங்குச் சேர்த்ததால்
ஓயாத மரண ஓலம் !
இன்று
மனுநீதிச் சோழனே
மகனுக்கு ஆணையிடுகிறான்
பசுவையும் கொல்லச் சொல்லி. . . .!

பூமியின்
பாதையெங்கும்
வன்முறை முட்கள். . . .!
நாம் பாதைகளைத் திருத்திப்
பயணம் செய்வோம்!
காயப்படுத்தும் முட்கள்
இனி
முகாரி பாடட்டும்!
மனித நேயம்
எங்கும்
மணம் வீசட்டும்!
அந்தப்
புதிய பாதையில்
பூமியைத் திருப்புவோம் !
அமைதிக் கோட்டைக்கு
அடிக்கல் நாட்ட
வன்முறையைப் பலி கொடுப்போம்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
- பாரதியார்

**GOMADHI INDUSTRIES,** Door, No. 35-2, S.F.No. 148/5, Athiyur Road, Chinnegoundanvalasu, (Via) Kunnathur 638 103. Phone : 7100

தேசக் கோடுகள்
குருதிகளால் மட்டுமே
குறியிடப் படுமென்றால்
இந்தப் பூமிக்குப்
புதுப்பிறவி தருவோம்!

ஆம்!

பொதுப்பிறவி பெறுவோம்!

செல்வன் செ. முத்தரசப்பன்,
முதுதமிழியல் இரண்டாம் ஆண்டு,
செந்தமிழ்க் கல்லூரி,



இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்ற வேண்டும்.
- பாரதியார்

**BRICK OWNERS ASSOCIATION,** Madurai

# தமிழும் கலைகளும்

**செல்வன் க. தமிழ்ச்செல்வன்**

## முகவுரை

பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் பிறப்பிடம் தமிழகம் எனலாம். தமிழன் பண்பாடு மிக்கவன் என்பது பாரறிந்த உண்மையாகும். 'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்' என்பது தமிழனின் பண்பாட்டியல் இலக்கணம். தமிழனின் பண்பாண்டைப் பறைசாற்றுவதாக அமைவன 'கலைகள்'. அவன் வளர்த்த கலைகள் அவன் உயர்வையும், ஆற்றலையும், நாகரிக மேம்பாட்டையும், பண்பாட்டின் கொள்கைகளையும், எடுத்தியம்புகின்றன. தமிழன் தமிழையும், கலைகளையும் 'இரு கண்கள்' என வளர்த்தான். தமிழனின் வாழ்வே ஒரு கலைதான். 'கலையே வாழ்வாகவும் வாழ்வே கலையாகவும் கொண்டு வாழ்ந்து வந்தவர்களும், வாழ்ந்து வருபவர்களும் தமிழ்மக்கள்' என்று முத்தமிழ்க் காவலர் கி. ஆ பெ. விசுவநாதம் கூறுவதை நினைத்தல் நலம். தமிழும் கலையுமாகவும், வாழ்க்கையும் கலையுமாகவும் தமிழன் வாழ்ந்த செய்திகளைத் தமிழிலக்கியத்தில் பல இடங்களில் காணலாம். அவ்வகையில் 'தமிழும் கலைகளும்' என்ற நோக்கில் ஆராய்கிறது இக் கட்டுரை.

## கலை-விளக்கம்

மக்களின் அறிவு விளக்கமே கலை ஆகும். கண் முன்னர்த் தோன்றும் பலவகைப் பொருள்களையும் ஊன்றி நோக்கி, அவற்றின் உருவம், நிறம், செயல் ஆகிய இயல்புகளைத் தெள்ளிதின் அறிந்து, அறிந்தவற்றை நெஞ்சில் நிறுத்தி, மேலும் மேலும் அவற்றைப் பற்றி நீள நினைந்து மற்றவர் புரிந்துகொள்ளும் வகையில் பிறருக்குக் கலைஞர்களால் கொடுக்கப்படுவன 'கலைகள்' என்பர். கலைகளின் எண்ணிக்கை அறுபத்து நான்கு ஆகும். இதனை 'ஆயகலைகள் அறுபத்து நான்கு' என்பர்.

## தமிழ்க் கலை

தமிழும் கலைகளும் என்ற தொடரைத் 'தமிழ்க் கலை' என ஒரு சொல்லாக்கி நோக்கின், தமிழாகிய கலை, தமிழிலமைந்த கலை என இருபொருள் கொள்ளலாம். தமிழாகிய கலை என்பது தமிழே ஒரு கலை என்றும்; அஃது இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை என மூன்று வகையானது என்றும் கூறலாம். தமிழிலமைந்த

திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

\- பாரதியார்

**AMSAVALLI BHAVAN,** 40-42 , East Veli Street, Madurai - 625 001

கலைகள் என்பதனை நோக்க, அம் முக்கலைகளையும் சேர்த்து நடனக்கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றினையும் கொள்ளலாம். இவற்றில் இயற்கலை என்பது தமிழ் நூல்களைக் குறிப்பதாகும். ஆகவே அதனை ஒழித்து மற்றக் கலைகளை இனித் தனித்தனியாக நோக்குவோம்.

## தமிழும் இசைக்கலையும்

முத்தமிழின் இடைத்தமிழாம் 'இசைத்தமிழ்' கடைச்சங்க காலத்திலேயே வளர்ச்சி பெற்றிருந்தது எனலாம். தொல்காப்பியத்தில்,

'இசையொடு சிவணிய' தொல். எழுத்து. நூன்மரபு - 33

'இசைப்பொருட் கிளவி' தொல். சொல. உரி - 62

'துறையமை நல்யாழ்' தொல். பொருள். கள - 1

என வரும் அடிகளால் இசைக்கலையின் சிறப்பு விளங்கும். இசையில் நீட்டி ஒலிக்குங்கால், எழுத்தின் மாத்திரை நீண்டு ஒலிக்கும் என்பதைத் தொல்லாசிரியர்,

'அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய ". . . . . . . தொல். எழுத்து. நூன் - 33

என்று கூறுவதிலிருந்து, இசையின் வளர்ச்சியைத் தொல்காப்பியர் காலத்திலேயே காணமுடிகிறது. இன்றைய அறிவியல் அறிஞர், சொல்லும் இசையும் ஓரிடத்திலிருந்தே தோன்றுகின்றன என்பர். இதனைத்தான் தொல்காப்பியம் சுட்டுகிறது.

இசை பற்றிய 'ஆனந்தவியல்', 'இசைநுணுக்கம்' என்ற நூல்களும், தாளம் பற்றிய 'தாளவகையோத்து', 'தாளசமுத்திரம்' ஆகிய நூல்களும் மறைந்து போயின என்பர். சங்க காலத்தில் தமிழிசை நூல்கள் இருந்தன என்பதை,

'கூடுகொள் இன்னியம் குரல்குர லாக
நூல்நெறி மரபிற் பண்ணி'
- சிறுபாணாற்றுப்படை - 229 - 30

என்ற பாடலடிகளால் துணியலாம். சங்க இலக்கியங்களில் பரிபாடலும், கலித்தொகையும் இசைப்பாடல்களாகவே அமைந்திருந்தன.

சங்க இலக்கியங்களையும் சங்கம் மருவிய இலக்கியங்களையும் ஆராய்ந்தால், புனத்திலும், பொழிலிலும், குன்றத்திலும், மருதத் தண்பணையிலும், முல்லைப் புனத்திலும், கடற்கானலிலும், அருஞ்சுரத்திலும், மனையிடத்தும், மன்றத்தினுள்ளும், தேவர்கோட்டத்தும், அறவோர் பள்ளியிலும் இசை வழங்கப்பட்டது என உணரலாம். பாணரும், விறலியரும் ஆடலும் பாடலும் செய்து இசையோடு நடனத்தையும் வளர்த்தனர்.

இசைத்தமிழைக் குழலிலும் யாழிலும் இசைத்து இன்புற்றான் தமிழன். திருக்குறள்,

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்று கூறுவதன் மூலம், இசையின் நுணுக்கத்தை அறியலாம். குரலின் தன்மையினை வலிவு, மெலிவு, சமன் என மூன்றாகப் பிரித்து இசையை வளர்த்தான் தமிழன் என்பதனை,

'வலிவும் மெலிவும் சமனும் எல்லாம்
பொலியக் கோத்த புலமை' - சிலம்பு - 3 : 93-94

என்பதனால் அறியலாம். கோவலனும் மாதவியும் இசைக்கலையில் சிறந்து விளங்கினர் என்பது சிலம்பு காட்டும் தமிழிசையின் பெருமையாகும். இதில் கானல்வரி, ஆய்ச்சியர் குரவை ஆகியவை இசைப்பாடல்கள் ஆகும். மணிமேகலை,

'நலந்தரு பண்நூல் திறனும் வாய்ப்ப
நிலங்கலங் கொண்ட நிகழக் காட்டும்
பாணர்' ..........
— மணிமேகலை - 28 : 41 - 43

என்றும்

'நகர நம்பியர் வளையோர் தம்முடன்
மகர வீணையின் கிளைநரம்பு வடித்த'
- மணிமேகலை - 19 : 24 - 25

என்றும் கூறுவது, தமிழும் இசையும் எவ்வாறு கலந்திருந்தன என்பதை உறுதிப்படுத்தும். யாழ், குழல், முழவு ஆகியவற்றின் இசையை, சீவகசிந்தாமணி,

"யாழும் குழலும் மணிமுழவும்
அரங்கமெல்லாம் பரந்திசைப்ப"

எனவும்; பெருங்கதை

'நல்லியா ழெழீஇ நண்ணுவன வியப்ப'

எனவும் கூறுவது இங்கு நோக்கற்பாலன. எனவே தமிழும் இசைக்கலையும் ஒன்றாகவே திகழ்கின்றன என்பதற்குச் சான்றுகளாகத் தமிழ் இலக்கியங்கள் உள்ளன என்பது தெளிந்த உண்மையாகும்.

பல்கலைக்கழகப் பட்டதாரிகளே ! சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்துக்கு மாறான கொடுமைகளை ஒழிக்கப் போராட வாரீர் !
- பேரறிஞர் அண்ணா

**S.E. ALLOY STEEL PRODUCTS PVT LTD.,** 266, A East Veli Street, II Floor, Madurai - 625 001. Phone : 39332 , 39267



**சண்முக கணபதி,**
ஏழாம் வகுப்பு 'அ' பிரிவு,
அரசு உயர்நிலைப் பள்ளி, பள்ளம், வில்லுக்குறி,
குமரி மாவட்டம் - 629 180.



ஆர். மோகன்,
8ஆம் வகுப்பு, 'அ' பிரிவு
அரசினர் ஆண்கள் மேனிலைப் பள்ளி,
பவானி - 638 302.

## தமிழும் நடனக்கலையும்

இன்று பரதநாட்டியம் என்று பாராட்டப்படுகின்ற கலை, உண்மையில் தனித்தமிழ் நடனக்கலை என்பர் அறிஞர். நட்டம், நடனம், நாட்டியம் என்பன ஒரு பொருட்பன்மொழியாம். பரதம் என்பதில் 'ப' என்பது பண்ணையும், 'ர' என்பது பழந்தமிழ் வழக்கிலுள்ள இரதத்தினையும், 'த' என்பது தாளத்தினையும் குறித்து நின்றன என்பர். இதனை வலியுறுத்துவதாக,

> "பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழ்ச்சுவையும்
> உண்ணின்ற தோர்சுவையும் உறுதாளத்
> தொலிபலவும்
> மண்ணும் புனலுயிரும் வருகாற்றுஞ் சுடர் மூன்றும்
> விண்ணும் முழுதானா னிடம்வீழும் மிழலையே"
> - தேவாரம் 1 : 11 : 44

என்ற திருஞானசம்பந்தர் திருப்பாடல் அமைகிறது.

சிலப்பதிகாரம், நடன அரங்கு எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு இலக்கணம் இயம்புகிறது. "நடன அரங்கு நல்ல இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இருபத்து நான்கு விரற்கடை நீளமுள்ள கோலால் எட்டுக் கோல் நீளம், ஏழு கோல் அகலம், ஒரு கோல் உயரம் கொண்டதாக ஆடல் அரங்கு அமைக்கப்பட்டிருந்தது" என்று இளங்கோ உரைப்பார். மேலும், நடன ஆசிரியனுக்கு உரிய இலக்கணமாக,

> "இருவகைக் கூத்தின் இலக்கண மறிந்து
> பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
> பதினோ ராடலும் பாட்டும் கொட்டும்"

என்பவற்றைக் கூறுகிறார் இளங்கோ.

தமிழரின் நடனக்கலைக்குச் சிறந்த சான்றாவது, தில்லை நடராசர் உருவமேயாம். நடனத்தில் மகளிரே சிறந்து விளங்கினர் என்பதற்குச் சிலம்பு காட்டும் மாதவியே சான்றாவாள். பெருங்கதையில், 'ஆடல் மகளிர் அவிநயம் வியப்பவும்' (வத்தவகாண்டம், 188) என்று கூறுவதையும் இங்கு ஒப்புநோக்கலாம்.

## தமிழும் நாடகக்கலையும்

முத்தமிழில் மூன்றாம் தமிழ் நாடகத் தமிழ். கூத்தர் என்னும் ஓரினத்தார் தமிழகத்தில் இருந்தனர். அவர்கள் மக்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நல்லனவற்றையும், விலக்க வேண்டிய தீயனவற்றையும் அப்படியே மனத்தில் பதியும்படி, உணர்ச்சி பொங்க (மெய்ப்பாடு) நடித்துக் காட்டுவர். மெய்ப்பாடுகள் தோன்றும் நுண்ணிய நிலைக்களன்களைத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தின் 'மெய்ப்பாட்டியல்' என்னும் இயலில் இயம்புகிறார்.

> "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

எனத் தொல்காப்பியரும், 'கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே' எனத் திருக்குறளும் நாடகம்பற்றிக் குறிக்கின்றன.

கூத்துகள் பற்றி அகத்தியம், சயந்தம், கூத்தநூல், குணநூல், மதிவாணர் நாடகத்தமிழ்நூல், சந்தம், பரதநூல், போன்ற நூல்கள் கூறுகின்றன என்பதைச் சிலப்பதிகாரம், திருவிளையாடற்புராணம், யாப்பருங்கலம் ஆகியவற்றின் உரைகளால் அறியலாம். மாதவி பதினொரு வகையான கூத்துகளை ஆடியதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இதனை,

> "பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் மண்ணின்மேல்
> போக்கினாள் பூம்புகாப் பொற்றொடி மாதவி"
> - சிலம்பு - அரங்கேற்று காதை

என்ற அடிகளால் அறிய முடிகின்றது.

சேரன் செங்குட்டுவனை நாடக மகளிர் வாழ்த்திய நிகழ்ச்சிகளும், கொங்கணக் கூத்தர் வரவேற்ற செய்திகளும் சிலப்பதிகாரம் கால்கோட் காதையில் இடம்பெற்றுள்ளன.

நாடகம் பற்றியும், நாடக மடந்தையர்பற்றியும், மணிமேகலையில் சாத்தனார்,

> 'நாடக மடந்தையர் நலங்கெழு வீதி'

> 'பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
> நாடகம் விரும்ப நன்னலங் கவினி'

என்று கூறுகிறார். நாடக மகளிரின் விதிகளையும், மணிமேகலை நாடகக் கலையை விரும்பும் பாங்கின் பருவமெய்திப் பொலிவுற்றாள் என்ற செய்தியையும் கூறுகிறார் அவர்.

சீவகனுக்குத் தோழனாகிய சுதஞ்சனன் சீவகனுடைய வரலாற்றினை ஒரு நாடகம் போல் ஆடிக் காட்டினான். திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணியில்,

> 'தோழன் விண்ணோ னவட்டோன்றி
>
> வயங்கல் கூத்து வயங்கிய பின்'
> - முத்தியிலம்பகம் - 106

என்று இதனைக் குறிக்கின்றார். இதுகாறும் தமிழின் மூன்றாம் கலையான நாடகம் பற்றி ஆராயப்பட்டது.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்.
- பாரதியார்

**NEO INTEX MILLS LIMITED,** Aruvi 1-A, 5th Street, Visalakshipuram, Madras - 625 014. Phone : 41599

### தமிழும் சிற்பக் கலையும்

தமிழில் சிற்பக்கலை, சிறப்பாகக் காணப்படுகிறது. நம் நாட்டுத் திருக்கோயில்களும், அங்குக் காணப்படும் தூண்களும், சிலைகளுமே சிற்பக்கலையின் காட்டாக அமைகின்றன. சங்ககாலச் சிற்பக் கலையின் மேம்பாட்டைச் சங்ககால நூல்களில் தெளியலாம். தமிழகத்தில் 'நடுகல்' நடுவதே சிற்பக்கலையின் ஆரம்ப நிலை எனலாம். இதனைத் தொல்காப்பியம்,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தி"

என்று கூறுவதால் துணியலாம்.

சிற்பத்தை உருவாக்குவதற்கு மண், மரம், கல், சுதை, மணிகள், கண்ட சருக்கரை, ஆகிய பொருள்களும் வண்ணப் பொடிகளின் கூட்டுக்கலவையும் பயன்படுத்தப்பட்டன. சிற்பப் பொருள்கள்பற்றிப் பழம் பாடல் ஒன்று,

"கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிலுக்குஉறுப் பாகும்"

என்று தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

பெரும்பாணாற்றுப்படையில், வேதியர்களின் இல்லங்களில் நன்கு மெழுகப்பட்ட அறைகளில் அவர்கள் வணங்கும் தெய்வச்சிலைகள் வைத்திருந்தனர் என்ற செய்தி குறிக்கப்படுகிறது. 'பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்'(298) என்பதில் உள்ள 'படிவம்' என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் 'வழிபடு தெய்வங்கள்' என்று பொருள் கொள்கின்றார் என்பது நினைக்கத்தக்கது.

பூம்புகார் அகழ்வாராய்ச்சியில் சலவைக் கல் போன்ற வெள்ளிய கல்லினால் ஆன 'புத்த பீடிகை' (பாதம்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மணிமேகலையில் வரும் பளிக்கறை மண்டபத்திலுள்ள தாமரைப் பீடிகையை, புத்த பீடிகையை உறுதிப்படுத்தும் சான்றாகக் கொள்ளலாம். சாத்தனார் இதனை,

"பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை ". . . . . .

- மணிமேகலை - 3 : 64 - 66

என்று கூறுகிறார். மேலும் சிலப்பதிகாரம், மணிமேகலையில் இடம்பெறும் பல திருவுருவங்கள் அமைந்த கோட்டங்களும், பத்தினிக் கோட்ட வழிபாடும், சிற்பக் கலைக்கு அணி செய்கின்றன. இங்குத் தமிழும் சிற்பமும் ஒன்றாக இருந்தன என்பதை ஓரளவு காண முடிகிறது.

### தமிழும் ஓவியக் கலையும்

இயற்கைக் காட்சிகளைப் படம்பிடிக்க அன்று நிழற்படக் கருவிகள் இல்லை. புலவர்கள் இயற்கையின் எழிலைச் சொல்லோவியமாக்கினர். ஓவியர்கள் இயற்கைக் காட்சிகளை எழிலோவியமாக்கினர். சுவரை வைத்துத் தான் சித்திரம் வரைய வேண்டும் என்பது முதுமொழி. சங்ககாலத்தில், சித்திர மாடத்திலுள்ள சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

"கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து"

என்னும் மதுரைக்காஞ்சி இதற்கு அரணாக அமைகிறது. தமிழர் வாழ்வில் 'மடலேறுதல்' என ஒன்று உண்டு. தலைவி கிடைக்காவிட்டால் தலைவன், அவள் படத்தை வரைந்து மடன்மாவின் கழுத்தில் கட்டிவிட்டு, ஊரறிய ஊர்வலம் வருவானாம். இச் செய்தியும் ஓவியக்கலைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

பரிபாடல், திருப்பரங்குன்றத்தில் அழகான ஓவியங்கள் இருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. அங்கே இரதி, காமன், இந்திரன், அகலிகை, கௌதமன் போன்றோரது உருவங்களும் புராணக் கதைகளும் ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தனவாம்.

கட்டிலின் மேல் கட்டப்படும் திரைச்சீலையில் ஓவியம் தீட்டப்பட்டிருந்ததைச் சிலம்பு எடுத்துக்காட்டு கிறது.

மகளிர் தொய்யில் எழுதுதலும் ஓவியக்கலைக்குக் காட்டாக அமைகின்றது. 'தொய்யில் வனமுலைத் தோழி மாரொடு' என்பது பெருங்கதை. ஆடவர்தம் தோளில் வெண்சந்தனத்தில் ஓவியம் தீட்டப்பட்டிருந்த குறிப்பினையும்,

'வெள்ளைச் சாந்தின் வள்ளி எழுதிய'

- பெருங்கதை - 3 : 8 - 91

என்று பெருங்கதை சுட்டுகிறது. உதயணன் வரைந்த ஓவியத்தைப் பதுமாபதி அணைத்துக் கொண்டதை,

"காமக் காதலன் கைவினை பொலிந்த
ஓவியப் பாவையை யாகத் தொடுக்கி"

என்று பெருங்கதை குறிப்பிடும்.

கலை, ஓர் இன மக்களின் மனப் பண்பு.
- பேரறிஞர் அண்ணா

**MADURAI JEWELLERS & BULLION MERCHANTS ASSOCIATION,** 65, West Chetty Street, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 34726

சீவகசிந்தாமணியில் திருத்தக்க தேவர், யானைகள் முன்பு குணமாலை அஞ்சி நின்ற காட்சியைச் சீவகன் உணர்வு பொங்கச் சீலையில் சித்திரமாகத் தீட்டினான் என்கின்றார்.

"ஓட்டமலை களிற்றின்முன் வெருவி நின்றதோர்
நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே"

என்பது சீவகசிந்தாமணி. இவ்வாறு தமிழில் ஓவியக் காட்சிகள் எண்ணிறந்தனவாம். இதுகாறும் தமிழில் அமைந்த கலைகளைத் தனித்தனியாகக் கண்டோம். இனித் தமிழில் சமயமும் கலைகளும் எவ்வாறு பிரிக்க முடியாத நிலையில் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை நோக்குவோம்.

## தமிழில் சமயமும் கலைகளும்

சமயமே கலைகள் பிறப்பதற்குக் காரணமாக இருந்தது எனலாம். திருக்கோயில்களும், தெய்வச்சிலைகளும், பக்திப் பாடல்களும், பிற்காலத்தில் கட்டடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றை வளர்ச்சி அடையச் செய்தன. எனவே, விண்ணையும் மண்ணையும் இணைக்கும் பாலமாகக் கலைகள் அமைந்திருக்கின்றன எனலாம். சமயப் பண்பாட்டின் சிகரமாகக் கலை திகழ்கிறது என்பது மிகவும் பொருத்தமுடையது.

திருக்கோயில்களின் அமைப்பு முறை, கட்டடக் கலைக்கே ஒரு சவாலாக இன்றும் இலங்கி வருகிறது. இதற்குத் தஞ்சைப் பெரியகோயில் தக்க சான்றாக அமைகிறது.

சிவபெருமானை ஆடல்வல்லான் என்பர். நடராசர் உருவத்தைக் காணும்பொழுது நடனக்கலை மட்டுமன்று சிறந்த சிற்பக்கலையும் நம் கண்முன்னே மிளிர்கிறது.

ஆடல்வல்லானைக் காண சேரமான் பெருமாள் நாயனார் திருவஞ்சைக் களத்திலிருந்து ஓடோடி வருகிறார். அவர் சிவபெருமானைக் கண்டு களித்த நிலையினைக் கீழ்க்காணுமாறு 'பொன்வண்ணத்தந்தாதி' குறிக்கிறது.

"பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்தி லங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
கீழ்சடை வெள்ளிக் குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக் கண்ட
எவ்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே"

என்பதே அத் திருப்பாடல்.

உலகமே வியந்து போற்றுகின்ற சிறந்த கலைப்படைப்பாகிய இந்த நடராசர் திருவுருவத்தில் ஒன்றிப் போனவர்களில் சுந்தரரும் ஒருவர். இதனை,

"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொடு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்"

- பெரியபுராணம்-தடுத்தாட் - 100

என்கின்றார் சேக்கிழார்.

சமயச் சான்றோர், கடவுளின் திருவடியில் மக்களை ஒன்றவைக்கும் ஆற்றல் இசைக்கு உண்டு என அருளினர். அதன்படியே சமய அன்பர்களும் இசையோடு இறைவனிடம் சேர்ந்தனர். இதனை 'நாதயோகம்' என்பர். மக்கள் தேவாரங்களையும், பிரபந்தங்களையும் இசையோடு பாடிப் பரவினர். இறைவனே கலைகளின் மொத்த உருவாய் அமைந்தவனாதலால், சுந்தரமூர்த்தி சுவாமிகள், அவனே இசைமயமாகவும் விளங்குகிறான் என்பதை,

"ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி"

என்று ஏழாம் தேவாரத்தில் குறிக்கின்றார்.

மேலும் கண்ணபெருமானைக் குழலூதுபவனாக வும், கலைமகளை வீணை வாசிப்பவளாகவும், காட்டுகின்ற சமயம் நம் சமயமே. ஆகவே தமிழில் சமயமும் கலைகளும் கலந்து உள்ளன என்பது தெளிவாகிறது.

## முடிவுரை

மேற்கண்ட செய்திகளைத் தொகுத்து ஆராய்ந்தால், தமிழன் வாழ்வே கலையாகவும், கலையே வாழ்வாகவும்

பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதைமை யற்றிடுங் காணீர்.

- பாரதியார்

**SUNDARAM INDUSTRIES LIMITED,** Rubber Factory, Post Box No.6, Usilampatti Road, Kochadai, Madurai - 625 016. Phone : 601531

கொண்டவன் என்பது வெள்ளிடைமலை. கலைகளை இடைக்காலத்தில் வளர்த்த பெருமை தமிழ்ச் சமயத்தையே சாரும். இறைவனிடம் உயிர் ஒன்ற கலைகளே காரணமாக அமைந்துள்ளன. இக் கலைகள் பற்றிய சான்றுகள் தமிழிலக்கியத்தில் பரவிக் கிடக்கின்றன. அதனால்தான் தமிழன் இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை என்ற முக்கலைகளையும் குறிக்கும் வண்ணம் அவன் தாய்மொழியை 'முத்தமிழ்' என்கின்றான். ஆகவே 'தமிழும் கலைகளும்' ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாத நிலையில் கலந்துள்ளன என்பதை நம்மால் தெளிவாக உணரமுடிகின்றது.

**செல்வன் க. தமிழ்ச்செல்வன்,**
முதுகலை இரண்டாம் ஆண்டு,
தருமபுர ஆதீனம் கலைக் கல்லூரி,
தருமபுரம், மயிலாடுதுறை.



செந்தமிழ் நாடெனும் செல்வி- நல்ல
நிலைகாண வைத்திடும், பெண்களின் கல்வி !
\- பாவேந்தர் பாரதிதாசன்

ஸ்ரீ மாப்பிள்ளை விநாயகர், ரோலர் பிளவர் மில்ஸ், சித்தாலங்குடி, மதுரை




செல்வன் பா. அருண்குமார்

## முன்னுரை

பண்டைத் தமிழர் தமிழை மூன்று வகைகளாய்ப் பிரித்தனர். அவை, இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்பனவாகும். இவற்றில் எளிமையானதாய், கடினமான கருத்துகளை விரைவில் மக்களுக்குப் புரிய வைக்கக் கூடியதாய் நாடகம் விளங்குகிறது. "நாட்டிலுள்ள குறைபாடுகளை மனம் புண்படாத வகையில் எடுத்துக்காட்டிச் சீர்திருத்த வல்லதும், மனிதனிடம் இயற்கையாக அமைந்து கிடக்கும் உணர்ச்சிகளையும், மனித இயல்புகளையும் தம் வழியிலே திருப்ப வல்லதும் நாடகக் கலை" என்று டாக்டர் மு. வரதராசன் அவர்கள் கூறுகிறார். இத்தகைய நாடகத்தின் வளர்ச்சி நிலைகளை இக் கட்டுரையில் காண்போம்.

## நாடகத் தோற்றம்

பண்டைத் தமிழர்களின் பலவிதமான நடனங்களே நாடகம் தோன்றுவதற்கு அடிகோலியிருக்கின்றன என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஒரு பாடலுக்கு ஆடுவதை நடனம் என்றும், கதை தழுவிய பாடலுக்கு ஆடுவதை நாடகம் என்றும் அழைத்திருக்கின்றனர்.[1] குரவைக்கூத்து, வள்ளிக்கூத்து, பாவைக்கூத்து போன்றவை, கதை தழுவி வருவன. கும்மி, காவடி, தேவராட்டம் போன்ற நாட்டுப்புறப் பாடல்களும் கதை தழுவி வருவனவே.

தமிழ்நாட்டில் இடைக்கால அரசியல் சூழல் பள்ளு, குறவஞ்சி, நொண்டி, மகுடி போன்ற நாடக இனங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. முதலாம் இராசராசன் காலத்தில் 'இராசராசேசுவர நாடகம்', 'இராசராசன் நாடகம்' ஆகியவை அரசு ஆதரவுடன் நடந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.[2]

பதினெட்டாம் நூற்றாண்டில் மாரிமுத்துப் பிள்ளை 'அநீதி நாடகம்' எழுதியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பல நாடகங்கள் வசதியின்மையால் தெருக்களில் நடத்தப்பெற்றுத் 'தெருக்கூத்து' நாடகமாய் விளங்கின. 'பிரதாப சந்திர விலாசம்', திண்டிவனம் இராமசாமி ராசு என்பவரால் எழுதப்பெற்றது.

1891ஆம் ஆண்டு லிட்டன் பிரபுவின் 'மறைவழி' என்ற ஆங்கிலப் பாடலைத் தழுவிச் சுந்தரம்பிள்ளை 'மனோன்மணீயம்' என்ற நாடகத்தை எழுதினார். இந் நாடகம் கவிதை வடிவில் எழுதப்பெற்றுள்ளது.

படியாத பெண்ணா யிருந்தால் - கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால் !
- பாவேந்தர் பாரதிதாசன்

**NIPPON FURNITURE,** 70, West Avanimoola Street, Madurai - 625 001. Phone : 36059

பரிதிமாற் கலைஞர், பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை, சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்த நாடகங்களை அளித்துள்ளனர். நாடகத் தொடக்கம் பற்றி வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் அவர்கள், "தமிழ்நாடகம் முதலிலுண்டானது, மதவிடயமாகவே என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங் களில் ஆடல் பாடல்களிரண்டையுஞ் சேர நிகழ்த்துவதி னின்றும் உண்டாயிற்று. சில காலத்தின் பின்னர்க் கதை நடையான மனப்பாடங்களும் உடன் கூடின. அதன் மேல் முதலில் பாடலாயுள்ள சம்பாசனைகளும், பின்னர் வசனமாயுள்ள சம்பாசனைகளும் அவற்றுடன் சேர்க்கப் பட்டன. பிற்பாடு நாடகத் தமிழ் வேத்தியல், பொதுவியல் என்று இரு பிரிவினதாகி அரசர்களாலும் ஏனையோ ராலும் ஆதரித்து வளர்க்கப்பட்டது. பின்னர்க் கி. மு. மூன்றாம் நூற்றாண்டினாதல், அல்லாக்கால் அதனினும் சற்று முற்காலத்தினாதல் நாடகத் தமிழ் உயர்நிலை உற்றிருக்க வேண்டும். நாமுணர்ந்துள்ள பழைமையான நாடகத் தமிழ் நூல்கள் அனைத்தும் அக்காலத்தே நின்று நிலவினவாதலினென்க"[3] என்று அளித்த விளக்கம் தமிழ் நாடகத் தோற்றத்தை விவரித்து விளக்குகிறது.

### நாடக வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு

நாடகத் துறையில் ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாததாகும். மேடைக்கு ஏற்றவாறு பாத்திரங்களின் உரையாடல்களை மட்டுமே கொண்டு மக்களுக்குப் பயன்தரும் கருத்துகள் நிறைந்த கதை களையோ நிகழ்ச்சிகளையோ சுவை மிக்க உணர்ச்சிகளுடன் நாடகமாய்ப் பின்னுபவரே ஆசிரியர்.

சங்கரதாசு சுவாமிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தமிழ் நாடகங்களை எழுதியுள்ளார். இவர் மரபுவழி வந்த நாடக ஆசிரியர். சமுதாயச் சிந்தனைகளை ஆங்காங்கே பரவவிட்டு, எளிமையான நடையில் அமைந்திருப்பது இவரது நாடகங்களின் சிறப்பாகும். இவர், வள்ளி திருமணம், பிரகலாதா, சதி அனுசுயா, சீமந்தினி போன்ற பல நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் பெரும் பகுதிவரை தமிழ் நாடகத் துறையில் பல்வேறு நிலைகளில் பெரும் பங்கு வகிக்கிறார் பம்மல் சம்பந்த முதலியார். கற்றோருக்கு ஏற்ற நடையில் பல சிறந்த பண்புகளை விளக்கும் 94 நாடகங்களை எழுதியுள்ளார். யயாதி, கொடையாளி கர்ணன், சபாபதி போன்ற பல நாடகங்களைத் தமிழ் நாடகத் துறைக்கு அளித்துள்ளார்.

தணியாத தமிழ்ப் பற்றும், மிகுதியான தமிழறிவும் கொண்டு சூரியநாராயண சாத்திரி என்றிருந்த தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று தூய தமிழ்ப் பெயராக மாற்றிய பேரறிஞரான பரிதிமாற் கலைஞர், கடினமான இலக்கிய நடையிலும் கவிதை நடையிலும் தமது நாடகங்களை எழுதியுள்ளார். 'மான விஜயம்', 'கலாவதி', 'ரூபாவதி' ஆகிய நாடகங்களைப் படைத்துள்ளார்.

தமிழில் மிகுதியான நாடகங்களைப் படைத்த ஆசிரியராகக் கருதப்படுபவர் சுத்தானந்த பாரதியார். பன்மொழி நாடக அறிவைக் கொண்டவர். 'காலத்தேர்' என்ற கவிதை நாடகம் இவரது படைப்பாற்றலை நன்கு விளக்கும். புதுமையும் பழமையும், மாணிக்க ஜோதி, மீரா விஜயம், இராமதூதன், வசந்தசுந்தரி போன்ற பல நாடகங்களை எழுதி நாடகக் கலைக்கு மெருகேற்றியுள்ளார்.

நடிகர்களும் கை தட்டுவது, முதலில் வரும் பபூன்கள் மேடையைவிட்டு அகலாமல் இருப்பது போன்ற குறைகளை அகற்றுவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர் நவாப் கோவிந்தசாமி ராவ் அவர்களே. நாடகப் பரிணாமத்தில் அமைப்பொழுங்கு கொண்டுவந்து சிறப்பித்தவர் நவாப் கோவிந்தசாமி ராவ் எனில் மிகையில்லை.

இந்திய நாடு விடுதலைக்குப் பாடுபடும்பொழுது தமிழ் நாட்டில் தேசிய உணர்வு மிக்க நாடகங்களை அரசின் தடைகளை மீறி அரங்கேற்றியவர் தெ. பொ. கிருட்டினசாமிப் பாவலராவார்.

புரட்சிக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படும் பாரதி தாசன் சேரதாண்டவம், பிசிராந்தையார், நல்ல தீர்ப்பு, படித்த பெண்கள், தமிழச்சியின் கத்தி போன்ற நாடகங்களைப் படைத்துள்ளார்.

மேலும் மு. வரதராசன், ஐசக் அருமைராசன், எம். எஸ். கோபால், மனசை ப. கீரன், பட்டுக்கோட்டைக் குமாரவேல், இ. குற்றாலம், இந்திரா பார்த்தசாரதி, ஏர்வாடி எஸ். இராதாகிருட்டினன், என். ஏ. வேலாயுதம், அறந்தை நாராயணன், கோமதி சுவாமிநாதன், கோமல் சுவாமிநாதன், ஆலந்தூர் கோ. மோகனரங்கம் போன்ற பலர் நாடக ஆசிரியர்களாய்த் தமிழ் நாடகத்தைச் சிறப்பித் துள்ளனர்.

### நாடக வளர்ச்சியில் குழுக்கள், கலைஞர்களின் பங்கு

இன்றைய நாடக வளர்ச்சி நாடகக் குழுக்களையும், கலைஞர்களையும் சார்ந்துள்ளதாய் விளங்குகிறது. குழுக்கள் பலவிதக் கலைஞர்களை உருவாக்கித் தந்துள்ளன.

கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு - பெண்
கல்வி பெண்கல்வி என்கின்றதன் போடு.
- பாவேந்தர் பாரதிதாசன்

**SITALAKSHMI MILLS LIMITED,** Mill Premises, Tirunagar, Madurai - 625 006. Phone : 88421 - 28

நவாப் இராசமாணிக்கம் குழுவினர் ராமதாசு, சம்பூர்ண இராமாயணம், இயேசுநாதர், பிரபலச்சந்திரா, இன்பசேகரன் போன்ற நாடகங்களை நடித்து மக்களிடம் பாராட்டினைப் பெற்றனர். இக்குழு அமைத்த நாடகங்கள் பல்வேறு தகுதிகளுடன் அமைந்து மக்களின் பாராட்டினைப் பெற்றன.

பால மனோகர கான பாய்சு கம்பெனி என்ற நாடகக் குழுவைத் தோற்றுவித்தவர் தெ. பொ. கிருட்டின சாமிப் பாவலராவார். அரிச்சந்திரா, வள்ளி திருமணம், கோவலன் நாடகம், தேசிங்குராசன், நெப்போலியன், கதர் பக்தி, தேசியக் கொடி, பதிபக்தி, கதரின் வெற்றி, கமலசேகரன் போன்ற நாடகங்கள் இக் குழுவால் நடத்தப்பட்டன.

ஔவை சண்முகம் அவர்களின் குடும்பம் டி. கே. எஸ். நாடகக் குழுவை ஆரம்பித்து, தமிழ் நாடகப் பணியில் முழுமையாக ஈடுபட்டு இறுதிவரை உழைத்தது. அபிமன்யு, சுந்தரி, சதி அனுசுயா போன்ற நாடகங்களை இவர்கள் நடித்துக் காட்டினர். வெ. சாமிநாத சர்மா எழுதிய 'பாணபுரத்து வீரன்' இந்தக் குழுவினரால் மிகச் சிறப்பாக நடிக்கப்பட்ட தேசிய நாடகம் ஆகும். இவர்கள் நாடகப் போட்டி வைத்து நாடக ஆசிரியர்களை ஊக்குவித்தனர். மேலும் ஆண்களோடு பெண்களையும் அச்சமும், அரங்கக் கூச்சமும் இன்றி நடிக்கச் செய்திருக்கின்றனர்.

நடிப்பிலும் பேச்சிலும் நகைச்சுவை உணர்வோடு விளங்கிய என்.எஸ்.கிருட்டினன், என். எஸ். கே. நாடக சபையை ஆரம்பித்து, சமுதாயத்தைப் பற்றி நன்கு சிந்தித்துப் பலவிதப் பிரச்சினைகளை நன்குணர்ந்து அவற்றை நகைச்சுவையுடன் அங்கதப் படைப்புகளாக அரங்கேற்றினார். என். எஸ். கே. நாடக சபா, *1943*ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. நல்ல தம்பி, பைத்தியக்காரன், இழந்த காதல், கிருட்டின லீலா, போன்ற நாடகங்கள் இக்குழுவால் நடிக்கப்பெற்றன. கலைவாணர் அவர்கள், திறமையுள்ளவரைத் தேடிப் பிடித்து ஊக்கம் கொடுத்து முன்னேறச் செய்தார். இதனால் இவர் புகழ் நாடக உலகில் சிறந்து விளங்கிற்று.

மிகச் சிறந்த நடிகரான சகஸ்ரநாமம் ஒரு நாடக அமைப்பை *1949*ஆம் ஆண்டு தொடங்கினார். இச்சபாவில் கண்கள், இருளும் ஒளியும், வானவில், பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், போலீஸ்காரன் மகள் போன்ற நாடகங்கள் நடிக்கப் பெற்றுள்ளன.

மேலும் எம். எஸ். ராமு அய்யர் நவரச அலங்கார நாடக சபா, சின்னசாமா அய்யர் மதுராம்பிகா சங்கீத நாடக சபா, தி. நாராயணசாமி பிள்ளை ஆதி இந்து விநோத சபா, லெட்சுமிபதி நாயுடு விக்டோரியா நாடகக் கம்பெனி போன்ற பல நாடகக் குழுக்கள் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் தோன்றின.

நாடக அமைப்புகள் தொழில்முறைக் குழுக்கள் (Professional Dramatic Troupes) என்றும், பயிற்றுமுறைக் குழுக்கள் (Amateur Dramatic Troupes) என்றும் இரு வகையாக உள்ளன. தொழில்முறைக் குழுக்கள் பணம் சம்பாதிப்பதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கின. பயிற்றுமுறைக் குழுக்கள், பணிபுரிவோர்களால் தோற்றுவிக்கப்பட்டு, நாடகக் கலையை வளர்த்தன.

நாடகக் கலைஞர்களும் தமிழ் நாடக உலகில் பெரும் புகழ் பெற்றுள்ளனர். அவர்கள் நடிப்பு, நடனம், சண்டைப் பயிற்சி, உரையாடல் போன்ற பல திறமை களைப் பெற்றவர்களாய்த் திகழ்ந்தனர். இவர்களில் கிட்டப்பா, வேலு நாயர், முத்துகிருட்டினன், மருதப்பா, விசுவநாததாசு, பாலாமணியம்மாள், சுந்தராம்பாள், பாலாம்பாள், கண்ணையா, நவாப் ராசமாணிக்கம், மன்னார்குடி நடராசப்பிள்ளை, சிறுகளத்தூர் சாமா, டி. எஸ். பாலையா, கே. சாரங்கபாணி, டி. ஆர். இராமச் சந்திரன், பி. யு. சின்னப்பா போன்ற எண்ணற்றோர் நாடகத் துறையில் சிறந்து விளங்கினர்.

## இன்றைய நிலையில் பலவகை நாடகங்கள்

பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் புதிதாய் வளர்ச்சி பெற்ற நாடகங்கள்பற்றிப் பின்வரும் பகுதியில் காண்போம்.

### தெருக்கூத்து

மேடை நாடக வகைகளில் பழமையான கலையாகவும் சிலரால் முரட்டுக் கலையாகவும் கருதப்படுகின்ற இவ்வகை நாடகம் திறந்தவெளி அரங்கத்தில் ஊர் மக்கள் ஒன்று கூடிக் காணும் கலையாக இருந்துவருகிறது. டாக்டர். மு. வரதராசன் அவர்கள் "பிற்காலத்தில் தமிழ்நாட்டில் நாடகங்கள் அறிஞரின் தொடர்பு குன்றியபோது கலைச்சிறப்பு மங்கி, நயமும் குறைந்த தெருக்கூத்து என்ற பெயருடன் வாழ்வன ஆயின. தெருக்கூத்தில் ஆடல் பாடல்கள் கலை மெருகு இல்லாதவையாக அமைந்தன. உரையாடல்களும் நாகரிகம் குறைந்து வழங்கின; ஒருவகை முரட்டுத் தன்மை குடிகொண்டது எனலாம். ஆகையால் தெருக்கூத்திற்கு உரிய நாடகங்கள் இலக்கியமாக எழுதிப் போற்றத்தக்க சிறப்புப் பெறவில்லை. அவற்றில் உணர்ச்சி இல்லாமற் போகவில்லை; கற்பனை இல்லாமற் போகவில்லை. ஆயின் அழகிய அமைப்பு இழந்து நிற்கின்றன எனலாம். ஆதலின் அவை படிக்காத மக்கள் மட்டுமே


ஆண்உயர் வென்பதும் பெண்உயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை.

- பாவேந்தர் பாரதிதாசன்

**THE METAL POWDER COMPANY LTD.**, Maravankulam, Thirumangalam - 626 709. Madurai. Phone : 88341

பாராட்டத்தக்கன ஆயின"[4] என்று குறிப்பிடுவார். இக்கலை தற்பொழுதும் ஆதரிக்கப்பட்டுப் பட்டி தொட்டிகளில் நடத்தப்பட்டுவருகிறது.

### குழந்தை நாடகம்

குழந்தை நாடக நூல்கள் குழந்தை நாடகம், சிறுவர் நாடகம், இளைஞர் நாடகம், மாணவர் நாடகம் என்ற பெயர்களில் வருகின்றன. இவற்றில் சிறுவர் நாடகமும் இளைஞர் நாடகமுமே மிகுதி. குழந்தை நாடகம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதிதாகத் தோன்றிய நாடக வகையாகும். 'அப்பாவின் ஆசை' என்னும் குழந்தை நாடக நூலுக்கு முன்னுரை வழங்கிய கலைஞர் தி. க. சண்முகம் அவர்கள், "ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்புவரை பயிலும் உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் பார்க்கத் தகுந்த நாடகம் இது " என்று குறிப்பிட்டுள்ளார்.[5] இதனால் பதினொரு வயது முதல் பதினாறு வயதுவரை உள்ளவர்களுக்காக எழுதப் பெறும் நாடகத்தைக் குழந்தை நாடகம் என்று கொள்ளலாம்.

பண்டைத் தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கென்று தனியே நாடகங்கள் இருக்கவில்லை. ஆங்கிலேயர் நம் நாட்டை ஆளத் தொடங்கிய பின், மேனாட்டு இலக்கியங்களில் குழந்தைகளுக்குத் தனி இலக்கியம் இருப்பதை அறிந்தவர்கள், தமிழிலும் குழந்தை இலக்கியத்தை உருவாக்கினர். ஆனால், தொடக்கத்தில் சிறுவர் நாடக நூல்கள் அதிகம் வெளிவரவில்லை. வானொலியும், தொலைக்காட்சியும் சிறுவர் நாடக வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. பல்வேறு பள்ளிகளிலிருந்து சிறுவர்களைப் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைத்து அவர்களின் திறமையை வளர்க்கின்றன.

### வானொலி நாடகம்

கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கும் நாடகத்தைக் காதுக்கு மட்டும் உரியதாக்கி, அந்த நிலையிலும் நாடக இன்பத்தை முழுமையாக்கிக் கொடுப்பதில்தான் வானொலி நாடகங்களின் சிறப்பு விளக்கம் பெறுகிறது. நடிகர்களின் முகபாவ மாற்றங்கள் அங்க அசைவுகள், செயல்கள், பின்னணிக் காட்சிகள் முதலியவற்றை வானொலி நாடகங்களில் காண முடியாது. நாடக மாந்தர் பேசம் பேச்சுகளும், அந்தப் பேச்சுகளைப் பேசும்போது நடிகர்கள் தங்கள் குரல்களில் வெளிப்படுத்தும் உணர்ச்சி வேறுபாடுகளுமே வானொலி நாடகத்தின் வெற்றிக்கு அடிப்படையாய் அமைகின்றன.

### தொலைக்காட்சி நாடகம்

தொலைக்காட்சி பார்வை, கேள்வி ஆகிய இரண்டிற்கும் உரிய சாதனம். ஆனால் நாடக மேடையிலிருந்து பெரிதும் வேறுபடுவதாகும். யு. எம். கண்ணன் அவர்கள்" "மேடையின் பண்பும் திரையின் பாங்கும் கலந்ததொரு விநோதக் கலவையே தொலைக்காட்சி நாடகம். மேடையெனும் மேனியில் திரைப்படம் எனும் ஆடை அணிந்த நவீன நங்கை அவள். இவற்றை அறிந்தோரே இத்துறையில் புகுதல் இயலும். சரியாகப் புரிந்தோரே வெற்றி பெற முடியும்" [6] என்று எழுதுவார். தொலைக்காட்சி, நாடகம் எழுத ஊக்கமளித்துப் பலவிதமான நாடகங்களுக்கு ஆதரவும் தருகிறது.

### மொழிபெயர்ப்பு நாடகம்

இலக்கியத்தில் மொழிபெயர்ப்பு என்பது மிகவும் இன்றியமையாதது. இலக்கிய மொழிபெயர்ப்பு என்பது எல்லோருக்கும் எப்பொழுதும் பயன் தராவிட்டாலும் ஒரு மொழியில் இலக்கியம் படைக்க விரும்புவாருக்கு மொழிபெயர்ப்பு நூல்கள் பெருந்துணை செய்யும் என்பார் கில்பர்ட்.

தொல்காப்பியர் "மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்" எனக் கூறுகிறார். இதற்கு உரை வரையும் இளம்பூரணர் "வடமொழிப் பனுவலை மொழிபெயர்த்துத் தமிழால் செய்தல்" என்று விளக்கம் செய்வர். "தமிழால் செய்தல்" என்னும் தொடர், தமிழ் நெறிப்படுத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தும் தொடர் ஆகும். இத்தகைய மொழிபெயர்ப்பே சிறந்த மொழிபெயர்ப்பாம்.

கோபாலாச்சார் என்பார் 1976ஆம் ஆண்டு "Merchant of Venice" என்ற ஆங்கில நாடகத்தினை "வாணிபுர வணிகன்" என முதன் முதலாய்த் தமிழில் மொழிபெயர்த்தார்.

மனோன்மணீயம், சரசாங்கி, காமஞ்சரி போன்ற நாடக நூல்களும் வேற்றுமொழித் தழுவல்களேயாகும். மேலும் பல்வேறு மொழிகளிலிருந்து நாடகங்கள் தமிழில் மொழிபெயர்த்து அளிக்கப்பட்டுள்ளன.

### மேடை நாடகம்

மேடையானது நாடகக் கலைக்கு இன்றியமையாததாகும். பழம் எல்லையிலே வாழ்ந்த பாணர், விறலியர் போன்றே, தற்போது மாணவரும் நாடகக் குழுக்களும், மேடையிலேயே தத்தம் நாடகங்களை நடத்துகின்றனர்.

சாதாரண எழுத்து வடிவில் இருக்கும் நாடகங்கள் மேடை ஏறும்பொழுது மிகுந்த சிறப்பினைப் பெறுகின்றன. தவத்திரு சங்கரதாசு சுவாமிகள் அவர்கள் இம்மேடைக் கலையில் பிரம்மராகவே விளங்கியிருக்கின்றார்.

தொல்லுலக மக்கள் எல்லாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் !
- பாவேந்தர் பாரதிதாசன்

**THE SREE MEENAKSHI MILLS LTD.**, Thirupparankundram Road, Madurai - 625 003. Phone : 603 211

கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை
மறுமையிலும் புல்லாளே ஆயமகள்



சி. ஹெலினா சாந்தகுமாரி,
பத்தாம் வகுப்பு, 'இ' பிரிவு
பெண்கள் கிறித்துவ மேனிலைப் பள்ளி,
தஞ்சாவூர்.

சீர் குலைந்து கிடந்த மேடையை ஒழுங்குபடுத்தியதோடு அல்லாமல், வடமொழி மிருச்சகடிகம், செகப்பிரியரின் ரோமியோ சூலியட், தமிழ்க் காப்பியங்களான மணிமேகலை, பிரபுலிங்க லீலை இவற்றை மேடை நாடகமாக்கித் தமிழ்மக்களுக்கு அளித்திருக்கிறார். புராணங்களையும், வரலாறுகளையும் மேடையில் பரப்பிய அவரது நாடகங்கள், ஆயிரம் முறை அரங்கேறுவது சாதாரணமாய் இருந்து வந்திருக்கிறது. எளிய மக்களின் கல்விக்கூடமெனவும், பொதுமக்களின் புத்தகமெனவும் கற்பனை செய்யத்தக்க இம் மேடை நாடகங்கள் திறந்தவெளி அரங்கங்களில் நடத்தப்படுகின்றன. திறந்தவெளி நாடக அரங்குகள் மேடை நாடகம் மட்டுமன்றிப் பல்வேறு நாட்டுப்புற நாடகங்கள் மற்றும் கலைகள் பல வளர்வதற்கு ஏதுவாய் அமைகின்றன.

### அமெச்சூர் நாடகம்

நாடகக் கலைத் துறைக்கென அமைக்கப்பட்ட தனி நாடக நிறுவனங்களே நாடகக் கலையை வளர்த்தன. இந் நிறுவனங்களைச் சார்ந்த தொழில்முறை நடிகர்களே நாடகங்களில் நடித்து வருதல் பெரும்பான்மையாய் இருக்கும்.

ஆனால், தொழில்முறையில் இல்லாமல் வேறு அலுவல்களில் உள்ளவர்களும் பல்வேறு துறைகளில் உள்ளவர்களும், சில நேரங்களில் ஒன்றுகூடிப் பொழுது போக்காக நாடகங்கள் நடத்துவதுண்டு. அடிக்கடி நடக்கும் தொழில்முறை நாடகங்கள் போலில்லாது, இவை எப்போதோ ஒரு முறை நடக்கும். இத்தகைய நாடகங்களையே 'அமெச்சூர் நாடகங்கள்' என்றழைப்பர்.

பழங்காலத்தில் நடத்தப்பெற்று வந்த நாடகங்கள் இரவு நேரத்தில் தெருக்கூத்து முறை போலவும், முறையில்லாத வசனத்தோடும், கோமாளித்தனமான உடைகளோடும் நடத்தப்பெற்று வந்தன.

இத்தகைய குறைகளைக் களைந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். இவரும், இவர்தம் நண்பர்களும் ஒன்றுகூடிச் "சுகுண விலாச சபை" என்ற அமெச்சூர் நாடக சபையைத் தோற்றுவித்தனர். கருத்து, உடை, காலம், பாடல் போன்றவை மாற்றம் பெற்றன.

தற்போது கல்லூரி ஆசிரியர், வழக்கறிஞர், அரசாங்க அலுவலர், மருத்துவர் போன்றோர் அமெச்சூர் நாடக வகையை வளர்த்து வருகின்றனர்.

### தேசிய நாடகம்

தமிழ் நாடகப் பரிணாம வளர்ச்சியில் தேசிய நாடகம் தோன்றியது குறிப்பிடத்தக்க திருப்பமாகும். நாட்டுப்பற்றை மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் தேசிய நாடகங்களை உருவாக்கினர். "நாடக அரங்குகள் பாமர மக்களின் பல்கலைக்கழகம்" என்றார் கவிக்குயில் சரோஜினி தேவி. இப் பாமர மக்களின் பல்கலைக்கழகத்தில் ஊட்டப்பட்ட நாடகக் கல்வி நல்ல பயனை நாட்டுக்கு விளைவித்தது.

இவ்வாறு எழுதப்பட்ட தேசியப் பற்று மிகுவிக்கும் நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை, பண்டித க. கோபாலாச்சார் எழுதிய ஆரியசபா, சென்னை தெ. பொ. கிருட்டினசுவாமிப் பாவலரால் எழுதப்பட்ட கதரின் வெற்றி, தேசியக் கொடி, தேசபக்தர் வெ. சாமிநாத சர்மா எழுதிய பாணபுரத்து வீரன், திரு. எஸ். டி. சுந்தரம் எழுதிய கவியின் கனவு என்பன.

நாடகப் பாடல்களும் வீறுகொண்டவைகளாகவே விளங்கின.

சிலப்பதிகார நாடகத்தில் மாதவி மோசம் செய்துவிட்டாள் என்று கோவலன் பாடும்பொழுது,

> "காசைப் பறிக்கும் ஐரோப்பா கவர்மெண்டைப்போலக்
> கைப்பொருள்தனைப் பறித்தாள்"

என விடுதலை உணர்வு ஊட்டப்பட்டது. இவ்வாறு பல சிறப்புகளைப் பெற்றிருந்தாலும் தேசிய நாடகங்கள் தற்போது நலிந்துவிட்டன என்பதில் ஐயமில்லை.

### ஓரங்க நாடகம்

'ஓரங்க நாடகம்' என்பது ஓர் அங்கமே கொண்ட குறுநாடகம். இதனை 'ஒற்றையங்க நாடகம்' என்றும் சொல்வர். உலகத்தின் எல்லா மொழி இலக்கியங்களிலும் முதன் முதல் ஓரங்க நாடகமே தோன்றி இருக்க வேண்டும். அதிலிருந்து படிப்படியாக மூன்றங்கம், ஐந்தங்கம் என்றிவ்வாறு நாடகம் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுவர்.

முழு நாடகம் என்பது ஐந்தங்கங்களை உடையது. இந்த நாடகத்தோடு ஓரங்க நாடகத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் நாவலுக்கும் சிறுகதைக்கும் என்ன வேறுபாடு உண்டோ அதுதான் இங்கும் உண்டு என்பது விளங்கும்.

தமிழில் வெளியான நாடக நூல்கள் பெரும்பாலும் ஓரங்க நாடகங்களே. வெறும் பொழுதுபோக்கான நிகழ்ச்சிகளை மக்கள் விரும்பிப் பார்ப்பதால் இந்நாடகங்கள் பெருமளவில் தோன்றின எனலாம். துறைவன், சுகி, நாணல், கோமதி சுவாமிநாதன், பி. எஸ். இராமையா முதலானவர்கள் நிறைய ஓரங்க நாடகங்களை எழுதியவர்களாவார்கள்.

அறிவை விரிவுசெய் ; அகண்ட மாக்கு !
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
- பாவேந்தர் பாரதிதாசன்

T.V. SUNDARAM IYENGAR & SONS LIMITED, TVS Building, 7-B West Veli Street, Post Box No. 21, Madurai - 625 001. Phone : 31541

பத்திரிகைகள், இதழ்கள், போன்ற சமூகத் தொடர்பு சாதனங்கள் ஓரங்க நாடகங்களை வெளியிட்டு வருகின்றன. எக்காலத்தும் எந்நாட்டிலும், இவ்வகை நாடகம் வாழும் பெற்றியது.

### செய்யுள் நாடகம்

இயலிசைப் பொருட் டொடர்நிலைச் செய்யுளை வேறு விதமாய்க் கூறினால் செய்யுள் நாடகமாகும். செய்யுள் நாடகம் எழுதுதற்கு யாப்பறி திறனும், நாடக உத்தியும், இலக்கியப் பயிற்சியும், கவிபாடும் திறனும் இன்றியமையாததாய் வேண்டப்படுவனவாகும். பெரும்பாலோர் இந்த நாடகத்தின் அருமையைக் கண்டு ஒதுங்கிவிடுகின்றனர். ஒரு சிலரே முனைந்து எழுதுகின்றனர். ஆதலால் செய்யுள் நாடகங்கள், உரைநடை நாடகங்களைப் போலவோ அல்லது மொழிபெயர்ப்பு நாடகங்களைப் போலவோ பெருமளவில் படைக்கப் பெறவில்லை.

செய்யுள் நாடகம், இலக்கிய நாடக வகையைச் சார்ந்ததாகும். இவை படித்தற்குரியனவேயன்றி நடித்தற்குரியன அல்ல. இதற்குக் காரணம் செய்யுளில் அமைந்த வடிவமும், செய்யுள் என்பதனால் அமைந்த பொருள் கொள்ளும் முறையுமேயாகும்.

செய்யுள் நாடகத்தில் மிகச் சிறந்ததாய் விளங்குவது மனோன்மணீயம் ஆகும். இதனை எழுதிய பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை, செய்யுள் நாடகத்தின் தந்தை எனக் கூறப்பெறுகிறார். செய்யுள் நாடகத்திற்கு வித்திட்டது, இளங்கோவடிகளாரின் சிலப்பதிகாரமேயாகும்.

திரு. கோபாலகிருட்டினய்யரின் 'விசுவநாதன் அல்லது கடமை முரண்', திரு.சி.எஸ்.முத்துசாமி ஐயரின் 'விசுவநாதன்', ஏ.என்.பெருமாளின் 'பணிமொழி', பெ. தூரன் அவர்களின் 'ஆதி அத்தி', ஆலந்தூர். கோ. மோகனரங்கனின் 'வைர மூக்குத்தி' போன்ற நாடகங்கள் செய்யுள் நாடகத்தினை ஊக்குவிக்க வந்த சிறந்த நாடகங்களாகும்.

### இயக்க அமைப்பில் நாடகங்கள்

நாடக இயக்கங்களாக இரண்டினைப் பற்றித் தெளிவாகக் கூறலாம். அவை தேசிய இயக்க நாடகங்கள், திராவிட இயக்க நாடகங்கள் என்பனவாகும். இவை தவிர சமூகப் பொருளாதாரச் சிந்தனை அடிப்படையில் பொதுவுடைமை இயக்க நாடகங்கள் சிலவும் மலர்ந்துள்ளன. இயக்க அடிப்படையில் இம்மூன்றையும் கருதிப் பார்க்கலாம்.

இவை தவிர, ஓரளவு இயக்க நிலையில் நாடகச் சீரமைப்பை நோக்கமாகக் கொண்டு இரு வகை இருந்தனவாகக் கருதலாம். இவற்றை நாடக மறுமலர்ச்சி இயக்கம் என்றும், சோதனை நாடக இயக்கம் என்றும் கூறலாம். இவ்வாறு பிரிக்கப்படுபவற்றைப் பற்றிப் பின்வரும் பகுதிகள் தெளிவாகக் காட்டுகின்றன.

### தேசிய இயக்க நாடகங்கள்

தேசிய உணர்வை மக்களிடம் பரப்புவதற்குப் பலவித முயற்சிகள் சுதந்திரப் போராட்டக் காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. நாடக ஆசிரியர்களும், நடிகர்களும் தேசிய இயக்கத்தில் தீவிரமாகப் பங்குகொள்ளத் துணிந்து முன்வந்தனர். தேசிய உணர்வு நாடகங்கள் எழுதப்பட்டு மேடைகளில் உணர்ச்சியுடன் கலைஞர்களால் நடத்தப்பட்டன. காலத் தேவையினால் தேசிய இயக்க நாடகங்கள் தோன்றின. நாட்டு மக்களிடம் எளிதில் நாட்டு விடுதலை உணர்ச்சியை ஊட்டியதால் இவ்வகை நாடகங்கள் உடனடிப் பயனைத் தந்தன.

### திராவிட இயக்க நாடகங்கள்

பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் பகுத்தறிவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு சில திட்டங்களை வகுத்துத் தமிழ்நாட்டு மக்களைச் சீர்திருத்த விரும்பினார். அதன் விளைவாகவே திராவிடக்கழகம் தொடங்கப் பெற்றது. பெரியாருடன் சேர்ந்து அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சிற்றரசு, ஆசைத்தம்பி, கருணாநிதி, மதியழகன், அன்பழகன் ஆகியோர், தமிழ்ச் சமுதாயத்தைச் சீர்திருத்த முன்வந்தனர். இவர்களால், நாடகக் கலைக்கு மக்களிடம் செல்வாக்குப் பெருகியது. எள்ளலும், கிண்டலும் இவர்களது நாடகங்களில் மிகுந்து காணப்பெற்றன. அண்ணாதுரையின் சொர்க்கவாசல், புதிய மடாதிபதி, ஓர் இரவு, கண்ணீர்த்துளி போன்ற நாற்பது நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. பாரதிதாசனாரின் பிசிராந்தையார், இரணியன் அல்லது இணையற்ற வீரன் போன்ற நாடகங்கள் திராவிடக் கொள்கையை மையமாக வைத்து எழுதப் பெற்றவையாகும்.

### நாடக மறுமலர்ச்சி இயக்கம்

நாடகக் கலை சிறப்படைய வேண்டும் என்பதுதான் நாடக மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டவர்களின் நோக்கம். பத்தொன்பதாம் நூற்றாண்டு நாடகங்களில் இருந்த குறைகள் களையப்பட்டன. இதற்குப் பெரிதும் பாடுபட்டவர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். இவர் பார்சி, மராட்டி, இந்துஸ்தானி நாடகக் குழுக்கள் நடத்தும் முறையினைக் கண்டு அவற்றைப் போலவே தமிழ் நாடகத்தையும் நடத்த முயன்றார். பழமை நாடகங்களையும், மொழிபெயர்ப்பு நாடகங்களையும் பல முன்னேற்றமான முறைகளைக் கையாண்டு நடத்தியவர்.

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் !
- பாவேந்தர் பாரதிதாசன்

MADURAI SOFT DRINKS (P) LTD., Visalakshi Nagar, Madurai - 625 401. Phone : 43252, 43872

### சோதனை நாடக இயக்கம்

சோதனையாகச் சில நாடக முறைகளைப் பின்பற்றி, மக்களுக்கு நல்லறிவு ஊட்டி அவர்களுடைய அறியாமையை அகற்றி நல்வாழ்வு வாழ, எளிய முறையில் சுவையாக வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கத்தில், தெருக்கூத்து முறையை ஓரளவு பின்பற்றி நாடகங்களைச் சமூக உணர்வுடன் சேவை - மனப்பான்மையுடன் கற்றறிவுடைய இளைஞர்கள் நடத்திக்கொண்டு வருவதைச் சோதனை நாடக இயக்கம் (Movement of Experimental Dramas) என்று கூறலாம். இவ்வகை நாடகங்கள் மிக எளிமையாய் இருக்கும். ஆழமான கருத்துகளோடு இல்லாவிட்டாலும் சமுதாயம், அரசியல் ஆகியவற்றில் ஏழை எளிய மக்கள் ஏமாற்றப்படாமல் இருக்கவும், உழைப்புக்கு உரிய பயனைப் பெறவும், வாழ்க்கையில் பல வழிகளில் முன்னேற்றம் காணவும் வழிகாட்டும் வகையில் இத்தகைய நாடகங்கள் நடத்தப்பெறுவதாய்க் கூறப்பெறுகிறது.

அப்பட்டமான உண்மைகளை மக்கள் முன் காட்ட வேண்டும் என்பது இத்தகைய நாடகக் குழுவின் நோக்கமாகும். தெருவில் நடப்பது போன்று அடியும் பிடியும், கூச்சலும் குழப்பமும், ஏச்சும் பேச்சும், ஏமாற்றுவதும் ஏமாறுவதும் அப்படி அப்படியே நடக்கும். இந்த நாடகங்களில் நடப்பவை உண்மைக் காட்சிகளாய் விளங்கின.

### நவீன சமூக நாடகங்கள்

சமுதாயப் பிரச்சினைகளை மையமாக வைத்து அப் பிரச்சினைகளுக்கான காரணங்களையும் அவற்றை நீக்கும் வழிமுறைகளையும் நவீன நாடக ஆசிரியர்கள் எடுத்துக்காட்டி விளக்குகின்றனர். வேலை இல்லாத் திண்டாட்டம், வரதட்சிணைக் கொடுமை, பொருளாதாரச் சீர்கேடுகள், அரசியல் முறைகேடு, சாதி வேறுபாடு, குடியினால் வரும் கேடு, ஏற்றத் தாழ்வுகள் போன்ற பல சமுதாயப் பிரச்சினைகள் நாடக. ஆசிரியர்களால் அலசப்படுகின்றன.

சுஜாதா அவர்கள் 'வந்தவன்' என்ற நாடகத்தில் வேலை இல்லாமல் இருப்போர் இரக்கவுணர்வு கொண்டவராக இருந்தாலும் சூழ்நிலையாலும், தம் தேவையாலும் துணிவுடன் சில தவறான செயல்களைச் செய்துவிடுவதைக் காட்டியிருக்கிறார்.[7]

பறம்பைச் செல்வன் 'புல்லுருவிகள்' (1980) என்ற நாடகத்தை அரசியலின் போக்கை விளக்கிக் காட்டுவதற்காகப் படைத்தார். இந்நாடகத்தில் அரசியல் வாதிகளின் தவறான போக்கும், தந்திர உத்திகளும் உடைத்துக் காட்டப்படுகின்றன.

சே. மு. மு. முகமதலிக்குத் தேசியப் பரிசைப் பெற்றுத்தந்த நாடகமான 'இங்கே சாதி சாகுது' (1982) சாதி சமய வேறுபாடற்ற மனிதாபிமான உணர்வை ஊட்ட விரும்புகிறது.

ஏமாந்தவன் யார்? (1982) என்ற சிறுவர் நாடகத்தை ஆலந்தூர் கோ. மோகனரங்கம், வரதட்சணை வாங்குவதற்கு எதிராக எழுதிச் சமுதாயத்துக்கு அறிவுறுத்த விரும்புகிறார்.

1984ஆம் ஆண்டு ஏர்வாடி எஸ். இராதாகிருட்டினன் 'பணம் பணம் பணம்' என்ற வானொலி ஓரங்க நாடகத் தொகுதியை வெளியிட்டுள்ளார். இவை பொருளாதாரச் சிக்கல்களையும் அவற்றினால் மனிதன் செய்யும் தவறுகளையும் விளக்குகின்றன.

கரு. நாகராசனின் 'மேகம் மறைத்த நிலா'(1986) என்ற சமூக நாடகம் இளைஞர்கள் நம்பிக்கையுடன் முயன்று வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்பதனை விளக்குகிறது.

'பாண்டியன் மகுடம்' (1985) என்ற வரலாற்றுப் புனைவு நாடகத்தை ஆர். சி. தமிழன்பன் தருகிறார். தமிழ் மக்கள் அன்றிலிருந்து இன்று வரை ஒற்றுமை இன்றிச் சிதறியிருப்பதை நாடக ஆசிரியர் மிகவும் வருத்தத்துடன் கூறிக் கலங்குகிறார்.

தற்காலத்தில் பல சமூக நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் போன்று நகரங்களிலும் கிராமங்களிலும் நடிக்கப்பெறுகின்றன. இவை கல்வியறிவின் இன்றியமையாமை, சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக வைத்திருத்தல் போன்ற பல முக்கியமான கருத்துகளை விளக்கிக் காட்டுகின்றன.

### முடிவுரை

இவ்வாறு பல்வேறு விதமாய்ப் பரிணாமம் பெற்று வந்த நாடக இலக்கியம் எளிமையான தொடர்பு சாதனமாய் இன்று விளங்குகிறது. பள்ளி, கல்லூரிகளில் நடத்தப்பெற்று மாணவர்களின் இலக்கிய, சமுதாய அறிவை வளர்க்கிறது. இதன் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், செய்தி மக்கள் தொடர்பு துறை மற்றும் பலவிதமான இதழ்கள் பெருந்தொண்டாற்றி வருகின்றன. எந்த ஒரு கலையும் பல்வேறு மாற்றங்களைப் பெறும்பொழுதுதான் முழு வளர்ச்சியை அடைகிறது. நாடகமும் அக் காலத்திலிருந்து இன்றுவரை பலவித வளர்ச்சி நிலைகளைத் தாண்டித் தற்பொழுது 'கிரேசி மோகன்', 'எஸ். வி. சேகர்', 'மௌலி' போன்றவர்களால், பாமர மக்களுக்கும் புரியும் வண்ணம் மெருகுபடுத்தப்பட்டு வந்துள்ளது. இத்தகைய நாடகக்கலை பின்வரும் சந்ததியினர் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்துவந்து தருதல் வேண்டும்.
- பாவேந்தர் பாரதிதாசன்

**THIAGARAJAR MILLS LTD.**, Kappalur, Madurai. Phone : 88591, 88592

1. அடியார்க்குநல்லார் உரை, சிலப்பதிகாரம் 3, 12

2. (அ) S. I.I, Vol. 11, No.67

(ஆ) A. R. of S.I. Epigraphy, 1931, 1932

3. வி. கோ. சூரியநாராயண சாத்திரியார், நாடகவியல் (1934), வி. சூ. சுவாமிநாதன், மதுரை, பக்.10

4. மு. வரதராசன், இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை, பக்.101

5. திருச்சி பரதன், அப்பாவின் ஆசை (1970), தமிழ் நிலையம், புதுக்கோட்டை, பக்.16

6. யு. எம். கண்ணன், மதிப்புரை, பணம் பணம் பணம் ஏர்வாடி எஸ். இராதாகிருட்டினன், சென்னை 1984, பக்.3-4

7. மஞ்சரி, சனவரி 1980, காட்சி-1 பக்.28

*செல்வன் பா. அருண்குமார்,*
*வணிகவியல்,*
*புனித சூசையப்பர் கல்லூரி,*
*கடலூர்.*



தமிழனுக்கு வீழ்ச்சியில்லை ; தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை !

- பாவேந்தர் பாரதிதாசன்

**SHRI RENUGA TEXTILE MILLS LTD.,** 87, Cumbum road, Theni - 626 531. Phone : 72812, 72738

# இனி ஒரு விதி செய்வோம்



செல்வன் ந. சுந்தரமூர்த்தி

அக்னிக்குஞ்சுகளைப் பொரிப்பது போதும்
எரிப்பதைப்பற்றிப் பேசுவோம்.
இரவுகளின் அழுகை
விடியவேயில்லை. . .
விடியலின் விளக்கம்
வெளிச்சமேயில்லை . . .

லஞ்சவானத்தில் வேலைமழை
தேவையில்லை
பூமியைமட்டும் புரட்டிப் போடுவோம்.

கரைகள் இல்லாத நதிகள் நாம்
நகரவேண்டும் இல்லையென்றால்
ஓடங்கள் ஒதுங்கிவிடும்.

பாலைவனத்துப் பறவைகளோடு
விவாதிப்போம்
மழையைப் பற்றியல்ல
பாலைவனத்தைப் பற்றி . . .

நெருப்போடு விளையாடும்
விட்டில்கள்
தீக்குச்சிகளில் தீக்குளிக்கின்றன
வெளிச்சத்துக்காகவே . . .

பருவவயலில் நரை நாற்றுகள்
சாகாத ஒன்றுக்கு சமாதியோடு சந்திப்பு
அரிவாளின் துயரம்
நிலத்துக்கு ரத்தமில்லை . . .

நன் மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு
பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்
- பாவேந்தர் பாரதிதாசன்

உசிலம்பட்டி பேக்கர்ஸ் & கன்பெக்ஷனர்ஸ் அசோசியேஷன், உசிலம்பட்டி - 626 532

திரௌபதையின் துகில்
துச்சாதனன் தம்பியிடம் . . .
கண்ணனைத்தான் காணவேயில்லை. . .

உடைந்த சிலையை ஒட்டுவோம்
சிற்பிக்குச் சிம்மாசனம் தந்தபிறகு . . .

சூரியச் சொற்களால்
கவிதை சொல்வோம்
தாள்கள் எரிந்துபோகட்டும்
அப்படியாவது
வாழ்க்கை வெளிச்சம் பெறட்டும்

உணர்ச்சித் துடிப்பில்
ரத்தம் உறையட்டும்
உழைப்புக் கண்ணீரில்
கறைகள் போகட்டும்

களவுபோன
விடியல்களைக் கணக்கிடாமல்
கைக்குவரும்
இரவுகளையே நிறம் மாற்றலாம்

விதி செய்வோம்
வீணையை மீட்டுவோம்
ஆனால்
விரல்களைத் தேடியபிறகு . . .

செல்வன் ந. சுந்தரமூர்த்தி,
பி. லிட், மூன்றாம் ஆண்டு,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்க் கல்லூரி, மயிலம்,
விழுப்புரம் இராமசாமி படையாச்சியார்
மாவட்டம்.



என்றும் தமிழ் வளர்க ! - கலை
யாவும் தமிழ் மொழியால் விளைந்தோங்குக.
- பாவேந்தர் பாரதிதாசன்

V.P.R. LODGE, Big Street, Kumbakonam - 612 001. Phone : 21949

# தமிழும் அறிவியலும்

செல்வி சௌ. கீதா

## 1. முன்னுரை

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அறிவியல் தமிழுக்கான வித்து, இம் மண்ணில் ஊன்றப்பட்டு விட்டாலும், இந்த நூற்றாண்டில்தான் அதற்கான வளர்ச்சிக்கு நீர் ஊற்றப்பட்டுவருகின்றது. இன்றைய யுகம் அறிவியல் யுகமாக அமைவதால், தமிழில் அறிவியலின் தோற்றம், வளர்ச்சிக் கூறுகள், வளர்ச்சியினால் ஏற்படும் நன்மைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இக் கட்டுரை அமைகின்றது.

## 2. தமிழும் அறிவியலும்

தமிழ்மொழி பற்றி அனைவரும் அறிவர். அதுபோலவே அறிவியல் என்பது பற்றியும் அனைவரும் அறிவர். ஆனால் 'தமிழில் அறிவியல்' என்பது மட்டுமே கேள்விக்குறியாய் எழுகின்றது. அறிவியல் கருத்துகளை, செய்திகளைத் தமிழில் எடுத்துரைப்பதையே 'தமிழில் அறிவியல்' என்கிறோம். இஃது இயற்றமிழ் வகையைச் சார்ந்ததாக இருந்தாலும், பிறமொழியிலுள்ள அறிவியல் செய்திகளை, கருத்துகளை மொழிபெயர்க்க வேண்டிய கடப்பாட்டிற்கு ஆளாகிறோம். தமிழில் அறிவியல் கருத்துகளை எடுத்துக் கூறும் நிலை, "பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே தோற்றம் பெற்றுவிட்டது. அதற்கு 150 ஆண்டுக் காலப் பழமை உண்டு" என்று இராம. சுந்தரம் (1984 : 56) குறிப்பிடுகின்றார். அறிவியல் தமிழை "விஞ்ஞானத் தமிழ்" என்று ஜி. ஆர். தாமோதரன் முதன் முதலில் குறிப்பிட்டுள்ளார். பின்னர், வா. செ. குழந்தைசாமி அவர்கள் 'அறிவியல் தமிழ்' என்ற சொல்லை உருவாக்கினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாய்மொழியிலே கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்று இந்தியத் துணைக் கண்டத்தில் கருத்துகளும் விவாதங்களும் நடைபெற்றன. இதன் விளைவாக 1830 களில் முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தாய்மொழியில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இதன் பொருட்டுத் தமிழில் அறிவியல் நூல்கள் பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் எழுதப்பட்டன. ஆரம்ப காலத்தில் அறிவியல் என்பது 'சாஸ்திரம்' என்ற சொல்லால் உணர்த்தப்பட்டது. (எ. கா.) பூமி சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், சரீர சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம் என்று குறிப்பிடப்பட்டன.

டாக்டர் சாமுவேல் பிஷ்கிறீன் என்பவர் இலங்கையிலிருந்து 1850 - 1880 காலகட்டத்தில் அதிகமான மருத்துவ நூல்களைத் தமிழில் வெளியிட்டுள்ளார்.

இன்பம் எனப்படுதல் - தமிழ்
இன்பம் எனத் தமிழ் நாட்டினர் எண்ணுக.
- பாவேந்தர் பாரதிதாசன்

JAI HIND ENTERPRISES, 13-B, Nageswaran North Street, Kumbakonam - 612 001. Phone : 21703

"டாக்டர் கிறீன் தமது மொழிபெயர்ப்புக்குப் பயன்படும் வழியில் அறிவியல் கலைச்சொற்களைத் தாமே உருவாக்கியது மட்டுமன்றிக் கலைச்சொற்களை உருவாக்குவதற்கான சில நெறிமுறைகளையும் வகுத்தார்" என்று வா. செ. குழந்தைசாமி (1985 : 77) குறிப்பிடுகின்றார்.

இதனைத் தொடர்ந்து தமிழில் அறிவியலை வளர்க்க முக்கியக் காரணமாக அமையும் கலைச் சொற்களை உருவாக்கும் பணி தொடங்கப்பட்டது.

### 3. தமிழில் அறிவியல் வளர்ச்சிக்கான கூறுகள்

தமிழில் அறிவியல் வளர்ச்சிக்கான கூறுகள் பல்வேறு நிலைகளில் அமைகின்றன. அவை:

1. கலைச் சொல்லாக்கம்
2. தாய்மொழிவழிக் கல்வி
3. மக்கள் தொடர்பு சாதனங்கள்
4. இலக்கணம் அமைத்தல்
5. நூல்கள் வெளியிடல்
6. பயன்பாடு
7. ஊக்குவித்தல்
8. அறிவியல் அமைப்புகள்

என்பவையாகும்.

### 3.1 கலைச் சொல்லாக்கம்

தமிழில், அறிவியல் வளர்ச்சி பெற வேண்டுமானால் முதல் நிலையாகக் கலைச்சொற்கள் அவசியமானதாகும். முறையான கலைச் சொல்லாக்கப் பணி இருபதாம் நூற்றாண்டு முதல் தொடங்கியது. "இராஜாஜி வெங்கட சுப்பையருடன் சேர்ந்து சேலத்தில் 1916-ல் 'தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை' என்ற பத்திரிகையைத் தோற்றுவித்தார். இதுவே, கலைச் சொல்லாக்கப் பணியில் முதல் கூட்டு முயற்சியாக அமைந்தது" என்று வா. செ. குழந்தைசாமி (1985:77) கூறுகின்றார்.

"கலைச்சொற்களை இரு நிலைகளில் பயன்படுத்த வேண்டும். அவை 1. பொதுமக்கள், 2. கல்வியாளர்" என்று இராம. சுந்தரம் (1984:58) கூறுகின்றார்.

பொதுமக்களுக்கு அறிவியலைப் புலப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் எழுதுகின்றவற்றில், அவர்களால் எளிமையாகப் புரிந்துகொள்ளக்கூடிய தன்மையில் எளிய கலைச்சொற்களைப் படைக்க வேண்டும்.

(எ. கா.) கொழுப்பு, பித்தநீர், வைட்டமின் போன்ற சொற்கள் விஞ்ஞானச் சுடரில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கல்வி கற்றவர்களுக்காக அமைவதில் கலைச் சொற்கள் அவர்களின் தரத்திற்கு ஏற்ப அமைக்கப்படுகின்றன.

(எ. கா.) சுவாச மண்டலம் - Respiratory System
நிணச்செல்கள் - Lymphocytes

கலைச்சொற்களைச் செம்மையாக உருவாக்கினால்தான் மொழிபெயர்ப்புச் செம்மையாக அமையும். எனவே, அறிவியல் தமிழ் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் கலைச்சொற்களைத் தொகுக்க வேண்டுமென்பதை டி. பத்மநாபன் (1988) அவர்கள், "அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொற்கள் தொகுதி தொகுதியாக இதுவரை பல நூல்களாக வெளியிடப் பட்டுள்ளன. அவற்றை ஒன்றுதிரட்டி ஒவ்வொரு துறைச் சொற்களையும் தனித்துப் பிரித்து, வகைப்படுத்தி, ஒவ்வொரு கலைச் சொல்லுக்கும் இதுவரை கையாளப்பட்ட தமிழ்ச் சொற்களைக் கணக்கிலெடுத்து அவற்றில் எது பொருத்தமுடையது என்பதை அறிஞர் குழு முடிவு செய்ய வேண்டும்'' என்கிறார். கலைச் சொல்லாக்கத்திற்கு அரசும் தமிழகத்தின் பிற பல்கலைக் கழகங்களும் உறுதுணையாகத் திகழ வேண்டும்.

### 3.2 தாய்மொழிவழிக் கல்வி

இந்திய நாடு இருநூறு ஆண்டுகளாக வேற்று மொழியாளரின் ஆட்சியில் பிடிபட்டிருந்தமையால், நாடெங்கும் ஆங்கிலமே பயிற்று மொழியாக அமைந்திருந்தது. இந்திய நாடு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையால், ஆங்கிலமே பரவலாக அமைந்த நிலையில் தாய்மொழி மூலம் கற்கும் சூழ்நிலையும் கற்பிக்கக் கூடிய வாய்ப்பும் ஏற்படவில்லை. ஆனால், சுதந்திரம் பெற்ற பின்பும், ஆங்கிலக் கல்வி முறையே இடம்பெறுவது வருந்தத் தக்கதாகும். தாய்மொழிவழிக் கல்வியினாலேயே மாணவர்களால் தரமிகுந்த கல்வியைப் பெற முடியும். இதனை, சரவணன் (1989 - 68) "அறிவியல் பாடங்களைத் தாய்மொழியில் கூறினால்தான் எளிமையாக மாணவர்களால் புரிந்துகொள்ள முடியும்" என்கிறார். இன்றைய கல்விச் சூழலில் எழுதுவது குறித்து அரசு, தனியார் கல்லூரி மாணவர்களிடேயே நிகழ்த்திய ஆய்வில், ஆங்கிலம் வாயிலாகப் பயில்வோரில் 90% - க்கும் மேல் தமிழ் வாயிலாகத் தேர்வு எழுதுகின்றார்கள். இந்நிலையில், தாய்மொழிவழிக் கல்வியையே இடம்பெறச் செய்யலாம். தாய்மொழிவழிக் கல்வியின் மூலம் அமையும் கல்வியாலே

தமிழ்எங்கள் உயிர்என்ப தாலே - வெல்லுந்
தரமுண்டு தமிழருக்கு இப்புவி மேலே.
- பாவேந்தர் பாரதிதாசன்

H. GOPALDAS & CO., "Mira Gopaldas Mansion", 120 - 121, Big Street, Kumbakonam - 612 001. Phone : 20085, 23695

ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே!




க. உதயகுமார்,
இளம்கலை அறிவியல்,
இரண்டாம் ஆண்டு விலங்கியல் (தமிழ்வழி),
அரசு கலைக் கல்லூரி,
கோயம்புத்தூர் - 18.



தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

-அக்னிக் குஞ்சு-

வெ. செந்தில்குமார்,
இளமறிவியல் மூன்றாம் ஆண்டு தாவரவியல்,
தியாகராசர் கல்லூரி, மதுரை - 9.

பயனும் ஒழுங்கும் அமையும். எனவே, பயிற்றுமொழியாகத் தமிழை மாநிலத்தில் கொணர வேண்டும்.

### 3.3 மக்கள் தொடர்பு சாதனங்கள்

இன்றைய உலகில், செய்திகள் வெகு விரைவிலும், பரவலாகவும் மக்களைச் சென்றடைய மக்கள் தொடர்பு சாதனங்கள் உதவுகின்றன. இச்சாதனங்கள் நவீன உலகின் அறிவியலையும் பரப்ப முனைப்பாகச் செயல்பட வேண்டும். அறிவியல் தொடர்பான இதழ்கள் பெருக வேண்டும். இதனை "அறிவியல் மாத, வார இதழ்கள் தமிழில் பலவாக வரவேண்டும். அதிலும் குழந்தைகள் மனத்தைக் கவர்ந்து அறிவியல் ஆர்வம் வளர்க்கும் இதழ்கள் மிகமிகத் தேவை" என்கிறார் பத்மநாபன். *(1988:8)*

வானொலி, தொலைக்காட்சிகளிலும் அறிவியல் செய்திகள் இடம்பெறுகின்றன. அவை, அறிவியல் துளிகள், அறிவியல் ஆயிரம் என்பவையாகும். இச்சாதனங்கள் இன்னும் அதிகமாக அறிவியல் செய்திகளைப் பரப்ப முன்வரவேண்டும்.

### 3.4 நூல்களை வெளியிடல்

தமிழில் ஆய்வு வளர்ச்சிபற்றித் 'தமிழியல் ஆய்வு' என்ற நூல் தமிழண்ணலால் வெளியிடப்படுவது போன்று அறிவியல் நூல்களின் 'நூலடைவு' வெளிவர வேண்டும். இராம. சுந்தரம் 'அறிவியல் நூலடைவு' ஒன்றினை வெளியிட்டுள்ளார். இதுபோன்று அதிகமான நூலடைவுகள் வெளிவர வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகம், 'அறிவியல் களஞ்சியம்' எட்டுத் தொகுதிகளை வெளியிட்டுள்ளது போன்று அனைத்து அறிவியல் துறைகளிலும் களஞ்சியங்கள் வெளிவர ஆவன செய்ய வேண்டும். அறிவியல், தமிழில் விரைந்து வளர வேண்டுமானால் அறிவியல் துறைத் தொடர்பான அனைத்து நூல்களையும் மொழிபெயர்ப்பாகவோ, மூல நூலாகவோ வெளியிட வேண்டியது அவசியமானதாகும். இதனை, அரசு, தனியார் நிறுவனங்கள் பொறுப்பேற்றுச் செயலாற்ற வேண்டும். குழுக்களாக இணைந்து அறிவியல் நூல்களை வெளியிட வேண்டும். "அக்குழுவில் மூவரின் பங்கு அமைய வேண்டும். அவர்கள் 1. அறிவியலறிஞர், 2. தமிழறிஞர், 3. மொழிபெயர்ப்பாளர்" என்று சுப்பு ரெட்டியார் *(1976:87)* குறிப்பிடுகின்றார். இவ்வாறு அமையும் பொழுது சிறப்பான அறிவியல் நூல்கள் வெளிவரும் வாய்ப்புகள் உண்டாகும்.

### 3.5 இலக்கணம் அமைத்தல்

தமிழ்மொழியில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று இலக்கிய நடைக்கு இலக்கணம் உள்ளது போன்று அறிவியல் தமிழுக்கெனத் தனிப்பட்டதோர் இலக்கணம் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், இதுவரை இத்தகைய இலக்கணம் உருவாக்கப்படவில்லை. அறிவியல் நூல்களை எழுதுவோர் இலக்கணம் அமைப்பது தொடர்பான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அறிவியல் அமைப்புகளும் இப்பணியை ஆற்ற முன் வரவேண்டும். அறிவியல் தமிழுக்கான இலக்கணம் கல்வியாளர், பொதுமக்கள் என இரு நிலைகளில் அமைய வேண்டும்.

"ஒரு மொழியின் பயன்பாட்டில் அறிவியல் கருத்துகளைத் தெளிவாகவும், எளிமையாகவும், செய்தித் தொடர்பை ஆற்றல் மிக்கவையாகவும் ஆக்கப் பல்வேறு மொழிக் கூறுகளை அந்தச் சமுதாயச் சூழலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளும் ஒரு மொழிநடை அறிவியல் தமிழாகும்" என்று சேதுமணி மணியன் *(1990:60)* குறிப்பிடுவது போன்று காலம், இடம், சமூகம், பண்பாடு அடிப்படையில் அமைகின்ற நடையினை உருவாக்க வேண்டும். மேலும், "அறிவியல் நூல்களைத் தமிழில் எழுதுவது என்பது அறிவியல் இலக்கியம் படைப்பதாகும். அதற்கான இலக்கணம் உருவாக வேண்டும். பாரம்பரியம் வளர வேண்டும்" என்று வா. செ. குழந்தைசாமி *(1985:80)* கூறுகின்றார். எனவே, தமிழில் அறிவியல் இலக்கியம் உருவாக வேண்டுமென்றால் முறையாக வரையறுக்கப் பட்ட இலக்கணம் உருவாக்கப்பட வேண்டும்.

### 3.6 பயன்பாடு

மொழி வளர்ச்சியில் பயன்பாடு முக்கியப் பங்கு வகிக்கின்றது. தமிழ்மொழி பயன்படும் பல்வேறு துறைகளுள் அறிவியல் துறையுமொன்றாகும். அறிவியல் துறைகளாக, இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், மருத்துவம், தொழில்நுட்பம், கணிப்பொறி ஆகியவற்றில் தமிழ்மொழியின் பயன்பாடு அமைகின்றது. இத் துறைகளில், செயல்முறை, பயிற்று முறை என்பனவற்றிற்கு ஏற்ற முறைகளில் மொழிப் பயன்பாடு அமைய வேண்டும். இவ்விரண்டு பயன்பாட்டு நிலை முறைகளிலும், நோக்கம் அடிப்படையில் ஒப்பிடல், விவரித்தல், வரையறுத்தல், வகைப்படுத்தல் என்று செய்திகள் அமைகின்றன.

ஒரு மொழியினைப் பொதுவாகப் பயன் படுத்துவதற்கும், பல்வேறு துறைகளுக்கிடையே பயன்படுத்துவதற்கும் வேறுபாடுகள் உண்டு. அதனைப் போன்றே தமிழ்மொழியைப் பிற துறைகளில் பயன்படுத்துவதற்கும் அறிவியல் துறையில் பயன்படுத்துவதற்கும் வேறுபாடுகள் உண்டு. அறிவியல் துறைகளுக்கிடையே பயன்பாடு, பயன்படுத்துபவர்க்கு ஏற்ற

தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன்று மேல்தமிழ் நாடெங்கும் இருளாம்.
- பாவேந்தர் பாரதிதாசன்

**MODERN RADIO SERVICE,** 11, Big Street, Kumbakonam - 612 001. Phone : 20017, 20117

மொழிப் பயன்பாடு, பயன்படுத்தும் நோக்கம், அடிப்படையில் மொழிப் பயன்பாடு என்று அமைகின்றது.

### 3.7 ஊக்குவித்தல்

அறிவியல் அறிஞர்களையும், நூல் வெளியீட்டாளர்களையும் உருவாக்க வேண்டியது அவசியமானதாகும். களஞ்சியம் இதழ் இப்பணியினை ஆற்றி வருகின்றது. களஞ்சியம் இதழில் ஒவ்வோராண்டும் வெளிவரும் கட்டுரைகளுள் சிறந்த ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அக் கட்டுரை ஆசிரியருக்கு ஜி. ஆர். டி தமிழாக்க அறக்கட்டளைப் பரிசாக ரூ. 1500/- அளிக்கப்படுகின்றது. இதனைப் போன்று மற்ற இதழ்களும் பரிசுகள் வழங்கி எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும். அரசும், சிறந்த முறையில் அறிவியல் செய்திகளை வெளியிடும் இதழ்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்க வேண்டும். அறிவியல் தொடர்பான ஆராய்ச்சிகளுக்குச் சிறப்பான ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். தமிழக அரசு சிறந்த அறிவியல் நூலுக்குப் பரிசினை அளிக்கின்றது. இவ்வாறு அமையும்பொழுது சிறப்பான நூல்களும், அறிவியல் தொடர்பான எண்ணற்ற நூல்களும் வெளிவர வாய்ப்பாகும்.

### 3.8 அறிவியல் அமைப்புகள்

அறிவியல் செய்திகளைப் பரப்புவதற்காக ஒருங்கிணைந்து செயற்படும் மக்கள் நிறுவனங்களை அறிவியல் அமைப்புகள் எனலாம். தமிழகத்தில் பல்வேறு அறிவியல் அமைப்புகள் இடம்பெற்றுள்ளன. அவை : 1. தமிழ்நாடு அறிவியல் இயக்கம், 2. அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், 3. சுதேசி அறிவியல் இயக்கம், 4. மக்கள் இயக்கம், 5. துளிர் இல்லம், 6. மருத்துவ அறிவியல் தமிழ்க் கழகம், 7. பள்ளி, கல்லூரி, வானொலி அறிவியல் மன்றங்கள் என்பனவாகும்.

நமது அண்டை மாநிலமான கேரளத்தில் "கேரள சாஸ்திர சாகித்ய பரிஷத்" என்னும் அறிவியல் இயக்கம் மலையாள மொழியில் ஆண்டுதோறும் வெளிவந்த அறிவியல் நூல்களின் எண்ணிக்கை, அவை விற்பனையான விவரம்பற்றித் தெளிவாகக் கூறுகின்றது. இதுபோன்ற அமைப்பு, தமிழகத்தில் இதுவரை அமையவில்லை. இதனைப் போன்று அறிவியல் அமைப்புகள் செயல்பட வேண்டும். அறிவியல் அமைப்புகள் பள்ளி, கல்லூரிகளுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். இஃது அறிவியல் கண்காட்சிகள், பயிலரங்குகள், அறிவியல் பயிற்சி முகாம் போன்றவற்றை நடத்த முன்வர வேண்டும். இவ்வமைப்புகள் மக்களுக்கு அடிப்படை அறிவியலையும் தமிழ்வழி அறிவியலின் இன்றியமையாமையையும் அறிவுறுத்துவனவாக அமைய வேண்டும். அறிவியல் உணர்வை ஏற்படுத்தப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

## 4. தமிழில் அறிவியலின் பயன்

அறிவியலைத் தமிழில் மொழிபெயர்க்கும் பொழுது பலவித நன்மைகள் உண்டாகின்றன. அவை:

1. மொழி வளர்ச்சி
2. கல்வி வளர்ச்சி
3. நாட்டின் வளர்ச்சி

என்பனவாகும்.

### 4.1 மொழி வளர்ச்சி

ஓர் இனத்தின் பண்பாடு வளர மொழி அடிப்படைக் கருவியாகின்றது. மொழி வளர்ச்சியைக் கொண்டே இன வளர்ச்சி கணிக்கப்படுகின்றது. மொழி மனிதனைப் பண்படுத்துவதாக, மேம்படுத்துவதாக, செயல்படுத்துவதாகத் திகழ்கின்றது. இம்மூன்றையும் அளிக்கும் ஆற்றல் அறிவியலுக்கு இருக்கின்றது. இத்தகைய அறிவியலை எடுத்தியம்பும்பொழுது மொழியானது வளர்ச்சி நிலையை எட்டுகின்றது.

இந்த நூற்றாண்டில் மொழியின் வளர்ச்சிக்கு அம்மொழியின் படைப்பிலக்கியங்கள் மட்டுமல்லாது, மொழிபெயர்ப்பும் துணைசெய்கிறது. பிற மொழியிலுள்ள அறிவியல் சொல்லிற்கு இணையான பல புதிய கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

(எ. கா.)

Mitosis - செல் பிரிதல்

Osmosis - சவ்வூடு பரவல்

Virus - நச்சுயிரி

அறிவியலை மொழிபெயர்ப்பதால் மொழியில் கருவிநிலை, உள்ளடக்க நிலையென இரு வகை வளர்ச்சிகள் இடம்பெறுகின்றன.

#### 4.1.1 கருவிநிலை

மொழிபெயர்ப்பின்பொழுது மொழியே கருவியாகத் திகழ்கின்றது. மொழியின் உள் பொதிந்துள்ள திறங்கள், சொற்றிரள்கள், ஒலியன், உருபன், தொடரன், இலக்கண அமைதிகள், இலக்கணங்கள் போன்றவற்றில் ஏற்படும் வளர்ச்சியானது மொழியின் கருவிநிலை வளர்ச்சியாகும். தமிழ்மொழியில் பன்னிரண்டு உயிர்களும், பதினெட்டு

தமிழுண்டு தமிழ்மக்கள் உண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு !
- பாவேந்தர் பாரதிதாசன்

**KALI BRAND STAINLESS STEEL FACTORY**, 42/6-B, Madras Road, Melakaveri - 612 002, Kumbakonam

மெய்களும் முதன்மையாக அமைகின்றன. ஆனால், இன்று பிறமொழிச் சொற்களும் கலந்து கலைச்சொற்கள் படைக்கப்படுகின்றபொழுது பல புதிய ஒலியன்கள் உண்டாகின்றன.

### 4.1.2 உள்ளடக்க நிலை

அறிவியல் நிகழ்வுகள், அறிவியல் சாதனங்கள், அவற்றின் விவரணைகள், புதிய கண்டுபிடிப்புகள், அவற்றின் பயன்பாடுகள் ஆகியன ஒவ்வொரு அறிவியல் துறையிலும் பெருகி வருகின்றன. தாவரவியல், விலங்கியல், வேதியியல், உயிர் வேதியியல், இயற்பியல், இயற்பியல் வேதியியல், மருத்துவ இயல், பொறியியல், மொழி நுட்பவியல், புவியியல், புள்ளியியல், மண்ணியல் போன்ற அனைத்து அறிவியல் துறைகளிலும் கணம்தோறும் பெருகிவரும் அறிவியல் செய்திகள் தமிழில் இடம் பெறும்போது தமிழர் பயன்பெறுவதோடு தமிழின் உள்ளடக்கமும் விரிவடைகிறது. இலக்கியம், இலக்கணம், திறனாய்வு என்ற உள்ளடக்கங்களுடன் அறிவியல் உள்ளடக்கமும் சேரும்போது தமிழின் உள்ளடக்கமும் வளர்ச்சி அடைகிறது.

### 4.2 கல்வி வளர்ச்சி

மொழி வளர்ச்சி ஏற்படும்பொழுது அறிவியல் கல்வி வளர்ச்சியும் பெருகுகின்றது. "தாய்மொழி மூலம் கல்வி பெற்றால் நாட்டு மக்களின் அறிவுநிலை விரைவாக வளரும்" என்று சுப்பு ரெட்டியார் *(1976:83)* குறிப்பிடுகின்றார். எனவே, அவரவர் மொழியில் கல்வி அமைந்தால்தான் எளிமையாக, தெளிவாக உணர்ந்து கொள்வதோடு புரிதிறனும், ஆக்கமும் உண்டாகும். கலை, அறிவியல் ஆகிய இரு பெருந் துறைகளும் தாய்மொழியில் அமையும்பொழுது நாடு இரு துறைகளிலும் வளர்ச்சியடையும்.

### 4.3 நாட்டின் முன்னேற்றம்

அறிவியலைத் தமிழில் கூறும்பொழுது நாடு பல்வேறு துறைகளில் முன்னேற வழிவகுக்கின்றது. உலக நாடுகளில் கண்டுபிடிக்கப்படும் புதுமைகளைத் தமிழ்ப்படுத்தும்பொழுது நாடு அப் பயன்களை அடைந்து தொழில்துறையில் முன்னேற வாய்ப்பாகும். கணிப்பொறியின் மூலம் இன்று அடையும் நன்மைகள் ஏராளம். அதனைப் பற்றிய செய்தி தமிழிலும் இடம்பெறும் பொழுது எல்லாத் துறைகளிலும் விரைவான முன்னேற்றத்தை எட்ட இயலும்.

## 5. முடிவுகள்

*1.* இன்றைய உலகம் அறிவியல் உலகமாக அமைவதால் தமிழில் அறிவியலை எடுத்தியம்ப வேண்டியது கட்டாயமாகும். தமிழர்கள் அறிவியல் உணர்வு பெற வேண்டுமானால் தமிழில் அறிவியல் இடம் பெற வேண்டும்.

*2.* அரசும், தனியார் நிறுவனங்களும் அறிவியல் தமிழுக்கான ஆக்கத்தை நல்கி அறிவியலைத் தமிழ்ப்படுத்த முன்னுரிமைகள் அளிக்க வேண்டும்.

*3.* இன்றைய நிலையில் அறிவியல் முன்னேற்றம் நாட்டின் வளத்தைப் பெருக்கும். எனவே, தமிழில் அறிவியல் என்பது நாட்டின் இன்றைய அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகக் கருதப்பட வேண்டும்.

---

### துணைநூற் பட்டியல்

குழந்தைசாமி, வா. செ. அறிவியல் தமிழ், சென்னை பாரதி பதிப்பகம், 1985

சரவணன், ச. அறிவியல் தமிழ், களஞ்சியம், சென்னை 1989

சுந்தரம், இராம. "தமிழ் வளர்ச்சி கலைச் சொல்லாக்கப் பணி" தமிழ்க்கலை 1984

சுப்புரெட்டியார், ந. அறிவியல் தமிழ், திருப்பதி செந்தில்குமரன் பதிப்பகம் - 1976.

சேதுமணிமணியன் மொழிபெயர்ப்பியல் கோட் பாடுகளும் உத்திகளும், மதுரை செண்பகம் வெளியீடு, 1990

பத்மநாபன், டி."தமிழில் அறிவியல் வளர்ச்சி", தினமணி 17.2.1988.

செல்வி சௌ. கீதா

ஆய்வு மாணவி, தமிழ்த்துறை,

காந்திகிராமம், கிராமியப் பல்கலைக்கழகம்,

காந்தி கிராமம் - *624 302.*

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- பாவேந்தர் பாரதிதாசன்

**RAMAN & RAMAN PRIVATE LTD.,** Dealers for Mahindra Tractors and Farm Implements, Kumbakonan.

# தமிழும் அறிவியலும்

செல்வி ம. கண்ணம்மாள்

### 1. முன்னுரை

இன்று அறிவியலின் வளர்ச்சி அளவிடற்கரியதாய் உள்ளது. இன்றைய அறிவியல் உலகில் நாள்தோறும் புதுப்புது கருத்துகள் தோன்றிவருகின்றன. அறிவியலின் பங்கு இல்லாத செயலே நம் அன்றாட வாழ்வில் இல்லை என்கின்ற அளவில், அறிவியலின் தாக்கம் தமிழிலும், தமிழர்களிடையேயும் காணப்படுவது இயல்பேயாகும். தமிழின் மூலம் அறிவியல் கருத்துகளைப் பரப்புவதில் பல அறிவியல் மன்றங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு அமைப்புகள் பல முயன்று வருகின்றன. இன்று மட்டுமன்று; தொன்றுதொட்டே தமிழ் மரபில் அறிவியல் சிந்தனைக்கு இடமிருந்ததென்பதையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

### 1.1 அறிவியல் வரைவிலக்கணம்

முயற்சியை வளர்த்து மனிதனைச் சிந்தனைக்கும், செயலுக்கு, தூண்டுவதாய் அறிவியல் அமைந்துள்ளது. அறிவு + இயல் = அறிவியல்; அஃதாவது அறிவினது இயல்பு; அறிவான் இயல்வது எனப் பலவாறாக இத்தொடர் பொருள் தரும். `Scientia' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து `Science' என்ற ஆங்கிலச் சொல் உருவாயிற்று. இதன் பொருள் 'கற்றல்' அல்லது 'அறிவு' என்பதாகும். இயற்கை பற்றிய உண்மைகளையும் முறைகளையும் ஒழுங்குபடுத்தி ஆய்வது அறிவியல். தவிர, அறிவியலின் பிறப்புநிலை பற்றி, ''இயற்கையின் விந்தைகளை, அற்புதப் படைப்புகளைக் கண்ட மனிதர் அவை ஏன்? எதற்காக? எப்படி ஏற்படுகின்றன? எனச் சிந்திக்கத் தலைப்பட்டனர்; சிந்தித்த உள்ளங்கள் செயலாற்றும் திறனைப் பெற்று அயராத ஆராய்ச்சியில் ஈடுபட்டன. இவற்றின் விளைவாகப் பிறந்தது அறிவியலாகும்" என இலக்குமணன் (தமிழ்வழி அறிவியல் பரப்பல் முறைகளும், உத்திகளும் 1989-பக்:69) குறிப்பிடுகின்றார். தர்க்கமுறை, அறிவியல் முறை, அமைப்பு முறை என மூன்று நிலைகளில் அறிவியல் வளர்ச்சியடைந்துள்ளது. அறிவியல் முறை (Scientific Method) என்னும் வழிநிலையை உலகுக்கு அளித்தவர் 'கலிலியோ' என்றும், அறிவியல் முறையின் தந்தையாகக் கலிலியோவைக் கருதலாம் என்றும் வா. செ. குழந்தைசாமி (அறிவியல் தமிழ் - ப. 36) கூறுகின்றார். அனுமானங்களற்ற, நெறிமுறைக்கு உட்படுத்தப்பட்ட ஆய்வுக்குப் பயன்படும் துறையாக அறிவியலை நரேந்திரன் (அறிவியல் வளர்ந்த

பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே.

- பாவேந்தர் பாரதிதாசன்

**THE KUMBAKONAM CYCLE DEALERS ASSOCIATION,** Kumbakonam - 612 001.

கதை 1988 - ப. 182) கருதுகின்றார். அறிவியல் துறை, உலகப் போரினாலும், இங்கிலாந்தில் தொடங்கிய தொழிற் புரட்சியினாலும் ஊக்கம் பெற்றுத் தற்காலத்தில் விரிந்து பரந்து வளர்ந்துவருகிறது.

## 2. தமிழ்மரபில் அறிவியல்

அறிவியல் தமிழாக்கம் தமிழர்தம் கடமை என்ற நிலையிலிருந்து தமிழறிஞர்தம் கடமையாகக் குறுகிவிட்டது. தமிழறிஞர், அறிவியல் தமிழறிஞர் ஆனால்தான் அறிவியல் தமிழ் இலக்கணத்தில் புதிய வரைமுறையை உருவாக்க முடியும். தமிழ் மரபிலக்கணத்தை அறிவியல் தமிழோடு ஒப்புநோக்கி உணர்த்தும் அமைப்பு முதலிலேயே அமைந்து வந்துள்ளது. தற்கால அறிவியல் சொல்லாக்கத்தை மரபிலக் கணத்தோடு பொருத்திக் காட்டலாம். இதனால் மரபிலக்கணம் தற்காலத்திற்கும் பயன்படுவதோடு, பல புதிய கோட்பாடுகளை உருவாக்கவும் வழிகாட்டுகின்றது. உதாரணமாக, "வானத்தில் ஊர்வதற்கு வானூர்தி என்று பெயரிட்டோர் தரையில் ஊர்வதற்குரிய சைக்கிளுக்குத் தரையூர்தி என்று ஏன் பெயரிடவில்லை? வானில் ஊர்வதும், தரையில் ஊர்வதும் ஊர்திதானே" என்ற ஐயம் எழும்போது மரபிலக்கணத்தில் வரும் நூற்பாவைக் கொண்டு இவற்றை விளக்கலாம்.

"ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபு வேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்"
- தொல். சொல். 47

என்பதால், வெளிப்பார்வைக்கு விமானத்தின் ஊர்தல் தன்மை தலைமையையும், சைக்கிளில் மிதித்தல் தன்மை தலைமையையும் பெற்றதால் இவை இவ்வாறு பெயர் பெற்றன எனலாம்.

இது போன்றே, அறிவியலில் துறைச் சொற் சேர்க்கைக்கான விதியையும் மரபிலக்கணத்தால் அறிய முடியும்.

"சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்"
- தொல். சொல். 39

என்ற நூற்பாவில் வாய், மின்வாய், எதிர்மின்வாய் என்பதை அறிவியல் சான்றோடு சிறப்புப் பெயருக்கும், இயற்பெருக்கும் இடையே உள்ள இடைவெளி எப்படி உணர்த்தப்படவேண்டும் என்பது அறிவியல் தமிழில் மரபிலக்கணத்தில் உணர்த்தப்பட்டிருக்கிறது எனலாம்.

இவ்வாறு, அறிவியல் கருத்து, சொல், தொடர்முறைக்கேற்ப மரபிலக்கணத்தில் குறிக்கப் பட்டுள்ள. அந்த அமைப்புகளைக் கொண்டு அறிவியல் கருத்துகளை இணைப்பதன் மூலம் தமிழ்மரபில் அறிவியல் வளர வழிவகுக்கும் எனலாம்.

### 2.1 சங்க இலக்கியம்

தற்கால விஞ்ஞானத்தை உருவாக்கியவர்கள் பொருள்களைக் கூர்ந்து நோக்குதல், அளப்பரிய பொறுமை காட்டுதல், கருதுகோள்களை வகுப்பதில் அஞ்சாமைத் திறன் போன்ற பண்புகளைக் கொண்டிருந்தனர். இப் பண்புகள் பழந்தமிழ் அறிவியலாளரிடமும் அமைந்திருந்தன என்பதற்குச் சங்க நூல்களில் சான்றுகள் உள்ளன.

"இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத்து அகலமும்
. . . . .
. . . . .
அவைஅளந்து அறியினும்" - புறம் - 20

"செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
. . . . . . .
. . . . . . .
சென்று அளந்து அறிந்தோர் போல" - புறம் - 30

என்று,

இப் பாடல்களில் காணும் "அளந்து அறியினும்", "சென்று அளந்து அறிந்தோர் போல" என்னும் தொடர்கள் அறிவியலார் பார்வைக்கேற்பச் சங்க நூல்களில் அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

இன்றைய விஞ்ஞானிகள் இயற்பியல் நோக்கில் (Physical Science) இந்த உலகத்தைப் பற்றிய ஒரு கொள்கையை உருவாக்கினர். இவ்வுலகம் அசைவின்றி நிலைத்து நிற்பது, இயங்காதது என்பது அவர்கள் முடிவு. இதே கருத்து, சங்க நூல்களில் 'இயங்காவையம்' என்ற தொடர்மூலம் உணர்த்தப்பட்டுள்ளது எனலாம்.

இன்றைய விஞ்ஞானிகள் இயற்பியலுக்கு அடுத்த நிலையில் உயிரியலைக் (Biology) கருதுகின்றனர். மருத்துவத் துறையும் உயிரியலில் அடங்கும். ஆதலின் மருத்துவத்தைப் பற்றிய ஒரு கருத்து, சங்க நூல்களில் காணப்படுகின்றது. இக்கால உயிர்வேதியியலார், உயிர் என்பது இயக்கம் என்பர். அவ்வியக்கத்தாலே உடம்பு பயன்படுகிறது என்பர். இதனை,

"யாக்கைக்கு உயிர்இயைந் தன்ன நட்பின்" - அகம் - 339
"அரிதுபுணர் இன்உயிர்" - நற். - 245

இப் பல்கலைக்கழகக் கல்வி என்பது நீங்கள் துய்த்து மகிழும் ஒரு பேறு.
அதற்காக நீங்கள் சார்ந்துள்ள சமுதாயத்திற்கு ஆழ்ந்த கடப்பாடுடையீர்!
- பேறிஞர் அண்ணா

**SRI KARPAGA VILAS PATHIRA MALIGAI**, 131, Big Street, Kumbakonam - 612 001. Phone : 22167

என்ற சங்க நூற் பாடல்களில் வரும் தொடர்களின் மூலம் அறிய முடிகிறது. மேலும், உடம்பு செம்மையாக இருப்பின் உயிர் என்னும் இயக்கம் நன்கு நடைபெறும் என்பதற்கும் செம்மையுடைய உடம்பிலே செலுத்தப்படும் மருந்து நன்கு செயல்படும் என்பதற்கும் சங்கநூற் சான்று ஒன்று உள்ளது.

> "திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
> மருந்துபோல் மருந்தாகி மனன்உவப்ப" - பா. கலி. : 16

அடுத்ததாக, மருத்துவத் துறையில் உடம்புக்கு ஒவ்வாமை (Allergy) பற்றிக் கூறப்படுகிறது. இது பற்றிய செய்தி ஒன்றினைத் தமிழ் இலக்கியத்தில் காணலாம். கொக்குகள் மீன்களைப் பற்றி உண்ண, அந்த மீன் நாற்றம் ஒவ்வாமல் மந்திகள் தும்முகின்றன என்பதை,

> ———————— "கொக்கினம்
> மீன் முடை நாற்றம் தாங்கல் செல்லாது
> துய்த்தலை மந்தி தும்மும்" – நற். 326

என்ற வரிகளால் அறியலாம்.

இவ்வாறாக, சங்க இலக்கியங்களில் பல அறிவியல் சிந்தனைக் கருத்துகள் அமைந்திருந்தன என்பதனை அறிய முடிகிறது.

## 2.2 பிற்கால இலக்கியங்கள்

பிற்கால இலக்கியங்களிலும் அறிவியல் சிந்தனைக் கருத்துகள் காணப்படுகின்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறிவியல் தர்க்கச் சிந்தனைகள் காணப் படுகின்றன. அறிவியல் தத்துவங்களைத் தர்க்க முறையில் நிறுவுகிற முயற்சி மணிமேகலையில் உள்ள 'சமயக் கணக்கர் தம்திறம் கேட்ட காதை'யின் மூலம் அறிய முடிகிறது. நீலகேசி முதலிய பழைய காப்பியங்களிலும் அறிவியல் தத்துவச் சிந்தனைகள் வெளியிடப்பட்டுள்ளன. சமய நூல்களிலும், பாசுரங்கள், காப்பியங்களிலும்கூட அறிவியல் சிந்தனைத் தாக்கத்தைக் காணமுடியும்.

இவை தவிர சைவ சித்தாந்தத்தின் மூலம் தாவரங்களுக்கு உயிர் உண்டு என்ற அடிப்படையான கருத்தினை அறிய முடிகிறது. மேலும் சித்தர்கள் காலத்தில் தமிழ்நாட்டில் சித்த மருந்துச் செய்திகள் மிகையாக விளங்கின. சித்தர்கள் ரசவாதிகளாகவும் விளங்கினர்.

இவ்வாறு பிற்கால இலக்கியங்கள், காப்பியங்கள், பாடல்கள் வாயிலாக அறிவியல் சிந்தனைகள் தாக்கத்தை அறிய முடிகிறது.

## 3. அறிவியல் தமிழ்

'அறிவியல் தமிழ்' என்பது இன்றைய காலத்தின் கட்டாயமாக உள்ளது. அதோடு எம்மொழியும் அறிவியலைக் கையாளத்தக்கதாக இருப்பதனால் அறிமுகமான துறையாக அறிவியல் தமிழ் அமைந்துள்ளது. "தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட பின் எழும் சில சிக்கல்களைக் களைந்து பயிலும் கலையில் ஒரு வரன்முறையை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு முயற்சியின் விளைவே அறிவியல் தமிழ்" எனச் சி. கண்ணபிரான் (அறிவியல் தமிழுக்குப் பத்திரிகைகளின் பங்கு - 1987 - ப. 39) குறிப்பிடுகின்றார். அறிவியல் துறையின் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு தனி நடை, அமைப்பு, மரபு உண்டு. எனவே, ஒரு மொழி, அறிவியலைப் பயன்படுத்த வேண்டுமெனில், அம்மொழி அறிவியலின் தரத்திற்கேற்ப உயர வேண்டும். எல்லா மொழிகளும் காலத்திற்குக் காலம் தன் நிலையிலிருந்து மாறுதல் பெற்றுள்ளது. பழமையான தமிழ் மொழிக்குப் புதுமையான சில சிறப்புகளைச் செய்யும் பொழுது அந்த மொழியைப் பேசும் மக்களின் அறிவும் சிந்தனையும் விரிவடைகின்றன. எனவே, ஒரு மொழியின் மாற்றம் அம் மொழியின் வாழ்விற்கும், வளத்திற்கும் உறுதுணையாக நிற்கும். இன்றைய உலகில் அறிவியல் தமிழ்த்துறை வளம் பெறத் திட்டங்களை முறையாக வகுத்துத் தேவையான மாறுதல்களைச் செய்வது நலம்.

## 3.1 தமிழில் உலகளாவிய அளவில் அறிவியலைக் கொணரும் முயற்சிகள்

இன்றைய சூழலில் புதிய கண்டுபிடிப்புகளையும், பல அறிவியல் உண்மைகளையும், அனைவரும் அறிந்து அறியாமையைப் போக்கிக்கொள்ளும் வகையில் அறிவியல் தமிழ் உதவுகிறது; இவை தவிரப் பல நன்மைகளை மக்களுக்குக் கிடைக்க வழிவகுக்கிறது எனலாம். இவ்வாறாக, பல சிறப்புகளைப் பெற்றுள்ள அறிவியல் கருத்துகள் தமிழில் உலகளாவிய நிலையில் வெற்றிபெறச் சில வழிமுறைகள் தேவைப்படுகின்றன.

## 3.2 பல்கலைக்கழகங்கள்

கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்கள் அறிவியல் தமிழில் கருத்தரங்குகள், கலந்துரையாடல், பட்டிமன்றம் போன்றவற்றை நடத்தி, மாணவர்களை ஊக்கமூட்ட வேண்டும். அறிவியல் குழு ஒன்றின் மூலமாக உலகில் அறிவியலின் விரைவான வளர்ச்சிக்கேற்ப அதன் கண்டுபிடிப்பு, அடிப்படைக் கருத்துகளைத் தமிழில் தர வேண்டும்.

## 3.3 மக்கள் தொடர்பு சாதனங்கள்

மக்கள் தகவல் தொடர்பு துறை இப்போது மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகிறது. அதற்குக் காரணம் அந்தத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மட்டுமன்று; அந்தத் துறையைப் பயன்படுத்தும் பொதுமக்களின் எண்ணிக்கை

செயற்கரிய செய்வார் பெரியர்.
- திருக்குறள் : 26

**JAIN ASSOCIATION**, Kumbakonam

பெருகியுள்ளதும் ஆகும். இத்துறையின் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் தமிழ்வழி அறிவியல் நிகழ்ச்சிகளை மிகுவிப்பதன் வாயிலாக அறிவியல் தமிழைப் பாமரர்களிடையேயும் புகுத்த முடியும்.

### 3.4 அறிவியல் தமிழ்க் கல்வி விரிவாக்கம்

அறிவியல் தமிழ் வளரப் பல்வேறு வழிகள் இருப்பினும் கல்வி முறையில் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். அறிவியல் தமிழ்த்துறை சிறப்பாக வளர வழி காட்டுவதாக இஃது அமைகின்றது. அறிவியல் துறைகளுக்கான நூல்களைத் தமிழில் உருவாக்குவதில் மொழிபெயர்ப்பு பெருந்துணை புரிகின்றது.

### 3.5 அறிவியல் தமிழ்நூல் வளர்ச்சிக்கு ஆற்ற வேண்டியவை

புதிதாகத் தோன்றும் அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு ஓர் அறிவியல் மையம் இன்றியமையாததாக அமைகின்றது. இந்தோநேஷியா, இஸ்ரேல், சோவியத் யூனியன் முதலிய நாடுகளில் மொழிபெயர்ப்பு மையங்கள் இந்தப் பணிக்காகச் செயல்படுகின்றன. இந்தியாவில் அறிவியல் வளர்ச்சிக்கெனக் கேரளாவில் ஓர் ஆய்வு மையம் அமைந்துள்ளது. இதைப்போல் தமிழகத்தில் ஓர் அமைப்பு இல்லையாதலால் அறிவியல் நூல் வெளியீட்டுப் பணி குறைந்துவிட்டது எனலாம்.

### 3.6 கலைச் சொல்லாக்கம்

''கலைச் சொல்லாக்கம்' அறிவியல் தமிழ் வளர்ச்சியில் பெரும் இடையூறாகக் கருதப்படுகின்றது. இத்துறையில் தனிக்கவனம் செலுத்தி இன்றியமையாத சில வழிமுறைகளை அமைப்பது அவசியமாகிறது. கலைச் சொல் என்பது `Technical Term' என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். கலைச்சொல் என்பதற்கு, 'அறிவியல், கணிதம், மருத்துவம், பொறியியல், சமயம், தத்துவம் போன்ற துறைகளிலும் பல கூறுகளில் அமைந்துள்ள சொற்களை வேறு சொற்களால் புலப்படுத்தும் தன்மை வாய்ந்த சொற்களைக் கலைச் சொல்' என ஆதிநாராயணன் (கலைச்சொல் கோட்பாடுகள், ப. 9) வரையறை செய்கின்றார். இச்சிறப்பு மிக்க கலைச்சொல்லின் மூலமாகச் செய்தித் தொடர்பினை மேம்படுத்த முடியும். தமிழிலும் அறிவியலின் பல புதுமைகளை எடுத்துக்காட்டக் கலைச் சொல்லாக்கம் அவசியமாகிறது.

மேற்கூறிய வழிகளில் உலகளாவிய அளவில் அறிவியல் தமிழை வளர்க்க முடியும்.

### 4. கணிப்பொறி வழியில் தமிழ்

இன்றைய உலகில் அறிவியல் தொழில்நுட்பம் பெரும் மாற்றத்தை நோக்கி வளர்ச்சி பெற்று நகர்ந்து கொண்டிருக்கிறது. இத்தகைய அறிவியல் மாற்றத்தில் மின்னணுக் கருவிகளின் வளர்ச்சியில் உச்சநிலையாகக் 'கம்ப்யூட்டர்' (Computer) என்னும் கணிப்பொறி திகழ்ந்து கொண்டிருக்கிறது.

### 4.1 கணிப்பொறி - ஓர் அறிமுகம்

கம்ப்யூட்டர் எனப்படும் கணிப்பொறி ஒரு மின்னணுக் கருவியாகும். "மனிதர்களால் உரிய முறையில் கட்டளையிடும்பொழுது ஒரு பணியைத் திரும்பத் திரும்ப அலுப்பின்றி, சோர்வின்றிச் செய்யக்கூடிய ஓர் ஆற்றல் வாய்ந்த மனிதனின் அடிமை'' என க. அன்பழகன் (கணிப்பொறிச் சொல்லாய்வின் அமைப்பும் - அதன் பயன்பாடும் - தமிழ்ப்பொழில் - கட்டுரை : துணர். 66-1992) வரையறுத்துக் கூறுகிறார். இக் கணிப்பொறி பல்வேறு சூழல்களில் பல மாற்றங்களைக் கொண்டு இயங்கி வளர்ந்து வந்துள்ளது.

### 4.2 தமிழில் கணிப்பொறியின் பங்கு

தமிழில் எழுதும் ஆய்வேடுகளையும், ஆய்வறிக்கை களையும் கணிப்பொறியில் உள்ள சொல்லாய்வி என்ற அமைப்பின் மூலம் அச்சிட முடியும். ஆய்வாளர்கள் ஆய்வறிக்கைகளை ஒரே தடவையில் முதல் முயற்சியிலேயே தாம் விரும்பிய வண்ணம் நிறைவேற்ற முடிவதில்லை. திரும்பத் திரும்பப் படிக்கும்பொழுது புதிய புதிய செய்திகள் தோன்றுகின்றன. சில சொற்களை மாற்றவும், குறைக்கவும் தோன்றுகின்றன. இப்பணி கணிப்பொறிச் சொல்லாய்வி அமைப்பின் மூலம் சிக்கல் இல்லாமல் அமையும்.

ஓர் ஆய்வுக் கட்டுரையில் அடிக்கடி பயன்படுத்தும் ஒரு சொல் அல்லது சில சொற்களைக் கணிப்பொறியில் ஓர் எழுத்துக் குறியீட்டின் மூலம் வாய்பாடு செய்யலாம். குறிப்பிட்ட வார்த்தை வரும் இடங்களில் அந்தக் குறியீட்டை அழுத்தினால் போதுமானது. மேலும், ஆய்விற்கெனச் சேகரித்த தரவுகளை அட்டைகளில் எழுதி வரிசைப்படுத்தவும் கணிப்பொறி உதவுகிறது.

எழுத்து பெயர்ப்பு (Transliteration) மொழிபெயர்ப்பு (Translation) முதலியவற்றில் கணிப்பொறி நன்கு முன்னேறியுள்ளது. இம்முன்னேற்றம் அறிவியல் தமிழுக்கு ஆக்கம் தருவதாகும்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்.

- திருக்குறள் 72

காளி ரோலிங் ஷெட்டர்ஸ், மெயின் ரோடு, தாராசுரம், கும்பகோணம் - 612 702. தொ. பே. : 21438, 23589

முடிவுரை

தமிழுக்கெனத் தனித்ததோர் அறிவியல் சிந்தனை மரபுண்டெனினும், பிற நாட்டு நல்லறிஞர் தொடர்பால் விளைந்த நன்மைகளையும், தன்னகத்தே கொண்டு காலந்தோறும் அறிவியலோடு தமிழும் ஆக்கம் பெற்று வருகிறது. இப்போக்கை மேன்மேலும் வளர்ப்பது தமிழக அறிவியலார், தமிழறிஞர் தம் கடனாகும்.

## துணைநூற் பட்டியல்


1. அன்பழகன், க., தமிழ்ப்பொழில், துணர். 66, மலர் : 6-1992.
2. ஆதிநாராயணன், சி., கலைச்சொல் கோட்பாடுகள்.
3. இலக்குமணன், இரா., தமிழ்வழி அறிவியல் பரப்பல் முறைகளும் உத்திகளும், 1989.
4. கண்ணபிரான், சி., அறிவியல் தமிழுக்குப் பத்திரிகைகளின் பங்கு.
5. குழந்தைசாமி, வா. செ., அறிவியல் தமிழ், 1985.
6. நரேந்திரன், சு., அறிவியல் வளர்ந்த கதை, 1989.



*செல்வி ம. கண்ணம்மாள்,*
ஆய்வு மாணவி,
அரசர் கல்லூரி,
திருவையாறு-613 204.





பெண்ணுரிமை என்பது ஆணைப் போலவே பெண்ணுக்கும் வீரம், வலிமை, வன்மை, கோபம், ஆளும்திறம் உண்டு என்பதை, ஆண்மக்களும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

\- தந்தை பெரியார்

**RENGA RATHI ENTERPRISES,** 16, K.North St., Kumbakonam - 612 001. Phone : 20320, 22361

13



**எம். ஆரோக்கியராஜ்,**
நான்காம் ஆண்டு, வண்ணக்கலை,
அரசினர் கலைத் தொழிற் கல்லூரி,
கும்பகோணம்.

# இனி ஒரு விதி செய்வோம்

செல்வன் போ. மணிவண்ணன்

ஆயிரம் இருந்தும் - வாழ்க்கைப்
பாயிரங்கள் பாடப்படவில்லை . . .

நன்செய்கள் களவாடப்பட்டதால்
நாடெங்கும் பசியின் ரேகைகள் . . .

பூர்த்தியாகாத காலியிடங்கள்
வறியவர்களின் வயிறுகள் . . .

தரைக்கட்டிலில் சருகுமெத்தையிட்டுப்
புழுதிப்போர்வைக்குள் புழுங்கும் கூட்டம்
கீரைக்காகக் கிலோமீட்டர் ஓட்டம் . . .

லஞ்சங்களின் மஞ்சங்களில்
பணப்பூதங்கள் . . .

நீதியின் நெட்டுயிர் குற்றுயிரானதால்
போலிகள் இலக்கணச் சிறைக்கு வெளியே . . .

கையூட்டுதல்களால் கைநீட்டுதல்கள் - இது
பாரின் பகிரங்கப்பிச்சை . . .

கூவமாகிப்போன கங்கைகள்
சில மங்கைகள் . . .

'மத' நீர் ஒழுகியதால்
தேரோடும் வீதிகள் சேறாகிப்போயின . .

பிணம்சுமக்கும் சாவுப்பாடைகள் - இந்தச்
சமுதாயத்தூண்கள் . . .
சிம்மாசனங்களில்
தந்திரநரிகளின் தாண்டவங்கள் . . .

மனிதனுக்கு மனிதன் சமம். ஒருவனை ஒருவன் சுரண்டக்கூடாது. ஒருவனுக்கு ஒருவன் உதவி செய்யவேண்டும்.

\- தந்தை பெரியார்

**HOTEL RAYA'S,** Three Star Standard Hotel, Head Post Office Road, (Near Mahamaham Tank) Kumbakonam - 612 001. Phone : 22545

விரலில்லாத வழிகாட்டிகள்
நாகரிக மேட்டால்
பண்பாட்டுப் பள்ளங்கள் . . .

அணுக்குண்டு விதைகளால்
விஷ விளைச்சல்கள்
இரத்தநீரால் எல்லைக்கோடுகள் . . .

மிதங்கள் இதங்களில்லையாம்
தீவிரவாதங்களே
ஆருயிர் வேதங்களாம் . . .

நான்கு படைகளால் நாடுகாவல்
ஐந்தாம்படைகளால் ஒற்றுமை ஏலம் . . .

அறிவியல் ராஜ்ஜியங்கள்
அடிப்படை பூஜ்ஜியங்கள் . . .

இனி
அநியாயங்களின் மீது
அவதூறு வழக்குத் தொடர்ந்து
தவறுகளுக்குத் தண்டனை விதித்துக்
குற்றங்களைக் கூண்டிலேற்றுவோம்.

**செல்வன் போ. மணிவண்ணன்,**
அரசு கல்வியியல் கல்லூரி,
*வேலூர்-632 006.*



எல்லார்க்கும் நன்றாம் பணிதல்.
- திருக்குறள் : 125

**SRI TULSI ARTS,** Manufacturers and Wholesalers, 41, New Avadi Road, Kilpauk, Madras. Phone : 610670, 6413505

# தமிழ்ப் பயிற்று மொழிச் சிக்கல்களும் தீர்வுகளும்

செல்வி சே. செந்தமிழ்ப் பாவை

மொழி மனிதனின் விழி போன்றது. மொழி மனித இனத்துக்கே உரிய ஒன்று. பிற உயிரினங்கட்குக் கிட்டாத பேறு மொழியாகும். தொடக்க நிலையில் சைகையே கருத்தை அறிவிக்கும் மொழியாக இருந்தது; பின்னர்ப் பேச்சுமொழி தோன்றிற்று. அதன் பின்னே எழுத்துமொழி தோன்றிற்று.

இன்றைய நிலையில் உலகில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் மக்களால் பேசப்படுகின்றன. மொழியின்றி மனிதன் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உலகத்து வழங்கும் மொழிகள் பலவற்றுள்ளும் உயர் தனிச் செம்மொழிகளாய் விளங்குவன ஒருசிலவே. அவற்றுள் தமிழ்மொழியும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

மொழியின் அடிப்படைப் பயன் கருத்துப் பரிமாற்றமே. மொழியின் பெருமையும், சிறப்பும் அம் மொழியிலுள்ள இலக்கிய இலக்கணங்களான் அமையும். குழந்தை பிறந்து வளர்ந்து பேசத் தொடங்குங்கால் பேசும் மொழியே தாய்மொழி ஆகும். மொழியை முதன் முதலில் கற்பிப்பவள் தாயேயாதலின் மொழியைத் தாயுடன் இணைத்துத் தாய்மொழி என்றனர். குழந்தை பள்ளிக்குச் செல்லும்பொழுது பேசுவது தாய்மொழியிலேயே என்பதும் கருதத்தகும்.

தொடக்கக் கல்வியைத் தாய்மொழியிலேயே பெறுவது முறையும் இயல்பும் ஆகும். தாய் கற்பித்த மொழியிலே பயின்றால்தான் மாணவன் எளிதில் புரிந்து கொள்ள முடியும். அஃதனாற்றான் அறிஞர்கள் பலரும் தாய்மொழியிலேயே தொடக்கக் கல்வி அமைய வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். பயிற்றுமொழி தாய்மொழிதான் என்பது அடிப்படைக் கருத்து.

மனிதன் சிந்தித்துச் செயற்படுபவன்; சிந்தனை வளத்திற்குத் துணைநிற்பது மொழியே. தாய்மொழியில் தெளிவான சிந்தனை இருந்தால்தான் சிறப்பாகச் செயற்பட இயலும். அதற்கு உள்ள ஒரேவழி பயிற்று மொழி தாய்மொழியில் அமைவதுதான்.

### பயிற்றுமொழி - தாய்மொழியே - அறிஞர் கருத்துகள்

1. "கல்வி தாய்மொழியில் கற்பிக்கப்படுதல் வேண்டும்"[1] என்று காந்தியடிகள் 1919ஆம் ஆண்டிலேயே கூறியுள்ளார்.

யாகாவா ராயினும் நாகாக்க.
- திருக்குறள் : 127

ஏ. ஆர்.ஆர். ஸ்பெஷல் சீவல், ஏ.ஆர்.ஆர். சேல்ஸ் ஏஜன்சி, 124, ஏ.ஆர்.ஆர். ரோடு, கும்பகோணம் - 612 001. தொ. பே. : 20020, 20120

2. 1937-ல் கூடிய தேசியக் கல்வி மாநாட்டில் பயிற்று மொழி தாய்மொழியாகவே இருக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.[2]

3. சான் சார்சண்ட் தலைமையில் அமைந்த 'மையக் கல்வி ஆலோசனை சபை' "மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கு வரும்வரை பாடங்களைத் தாய்மொழியில் கற்க வேண்டும்"[3] என்று பரிந்துரை செய்தது.

4. "மாநில மொழிதான் ஆங்கிலத்திற்குப் பதிலாகப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் மொழியாக அமைய வேண்டும்"[4] என்று மைய அமைச்சர் அபுல்கலாம் ஆசாத் தலைமையில் அமைந்த மையக் கல்வி ஆலோசனைக் குழு 1948-ல் பரிந்துரை செய்தது.

5. மாணவர்கள் எளிதில் அறிவு பெறுவதற்கும் தெளிவாக எண்ணுவதற்கும், எண்ணிய கருத்தைத் திண்மையுடன் சொல்வதற்கும் ஏற்றவகையில் பயிற்றுமொழி அமைதல் நன்று. இவ் வடிப்படையில் நோக்குங்கால் தாய்மொழியினால்தான் அது இயலும் என்று கோத்தாரிக் குழு பரிந்துரை செய்துள்ளது.[5]

6. பாரதியார் "தேசியக் கல்வி" என்ற கட்டுரையில் தாய்மொழியிலேயே ஆரம்பக் கல்வி அமைய வேண்டும் என்று வற்புறுத்துவார். "தேச பாஷையே ப்ரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை" [6]

7. "தாய்மொழி வழியிலேயே ஓர் இனம் சிறந்த தெளிவான ஆழமான தன்வயப்பட்ட அறிவைப் பெறமுடியும். இது மறுக்கவோ, மறக்கவோ முடியாத உளநூல் உண்மை. தாய்மொழி வாயிலாகப் பெறும் அறிவு உழுத நிலத்தில் மழை பெய்தது போல; பிற மொழி மூலம் பெறும் அறிவு பாறை நிலத்தில் மழை பெய்தது போல; தாய்மொழி மூலம் பெறும் அறிவு, அளவில் சிறியதாக இருந்தாலும் தன்னியல்பாக சிந்தனையின்வழி மேலும் சிறந்து வாழ வாய்ப்புண்டு. அது ஊற்றுக் கேணி போல"[7] என்று தாய்மொழிவழிக் கல்வியின் இன்றியமையாமையை வற்புறுத்துவர் குன்றக்குடி அடிகளார்.

## பயிற்றுமொழி - இன்றைய நிலை

கல்விக் கூடங்களில் பயிற்றுமொழியாக எது விளங்குகின்றது என்பதை எண்ணிப் பார்ப்போம்.

### அ. தொடக்கக் கல்வி 1 - 5 வகுப்புகள்

கிராமப்புறங்ளைப் பொறுத்தவரை தமிழ்தான் பயிற்றுமொழி. பேரூர்களிலும், நகரங்களிலும் தமிழுடன் ஆங்கிலமும் பயிற்றுமொழியாக விளங்குகிறது.

### ஆ. உயர்நிலைக் கல்வி 6 - 10 வகுப்புகள்

மேற்சுட்டிய நிலைதான்

### இ. மேனிலைக் கல்வி 11 - 12 வகுப்புகள்

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டுமே பயிற்று மொழியாக இருந்தாலும், பெற்றோர்களின்/மாணவர்களின் நாட்டம் ஆங்கிலத்தின் மேல்தான். பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற்படிப்புப் படித்தற்கு ஆங்கிலப் பயிற்றுமொழிதான் பெருந்துணை புரியும் என்ற தவறான நம்பிக்கை உள்ளது.

மேனிலைப் பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்றுமொழிப் பாடங்கட்கு, வகுப்புகட்குப் பெரும் மதிப்பு. ஒரு பள்ளிக்கு ஓரிரு வகுப்புகள்தாம் ஆங்கிலப் பயிற்றுமொழி எனினும் வகுப்பில் மாணவர் எண்ணிக்கை ஒரு நூற்றை எட்டி நிற்கும். ஓர் ஆசிரியர், நூறு மாணவர்கள். கல்வியின் தரம் எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

### ஈ. மேனிலைப் பள்ளி நீங்கலாக

மேனிலைப் பள்ளிகள் நீங்கலாக, மெட்ரிகுலேசன் பள்ளிகளும் நடைபெறுகின்றன. இவற்றில் ஆங்கிலம்தான் பயிற்றுமொழி. தாய்மொழி பயிற்றுமொழியாக இல்லை.

### உ. கல்லூரிக் கல்வி - பட்ட வகுப்புகள்

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பயிற்றுமொழி முதன்மை ஆங்கிலத்திற்குத்தான். அரசு கல்லூரிகளிலும், ஒரு சில தனியார் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்றுமொழியாக விளங்குகிறது. மாணவர்கள் ஆங்கில மொழியில் பயிலுவதை ஒரு பெருமையாக எண்ணுகின்றனர். பயிலும் மொழி ஆங்கிலமாக இருந்தாலும் தேர்வுகளில் விடை எழுதுங்கால் தமிழிலேயே பெரும்பான்மையான மாணவர்கள் எழுதுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஊ. தொழிற்கல்லூரிகளில் பயிற்றுமொழி

பொறியியல், மருத்துவம், வேளாண்மை போன்ற தொழிற்கல்லூரிகளில் ஆங்கிலம்தான் பயிற்றுமொழியாக விளங்குகின்றது.

அரசு, தனியார் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்கள் நீங்கலாக, மைய அரசு, இந்தி பயிற்றுமொழியாக அமைதல் வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தில், நவோதயப் பள்ளிகளை இந்தியாவில், தமிழ்நாடு நீங்கலாக ஒவ்வொரு மாநிலத்திலும் நடத்திவருகின்றது. இதில் பயிற்றுமொழி இந்தி அல்லது ஆங்கிலம்தான்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை.
- திருக்குறள் 137

**SRI DHANALAKSHMI OIL TRADERS,** Kamakshi Josier Street, Kumbakonam

இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் பெறும் சலுகைகள் மிகுதி.

இவை தவிர மைய ஆராய்ச்சி மையங்கள் உள்ள நகரங்களிலும், நடுவண் அரசு அலுவலகங்கள் உள்ள நகரங்களிலும் 'கேந்திரிய வித்யாலயங்கள்' இயங்குகின்றன. இப்பள்ளிகளில் பயிற்றுமொழி ஆங்கிலம் அல்லது இந்தி. இப்பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழி என்பதே கிடையாது. இவையன்றி நகரங்களில் வீதிதோறும் ஆங்கில மொழி பயிற்று மொழியாகக் கற்பிக்கப்பெறும் 'நர்சரிப் பள்ளிகள்' ஏராளம். இவை செல்வம் சேர்த்தலையே அடிப்படை நோக்கமாகக் கொண்டு இயங்குவன.

வெவ்வேறு குழுக்களும், அறிஞர் பெருமக்களும், தாய்மொழிதான் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினாலும், தமிழ்நாட்டில் ஆங்கிலம்தான் முதலிடம் பெறுகின்றது என்பது தெற்றெனப் புலனாகும். தமிழும் பயிற்றுமொழியாக விளங்குகின்றது.

### தமிழ் பயிற்றுமொழியாக உள்ளதால் ஏற்படும் சிக்கல்கள்

தமிழ், பயிற்றுமொழியாக இருப்பதனால்/வைத்தால் சில குறைகள் அதாவது சிக்கல்கள் ஏற்படும் என ஒரு சிலர் கருதுகின்றனர்.

1. அறிவியல், பொறியியல், மருத்துவம் போன்றவற்றைக் கற்க மாணவர்கள் சிரமப்படுகின்றனர். தமிழ்மொழி மூலம் பயிற்றுவிக்கும் கல்லூரிக்கு மாணவர்கள் விரும்பி வரவில்லை என்றும் கூறுகின்றனர்.

இன்ன மொழியில்தான் அறிவியல் வரும் அல்லது வளரும் என்று ஏதேனும் விதி உண்டா? எம்மொழிக்கும் உரியது அறிவியல். மொழிவழிப்பட்ட மக்களின் சிந்தனை, முயற்சி இவற்றை ஒட்டித்தானே மொழி வளர்கிறது; கலை வளர்கிறது; அறிவியல் வளர்கிறது. அவ்வாறு இருக்க, தமிழில் அறிவியல் கற்க முடியாதென்று தமிழ்மீது பழியைச் சுமத்துவது தவறு.

2. அறிவியல், பொறியியல், மருத்துவம் போன்றவற்றைக் கற்பிக்கப் போதிய கருவி நூல்கள், மூல நூல்கள் இல்லை.

3. ஆங்கிலம் உலகமொழி, பிறநாட்டாருடன் தொடர்பு கொள்ள ஆங்கிலமே ஏற்ற மொழி என்பன போன்ற ஒருசில குறைபாடுகளை, சிக்கல்களைச் சுட்டுகின்றனர்.

### தமிழ் பயிற்றுமொழியாக இல்லாததனால் ஏற்படும் குறைகள்

தாய்மொழியில், தமிழ்மொழியில் கற்க இயலாத காரணத்தால் பல குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. ஒரு சிலவற்றைக் கீழே காண்போம்:

1. தமிழ் வாயிலாகப் பயிலாத காரணத்தால் மாணவர்களின் அறிவு முழுமை பெறுவதில்லை. ஆங்கிலத்தில் பயிலுவதால் எளிதில் புரிந்துகொள்ள இயலவில்லை.

2. தமிழ்மொழியிற் பயிலாததனால் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் இல்லாமற் போய்விடுகின்றது. ஒரு சிலர்தாம், திறம்பட விளங்குகின்றனரேயன்றிப் பலர் சிந்தனைக் குறையுடைவர்களாகவே விளங்குகின்றனர்.

3. தமிழிலும் முழுத் திறமையில்லை; பிழைபட எழுதுகின்றனர். ஆங்கிலத்திலும் பிழைபட எழுதுகின்றனர்.

4. பொறியியல், மருத்துவம், அறிவியல் போன்றவற்றை ஆங்கிலம் வாயிலாகத்தான் கற்க வேண்டும் என்று கூறுவது அறிவுடைமையாகாது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், சப்பான் அறிவியல் துறையில் உலக நாடுகளிடையே முன்னணியில் நிற்கின்றது. சப்பானில் கல்விக்கூடங்களில் பயிற்றுமொழி ஆங்கிலமன்று, சப்பான் மொழிதான். உருசியா, அறிவியல் துறையில் முன்னேறி உள்ளது. உருசியாவில் பொறியியல், மருத்துவப் பாடங்களை உருசியமொழி வாயிலாகவே மாணவர்கள் கற்கின்றனர். பயிற்றுமொழி தாய்மொழியே.

பிரான்சு நாடும் மருத்துவம், பொறியியல், அறிவியல் துறைகளில் முன்னணியில் உள்ளது. அங்கும் பயிற்றுமொழி பிரெஞ்சுதான்.

இலங்கையில் மருத்துவம், பொறியியல் போன்றவற்றைத் தமிழ்மொழி வாயிலாகவே கற்பிக்கின்றனர்.

சப்பான், உருசியா, பிரான்சு நாடுகள் ஆங்கில மொழிவழிப் பயிற்றுவிக்காமலேயே முன்னேறியுள்ளன.

### சிக்கலைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகள்

தமிழ் பயிற்றுமொழியாக அமைப்பதனால் ஏற்படும் சிக்கல்கள் என்று சிலர் சுட்டக் கூடியன களைதற்குரியனவே.

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவ தில்லை - அவை
சொல்லுந் திறமையும் தமிழ்மொழிக் கில்லை" [8]

எனும் பெரும் பழியைத் துடைத்திடல் வேண்டும் என்ற தீர்க்கதரிசியின் கூற்றுக்கு இதோ தீர்வுகள்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்.
- திருக்குறள்: 138

**ORIENTAL GROUP OF COMPANIES,** 2889, Srinivasam Pillai Road, Thanjavur - 613 001. Phone : 24724, 21467

1. மொழி மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. மொழியின் வளர்ச்சிக்கும், ஆக்கத்திற்கும் ஏற்புடைய வற்றைச் செய்ய வேண்டியது மாநில அரசின் கடமையும் பொறுப்பும் ஆகும். அந்த நிலையில் மாநில அரசு 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை தாய்மொழி வாயிலாகப் பாடங்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்று சட்டம் இயற்றி அதனைச் செயற்படுத்த வேண்டும். ஆங்கில மொழி வழியுள்ள பள்ளிகள் அனைத்தையும் மூடிவிடவேண்டும் அதற்குத் தக்க அரசு ஆணைகள் மட்டும் போதா. அவற்றைச் செயற்படுத்தவும் வேண்டும்.

2. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிற்று மொழியாகத் தமிழ் மட்டுமே அமையவேண்டும். ஆங்கிலம் பயிற்றுமொழியாக அமைதல் கூடாது; ஆங்கிலம் இணைப்பு மொழியாக மட்டுமே இருக்க வேண்டும்.

3. அறிவியல் பாடங்களைப் பயிற்றுவிப்பதற்குக் கருவி நூல்கள், மூல நூல்கள் இல்லை என்றால் அவற்றை உருவாக்க அரசு ஆவன செய்ய வேண்டும். பல ஆண்டுகட்கு முன்னரே பாரதியார் இதற்குரிய வழிமுறைகளைக் கூறிச் சென்றுள்ளார்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்"

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்"

என்பன அவை.

மொழிபெயர்க்கும் நிலையங்கள் பல தோற்றுவிக்கப்படல் வேண்டும். மொழிபெயர்ப்பில் ஈடுபடும் அறிஞர்கட்கு அரசு ஊக்கம் அளித்திட வேண்டும்.

### 4. கலைச் சொல்லாக்கம்

1. புத்தம் புதிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டும். கலைச்சொல்லை உருவாக்குவதில் அறிவியல் இதழ் வெளியீடுகளும், புத்தக நிறுவனங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. இதில் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள கலைக்களஞ்சியம் பத்துத் தொகுதிகளும், தென்மொழிகள் புத்தக நிறுவனமும், கலைக்கதிர், யுனெஸ்கோ கூரியர் திங்களிதழ்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

2. தமிழ் உட்பட 34 உலக மொழிகளில் வெளிவரும் அறிவியல் கட்டுரைகளை உடனுக்குடன் மொழிபெயர்த்து ''யுனெஸ்கோ . கூரியர்'' என்ற திங்களேட்டில் வெளியிடுகின்றனர். தமிழ் வளர்ச்சிக் கழகம் பத்துத் தொகுதிகளில் கலைக்களஞ்சியத்தைத் தொகுத்து வெளியிட்டது. இக் கலைக்களஞ்சியங்களைச் சில ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது சிறப்பாகப் புதுப்பிப்பதற்கு அரசு உதவிட வேண்டும்.

3. கல்லூரிகளில் அறிவியல் பாடங்கள் நடத்துகின்றபொழுது இயன்றவரையில் தமிழ்ப் பெயர்களைப் பயன்படுத்தித் தமிழிலேயே நடத்த வேண்டும். இதனால் மாணவர்களுக்கு வகுப்பறையின் மீதுள்ள வெறுப்பைப் போக்கலாம். ஆரம்பநிலையில் சொற்கள் புரியாவிட்டாலும் நாளடைவில் எளிதாகிவிடும்.

4. ஆங்கிலத்தில் பயிற்றுவிப்பவர்களுக்கு அல்லது தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கும் ஆசிரியப் பெருமக்களுக்குப் பணியிடைப் பயிற்சி தருதல் வேண்டும்.

5. தமிழ்மொழி வாயிலாகப் படித்துப் பட்டம் பெற்ற மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதியளிக்கப்பட வேண்டும். ஆங்கிலம் போன்ற பிற மொழிகளின் வாயிலாகப் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு இரண்டாவது நிலையளித்து, தமிழ் வாயிலாகப் படித்தோர்க்கே அனைத்துப் பணிகளிலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். தமிழில் என்ன இருக்கிறது என்று கேட்பவர்களுக்கு இது ஒரு பாடமாக அமையும்.

6. தமிழக அரசு இருமொழிக் கொள்கையைப் பின்பற்றுகின்றது. அதில் உறுதியாக இருந்து செயல்பட வேண்டும்.

7. சென்னையில் தனித்தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவி ஓய்வு பெற்ற பேராசிரியர்களைக் கொண்டு மொழி ஆக்கத்திற்கு வழிகோலலாம்.

8. நவோதயப் பள்ளிகளில் தமிழ்மொழியைக் கற்பிப்பதாக இருந்தால்தான், தமிழ்நாட்டில் நவோதயப் பள்ளிகளை ஏற்படுத்துவோம் என்று தமிழக அரசு கூறுவது ஏற்புடையதே. இக் கொள்கையில் உறுதியாக நிற்றல் வேண்டும். தமிழ்நாட்டில் ஒரு பள்ளியில் கற்கும் மாணவன் தமிழ் படிக்கவில்லை என்றால் அதைவிட இழிவானது எதுவுமில்லை.

9. அண்மையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்கு ஒருவர் தம் ஆய்வேட்டைத் தமிழிலேயே எழுதிப் பணித்துள்ளார். ஆய்வுத் தலைப்பு கணிப்பானியல் பற்றியது. கணிப்பானியலையே தமிழில் கற்கும்போது, ஆய்வுப் பட்டம் பெறும்போது, தமிழ் ஏன் பயிற்று மொழியாகப் பல்கலைக்கழகங்களில் இருத்தல் இயலாது?

தினமலர், குமுதம் போன்ற நாள், வார இதழ்கள் கணிப்பானியலைப் பாமரரும் அறியும்படி எளிய தமிழில் வெளியிடுகின்றன.

மறந்தும் பிறன்கேடு சூழற்க.
- திருக்குறள் : 204

**HOTEL VALLI,** Boarding and Lodging with Modern Amenities, 2948, M.K.M. Road, Railway Station (Near), Thanjavur. Phone : 21584

1956ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. பல சட்ட நூல்களையும், பல அறிவியல் நூல்களையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரும், மற்றும் பலரும் வெளியிட்டு வருகின்றனர். இது பயிற்றுமொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்குப் பேருதவி புரிகின்றது.

மத்திய அரசு இந்திமொழி வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் எல்லாத் துறைகளிலும், அதனைப் பரப்புதற்கும் திட்டங்களை வகுத்து, வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்து பாராட்டத்தக்க வகையில் ஆர்வத்துடனும் ஆற்றலுடனும் செயல்படுகின்றது.

கேந்திரிய இந்தி சமிதியின் கூட்டங்களில் பிரதமரும், சில மத்திய அமைச்சர்களும், பல்கலைக்கழகத் துணைவேந்தர்களும், இதர சிறந்த அங்கத்தினர்களும் திட்டங்களை வகுப்பதில் ஆர்வத்துடனும் ஆற்றலுடனும் பணிபுரிகிறார்கள்.

''எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்'' என்ற கோட்பாட்டைச் செயல்படுத்த முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவைத் தமிழ்நாட்டிலும் அமைக்க வேண்டும்.

இன்று தமிழ்மொழி பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருகிறது. அரசியல் விடுதலையும், அறிவியல் முன்னேற்றமும் தமிழின் வளர்ச்சியை விரைவுபடுத்தி உள்ளன. தமிழ் நாளிதழ்களில் ஆங்கிலச் சொற்களும், இதர மொழிச் சொற்களும் பயன்படுத்துவதைத் தவிர்த்து, அதற்கு ஈடான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த அரசு ஆணையிட வேண்டும். எழுத்துத் தமிழின் வளர்ச்சியை இதன்மூலம் சீரமைக்க முடியும். பேச்சுத் தமிழ் வளர்ச்சிக்கு வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படக் காட்சிகள் போன்ற பரவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தலாம்.

தாய்மொழி வழி / தமிழ்மொழிவழிப் பயிலுவதே ஏற்புடையது. ஒருவன் கல்வி அறிவு பெறவும் முழுமை அடையவும் இதுவே பெரிதும் உதவும். அயல்மொழிகளில் கற்கின்றபொழுது முதற்கண் அம் மொழியறிவை உணர்ந்து, பொருளை உணர்ந்த பிறகும் தாய்மொழியிலேயே சிந்திக்க வேண்டியுள்ளது. இதற்குக் காலம், முயற்சி செலவு அதிகமாகின்றது. தாமாகச் சிந்தித்துச் செயல்படத் தமிழே ஏற்றது. தமிழக அரசு நினைத்தால் தமிழைப் பாட மொழியாக்க இயலும். சிலர் குறை கூறலாம். நீதிமன்றத்திற்குக் கூடச் செல்லலாம். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது செயற்பட வேண்டும்.

ஒரு மொழி வளர்ச்சியும் சமயத்தின் வளர்ச்சியும் தனி மனிதனால் வளர்க்க இயலாது. ஒரு சிறு குழுவினால் இயலாது. அரசினால்தான் முடியும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தே ஆங்கிலமொழி பெற்ற ஏற்றமும், கிறித்தவ மதம் பெருகிய விதமும் யாவரும் அறிந்ததே.

தமிழ், பயிற்றுமொழியானால் ஏற்படும் சிக்கல்கள் சிக்கல்களே அல்ல; குறைபாடுகளும் அத்தகையனவே! அரசு நினைத்தால் ஆவன நிகழும்.

---

1. True Education, M.K. Gandhi, pp. 40-41
2. கலைக்களஞ்சியம், தொகுதி 3, ப. 305
3. கலைக்களஞ்சியம், தொகுதி 3, ப. 306
4. Indian Educational Documents since Independance. p.8.
5. Report of the Education Commission (Kothari Commission) p. 13
6. பாரதியார் கட்டுரைகள், தேசியக் கல்வி, ப. 16
7. மொழிவழிச் சிந்தனைகள், ப. 18
8. பாரதியார் கவிதைகள்

செல்வி சே. செந்தமிழ்ப்பாவை,
ஆய்வு மாணவி,
தமிழ்த் துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 623 003.

இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது. மனிதனுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது. நன்மை தீமைகளை எடுத்துக் காட்டுகிறது.

- பேறிஞர் அண்ணா

**PHARM PRODUCTS PRIVATE LIMITED,** "Vijay" Medical College Road, Thanjavur - 613 007. Phone : 21121, 21176

# தமிழ்ப் பயிற்றுமொழி சிக்கல்களும் தீர்வுகளும்

செல்வி அ. மாதவி

"தமிழா பயப்படாதே, ஊர்தோறும்
தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு
ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம்
தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடுசெய்"

- பாரதியார், 'கலைகள்' - ப. 4

தமிழ்நாட்டில் தமிழைப் பயிற்றுமொழியாக அமைத்து ஆண்டுகள் பல ஆனபோதிலும்கூட எதிர்பார்த்த அளவு முழுமையான வளர்ச்சி கிடைத்துள்ளதா என்பது ஐயத்திற்குரியதாகவே உள்ளது. தமிழ்ப் பயிற்றுமொழி என்பது பெயரளவில் இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது. இதில் நடைமுறையில் தென்படும் சிக்கல்கள் பலவாகும். இச் சிக்கல்கள் களையப் பட்டு நிறைவான வகையில் தமிழ்ப் பயிற்றுமொழிக் கல்வி செயற்படுத்தப்படின் தமிழ் உயரும்; தமிழ்நாடு உயரும்; இவற்றை விடவும் 'தமிழர்' உயர்வர். எனவே, தமிழைப் பயிற்றுமொழியாக நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் இவ் வெழுத்துரை எடுத்துக்காட்ட முனைகிறது.

## நோக்கம்

கல்விமொழி எந்தமொழியாக அமைகின்றதோ அந்த மொழியே இன்று மக்களால் பெரிதும் போற்றப்படும் மொழியாயமைகிறது. இப்போக்கு வேறெங்கும் இல்லாதவகையில் தமிழகத்தில் சிறப்புப்பெற்று நிற்கின்றது. கல்வியில் தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு முதன்மை அளிப்பதால் மட்டுமே தமிழகம் இன்று எதிர்நோக்கியுள்ள பல சிக்கல்களுக்குத் தீர்வு காணமுடியும். ஆனால் "தமிழைப் பயிற்று மொழியாக்கினால் அதனால் கிடைக்கும் நன்மைகள் குறைவு; கல்வியில் தரம் இருக்காது; மாணவர்கள் உலகத்தோடு ஒட்ட ஒழுக முடியாது; கிணற்றுத் தவளையாக வாழ நேரிடும்" என்பன போன்ற, செய்திகள் குறைகள் போல முன்வைக்கப்படுகின்றன. ஆனால் தமிழைப் பயிற்றுமொழியாக நடைமுறைப் படுத்தினால் கிடைக்கின்ற நன்மைகள் பலப்பல; அவற்றின் முன் மேற்சுட்டிய தொல்லைகள் மறைந்துபோய்விடும்.

எனவே, இவ் வெழுத்துரை 'தமிழ்ப் பயிற்றுமொழி-சிக்கல்களும், தீர்வுகளும்' எனுந் தலைப்பில் அமைந்து

தமிழ்மொழியைப் பயிலுவதன் மூலமாக அதிலேயுள்ள கருத்துக் கருவூலங்களை
மற்றவர்களுக்கு அளிப்பதற்கு நாம் நம்மை நாமே பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும்.

- பேரறிஞர் அண்ணா

லெக்ஷமி சீவல், சுப்ரமணியம் & கோ, லெக்ஷமி நகர், மருத்துவக் கல்லூரிச் சாலை, தஞ்சாவூர் - 613 007



இ. சக்திவேல்,
கவின்கலை, இளங்கலை, முதலாம் ஆண்டு,
பாரதியார் பல்கலைக் கூடம், பாண்டிச்சேரி.

13 JUN 2011
CHENNAI-600




CONNEMARA PUBLIC LIBRARY
13 JUN 2011
CHENNAI 600 008

பி. ஸ்ரீவெங்கடேசுவரன்
முதுகலை, நாடகவியல், முதலாம் ஆண்டு,
தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப் பள்ளி,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.

பயிற்றுமொழியாகப் பயன்படுத்தும் குழுவில் ஏற்படும் சிக்கல்கள், அவற்றிற்கான தீர்வுகள் ஆகியவற்றை எடுத்துக்கூறி, தமிழ் பயிற்றுமொழியாக அமைய வேண்டிய இன்றியமையாமையைக் கூறுவதை நோக்கமாகக் கொண்டு அமைகின்றது.

### பயிற்றுமொழி

வேளாண்மைச் சமுதாயத்தில் ஓர் அணிகலனாகக் கல்வி இருந்தது. ஆனால், அறிவியல் - தொழில் நுட்ப யுகத்தில் அது பொருளாதாரத் தேவையாக மாறி வருகிறது என்ற கருத்து, கல்வியின் பரிணாம வளர்ச்சியினைச் சுட்டவல்லது. எனவே, இவ்வாறு பயன்பாட்டைக் கொண்ட, அடிப்படையான கூறாக அமையும் கல்வியில் மொழி ஓர் இன்றியமையாத இடம்பெற்று நிற்கின்றது என்பதை மறுத்தற்கில்லை.

"கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக உலகில் உள்ள எந்த நாடும் அயல்மொழியைப் பயிற்றுமொழியாகக் கொள்ளவே இல்லை. அவ்வவர் மொழியே அவ்வவர்க்கு இயற்கையானது; இதயத்தோடு இயைந்தது; உயிரோடு ஒட்டியது. மொழியின் நெளிவு சுழிவுகளெல்லாம் அவரவர் மொழியிலேதான் இதயத்தைச் சென்று பற்ற வல்லன. சிந்தனைத் திறன், அறிவின் முதிர்ச்சி, செயற்பாட்டுத் திறன் அனைத்திற்கும் அடிப்படையாகத் தாய்மொழி அமைகிறது. எனவேதான், வடகொரியா, தென்கொரியா, வியட்நாம், தாய்லாந்து, மலேசியா போன்ற வளரும் நாடுகள் தத்தம் தாய்மொழியையே பயிற்றுமொழியாகக் கொண்டிருக்கின்றன"[1] என்னும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

இம் மொழிகளோடு ஒப்பிடுகையில் தமிழ், சொல்வளத்திலும் இலக்கண வரம்பிலும் சிறந்து ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்றமொழியாய், சங்கத் தமிழாய் - சமய மொழியாய் - புத்திலக்கியத் தமிழாய் - வெவ்வேறு உருவுகளைப் பெற்றிலங்குகிறது. வைதிக சமயமாகட்டும் அதனை எதிர்க்க எழுந்த சமண, புத்த சமயங்களாகட்டும், நீண்ட தொலைவிலிருந்து வந்த கிறித்தவ, இசுலாம் சமயங்களாகட்டும் அவ்வவற்றிற்குத் தகத் தமிழ் ஈடுகொடுத்து வளர்ந்து வந்துள்ளது. எனவே, தமிழைப் பயிற்றுமொழியாக அனைத்திலும் பயன்படுத்த முடியாது என்று கூறுவது முயற்சியின்மையின் மறுவிளைவு என்றே கருதவேண்டும். பாரதியார் வரைந்தளித்த, "இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும். பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப்படுத்தலாம். ஆனால் குணங்கள், செயல்கள், நிலைமைகள் இவற்றுக்கு இங்கிலீஷ் பதங்களை ஒருபோதும் வழங்கக்கூடாது" என்ற கருத்து எல்லாத் துறைகளிலும் தமிழ் இடம்பெற வேண்டுமென்ற எண்ணத்தை எடுத்துக்காட்டவல்லது; எல்லாத் துறைகளையும் தமிழில் கற்பிக்க முடியும் என்பதை உணர்த்தவல்லது.

### தமிழ், பயிற்றுமொழியாவதால் ஏற்படும் நன்மைகள்

தாய்மொழிவழிக் கல்வியினைக் கல்வியியல், சமூகவியல், உளவியல் முதலியவற்றோடு பொருத்திக் காட்டித் தாய்மொழிவழிக் கல்வியின் தேவையை - நிறைவை - பயனை விளக்குவர் அறிஞர்.

### கல்வியியல் காரணங்கள்

கற்றல் திறமைகளை (Learning and Reading ability) மாணவர்கள் மிகுதியாகப் பெறுவதற்குத் தாய்மொழி வாய்ப்பளிக்கின்றது. மாணவன் எந்த மொழியோடு வளர்ந்தானோ, எந்த மொழியோடு வாழ்கின்றானோ அந்த மொழியே அவனின் தற்சிந்தனைக்கும், அச்சிந்தனையின் வெளிப்பாட்டிற்கும் உகந்ததாக அமைகிறது. மூளையில் தோன்றும் சிந்தனை, அடுத்த நிலையில், தாய்மொழிச் சொற்களாகவே வடிவம் பெறும் என்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையாகும் என்பர். அயல்மொழியைக் கற்கும்போது முதலில் அம்மொழியைக் கற்க வேண்டும்; அது நுவலும் பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும்; அதன்பின் அது பற்றிய சிந்தனையை வளர்த்துக்கொள்ளவேண்டும். இதனால் நேரமும் முயற்சியும் அதிகம் வீணடிக்கப் படுகின்றன.

வேற்று மொழியில் பயிலும்போது பொருள் புரியாவிடத்தில் தேர்வுக் கண்ணோட்டத்தில் மனப்பாடம் மட்டுமே, முன்னிறுத்தப்பெறுகின்றது.

இதுவே தாய்மொழியாக அமையின் தெரிந்த மொழியில் தெளிவாக அறிந்து விரைவில் சிந்தனைசெய்ய முடிகின்றது. புதியன படைக்கும் ஆற்றலைப் பெற எளிய வாய்ப்புகள் உருவாகின்றன. சொந்த முயற்சியில் சிந்தனை செய்வதால் தேர்வில் முன்னிற்கவும் கல்வியில் மேம்பாடு பெறவும் தாய்மொழிவழிக் கல்வி துணைசெய்கின்றது.

### சமூகவியல் காரணங்கள்

ஒருவர்க்கு மட்டுமே கல்வி என்ற நிலையை மாற்றி அனைவருக்கும் கல்வி என்ற வாய்ப்பினை ஏற்படுத்தும் போதுதான் கல்வியும் மக்கள் வாழ்வும் இணைந்து ஒரு சமூகப் பிணைப்பு ஏற்படமுடியும். சமூகத்தில் பயன்படும் மொழி ஒன்றாகவும் பயிற்றுமொழி வேறாகவும் இருப்பின் 'அனைவருக்கும் கல்வி' என்பது நடைமுறைச் சாத்தியமில்லை. சமூகத்தோடு ஒட்ட ஒழுகும்போதுதான் சமூகத்தின் மதிப்பையும் கற்றவர் பெறமுடியும்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்.

- திருக்குறள் : 411

**LAKSHMI PLASTICS**, P.B. No. 213, Medical College Road, Thanjavur - 613 007. Phone : 20519, 21243

### உளவியல் காரணங்கள்

அச்சத்தைத் தீர்ப்பதாகவும் மனத்தில் எழுகின்ற குழப்பத்தை நீக்குவதாகவும் தாய்மொழிக் கல்வியே அமைகின்றது. ஒருவரின் சிந்தனை முதலில் தாய்மொழியிலேயே வெளிப்படுகிறது. இதன்பின்னரே வேற்றுமொழி வடிவம் பெறுகிறது. இதனால் கல்வியும் தாய்மொழியிலேயே அமையின் சிந்தனையும், சிறப்பாகவும் தெளிவாகவும் வெளிப்படும் என்பதில் ஐயமில்லை.

தாய்மொழியில் அறிவியல் கற்கமுடியாது என்று ஒரு மாணவனுக்குக் கூறி, அதனால் ஆங்கிலம் கற்கவேண்டும் எனக் கூறும்போது, அவன் மனத்தில் தாய்மொழி பற்றிய இழிவான எண்ணமும் ஆங்கிலம் பற்றிய உயர்வான எண்ணமும் தோன்றும். இதனால், 'தாய்மொழியும் அதைப் பேசுவோரும் தாழ்ந்தவர்; ஆங்கிலமும் அதைப் பேசுவோரும் உயர்ந்தவர் என்ற எண்ணமும் தோன்றும். இதுவே அவனுக்குத் தாழ்வு மனப்பான்மையையும் தந்துவிடும்' என்பார் கூற்று இங்கு முற்றிலும் பொருந்தி நிற்றலை உணரமுடியும்.

இவையேயன்றி மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறையில் மொழியின் பயன்பாடு சிறப்புப் பெறுகிறது. அதனால்தான் எட்டயபுரத்துக் கவிஞன் இப்படிப் பாடினான்; இல்லையில்லை, சாடினான்.

"வேறுவேறு பாஷைகள் - கற்பாய் நீ
வீட்டுவார்த்தை கற்கிலாய் போ, போ, போ"

### தமிழ்ப் பயிற்றுமொழி - சிக்கல்களும் தீர்வுகளும்

தாய்மொழிவழிக் கல்வியைப் பலரும் வற்புறுத்தி வருகின்ற இற்றை நிலையிலும் பயிற்றுமொழியாய்ப் பெரும்பாலும் ஆங்கிலமே தமிழகத்தில் நடைமுறையில் உள்ளது. ஆங்கிலேயரின் அடிமைத் தளையிலிருந்து விடுபடப் போராடிய நாம் ஆங்கில மொழியிலிருந்து விடுதலைபெறத் தவறிவிட்டோம்; தவறிவருகின்றோம்.

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க அனைத்துச் செல்வங்களையும் கொண்டுவந்தவர்கள் அவற்றைத் தமிழ்மொழியில் கொண்டுவரத் தவறிவிட்டனர். எந்த ஒன்றும் தாய்மொழியில் அமைந்தால்தான் அம் மொழி உயர்வடையும். அதனால் அம் மொழி பேசும் மக்கள் உயர்வர். அவர்கள் வாழும் இடமும் உயர்வடையும். நடப்பியலில் தமிழைப் பயிற்றுமொழியாக்கும் பணியில் காணலாகும் சிக்கல்களைக் கீழ்க்கண்டாங்கு வகைப்படுத்தலாம் :

1. கல்வியில் போதிய தரமின்மை
2. கலைச் சொல்லாக்கப் பணியில் நிறைவின்மை
3. அரசு தேர்வுகளில் பங்குபெற முடியாமை
4. தொடர்கல்வியினைப் பெற முடியாமை.

### 1. கல்வியில் தரமின்மை

தாய்மொழி வாயிலாகக் கற்போரின் கல்வித்தரம் ஆங்கில வழியில் கற்போரின் தரத்தைவிடக் குறைவாக உள்ளது என்றொரு கருத்தும் நிலவிவருகிறது. இது பொருந்துவதாக அமையவில்லை.

மொழிகள் வேறு வேறாக இருக்கலாம். ஆனால், அவை நுவலும் பொருள் ஒன்றே. ஆங்கில வழியில் பயில்வோருக்கு ஆங்கில மொழியறிவு சற்றுக் கூடுதலாக இருக்கலாம். இதைத் தவிர வேறெந்தத் தரக் குறைவும் தமிழ்ப் பயிற்றுமொழியில் இருப்பதாகப் புலப்படவில்லை.

"பயிற்றுமொழி மாற்றத்தால் தரம் குறையும், குறையாது எனும் கருத்துகள் ஒருபுறமிருக்க, கல்வியின் தரத்தை மதிப்பிட ஓர் அளவுகோல் இருப்பதாகத் தெரியவில்லை. தேர்வுக் கண்ணோட்டத்தில் ஆங்கிலத்தில் எண்பது மதிப்பெண் பெற்ற ஒருவன் மற்றப் பாடங்களில் குறைந்த மதிப்பெண் பெற்றால் அவனுடைய கல்வித் தரத்தை எவ்வாறு மதிப்பிடுவது. தமிழ்ப் புலமை பெற்றவருக்கு ஆங்கிலப் புலமை குறைவாக இருக்கலாம். இவற்றை வைத்துக் கல்வியின் தரத்தை மதிப்பிட இயலுமா என்ற வினா எழுகின்றது". [2]

தாய்மொழி, பயிற்றுமொழி யாவதால் கல்வியின் தரம் குறைந்து விடுமா என்ற கேள்வி 1948-ல் பம்பாயில் கேட்கப்பட்டது. அதற்குப் பலர் பதிலளித்துள்ளனர். சர்தார் பட்டேல், 'தாய்மொழி மூலம் கல்வி பயிற்றுவித்தால் கல்வியின் தரம் குறைந்துவிடும் என்பதற்கு எவ்விதக் காரணமும் இல்லை. ஒருவன் தாய்மொழியின் மூலம் பயில்வதால் அந்நிய மொழியின் மூலம் பயில்வதைவிடவும் அதிகமாக அறிந்துகொள்வான்" என்று கூறியுள்ளார். கோகலே, 'ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியிலிருந்து நீக்குவதால் நாம் பாடத்தின் பொருளை அதிகமாக உணரமுடியும். கல்வியின் தரம் குறைந்துவிடும் என்று நான் நினைக்கவேயில்லை' என்று குறிப்பிட்டுள்ளார். பதிலளித்த எவருமே கல்வியின் தரம் குறைவதாகக் குறிப்பிடவில்லை. பயன், மதிப்பு, பணி போன்றவை பிறமொழிவழியே கிட்டுமென்பது பிழையான கருத்தாகும். தாய்மொழிக் கல்வி மட்டுமே இவற்றை நல்கும். அதனால்தான் தமிழை வளர்ப்பது என்றால் என்ன என்பதற்கு விடையிறுக்கும் பொற்கோ "தமிழை வளர்ப்பது என்றால் அந்தச் சமுதாயத்திலுள்ள எல்லா வாழ்க்கைத்

குறள் பகுத்தறிவு நூல் ! மற்றவை நமபிக்கை நூல் !
- தந்தை பெரியார்

**HOTEL TEMPLE TOWER (P) LTD.**, 'Raja Raja Cholan Square', Thanjavur. Phone : 23727, 22417

துறைகளிலும் எல்லா அறிவுத் துறைகளிலும் தமிழை வலுவுள்ளதாக்க, வளமுள்ளதாக மாற்றிக் காட்டுவது என்று பொருள்" என்கிறார்.

## 2. கலைச்சொல்லாக்கச் சிக்கல்கள்

தமிழ்மொழியினை எல்லா நிலையிலும் பயிற்றுமொழியாக்கும் திட்டத்தில் ஏற்படும் சிக்கல்களில் கலைச்சொல்லாக்கச் சிக்கல்களும் குறிப்பிடத்தக்கன.

"ஐரோப்பிய மொழிகள் இலத்தீன் மொழியையும் கிரேக்க மொழியையும் பயன்படுத்துவதுபோல இன்று இந்தியும், தமிழ் தவிர்த்த மற்றைய இந்திய மொழிகளும், வடமொழி வேர்ச்சொற்களைப் பயன்படுத்திப் பொதுவான கலைச்சொற்களை (Pan Indian Technical Terms) உருவாக்கி வருகின்றன. இம் மொழிகள் பண்பாட்டுக் கலைச்சொற்களை ஏற்கவும் தயங்குவதில்லை. இந்தியில் நாளொரு துறையும் பொழுதொரு நூலுமாக வளர்ச்சி இடம்பெற்று வருகிறது. இந்தியாவில் ஏற்படும் வளர்ச்சியை அப்படியே பயன்படுத்தும் இயற்கை கொண்டனவாக மற்றைய இந்திய மொழிகளும் மற்றைய மொழிக் குடும்பத்தினரும் உள்ளனர்" [3]

பலரால், பல காலகட்டங்களில், பல சூழ்நிலைகளில் கலைச்சொற்கள் தமிழில் உருவாக்கப்பட்டுள்ளன. அறிவியல் துறைகள், மற்ற நவீன கல்வியறிவுத் துறைகள் அனைத்தும் தமிழில் இடம்பெறவேண்டும் என்ற முயற்சிக்கு நீண்ட வரலாறு உண்டு. எனினும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் இம்முயற்சி தீவிரம் பெற்றுள்ளது. தமிழில் இதுவரை 200 கலைச்சொல் தொகுப்புகள் வெளிவந்திருப்பதாகவும், 2,00,000 கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேபோலக் கலைச்சொற்கள் இல்லாச் சிக்கல் துருக்கி நாட்டிலும் ஏற்பட்டது. அவர்கள் மேற்கொண்ட ஒரு நடைமுறை அனைவரும் பின்பற்றக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

முதலில் துருக்கியில் பல்வேறு பகுதிகளிலும் வழக்கிலுள்ள சொற்களைத் திரட்டிச் சேர்க்கும் நாடுதழுவிய பெரிய திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதற்காக மொழி ஆர்வலர்களும், பள்ளி ஆசிரியர்களும் இப் பணியில் அமர்த்தப்பட்டனர். மாநிலந்தோறும், மாவட்டந்தோறும் சொற்சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு சொல்லும் எந்தச் சூழ்நிலையில் எந்தப் பொருளில் வழங்கப்படுகிறது என்ற விவரங்களும் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட சொற்கள் அவற்றின் வரலாற்றுக் குறிப்புகளுடன் தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டன. அங்கே அவை தரம் பிரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டன. இவ்வாறே, பழைய இலக்கியங்களிலிருந்தும் அகராதிகளிலிருந்தும் பல்வேறு துறைச்சொற்கள் திரட்டப்பெற்றன. பின்னர் இவையனைத்தையும் துறைவாரியாகப் பாகுபடுத்தி அன்றாடச் சொல் முதல் கலை நுட்பச் சொல் வரையில் வெவ்வேறு பிரிவுகளாக்கி வெளியிட்டனர்.

வெளியிடப்பெற்ற இக் கலைச்சொற்களுக்கு எதிர்ப்பும் ஆதரவும் சம அளவில் இருந்தன. இதற்குப் பின்னர்த் தோன்றிய புதியதோர் இயக்கம் தனித் துருக்கியையும் பழைய துருக்கியையும் முழுதும் ஏற்றுக்கொள்ளாமல் கைவிட்டது; நீண்ட காலப்பழக்கத்தில் மக்களிடையே துருக்கி மொழிச் சாயலுடன் நிலைபெற்றுச் சாதாரணமாக வழங்கிவரும் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொண்டது; மக்களுக்கு எளிதாக விளங்கக்கூடிய வகையில், அதிகக் கலப்பற்ற துருக்கியில் எல்லாம் நடைபெற வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்தது. இக் கொள்கையினைப் பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டு நடைமுறை வாழ்விலும் கடைப்பிடித்தனர். இதனால் துருக்கியில் கலைச்சொல் இல்லாத சிக்கல் தீர்க்கப்பட்டு, பயிற்றுமொழியாகத் துருக்கி மொழியே முழு அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனை எடுத்துக்காட்டித் தமிழிலும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படின் வெற்றி கிட்டும் என்பது உறுதி.

### தூய தமிழ்ச்சொல்

தமிழில் கலைச்சொற்களை உருவாக்குவதில் உள்ள மற்றொரு சிக்கல் தூய தமிழ்ச்சொல் என்பதாகும். மாற்றம் என்பது மாறாத விதியாகும். மாற்றம் இல்லாத எதுவும் வளராது. இதை மனத்தில் கொண்டால் தூய தமிழ்ச்சொல் என்பதைவிடவும் தெளிவான தமிழ்ச்சொல் என்னும் தொடர் பொருத்தமானதாய் இருக்கும்.

ஏனெனில் தனித்தமிழே நடைமுறையில் மக்கள் பேச்சில் இருக்குமானால் இத்தகு சிக்கலுக்கு வழியில்லை. ஆனால், தனித்தமிழ் இன்றைய நிலையில் குறிப்பிட்ட ஒருசாராரின் மொழியாகப் பயன்பட்டுவருகின்றது. எனவே, பெரும்பான்மை கருதி கலைச்சொற்கள் மக்களுக்குப் புரியும் வண்ணம் அவர்கள் பின்பற்றும் வண்ணம் தெளிவாக அமையின் சிறப்பாக இருக்கும்.

கலைச்சொற்களை உருவாக்குவதில் போதிய முயற்சியின்மையும் சிக்கல்களுக்கு ஒரு காரணமாகும். தமிழ், சொல்வளமும் பொருள்வளமும் மிக்க ஒரு மொழி. ஒரு நாளில் ஆறு பகுதிகளை மாலை, யாமம், வைகறை,

பெண் விடுதலை வேண்டும்.
- பாரதியார்

SARATHA'S SILK & SAREE PARADISE, 32, N.S.B. Road, Tiruchirappalli - 620 002. Phone : 27077

விடியல், நண்பகல், எற்பாடு என்று ஆறு பொழுதுகளாகவும் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்று ஆறு பருவங்களாகவும் வகைப்படுத்தி அதைப் பெரும்பொழுது, சிறுபொழுது என்று பெயரிட்டு அழைத்தவர் தமிழர். மலரின் பல்வேறு நிலைகளைக் குறிக்க அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல் என்னும் பல்வகைச் சொற்களும், பெண்களின் ஏழு வகைப் பருவங்களைக் குறிப்பதற்குப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் சொற்களும் கொண்ட ஒரு மொழியில் அறிவியல் தொழில்நுட்பஞ் சார்ந்த கலைச் சொற்களைப் படைக்க முடியாது என்பது பொருந்தா வாதமாகும். பிரான்சு நாட்டில் 'பிரெஞ்சு மாமன்றம்' (French Academy) என்ற அமைப்பு கலைச் சொற்கள் உட்பட யாவற்றையும் முறைப்படுத்தித் தருகிறது. அவற்றைத் தவிர வேறு சொற்களை மக்கள் பயன்படுத்து வதில்லை. இத்தகு மன்றம் தமிழ்மொழிக்கும் அமையின் மொழிச்செப்பம் உருவாகும். தமிழரின் முயற்சியின்மைக்கு ஒரு சான்று: 1. காரைக்குடியில் கல்லூரி விழாவொன்றில் பேச வந்திருந்த பாவாணரிடம் மாணவர் சிலர் ``Fort Nightly" என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் ஒரே சொல்லால் குறிப்பிட வேண்டும் என்று கேட்டதற்குப் பாவாணர் பத்து மணித்துளிகள்மட்டும் எடுத்துக்கொண்டு 'திங்களீரிதழ்' என்ற பொருத்தமான சொல்லைக் கூறினார். இதிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகின்றது. கலைச்சொற் களைத் தமிழில் உருவாக்க முடியாது என்பது மெய்யன்று, தமிழர்கள் முயலவில்லை என்பதே மெய்யாகும்.

தற்போது கலைச்சொல் தொடர்பாக ஆய்வுகளும் நூல்களும் பெருகியுள்ளன. இன்னும் இம்முயற்சிக்கென்று தனியே கொள்கைகள் வகுக்கப்பட்டுப் பரவலாக்கப் பட்டால் அறிவியல் தமிழ்நூல்கள் பெருகும். ஆரம்பக் கல்வி முதல் கல்வி இறுதிப் படிப்புவரையில் பயிற்றுமொழி, தமிழாகவே விளங்கும் வண்ணம் யாவும் வளம்பெறும்.

### 3. அரசுத் தேர்வுகளில் பங்குபெற முடியாமை

இந்தியாவின் பரவலான மொழியாக இந்தியும், துணை ஆட்சிமொழியாக ஆங்கிலமும் விளங்குகின்றன. ஆட்சியினர் மொழி இந்தி என்பதால், மைய அரசின் தேர்வுகள் இந்தியில் அமையும்போது இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கு யாதொரு சிக்கலுமில்லை. மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளே ஆட்சிமொழிகளாக இருப்பினும் ஆங்கிலமே செல்வாக்குச் செலுத்துவது கண்கூடு. இதனால் அந்தந்த மாநில மொழியோடு ஆங்கிலமும் அறிந்திருக்க வேண்டும் என்ற கட்டாய நிலை ஏற்பட்டுவிடுகின்றது.

இன்று கல்வி என்பது பொருளாதாரத்திற்குத் துணைபுரியும் ஒரு கருவி என்ற நிலையில் எந்த மொழி அதிக அளவில் வேலை வாய்ப்பினைத் தருகின்றதோ அதற்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. முன்னைய நாள்களில் செல்வம் பெற்றவர்களே கல்விபெற்றவர்கள்; ஆனால், இந்நாளில் கல்வி பெற்றவர்களே செல்வம் பெற்றவர்கள்.

கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் இந்தியும் ஆங்கிலமும் மட்டுமே பயிற்றுமொழிகளாக இருந்தால் அவை இரண்டையும் தேர்வு மொழிகளாகக் கொள்வதில் சிக்கல் ஒன்றுமில்லை. ஆனால் தமிழ் போன்ற பல்வேறு மொழிகள் கல்வித்துறையின் பயிற்று மொழிகளாய் உள்ளன. தமிழ் போன்ற மாநில மொழிகளின் வழியே கற்றவர்கள் இந்தி, ஆங்கிலம் இவற்றின்வழிப் பயின்றோரிடையே போட்டியிடும்போது பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர். ஏனெனில், அவர்கள் பயின்ற மொழியில் தேர்வு நிகழ்வது இல்லை. இரண்டாம் பாடமாகக் கற்ற ஆங்கிலமும் பிறருடன் போட்டியிடும் அளவிற்குத் தகுதியை இவர்களுக்கு வழங்குவதில்லை.

இந்நிலையில், தாய்மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்டவர்களின் நிலையில் நின்று பார்க்கும்போது, (இந்தி தவிர) மைய அரசின் தேர்வு மொழிக்கும் கல்வித்துறையின் பயிற்றுமொழிக்கும் தொடர்பு துண்டிக்கப்படுகிறது. இத்தகைய சிக்கல்களுக்குத் தாய்மொழிவழிக் கல்வியை ஆராய்ந்தவர்கள் பின்வரும் தீர்வுகளை முன்வைப்பர் :

1. மைய அரசு தேர்வைப் பொறுத்தவரையில் இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு இந்தியில் தேர்வு எழுதுவோரின் மதிப்பெண்களை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்தி அவர்களுக்குத் தாய்மொழி.

2. இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாமல் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டு ஆங்கிலத்தில் தேர்வு எழுதுவோருக்கு அவர்கள் பெறும் மதிப்பெண்களோடு, ஒவ்வொரு தாளிலும் ஐந்து மதிப்பெண்கள் கூடுதலாக வழங்கவேண்டும். ஏனெனில், ஆங்கிலம் அவர்களுக்குத் தாய்மொழியன்று.

3. வட்டார மொழிகளைப் பயிற்றுமொழிகளாகக் கொண்டு ஆங்கிலத்தில் தேர்வு எழுதுவோர்க்கு அவர்கள் பெறும் மதிப்பெண்களோடு ஒவ்வொரு தாளிலும் பத்து மதிப்பெண்கள் கூடுதலாக வழங்கவேண்டும். ஏனெனில், ஆங்கிலம் அவர்களுக்குப் பயிற்றுமொழியன்று.

இத்தகைய நெறிமுறைகளைப் பின்பற்ற முடியாது எனும் நிலை வரும்போது மைய அரசின் தேர்வு மொழியாக ஆங்கிலமொழி ஒன்றை மட்டும் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை. நாகாலாந்தில் அலுவல் மொழியாக

பகுத்தறிவு என்பது அடிப்படை உண்மைகளையும் மறுதலிப்பதன்று. ஆனால், எண்ணம், செயல் ஆகியவற்றில் உள்ள ஐயுறவு நிலைகளையும் அழிப்பதாகும்.
- பேறிஞர் அண்ணா

**SRI THAILA SILKS,** 55, Big Bazaar, Tiruchirappalli - 620 002. Phone : 48442, 48186

ஆங்கிலம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இந்த ஒற்றைமொழிக் கொள்கையினால் வேலைவாய்ப்புகள் தனிப்பட்ட ஒரு மொழிக்குழுவினரிடம் தங்கிவிடாமல் பரவலாக்கப் படுவதற்கு வாய்ப்பாகும். அங்கு அரசு பணிகளுக்கான தேர்வுகள் அனைத்தும் ஆங்கிலத்தில் மட்டுமே நடைபெறுகின்றன.

தமிழ்நாடு அரசு, அரசு பணிகளுக்கான தேர்வுகளைத் 'தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம்' வழியே நடத்தி வருகின்றது. இத்தேர்வில் தேறியவரே அரசு பணிகளில் இடம்பெறமுடியும். இத் தேர்வில் தமிழகத்தில் உள்ள தமிழ்வழியே பயின்ற மாணவர்களும் ஆங்கில வழியே பயின்ற மாணவர்களும் பங்குபெறுகின்றனர். இத்தேர்வில் பொதுத்தாள்களாக அமைபவை இருவருக்கும் பொதுவானவை. இந்த நிலையில் இவ்விருவரும் தேர்வு எழுதும்போது, ஆங்கிலவழிப் பயின்றோருக்கு இவ்விரு தாள்களிலும் தேர்ச்சி என்பதும், மதிப்பெண் பெறுவது என்பதும் எளிதாகிவிடுகின்றன. தற்சிந்தனையும் படைப்பாற்றலும் கொண்ட, தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்ட மாணவர் தேர்வில் வெற்றிபெற முடிவதில்லை.

இத்தகு சிக்கலுக்கு ஆந்திர மாநில அரசு தகுந்த நடைமுறையினைக் கையாண்டு வழி கண்டுள்ளது. "ஆந்திர மாநில அரசு தேர்வு எழுதுவோர், தெலுங்கைப் பயிற்றுமொழியாகக் கொண்டதாக இருப்பின் இரு பொதுத் தாள்களிலும் அவர்கள் பெற்ற மதிப்பெண்களோடு ஐந்து மதிப்பெண்களைக் கூடுதலாக வழங்க வேண்டும். ஆங்கில வழிப் பயின்றோரும் தெலுங்குவழிப் பயின்றோரும், சம அளவில் மதிப்பெண் பெற்றநிலையில் தெலுங்கு வழியே பயின்றவருக்கு முன்னுரிமை அளிக்குமாறு ஆணை பிறப்பித்துள்ளது"[4]

பயிற்றுமொழி வேறுபாட்டால் வேலைவாய்ப்பு நழுவவிடாமல் இருக்க மிகச்சிறந்த ஏற்பாடு இது எனில் மிகையில்லை. இதைத் தமிழகமும் நடைமுறைப் படுத்தினால் சிக்கல்களுக்குத் தீர்வு கிடைக்கும். பயிற்றுமொழியாகத் தமிழ் சிறக்கும் நிலை தானாக உருவாகும்.

### 4. தமிழ்ப் பயிற்றுமொழியில் தொடர்ச்சியான கல்வி

தாய்மொழியில் கற்பவர்களுக்குத் தொடர்ச்சியாகக் கற்பதற்கு வாய்ப்புகள் தமிழகக் கல்வி நிறுவனங்களில் அமையப்பெறவில்லை. ஒரு குறிப்பிட்ட எல்லை வரையிலேயே தாய்மொழிவழிக் கல்வி அமைந்து நிற்கின்றது. இதனால் தொடர்ந்து கல்வியை விரும்புவோர் அதன்பின் வேற்றுமொழியைப் பயிற்றுமொழியாகக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர்.

இதனாலேயே பலர் தொடக்கத்திலிருந்து உயர்கல்விவரை ஒரு மொழியிலும் அதன்பின் இறுதிவரை வேறு ஒரு மொழியிலும் பயில்வதை விரும்பாமல் தொடர்ச்சியாக ஆரம்பக் கல்வி முதல் இறுதிக்கல்வி வரை ஒரே மொழியில் பயில விரும்புகின்றனர். இது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய சிக்கலாகும். தாய்மொழிவழிக் கல்வியை வலியுறுத்தும் அனைவரும் இதனை மனத்திற்கொண்டே செயல்படவேண்டும். கற்கின்ற அனைவரும் இறுதிவரை கற்பதில்லை. ஆனால் அதற்காக உயர்கல்வியை இறுதிவரை கற்கின்ற கல்வியைத் தம்மொழியில் நடைமுறைப்படுத்தாதது பெருங்குறையே. தமிழகத்தில் தமிழ்ப் பயிற்றுமொழிவழிக் கல்வி வெற்றி பெறாமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இங்கு ஆங்கிலத்தை விலக்க வேண்டும் என்பது நோக்கமன்று. ஆங்கில மொழி அறிவு வேண்டும். அஃது உலகத்துடன் தொடர்பு கொள்ளுவதற்காக; தாய்மொழி வழியாகப் பெறப்படும் முழுமையான கல்வி வேண்டும் அது வாழ்வதற்காக என்பதே இங்குக் குறிக்கத்தக்கதாகும்.

இன்றைய நிலையில் தாய்மொழிவழிக் கல்வி என்பது கல்லூரிக் கல்விவரை அமையினும் அதனைக் கட்டாயமாக்கிப் பயிற்றுவிக்கும் முறை நம்மிடை இல்லை. அவரவர் விருப்பம்போல் பயிற்றுமொழியைப் பின்பற்றிப் பயிலலாம் என்ற நிலை உள்ளது. இதனாலேயே 'தமிழ்ப் பயிற்றுமொழிக் கல்வி' இருப்பினும் யாரும் அதைப் பொருட்படுத்துவதில்லை. இதுவே கட்டாயக் கல்வியாக இருப்பின் அனைவரும் தமிழ்ப் பயிற்றுமொழிக் கல்வியைப் பின்பற்றுவர். இங்ஙனம் பயின்றாருக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கலும் இத்தகைய முயற்சியை ஊக்குவிக்கும். மலேசியாவில் ஆரம்பக்கல்வி முதலே நாட்டின் மொழியான மலாய்மொழி இடம்பெறுகின்றது. தமிழர், மலாய்க்காரர், சீனர் யாவராயினும் மலாய்மொழி பயில வேண்டும். பள்ளிக் கல்வி முடிந்து மருத்துவம் போன்ற உயர்கல்வியில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது மலாய் மொழியில் பெற்ற மதிப்பெண்களும் கணக்கிலெடுக்கப்பெற்று மதிப்பிடப்பெறும். இதில் குறிக்கத்தக்க செய்தி என்னவெனில், மலாய் மொழிக்கென வரிவடிவம் இல்லை. ரோமன் அல்லது ஆங்கில வரிவடிவங்களையே அம்மொழி மேற்கொள்கிறது. ஏறத்தாழ 40 ஆண்டுகளாக மட்டுமே பேசப்பெறும் அம்மொழியின் வீச்சு, தொடக்கக் கல்வியில் தொடங்கி மருத்துவம் போன்ற மேற்கல்விவரை அழுத்தமாக இடம்பெறுகிறது. மலாய் மொழியில் வென்றோர் வேலைவாய்ப்பில் முன்நிற்கின்றனர்.

காந்தியடிகள் பயிற்றுமொழியை மாணவர்கள் விருப்பத்திற்கு விடுவதை விரும்பவில்லை. 'தாய்மொழி பயிற்றுமொழியாவதை விருப்பத்திற்கு விடுவதை நான் எதிர்ப்பவன். விருப்பம் என்று விட்டால் அது கல்வித் திட்டத்தைப் பாழ்படுத்திவிடும். தற்போது இருக்கும் சூழலில் நம் இளைஞர்கள் ஆங்கிலம்வழிப் பயில்வதே எளிது என்பர். ஏனெனில், நாம் பல தலைமுறைகளாக அவ்வாறே

தன்னைத் தான் மறந்தவனுக்கு மானம் ஏது? அவமானம் ஏது? எந்தப் பொதுநலக் காரியவாதியும் அப்படித்தான் இருப்பார்.

- தந்தை பெரியார்

**MARIS THEATRES**, Fort Station Road, Tiruchirappalli - 620 002. Phone : 29288

வளர்க்கப்பட்டுவிட்டோம். நம் சிந்தனை, பேச்சு, எழுத்து எல்லாமே ஆங்கிலமாகிவிட்டது. எனக்கு அதிகாரம் இருந்தால் இன்றே நம் மாணவர்கள் அந்நிய மொழிமூலம் பயில்வதைத் தடுத்து நிறுத்திவிடுவேன்' என்று கூறியுள்ளார். இதன்வழித் தாய்மொழிவழிக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டியதன் இன்றியமை யாமை புலப்படும்.

### தமிழ்மக்களிடம் உள்ள குறைபாடுகள்

தமிழ்ப் பயிற்றுமொழியாக அறிமுகப்படுத்தப் பட்டுப் பல ஆண்டுகள் ஆனபோதிலும், அது வெற்றி பெறாமைக்கு மக்களும் காரணமாகின்றனர். தமிழரிடம் 'தம்மொழி' என்ற உணர்வின்மையே இதற்கு அடிப்படையாகும்.

பேச்சிலும் எழுத்திலும் ஆங்கிலத்தைக் கலந்து பயன்படுத்துகின்றனர். தமிழர் இருவர் சந்திக்க நேரிட்டால் பிறமொழியிலேயே பேசுதலும் கையெழுத்துகளை ஆங்கிலத்தில் இடுதலும் பெயருக்கு முன்னால் முதலெழுத்தை ஆங்கிலத்திலும் பெயரைத் தமிழில் எழுதுதலும் குறிப்பிடத்தக்கவை. இதனால் ஆங்கிலமே எல்லா நிலையிலும் முன்னிற்கின்றது. தமிழ் 'துதிக்கப்படும்' மொழியாய் நிற்கின்றதேயல்லாமல் பயிலப்படும் - வாழ்க்கைக்குப் பயன்படும் - பொருளாதாரத் தேவையை நிறைவு செய்யும் ஒரு மொழியாக விளங்கவில்லை.

ஆங்கில வழியில் கற்பதால் தொடர்ச்சியான கல்வி, ஆங்கில அறிவு, அயல்நாடுகளில் வேலைவாய்ப்பு, புகழ் போன்ற பல்வேறு நிலைகள் அமைகின்றன. இன்று ஆங்கில வழியில் கற்றதன் விளைவாகத் தமிழகத்தில் படித்த பலர் அயல்நாடுகளில் பொறியியலாளர்களாய், மருத்துவர்களாய்ப் பணியாற்றி அந் நாட்டினை வளப்படுத்துகின்றனர். ஆனால், தமிழகத்திற்கு அவர்களால் எந்த நன்மையும் இல்லை. அவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற புகழ் மட்டும் தமிழகத்தை அனைத்துத் துறையிலும் சிறந்த ஒரு மாநிலமாக மாற்றாது என்பது வெள்ளிடைமலை. எனவே, அவர்கள் அறிவும், உழைப்பும் தமிழ்நாட்டு நலனுக்கே பயன்பட வேண்டும். இதற்குத் தமிழ்ப் பயிற்றுமொழிக் கல்வியைக் கட்டாயமாக்கல், வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை தருதல் போன்றவற்றைச் சிந்தித்தால் நலம் கிட்டும். குறைபாடுகளை நீக்கவும் நிறைவான வழிகளை அடையாளங்கண்டு அவற்றில் பயணஞ் செய்யவும் முனைந்தால் இருள் விலகவும் ஒளி பரவவும் வாய்ப்பாகும்.

### முடிவுரை

தமிழ்மொழிவழிக் கல்வி கட்டாயமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் மாணவர்களின் உழைப்பும் சிந்தனையும் தமிழகத்திற்கே பயன்படும். மொழி வாழவும், இனம் வாழவும், நாடு வளரவும் இக் கல்விமுறை மிக இன்றியமையாததாக அமைகின்றது.

"நம் மொழியை வேறு யாரும் வந்து வளர்க்கப் போவதில்லை நாம்தான் வளர்க்கவேண்டும். நாம் நம் மொழியை எதற்குப் பயன்படுத்த நினைக்கிறோமோ அதற்குத்தான் வளர்க்க வேண்டும். நாம் பயன்படுத்தப் பயன்படுத்த அது வளரும். நாம், தமிழ் வீட்டு மொழியாக மட்டும் இருக்க வேண்டும் என்று எண்ணினால் அது அங்ஙனமே வளரும். நாம் தமிழை அறிவியல் மொழியாகப் பயன்படுத்த நினைத்தால் அது அறிவியல் மொழியாக வளரும். நாம், நம் தாய்மொழி நம்முடைய செயற்பாடுகள் எல்லாவற்றிலும் பயன்படவேண்டும் என்று எண்ணிச் செயல்படுத்தினால் அது வீட்டு மொழியாக, அறிவியல் மொழியாக, கலைமொழியாக, கடவுள் வழிபாட்டு மொழியாக, அரசியல் மொழியாக, அலுவலக மொழியாக, வணிக மொழியாக மற்றும் இன்றைய சூழ்நிலையில் மனிதனின் எல்லாத் தேவைகளுக்குமேற்ப வளரும்; அது வளர வேண்டுமென்பதே நம் அவா."[5] என்று 'தமிழர் தமிழுக்குச் செய்ய வேண்டுவன' என்ற கட்டுரை முனைவர் ச. முத்துக்குமரன் கூறியுள்ளது நாம் சிந்திக்க வேண்டிய கருத்தாகும்.

மொழியை அடிப்படையாகக் கொண்டு ஒரு சமூகம் உயர்வடைவதற்கு அச்சமூகம் மொழிக்கு முதன்மை தருதல் கடமையாகும். அதன் முதற் பணியாகவும் முக்கியப் பணியாகவும் அமைவது, அமையவேண்டியது தாய்மொழியே - தமிழ்மொழியே - பயிற்றுமொழியாக இடம்பெறுவதுதான். அவ்வகையில் தமிழக அரசு தமிழ், பயிற்று மொழியாவதில் உள்ள சிக்கல்களைக் களைந்து தமிழைப் பயிற்றுமொழியாக்கவும் - கட்டாய மாக்கவும், தமிழரை - தமிழ்நாட்டை உயர்த்தவும் வழிசெய்ய வேண்டும். மக்களும் இதற்கு உறுதுணை புரியவேண்டும்.

---

1. ப. டேவிட் பிரபாகர் - (மேற்கோள்) தமிழில் அறிவியல் பாடமாக்கம், பக் 2,3.
2. க. முத்தையா - தாய்மொழிவழிக் கல்வி - ஓர் ஒப்பிட்டாய்வு, (பிஎச்.டி. ஆய்வேடு) ப.6.
3. மேலது, ப. 281.
4. மேலது, ப. 269.
5. ச. முத்துக்குமரன், 'தமிழர் தமிழுக்குச் செய்ய வேண்டுவன'.

*செல்வி சு. மாதவி,*
ஆய்வு மாணவி, தமிழியல் துறை,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 605 014.

வயிர முடைய நெஞ்சுவேணும்.
- பாரதியார்

வெஸ்டன் ஏஜன்ஸீஸ், (மளிகை & ஜெனரல் மெர்ச்சன்ட்) 17, பெரியகடை வீதி, மன்னார்குடி. தொ. பே. : 22503

# இக்காலக் கவிதைகளில் உணர்த்தப் பெறும் சமுதாயச் சிந்தனைகள்

செல்வன் இராம. இரவிச்சந்திரன்

## முன்னுரை

இலக்கிய வகைகளுள் கவிதை வடிவம் மிகவும் சக்தி வாய்ந்தது. தமிழிலக்கியத்தில் முதலில் தோன்றியது, பாட்டிலக்கியம். அதன் பின்னரே உரைநடை உள்ளிட்ட அனைத்து இலக்கிய வகைகளும் தோன்றின.

பாட்டிலக்கியங்கள் சமுதாயத்தில் உள்ள வாழ்வியல் முறைகள் அனைத்தையும் சிறப்புடன் உணர்த்தி நிற்கின்றன. இதனை உணர வேண்டுமானால், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க நூல்களைக் கண்டு தெளியலாம்.

அவற்றைப் போன்று இக்காலக் கவிதைகளும் ஆழமான சமுதாயச் சிந்தனைகளை உடையதாகவே உள்ளன. நாடு, சமுதாயம், சமத்துவம் தமிழினத்தின் பெருமை உணர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், சமுதாயச் சிக்கலும் அதற்குத் தீர்வும், இளைஞர்களின் பிரச்சினை, மத நல்லிணக்கம், விதவை மறுமணம், கல்வி, முயன்றால் முடியும் என்கிற மனப்பக்குவத்தோடு மேற்சொன்ன சமுதாயத் தேவைகளை, சில கவிஞர்களின் கவிதை கொண்டு உணர்த்துகிறது இக் கட்டுரை.

## கவிதை இலக்கியத்தின் தொன்மை

உலகளவில் உற்று நோக்குகிறபோது கவிதை மிகவும் தொன்மை வாய்ந்ததாகவே புலப்படுகிறது; எல்லா இலக்கியங்களிலும் முதன்மை வாய்ந்ததாகவே இருக்கிறது. "உரைநடை தோன்றுவதற்கு முன்னமேயே கவிதை தோன்றிற்று" என்று கூறுவார்களும் உண்டு. சரித்திரம் தோன்றுவதற்கு முன்னரே எல்லா மொழிகளிலும் கவிதைகள் தோன்றியுள்ளன. இன்று உலகிடை எத்தனையோ மொழிகள் தமக்கென வரிவடிவம் இல்லாமல் இருக்கின்றன. எனினும் அவற்றிற்கூடக் கவிதை உண்டு"[1] என்கிறார் அ. ச. ஞானசம்பந்தன்.

## கவிஞனின் தன்மை

பாட்டு இலக்கியங்களே தற்போது கவிதைகள் என்று அழைக்கப்படுகின்றன. கவிதைகளைப் படைக்க வேண்டுமெனில், படைப்பாளருக்குக் கற்பனை வளம் தேவை. அவ்வாறிருந்தால் அவன் காணுகின்ற காட்சி களையும் கண்ணுறுகின்ற நிகழ்ச்சிகளையும் பாடுபொரு ளாகக் கொண்டு பாடலாக்கித் தரவியலும். கவிஞனது கவித்துவத்தை வெளியிட மொழியும், மொழிநடையும்

அறிவை வளர்த்திட வேண்டும்.
- பாரதியார்

**KAIRASI N.GOPALDAS & CO JEWELLERS,** 36, Chinnakadai Street, Ist Floor, Tiruchirappalli - 620 002. Phone : 24061, 26343

அவசியம். இது கொண்ட கவிஞன், மக்களின் அறிவார்ந்த நிலை கருதி, அவர்களின் பேச்சுமொழிக்கேற்ப, புரியும்படியாகக் கவிதைகளை யாத்தல் வேண்டும். கவிஞன், கவிதையை எப்படிப்பட்ட மக்களுக்காகப் படைக்கின்றோம் என்பதை மனத்திற்கொண்டு படைத்தல் வேண்டும். அவ்வாறு படைக்கப்படுகின்றபோது வெற்றியையும், மக்களின் வரவேற்பையும், நிலைத்த புகழையும் அப்படைப்பு அடையும் எனலாம். அதன்வழி இக்காலத் தமிழ்க் கவிஞர்கள் தத்தம் கவிதைகளில் சமுதாயத்தின் நிகழ்வுகளைக் கண்ணுற்று வெளிப்படுத்தியுள்ளனர். அதனை ஈண்டுக் காண்போம்.

## நாடு

"நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்ற முடிவோடு சமுதாயத்தைப் பற்றிச் சிந்தித்தவர் மகாகவி பாரதி. அவரது கவிதைகள் சுதந்திரப் போராட்டக் காலத்தில் தோன்றியதால் நாட்டின் விடுதலை பற்றிய சிந்தனைகளை மிகுதியாகக் கொண்டுள்ளன. அவரது கவிதைகள் மக்கள் நலனையே மனத்திற்கொண்டு, அன்னிய ஆட்சியின் விலங்கறுத்து விடுதலை பெறுதலையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. வீரத்தின் விளைநிலமாக, விவேகத்தின் பிறப்பிடமாக, ஆன்மீகத்தின் களஞ்சியமாகத் திகழும் இந்திய மண்ணை எங்கிருந்தோ வந்தவர்கள் ஆள்வதா? சிந்தனையின் ஊற்றுக் கண்களாக விளங்க வேண்டிய இந்திய மக்கள் இருட்டில் வாழ்க்கை நடத்துவதா? - என்று ஆத்திரப்பட்ட கவிஞர் சுதந்திர உணர்வை ஊட்டத் தலைப்பட்டார். அதனால் சமுதாயத்தின் இழிநிலைகளை மனத்திற் கொண்டு வெளிப்படுத்துகையில்,

> "ஆயிர முண்டிங்கு சாதி - எனில்
> அன்னியர் வந்து புகலென்ன நீதி?"
>
> "ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே - நம்மில்
> ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே" [2]

என்கிறார். எத்தனை சாதிகளாய்ப் பிரிந்து வாழ்ந்தாலும் அன்னியர்கள் நம்மை ஆளக்கூடாது. அன்னியர்களை முறியடிக்க, பிரிவினை நீக்கி ஒற்றுமையோடு செயல்படல் வேண்டும். அவ்வாறு செயல்படாவிட்டால், இழிவான நிலையிலேயே இருக்க நேரிடும் என்று உணர்த்தினார். மேலும்

> "இனியொரு விதி செய்வோம் - அதை
> எந்த நாளும் காப்போம்
> தனியொருவனுக் குணவில்லை யெனில்
> ஜகத்தினையழித் திடுவோம்" [3]

என்று தனியொருவனுக்கு உணவில்லாதபோது இந்த ஜகத்தையே அழிக்கத் துடிக்கும் கவிஞரின் சிந்தனை மிகுதியும் சமுதாயத்தைப் பற்றியே இருப்பதாக உணரவியலுகிறது. மேலும் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளையும் உணர்த்தியிருக்கிறார். இருப்பினும் சுதந்திர வேட்கையே இவரது கவிதைகளில் மிகுதியாக இருக்கிறது எனலாம்.

## சமுதாயம்

மகாகவி பாரதியின் தாக்கத்தால் பாரதிதாசன் என்று பெயர் மாற்றம் செய்துகொண்ட கனகசுப்புரத்தினம் தம் கவித்திறத்தால் 'புரட்சிக் கவிஞர்' என்றே அழைக்கப்பட்டார். இவர் சமுதாயத்தின் விடுதலைக்காகப் பாடியவர். சமுதாயத்தில் அறியாமை, வறுமை, மூடப் பழக்க வழக்கங்கள் முதலானவை இவர் காலத்தில் நிறைந்து காணப்பட்டன. அதனால் தமிழக மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கவிஞரவர்கள் உணர்ச்சியும், புதுமையும் பீரிட எளிய சொற்கொண்டு இனிய கவி வடித்தார். அவரது கவிதைகள் புரட்சிக்கும், புதுமைக்கும், நல்வாழ்விற்கும் வித்திடுவதாகவே இருக்கும். சமுதாய பேதங்களைக் கண்ட அவர் தமது நெஞ்சக் குமுறலை,

> "புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
> போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
> பொதுவுடை மைக்கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
> புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்" [4]

என்று சூளுரைக்கிறார்; பழையன ஒழித்து, புதியன கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்க முற்படுகிறார். மறுமலர்ச்சிக்கு உழைக்க மறுத்துப் போரிடுவோரை வேரோடு சாய்க்கவும் தலைப்படுகிறபோது, கவிஞரின் சிந்தனை புரட்சிகரமாகவே இருக்கிறது. அத்துடன் சமத்துவம், சகோதரத்துவம் எல்லோர்க்கும் எல்லாம் என்கிற பொதுவுடைமைக் கொள்கைகளையும் ஏற்கிறார். மேலும் அதனை எண் திசைகளிலும் பரப்புவதோடன்றி, நாங்களும் பின்பற்றுவோம் என்கிறபோது அவரின் சிந்தனை இந்தச் சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடியதாகவே அமைகிறது.

## சமத்துவம்

சமுதாயத்தைப் பற்றிச் சிந்தித்த புரட்சிக் கவிஞரைப் போன்று, சமத்துவம்பற்றி மிகுதியும் சிந்தித்து எளிய நடைகொண்டு இனிய கருத்துகளைத் தந்தவர் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம். இவர் உழவர்ப் பெருங்குடி மக்களின் வாழ்வியல் நிலைமைகளை மிகுதியும் கண்ணுற்ற கவிஞர். பொதுவுடைமைக் கருத்துகளை

அச்சம் தவிர்.
- பாரதியார்

G.B. ENGINEERING (P) LTD., D.89, Developed Plot Estate, Thuvakudy, Tiruchirappalli - 15

## யாளி



வி. அரவிந்தன்,
இளங்கலை இரண்டாம் ஆண்டு,
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி,
சிவகங்கை.

CONNEM... 13 JUN 2001 ...NNAI-600

மிகுதியும் கொண்டவர். விவசாயக் குடும்பத்துத் தலைவனும் தலைவியும் உரையாடும் விதமாக அமைந்துள்ள கவிதையில்,

"பெண் : மாடா உழைச்சவன் வாழ்க்கையிலே - பசி
வந்திடக் காரணம் என்ன மச்சான்?
ஆண் : அவன் தேடிய செல்வங்கள் வேற இடத்திலே
சேர்வதி னால்வரும் தொல்லையடி" [5]

என்ற உரையாடல் பாங்கில் பாமரர்களுக்கும் விளங்குமாறு வெளிப்படுத்துகிறார். இளைஞர்களும், குழந்தைகளும் விழிப்புணர்வுடன் செயல்பட்டுப் பொதுநலம் பேணல் வேண்டும். இதனை,

"தனியுடைமைக் கொடுமைகள் தீரத்
தொண்டு செய்யடா
..................
தானா எல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா" [6]

என்று பொதுவுடைமைச் சிந்தனைகளைப் பின்பற்றவேண்டி வலியுறுத்துகிறார். விரும்புகின்ற மாற்றத்தைப் போராடித்தான் பெற வேண்டுமென வலியுறுத்துகிறார். சமுதாயத்தினருக்கு விழிப்புணர்வை ஊட்டுகிற கவிஞரின் சிந்தனையானது புதிய சிந்தனைகளை ஏற்படுத்துகிறது எனலாம்.

### தமிழினத்தின் பெருமை

இலக்கியங்களில் கொட்டிக் கிடக்கும் எண்ணற்ற கருத்துகளில் சங்கமமாக, சிங்க நடை போட்டவர் கவிஞர் கண்ணதாசன். வாழ்ந்த காலத்திலேயே வரலாறு ஆகிவிட்டவர். இவரால் படஅரங்குகள் பாடல் பெற்ற தலங்கள் ஆகின. கவிதை யாப்பதிலும் இலக்கியம் படைப்பதிலும் தன்னேரில்லாக் கவிஞராகவே விளங்கியவர். இவர் தமிழ், தமிழினம், தமிழ்நாடு , தமிழ்ப் பண்பாடு பற்றியே மிகுதியாக சிந்தித்தவர். அதன் பெருமைகளையே தம் கவிதைகளில் மிகுதியும் உணர்த்தியிருக்கிறார் எனலாம். இவர் தமிழன் எப்படி இருக்க வேண்டுமென்பதை,

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடைமையடா
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா" [7]

என்று திராவிடத்தின் பெருமையையும், கடமையையும் உணர்த்தி,

"கோடி மக்கள் சேர்ந்து வாழ வேண்டும் விடுதலை
கோயில் போல நாடுகாண வேண்டும் விடுதலை!
அச்சமின்றி ஆடிப்பாட வேண்டும் விடுதலை!
அடிமை வாழும் பூமியெங்கும் வேண்டும் விடுதலை!" [8]

என்பார். மக்கள் ஒற்றுமையுடன் எல்லா உரிமைகளையும் பெற்று அமைதியாக மகிழ்வு பொங்க வாழ வேண்டும் என்று எண்ணுகிறார். இதில் கவிஞர் வீரமும், விவேகமும் கொண்ட தமிழினம் அடிமையாக வாழாது சுதந்திரமாக வாழ வேண்டுமென்கிறார். இவரது சிந்தனைகள் தமிழினத்தைத் தலைநிமிரச் செய்தது. பின்வரும் தலைமுறையினரையும் சமுதாயத்தையும் தலைநிமிரச் செய்யுமென நம்பலாம்.

### சமுதாயச் சிக்கலும் தீர்வும்

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மண்ணில் பிறந்த இளங்கவி வைரமுத்து. எதிர்வரும் நூற்றாண்டிற்காக இன்றே இலக்கியம் படைப்பவர். எதிர்காலத்தையும், நிகழ்காலத்தையும் கூட்டிக்கொண்டு தமிழ்ச் சமுதாயத்தின் இறந்த காலத்தையே மீட்கக் கூடியவர். இவர் நிகழ்காலச் சமுதாயத்தைத் தெளிவுறுத்துகையில்,

"முதலில் புண்களுக்கு மருந்து போடுவோம்
பிறகு பூக்களைப் பாடுங்கள்
தன் மார்பில் கலையை அணிந்துகொள்ளாத சமூகம்
கௌரவமில்லாச் சமூகம்தான்
அதைவிட இழிந்த சமூகம்
அதை அணிந்துகொள்ள மார்பே இல்லாத சமூகம்
ஒரு முடிவுக்கு வாருங்கள்
நமது முதல் தேவை -
மார்பா பதக்கமா" [9]

என்கிறார். முதலில் சமுதாயத்தில் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காணத் துடிக்கிறார். வாழ்வில் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யாது, பகட்டான வாழ்வில் எந்தப் பயனும் இல்லை என்கிறார். இன்றைய சமூகத்திற்கு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதே முதற்கடமை, போலியான கேளிக்கை வாழ்வல்ல என்று வலியுறுத்துகிறார். மேலும்,

"அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொறுத்துங்கள்" [10]

என்று தமிழை அறிவியலோடு இயைத்து வளர்க்கச் சொல்லுகிறார். கரிகாலனின் பெருமைகளை,

உடலினை உறுதிசெய்.
- பாரதியார்

KAVERI ENGINEERING INDUSTRIES LTD., Golden Rock, Tiruchirappalli, 620 004. Phone : 45535

கணிப்பொறியும் ஏற்றிப் பாதுகாத்து, சோழமண்டலம் மட்டுமன்றி, உலகம் முழுக்கத் தமிழனின் பெருமை உணர்த்த எண்ணுகிறார். இவர் அறிவியல் சிந்தனையோடு கூடிய சமுதாயச் சிந்தனைவாதியாகவே பரிணமிக்கிறார்.

### இளைஞர்களின் பிரச்சினைகள்

இன்று சமுதாயத்தில் இருக்கும் இளைஞர்களின் பிரச்சினைகளை நினைவுகூர்ந்தாக வேண்டும். கசடறக் கற்று, அதற்குத் தகுந்தவாறு வாழ நினைக்கிறார்கள் இளைஞர்கள். அதன்படி கல்வியும் கற்கிறார்கள். ஆனால் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கிறது. காரணம், கல்விக்குரிய வேலை வாய்ப்பின்மையும், வேலை வாய்ப்பிற்குரிய கல்வியின்மையுமே. அதனால் பட்டம் பெற்ற இளைஞர்களின் வாழ்வில் இன்னல்களே நிறைந்து காணப்படுகின்றன. இதனை விளக்குகிற அளவில் கவிஞர் மு. மேத்தா அவர்கள்,

“காகிதத்தில் செய்த
பட்டமாவது
பறக்கிறது –
எங்கள்
மாணவ மணிகள்
படித்து வாங்கிய
பட்டமோ
அவர்களை
இறக்குகிறது” [11]

என்று, படித்த இளைஞர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவார். இவரைப் போன்றே கல்வியின் அவலத்தையும், கல்விக்கூட அவலத்தையும் கவிஞர் தமிழ்மகன் என்பவர்,

“பள்ளியில்
உடைந்த பெஞ்சும்கூட இல்லாத
நிலையில்
வைர சிம்மாசனம் பற்றி
வரலாறு படிக்கிறோம்” [12]

என்று, நகைச்சுவை கலந்த நெஞ்சக் குமுறலோடு வெளிப்படுத்துகிறார். இதில், தற்போதுள்ள கல்விமுறை முறையானதாக இல்லை என்கிறார். பழைமை வாதங்கள் நம் வாழ்க்கைக்கு உதவாது என்பதையும் உணர்த்தியிருக்கிறார் கவிஞர்.

சமுதாயத்தில் காணும் இளைஞர்களின் நிலைக்காகக் கண்ணீர் வடிக்கும் அதே நேரத்தில், இளம் பெண்களின் வாழ்வைக் கண்டு வருந்துகிறார் மேத்தா. அவர்,

“வாங்க மாட்டோம்
வரதட்சணை
என்கிற
வாலிப வாக்குறுதிகள்
‘குமுதம்’ இதழில்
தங்கள்
படத்தையும் பெயரையும்
பார்த்து ரசிக்கிற
பரவசத்தோடு முடிந்துவிடுகின்றன” [13]

என்று இளைஞர்களைச் சாடவும் தயங்கவில்லை. இதில் கவிஞர் மேத்தா சமுதாயத்தின் இன்றைய நிகழ்வை உள்ளவாறே தெளிவுறுத்தியுள்ளார்.

### மத நல்லிணக்கம்

இந்தியத் துணைக்கண்டம் இந்துக்களும், இசுலாமியர்களும், கிறித்தவர்களும் மிகுதியாக வாழும் நாடு. இங்கு மத ஒற்றுமை அவசியமாகிறது. அவ்வாறு இல்லாததால் மதக் கலவரங்கள், உயிரிழப்புகள் நேர்கின்றன. இதனை உணர்ந்த கவிஞர் இரா. பொன்னாண்டான், அயோத்திப் பிரச்சினையைப் பாடு பொருளாக்கி வெளிப்படுத்துகையில்,

“அகப்பட்ட அப்பாவிகள்
அ(ய்)யோத் ‘தீ’ என்கிற புலம்பல்
அகிலமெங்கும் ஒலிக்கிறது.
மிருகத்திற்கு மதம் பிடித்தால்
மீட்கலாம்
மதத்திற்கே மதம் பிடித்தால்” [14]

என்று தொடருவார்; மாண்புசால் மனிதகுலம் கொண்டிருக்கும் மதச் சார்பு போக்கைச் சாடுகிறார். மதச்சார்பின்மையைக் கடைப்பிடித்தலே இந்தியாவிற்கும் இந்திய மக்களுக்கும் நன்மையாக அமையும். அதை விடுத்து மதச்சார்பு போக்கு இருப்பின் உலக அரங்கில் இந்தியா தலை கவிழும். பயங்கரவாதத்தில் சிக்கி அழியும் என்பதைக் கவிஞர் மறைமுகமாக உணர்த்தியிருக்கிறார். அதனைச் சமுதாயத்தில் நடந்தேறி வரும் சில பயங்கரவாத சம்பவங்கள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

### விதவை மறுமணம்

சமுதாயத்தில் ஆண்களுக்கு இருக்கும் உரிமை பெண்களுக்கு இல்லை. மனைவியை இழந்த கணவன் வேறு பெண்ணை மணக்க இந்தச் சமூகம் அங்கீகரிக்கிறது. ஆனால், கணவனை இழந்த பெண்கள் இளம் வயதினரே ஆனாலும் மறுமணம் செய்துகொள்ள இச் சமூகம்

குன்றென நிமிர்ந்து நில்.
- பாரதியார்

**NATIONAL OIL MILLS,** 17, Palakkarai Road, Mylamchandai, Tiruchirappalli - 8

அங்கீகரிப்பதில்லை. இறுதிவரை தனிமையிலேயே வாழ்ந்துவிட வேண்டிய சூழ்நிலை.

இது முறையற்றது என்றும், பெண்கள் மறுமணம் செய்துகொள்ள வேண்டுமென்றும், அது நியாயமான தென்றும் பாரதிதாசன் உள்ளிட்ட பல சிந்தனையாளர்கள் கூறியிருக்கின்றனர். அதன்வழி, கவிஞர் அப்துல் காதர்,

"இளைஞனே!
தாசி வீட்டுக்குச் சென்று
ட்யூப் லைட்டை அணைப்பதைவிட
கைம்பெண் வீட்டுக்குச் சென்று
சிறு விளக்கை ஏற்று" [15]

என்று அறிவுறுத்துகிறார். சமுதாயத்தில் மாற்றத்தையும், மகிழ்வையும் ஏற்படுத்தத் துடிக்கிறார் என்பதை உணரமுடிகிறது.

### முயன்றால் முடியும்

"நீ போராடத்
தெரிந்துகொண்டால்
பூமியில்
எந்தப் பகுதியிலும்
உனக்குத்
தோல்வியில்லை" [16]

என்கிறார் கவிஞர் கே. வி. சாமி. தோல்விகளைத் தாங்கி, போராடி வெற்றிகொள்ளத் தலைப்படுதல் வேண்டும். ஓயாத உழைப்பும், இடைவிடாத சிந்தனையும் இருப்பின் எதனையும் வெல்லவியலும். இது இன்றைய நம் சமுதாயத்தினருக்குத் தேவை. கவிஞர்கள் அனைவரும் சமுதாயம்பற்றிச் சிந்திக்க வல்லவர்கள் என்பது தெளிவு. கவிஞர்களின் சிந்தனைகளைத் தொகுப்பின் விரியும். பக்க வரையறை காரணமாக ஆற்றல் மிகு கவிஞர்கள் அனைவரின் சிந்தனைகளையும் தொகுக்க இயலாது போனாலும் சில கவிஞர்களின் சிந்தனைகளே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

### நிறைவுரை

கவிஞர்கள் உலகளாவிய பார்வை மிக்கவர்கள்; மக்களின் வாழ்க்கை முறைகளை உணர்ந்தவர்கள். அவர்களின் சிந்தனைச் சமுதாயத்தில் உள்ள அனைத்துச் சிக்கல்களையும் வெளிப்படுத்தி, அதற்குத் தீர்வுகளையும் உணர்த்தியிருக்கிறது. இதனைக் கவிஞர்களின் கவிதைகளைக் கற்றுணர்கிறபோது தெளியலாம்.

மகாகவி பாரதியின் சிந்தனைகளிலிருந்து நாடு பற்றியும், பாரதிதாசரின் கவிதைகளிலிருந்து சமுதாயம் பற்றியும் கண்டோம். மேலும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் கவிதைகளில் சமத்துவ நோக்கும் கண்ணதாசனிடமிருந்து தமிழ்ப் பண்பாடும் உணர்த்தப்பட்டது. வைரமுத்துவின் கவிதைகளிலிருந்து சமுதாயச் சிக்கலும் தீர்வும், மேத்தாவின் கவிதைகள் மூலம் இளைஞர்களின் நிலையும் தெளிவுறுத்தப்பட்டன. பொன்னாண்டான் கவிதையின் மூலம் மத நல்லிணக்கமும், தமிழ்மகன் கவிதை கொண்டு கல்வி நிலையையும், அப்துல் காதர் கவிதைவழி விதவை மறுமணம் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. கே. வி. சாமி என்பவரின் கவிதைவழி முயன்றால் முடியும் என்கிற நம்பிக்கையும் தெளிவுறுத்தப்பட்டது.

இவ்வாறு நல்ல பல சிந்தனைகளைக் கவிஞர்கள் சமுதாயத்திற்கு எழுதி ஈந்தனர். எழுதிக்கொண்டும் உள்ளனர். பின்னாளில் எழுதவும் முற்படுவர். இதனைக் கண்ணுறுகிறபோது, அவர்களின் சிந்தனைகள் சமுதாயத்திற்கு நிலையான மறுமலர்ச்சியை ஏற்படுத்தித்தரும் எனலாம்.

---

1. அ. ச. ஞானசம்பந்தன், இலக்கியக் கலை ப. 151
2. பாரதியார் பாடல்கள், ம. ரா. போ. குருசாமி (ப.ஆ), பா. எண். 75, 76, ப. 51
3. மேலது நூல், பா.எண். 1824, ப. 545
4. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப. 158
5. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், பி.இ. பாலகிருஷ்ணன், (தொ.ஆ), ப. 110
6. மேலது நூல், ப. 278
7. கண்ணதாசன், கவிஞர் கண்ணதாசன் திரை இசைப்பாடல்கள், (இரண்டாவது தொகுதி), ப. 6
8. மேலது நூல், பக். 327 - 28
9. வைரமுத்து, சிகரங்களை நோக்கி ப. 79
10. வைரமுத்து, ரத்ததானம் ப. 80
11. மேத்தா, ஒரு வானம் இரு சிறகு, ப. 25
12. தமிழ்மகன், ஆறறிவு மரங்கள்
13. மேத்தா, அவர்கள் வருகிறார்கள், ப. 16
14. கோமல் சுவாமிநாதன், சுபமங்களா, (திங்கள் இதழ்), ப.25
15. கே. பாக்கியராஜ், பாக்யா, (வார இதழ்), ப. 33
16. மேலது நூல், ப. 60

சிதையா நெஞ்சுகொள்.
- பாரதியார்

**ANANDA STORES,** Mundy & Maligai, 168, Thanjavur Road, Tiruchirappalli - 8. Phone : 48961, 48337

## துணைநூற் பட்டியல்


கண்ணதாசன்., கண்ணதாசன் திரை இசைப் பாடல்கள்,
(இரண்டாவது தொகுதி),
வானதி பதிப்பகம்,
13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை - 17,
நான்காம் பதிப்பு, ஜூலை 1988.

குருசாமி ம.ரா.போ., (பதிப்பாசிரியர்), பாரதியார் பாடல்கள், ஆய்வுப் பதிப்பு,
தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு,
தஞ்சாவூர்,
முதற் பதிப்பு. ஏப்ரல் 1987.

ஞானசம்பந்தன் அ.ச., இலக்கியக் கலை,
திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
154, டிடி.கே. சாலை,
சென்னை - 18,
விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு,
திசம்பர் 1993.

தமிழ்மகன்., ஆறறிவு மரங்கள்

பாரதிதாசன்., பாரதிதாசன் கவிதைகள்,
செந்தமிழ் நிலையம்,
இராமச்சந்திரபுரம்,
புதுக்கோட்டை மாவட்டம்,
இருபத்து ஏழாம் பதிப்பு, 1988

பாலகிருஷ்ணன்., பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்,
பி.இ.(தொகுப்பாசிரியர்),
நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை - 600 098,
பதினோராம் பதிப்பு, மே 1987.

மேத்தா மு., ஒரு வானம் இரு சிறகு,
வர்மா பதிப்பகம்,
55, வெங்கட நாராயண ரோடு,
தியாகராய நகர், சென்னை - 17,
ஐந்தாம் பதிப்பு, ஜூன் 1993.

அவர்கள் வருகிறார்கள்,
திருமகள் நிலையம்,
55, வெங்கட நாராயண ரோடு,
தியாகராய நகர், சென்னை - 17,
ஏழாம் பதிப்பு, மே, 1992.

வைரமுத்து: சிகரங்களை நோக்கி,
சூர்யா லிட்ரேச்சர் பிரைவேட் லிமிடெட்,
15, நான்காவது குறுக்குத் தெரு,
டிரஸ்டுபுரம், சென்னை - 24,
நான்காம் பதிப்பு, ஏப்ரல் 1993.

ரத்ததானம்,
சூர்யா லிட்ரேச்சர் பிரைவேட் லிமிடெட்,
15, நான்காவது குறுக்குத் தெரு,
டிரஸ்டுபுரம், சென்னை - 24,
ஆறாம் பதிப்பு, திசம்பர் 1992.

திங்கள் இதழ்
கோமல் சுவாமிநாதன்: சுபமங்களா,
21, மகாலட்சுமி தெரு, தியாகராய நகர்,
சென்னை - 17, பிப்ரவரி 1993.

வார இதழ்
பாக்கியராஜ்: பாக்கியா
1. குப்புசாமி தெரு, தியாகராய நகர், சென்னை - 17,
10-16 செப்டம்பர் 1993.



*செல்வன் இராம. இரவிச்சந்திரன்,*
*ஆய்வு மாணவர்,*
*தமிழாய்வுத் துறை,*
*உறுமு தனலக்குமி கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி - 620 019.*



ஏறுபோல் நட.
- பாரதியார்

**CETHAR VESSELS LIMITED,** 73-B1, Salai Road, Thillai Nagar, Tiruchirappalli - 620 018. Phone : 32551 / 52

# இக்காலக் கவிதைகளில் உணர்த்தப் பெறும் சமுதாயச் சிந்தனைகள்

செல்வி இரா. பெ. செயலெட்சுமி

## முன்னுரை

"உள்ளத்தில் உள்ளது கவிதை இன்பம் உருவெடுப்பது கவிதை" என்றார் கவிமணி. கவிதை என்பது உணர்ச்சியின் வெளிப்பாடு. கட்டவிழ்ந்து துள்ளி வரும் சிந்தனைகள் சொற்கோலமாக விழுவதே கவிதை. கவிஞர்கள், வெடித்துக்கொண்டு வரும் உள்ளத்துணர்வு களை வார்த்தைப் பாத்திரங்களில் பிடித்துத் தருகின்றார்கள். தமிழகத்தில் எத்தனையோ கலைகள் முளைவிட்டுக் கிளைவிட்டிருக்கின்றன. ஆனால் தமிழன்னையின் தலைப்பிள்ளையாய்க் கால வெள்ளத்தையெல்லாம் கடந்து தலைநிமிர்ந்து நிற்பது கவிதைக் கலைதான்.

'இக்காலம்' என்ற சொல், நாம் வாழும் நிகழ்காலத்தைக் குறித்தாலும் இலக்கிய வரலாற்றை நோக்குங்கால், இக்காலம் என்ற சொல், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே கணக்கிடப்படுகிறது. அந்த வகையில் பாரதியின் கைகள் எழுதுகோல் பிடித்த காலம் தொடங்கி, இன்றுவரை எழுந்திருக்கும் ஏராளமான கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் எப்படியெல்லாம் உணர்த்தப்படுகின்றன என்பதை ஈண்டு ஆய்வோம்.

## பொருள்

மனிதன் என்பவன் உணர்வும் அறிவும் கலந்த கலவை. மனிதனுக்குள்ளே இந்த இரண்டு கூறுகளும் இணைந்து செல்லும்போதுதான் ஒரு மனிதன் புகழொளி பெறுகின்றான். மனிதனின் உணர்வுபூர்வமான வாழ்க்கைக்கு இதயத்தையும், அறிவுபூர்வமான வாழ்க்கைக்கு மூளையையும் குறியீடு செய்கின்றோம். மனிதனின் உணர்வுப் பகுதியை மெல்லத் தொட்டு, தன் வயப்படுத்தி, அவன் புலன்களை உழுது முழுமையாக்குவதுதான் கவிதை.

ஓர் ஆங்கில அறிஞனின் கருத்துப்படி, இதயத்தின் இயக்கம் நிறுத்தி, ஆன்மாவை அசைத்துப் பார்த்து, மனித மனத்தைத் தன்வயப்படுத்துவதுதான் கவிதை. கவிதை என்பது எந்தக் காலகட்டத்திலும் தமிழனோடு கைகோர்த்தே வந்திருக்கின்றது. ஏற்றம் இறைக்கும் உழவனும், நாற்று நடும் பெண்ணும்கூட கவிதையாய்ப் பேசியிருக்கிறார்கள். கிராமத்து மண்வாசனையோடு காற்றில் மிதந்து, காலவெள்ளம் கடந்திருக்கின்ற அந்தக் கவிதைகள் ஏராளம்! மருத்துவம், வானவியல், சோதிடம் இப்படி எல்லாவற்றுக்குமே செய்யுள் வடிவம் கொடுத்து சொற்சிலம்பமாடியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

புதியன விரும்பு.
- பாரதியார்

**CETHAR FOOD OIL LTD.**, Juman Centre, 43 A/2, Promenade Road, Cantonment, Tiruchirappalli - 620 001. Phone : 41702, 41664

13 JUN 2001

செய்யுள் வடிவில் செய்தி சொல்வது மட்டுமல்ல கவிதை. சமுதாயத்தை அது எவ்வளவு தூரம் பாதிக்கிறது, மக்களின் மனத்தில் அது எப்படிச் சென்று தங்குகிறது என்பதை வைத்துத்தான் ஒரு கவிதையைத் தீர்மானிக்க முடியும்.

சமுதாயம்

மக்கள் கூடிவாழ்கின்ற இடமே சமுதாயம். இடம் என்றால் ஓரிடத்தில் அமைந்து கிடக்கும் மரங்களையும் கட்டடங்களையும் அது குறிக்காது. அங்குள்ள மனிதர்களை வைத்துத்தான் ஒவ்வொரு சமுதாயமும் குறிக்கப்படுகின்றது. பூமி உருண்டைக்குள் மொழியின் பெயரிலும், நாட்டின் பெயரிலும், நிறத்தின் பெயரிலும், ஆங்காங்கே சின்னச் சின்ன வட்டங்களாய்ச் சமுதாயங்கள். ஒவ்வொரு சமுதாயமும் ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் முதியோர்களையும் இன்னும் சில உயிர்களையும் தனக்குள் சுமந்துகொண்டிருக்கிறது. இங்கே உள்ள அனைவரும் எந்தப் பாதிப்புகளும் இன்றி, நலமாக இருக்கின்றனரா? என்ற கேள்வியில்தான் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி தீர்மானிக்கப்படுகின்றது.

சமுதாயச் சிந்தனை

தன்னைப் பற்றிய கவலையும், தான் அடுத்து என்ன செய்தால் என்ன தீர்வு கிடைக்கும் என்ற சிந்தனையும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. சுய சிந்தனைக்குள்ளே சுருங்கிப்போகும் நிலைதாண்டி, சமுதாயத்தின் வளர்ச்சியில் மகிழ்ந்து, சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தன் நெஞ்சில் சுமந்து, அவற்றின் தீர்விற்காகச் சிந்திப்பதுதான் சமுதாயச் சிந்தனை.

தன்னைச் சுற்றியிருக்கும் உலகத்தில், எந்த மூலையில் பாதிப்புகள் நிகழ்ந்தாலும், தனக்கு நேர்ந்ததாக எண்ணி, மனங்கொதிப்பதுதான் சமுதாயச் சிந்தனையின் முதல் நிலை. அந்தப் பாதிப்புகளின் தீவிரத்தை மக்களுக்கு உணர்த்தி அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண மக்கள் சக்தியை உந்தித் தள்ளுவதுதான் உண்மையான கவிதை. இந்த வகையில் நம் கவிஞர்கள் பெரும்பாலோர் சமுதாயச் சிந்தனைகளைத்தாம் கவிதையாகவே ஆக்கியிருக்கிறார்கள்.

பாரதியார்

நம் இலக்கிய வரலாற்றில் இக்காலத்தைத் தன் தீந்தமிழால் திறந்து வைத்துக் களத்தில் குதித்தான் பாரதி. முப்பத்து ஒன்பதாம் வயதிலேயே தன் மூச்சடக்கிக் கொண்ட அந்தக் கவிதைச் சூரியன், தன் கவிதைகளால் ஆங்கில ஆதிக்கத்தின் வேரை, ஆட்டி ஆட்டி அசைய வைத்தது. புத்தக வாசனையில்லாமல் புழுதியில் கிடந்த மக்களைச் சத்தம் போட்டு அழைத்தது அந்தச் சங்கீதக் குயில். தூக்கத்திலும், ஏக்கத்திலும், அறியாமை இருட்டிலும், அடங்கிக் கிடந்த ஆள்களையெல்லாம் அறைந்து எழுப்பியது அவனது கவிதை.

"சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் - இனி - அஞ்சிடோம்
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ? - தெய்வம் - பார்க்குமோ?"

பாரதியின் இந்த வரிகள், தம் சமகால மனிதர்களின் ஒருமித்த முழக்கமன்றோ?

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா
இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்; கருகத் திருவுளமோ?"

பாரதியின் நெஞ்சிலிருந்து வந்த இந்தக் கண்ணீர் சமுதாயக் கண்ணீரல்லவா?

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்ப
தில்லையே"

அறியாமை இருளில் அஞ்சியஞ்சிச் செத்துக் கொண்டிருந்த மனிதர்களைத் துள்ளி எழுந்து நிற்க வைக்க, இதைவிடச் சிறந்த வார்த்தைகள் எங்கே இருக்கமுடியும்?

"ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே"

வர்க்கப் பிரச்சினையும், சாதிப் பிரச்சினையும் தகர்த்தெறியத் துடிக்கும் பாரதியின் வலுவான கனவல்லவா இந்த வரிகள்?

நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும், மனித நேயத்தையும் தம் கவிதைகளில் குழைத்து மக்களுக்கு ஊட்டிய பாரதி, பெண்ணடிமையை எதிர்த்தும் பெருங்குரலெழுப்பினான். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று வார்த்தைகளைத் தீப்பந்தமாக்கினான்.

"தனியொருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்!"

யாரையும் மதித்துவாழ.
- பாரதியார்

THE POPULAR AUTOMOBILES (P) LTD., 4, Bharathiar Salai, Tiruchirappalli - 620 001. Phone : 40592

என்று ஏழ்மையின் கண்ணீரை உலகமெரிக்கும் ஊழித் தீயாக்குகிறான். சமுதாயச் சிந்தனைகள் இப்படியெல்லாம் பாரதியின் கவிதைகளில் ஒட்டுமொத்தமாய்க் குவிந்து கிடப்பதை எவராலும் மறுக்கமுடியாது.

### பாரதிதாசன்

சுதந்திரத்திற்குப் பின் மொழிப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் இன்றி அன்னிய மோகத்தில் மயங்கிக் கிடந்த மனிதர்களைத் தம் கவிதைகளால் காப்பாற்றத் துடித்தவர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ்ப்பற்றையும், இனப்பற்றையும் தம் கவிதைகளுக்குக் கவசமாக்கினார் இவர். பொதுவுடைமைக் கருத்துகளும், பெண்கல்வியும், விதவைகள் மறுமணமும் இவரது சிந்தனையில் பூத்த செவ்வந்திப் பூக்கள்.

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது சிறுத்தையே வெளியில் வா"

இஃது அன்னிய ஆதிக்கத்தில் தளர்ந்துபோன தமிழ் இளைஞனுக்குக் கவிஞர் விடுக்கும் வீர அழைப்பு.

"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தாற்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?"

புழுதியில் விழுந்த மலர்களாய், இளமையில் விதவைக் கோலம் பூண்டு வீழ்ந்து கிடக்கும் மங்கை மலர்களுக்கு மறுமணம் என்ற புதுநெறியை வகுத்துக் கொடுத்து, அவர்களுக்காக வாதாடும் வரிகள் இவை.

"சிரம்அறுத்தல் வேந்தனுக்குப் பொழுது போக்கும்
சிறியகதை நமக்கெல்லாம் உயிரின் வாதை"

இப்படிப் பணத்தாலும் பதவியாலும் உயிர்களுக் கிடையே விளையும் ஏற்றத்தாழ்வுகளை, மன்னராட்சியின் கொடுமையைக் குத்திக்காட்டிப் புத்தி சொல்கிறார். பாவேந்தர் குடும்ப விளக்கில் "நாடு நமக்கென்ன செய்தது என்று கேளாமல் நாட்டிற்கு நாமென்ன செய்தோம் என்று சிந்திப்பதே சிறப்பு" என்ற இவரின் கருத்து ஒவ்வொருவர் மனத்திலும் விதையாக விழவேண்டிய சமுதாயச் சிந்தனை. இப்படி ஏராளமான சமுதாயச் சிந்தனைகளைச் சுமந்துகொண்டு பொங்கி விரைந்து காட்டாறாய் ஓடுகிறது பாவேந்தரின் கவிதைகள்.

### கவிமணி

தெளிந்த தமிழில் எளிமையாய் வந்து இதயத்திற்குள் அமர்ந்துகொள்ளும் கவிமணியின் கவிதைகள்; எப்போதும் எதிர்கொண்டழைக்கும் தோழமைக் கரங்கள். பெண்ணுரிமை கருத்துகளும், பொதுவுடைமைக் கருத்துகளும் இன்னும் எத்தனையோ சமுதாயச் சிந்தனைகளும் இவரது கவிதைகளில் நிறைய உண்டு.

"பாடுபடுபவற்கே - இந்தப்
பாரிடம் சொந்தமய்யா"

உழைப்பு வேள்வியில் விறகாய் எரிந்து வேர்வை பிழியும் தொழிலாளியைத் தூக்கி நிறுத்தி அவனுக்குரிய உரிமையை உண்மையை எளிமையாய்ச் சொல்கிறார் கவிமணி.

"உழுது பயிர்செய்வோன் - வயிற்று
உணவு பற்றாமல்
அழுதழுது நிதம் - நிற்ப
தறியீரோ ஐயா"

இஃது உழைப்பாளியின் துன்பத்தில் கரைந்துபோன கவிமணியின் கனமான கண்ணீர்.

"ஏழை என்றொருவன் - உலகில்
இருக்க லாகாதையா"

இந்த வரிகளில் புதைந்து கிடக்கும் கவிமணியின் வருங்காலக் கனவு; அவரது ஆழமான சமுதாய நேசத்திற்கும் சிந்தனைக்கும் சான்று.

### நாமக்கல் கவிஞர்

காந்தியடிகளின் அகிம்சை வழியை அழுத்தமாய்ச் சொன்னவர் நாமக்கல் கவிஞர். இவருடைய கவிதைகளிலும் ஏராளமான சமுதாயச் சிந்தனைகளுமுண்டு. சாதியின் பெயரிலும், மதத்தின் பெயரிலும் சண்டையிட்டுச் சாகும் சமுதாயத்தைத் தம் கவிதைகளால் நெறிப்படுத்திய பெருமை இவருக்கு உண்டு.

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும்யாரும் சேருவீர்"

என அறவழியில் உரிமைப் போருக்கு உலகை அழைத்துச் செல்லும் ஆழமான வரிகள் இவை.

### பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்

பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் பட்டுக் கோட்டையை அடுத்துள்ள செங்கப்படுத்தான்காடு எனும் சிற்றூரின் மடியில் முளைவிட்ட கற்பகமரம். இவருடைய கவிதைகளிலும், திரைப் பாடல்களிலும் சமுதாயச் சிந்தனைகள் நிறைய உண்டு என்று சொல்வதைவிடச்

தெய்வம் நீ என்றுணர்.
- பாரதியார்

ஸ்ரீ ரங்கவிலாஸ், 81, கடைவீதி, துறையூர் - 621 010. தொ. பே. : 22776

சமுதாயச் சிந்தனைகள்தாம் இவரது கவிதைகள் என்று சொல்வதே பொருத்தம். முப்பது வயதிற்குள் மூச்சடங்கிப் போனாலும் கவிதை வானில் முடியாத கவிதை இவர்.

"வாழை நிலைக்குது, சோலை தழைக்குது
ஏழைகளுக்கதில் என்ன கிடைக்குது?
கூழைக் குடிக்குது, நாளைக் கழிக்குது ;
ஓலைக் குடிசையில் ஒண்டிக் கிடக்குது !
காடு வெளைஞ்சென்ன மச்சான் - நமக்கு
கையும், காலுந்தானே மிச்சம்"

இந்த வரிகள் ஏழைகளோடு ஏழையாகக் கூழைக் குடித்து, இவர்களின் ஏழ்மையைப் பகிர்ந்து கொள்ளும் ஈரவரிகள். சின்னப் பையனை அழைத்துச் சேதி சொல்லும் கவிஞரின் திரைப்பாடல் கவிதை வானில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு.

"தனியுடைமைக் கொடுமைகள் தீர தொண்டு செய்யடா
தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா"

இப்படிப் பிஞ்சு மனத்தில் பொதுவுடைமைப் பதியம் போடுகிறார் கவிஞர். சொற்களில் எந்த அலங்காரமும் இன்றி எளிமையாய் இதயத்தை ஈரமாக்க இவரால் மட்டுமே முடியும்.

### கண்ணதாசன்

கண்ணதாசன் கவிதைகளிலும் சமுதாய நேசமும், சிந்தனைகளும் நிறைய உண்டு. "சுதந்திரம் என்ன?" என்ற கவிதையில் அரசியலையும், அடுத்தவர்களையும், குறைகள் கூறிக்கொண்டு, சோம்பித் திரியும் மக்களைப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர். தேடிச்சோறு நிதம் தின்று, பல சின்னஞ் சிறிய கதைகள் பேசி, வாழ்நாளை வீணாக்கும் வீணர் கூட்டத்தால் விளையும் கேடுகளைக் கூறிக்கொண்டு வரும் இவர்,

"நாடு முன்னேற நலங்கள் பெருக
வேண்டுமென்றால் விதியொன்று செய்வோம்
ஜனநாயகத்தைச் சற்றே நிறுத்திச்
சவுக்கை எடுப்போம் தரித்திரம் நீங்கும்"

என்று கூறிமுடிக்கிறார். இந்த வரிகளில் தெரியும் கவிஞரின் கோபம், தனிமனிதக் கோபமன்று; சமுதாயத்திற்காக எழுந்த நியாயமான கோபம்.

### இன்றைய பிரச்சினைகள்

இதுவரை நாம் எடுத்துப் பேசிய கவிஞர்களின் வரிகளெல்லாம் ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பும், அதற்கு முன்பும், வாழ்ந்த இருபதாம் நூற்றாண்டுச் சமுதாயச் சிக்கல்களைப் பேசியவை. அதற்குத் தீர்வு சொன்னவை. ஆனால் இப்போது வாழும் இந்த உலகத்தில் பிரச்சினைகள் இன்னும் வளர்ந்திருக்கின்றன. கவிஞர்களின் எண்ணிக்கையும் வளர்ந்திருக்கிறது. கவிதையின் வடிவும் மாறியிருக்கின்றது. இன்றைய மனிதனின் வாழ்க்கையில் அமைதியில்லை. எந்திரத்தோடு எந்திரமாக மனிதன் ஓடிக்கொண்டிருக்கின்றான். இலக்கியங்களையும், கவிதைகளையும் சுவைப்பதற்குக் கூட அவனுக்கு அவகாசமில்லை. இலக்கியம் படித்து இதயம் வளர்ப்பதைவிட எப்படியாவது மூளை வளர்த்து முன்னேறத்தான் அவன் முயற்சி செய்கிறான். இந்தச் சூழலில், சமுதாய அமைப்பில் புரையோடிப் போன புண்களாக ஏராளமான பிரச்சினைகள்.

வேலையில்லாத் திண்டாட்டம், மக்கள்தொகைப் பெருக்கம், வரதட்சணைக் கொடுமை, மதப்போர், சாதிச்சண்டை, ஆயுதக்குவிப்பு, அரசியல் கூத்துகள், லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, இளம் தொழிலாளர் பிரச்சினைகள் இப்படி எத்தனை, எத்தனையோ பிரச்சினைகள் நம் கண்முன் பூதாகரமாய் எழுந்து நிற்கின்றன. இந்தப் பிரச்சினைகள்தாம் இன்றைய கவிஞர்களுக்குப் பாடு பொருள்களாகின்றன.

இவர்களது கவிதைகள், ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கின்றன. கோழைகளை நிமிர வைக்கின்றன. மனங்களின் மூடங்களை நீக்குகின்றன. மதங்கட்குச் சூடு போடுகின்றன. சகதியில் கிடக்கும் உண்மைகளை எடுத்துச் சலவை செய்கின்றன. நீதிமன்றத்தில் சட்டையைப் பிடித்து நியாயங்களைக் கேட்கின்றன. உலவும் தென்றலாய் நம்மோடு வருகின்றன. ஊழித்தீயாய் இவ்வுலகை எரிக்கின்றன.

### வைரமுத்து

புதுப்புது சிந்தனைகளும், புலன்களை விழிக்க வைக்கும் புதிய வரிகளும் சமுதாயச் சிந்தனைகளும், வைரமுத்துவின் கவிதா விலாசங்கள்.

"அவன் ஒரு பட்டுவேட்டி பற்றிய
கனாவில் இருந்தபோது
கட்டிய கோவணம் களவாடப்பட்டது"

*1947 ஆகஸ்ட் 15* என்ற தலைப்பில் கவிஞரின் இந்தக் கவிதை, சுதந்திரத்தின் இன்றைய நிலைக்கு ஒரு அருமையான குறியீடு.

"எரிமலை எப்படிப் பொறுக்கும்?
நெருப்புக்கு இன்னுமா உறக்கம்?
சிங்கக் கூட்டம் நிமிர்ந்தால் - அந்தச்
சிறையின் கதவு திறக்கும்

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே.
- பாரதியார்

**THE MERCHANTS ASSOCIATION,** Turaiyur - 621 010. Tiruchirappalli District. Phone : 524

CONNEMARA PUBLIC LIBRARY
13 JUN
CHENNAI



**சு. அறிவழகன்,**
கவின்கலை இளங்கலை, மூன்றாம் ஆண்டு,
அரசினர் கலைத்தொழிற் கல்லூரி,
கும்பகோணம்.

## 22. ஊழித் தாண்டவம்



"கருவறை மூழ்கி கலந்தெழும் வெள்ளத்
திருவரங் கோவென் நிலை இறைவன்
ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி
அருவரை யால் நின்றருள் புரிந்தானே."


ச. செங்கோட்டுவேல்,
இளநிலை வணிக நிர்வாகவியல் (இறுதியாண்டு),
செங்குந்தர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நெய்க்காரப்பட்டி, குப்பாண்டபாளையம் அஞ்சல்,
திருச்செங்கோடு - 637 205.

இது கண்ணீர் விற்கும் ஜாதி - இனி
அழுதால் வராது நீதி! "

உழைப்பாளி வர்க்கத்தின் உடலில் புது ரத்தமாகப் பாய்ந்து புலன்களை விழிக்க வைக்கின்றன இந்த வரிகள்.

"மனிதா மனிதா இனியுன் விழிகள்
சிவந்தால் உலகம் விடியும்
விழியில் வழியும் உதிரம் முழுதும்
இனியுன் சரிதம் எழுதும்"

இளைய தலைமுறையின் நரம்புகளை முறுக்கேற்றித் தன்னம்பிக்கையோடு எழுந்து நிற்க வைக்கிறது இந்த வரிகள். இவருடைய "இரும்படிக்கும் ரோஜாக்கள்" என்ற கவிதை சிவகாசி கந்தகக் கிடங்குகளிலும், அலிகார் பூட்டுத் தொழிற்சாலைகளிலும், காஷ்மீர் கம்பளத் தொழிற்சாலைகளிலும் மேற்கு வங்கச் செங்கற் சூளைகளிலும், சூரத் வைரத் தொழிற்சாலைகளிலும், பெரோஸாபாத்தின் வளையல் கூடங்களிலும், டெல்லி டீக்கடைகளிலும், இன்னும் எத்தனையோ இடங்களிலும் படிக்கின்ற வயதில், பாரம் சுமந்து பாகாய் உருகும் பிள்ளை நிலவுகளின் கண்ணீர்க் கதை சொல்லி, நம்மைக் கரைய வைக்கின்றது.

"கூப்பிடுங்கள் குழந்தைகளை
அங்கங்கே தேசமெங்கும்
இரும்படிக்கும் ரோஜாக்களை
பொதி சுமக்கும் பூக்களை
தாய்ப்பாலுக்கு சம்பளம் கட்ட
சம்பாதிக்கும் சிசுக்களை
சிலுவையில் அறையப்பட்ட
சின்னச்சின்ன ஏசுக்களை
கூப்பிடுங்கள் நேருஜி!
குழந்தைகள் தினம்
கொண்டாட வேண்டும்!

இப்படி இளந்தொழிலாளரின் நிலைமை சொல்லி நம்மை நெகிழ வைக்கிறார் கவிஞர். இப்படிச் சமுதாயச் சிந்தனைச் சாரமாக இவருடைய கவிதைகள் நிறைய உண்டு.

## மேத்தா

இலங்கையில் போர்க்கால நெருக்கடியில், தன் பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, திரும்பி வரும் நேரம் தவறியும் பிள்ளை வராதபோது, ஒரு தாய் தவிக்கிறாள். அத்தாயின் மனத் தவிப்பை, தாயாகத் தாம் மாறி எழுதிக்காட்டி, நம் கண்களை ஈரமாக்குகின்றார் கவிஞர் மேத்தா.

"நாடு காக்கப்போன கணவன் வீடு திரும்பல
காடையர் தேடும் தமையன் ஈழப்படையிலே
கற்பைக் காக்கச் செத்த தங்கை ரத்தம் உறையல
மீதி உள்ள சொந்தமிந்தப் பிள்ளை வடிவிலே
தேடிப்போக முடியவில்லையே!
எதையும் தெரிந்துகொள்ள வகையுமில்லையே
சோறு ஆறிப்போச்சு - என்
பிள்ளை என்ன ஆச்சு"

இப்படி இவருடைய கவிதைகளிலும் சமுதாயச் சோகமும், சிந்தனைகளும் நிறைய உண்டு.

## அப்துல் ரகுமான்

வித்தியாசமான சொல்லாட்சியில் நம்மை வியக்க வைக்கும் கவிஞர் இவர். முரணையும் குறியீட்டையும் போலவே சமுதாயச் சிந்தனைகளும் இவரது கவிதைகளில் ஏராளம்.

"வரங்களே சாபங்களாகுமென்றால்
இங்கே தவங்கள் எதற்காக?"

'திட்டங்கள்' என்ற தலைப்பில் கவிஞர் எழுதிய இந்தக் கவிதை, முரண் என்ற உத்திக்குள் நம்மை முழுதுமாய்ச் சிந்திக்க வைக்கிறது.

உவமைக் கவிஞர் சுரதா, தமிழன்பன், நா. காமராசன், சிற்பி, புதுக்கவிதை முன்னோடி ந. பிச்சமூர்த்தி இப்படி எத்தனையோ கவிஞர்கள் சமுதாயச் சிந்தனைகளைத் தம் கவிதைகளில் புதையலாக்கி நமக்குத் தந்திருக்கிறார்கள்.

நாட்டின் இன்றைய நிலையைப் பார்த்துக் கொதித்துப்போன இன்றைய கவிஞர் ஒருவர்,

"சுயநல உணர்வுகள் பெருகிப்போச்சு
சுதந்திர தேவியின் மானம்போச்சு
கயவரின் பெருமை எங்கும்பேச்சு
காத்திடும் கடவுளும் தூங்கிப்போச்சு
தர்மங்கள் சட்டங்கள் எல்லாமிங்கே
சாலையில் நடக்கின்ற கூத்தாய் ஆச்சு"

என்று மனங்கொதிக்கும்போது நம்முடைய மனமும் சமுதாயச் சோகம் சுமந்து கனமாகிறதல்லவா? இப்படி எத்தனையோ இளம் கவிஞர்கள் சமுதாயச் சிந்தனையோடு எழுதுகோல் எடுத்து நம் இதயங்களை ஈரமாக்கி இருக்கிறார்கள். சமுதாயத்தின் கண்ணீரையெல் லாம் தம்மிரு கண்களால் மொத்தமாய் அழுதிருக்கிறார்கள்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.
- பாரதியார்

ஸ்ரீ அஷ்டலெட்சுமி ஜுவல்லர்ஸ், 12பி, துறையூர் ரோடு, முசிறி, தொலைபேசி எண் : 273

## முடிவுரை

இப்படி இதயக் குமுறல்களோடு சமுதாயத்தின் பிரச்சினைகளை அலசிப் பார்க்கும் எத்தனையோ கவிதைகளுக்கிடையே வெறும் விரசத்தைத் தமிழாக்கி வேடிக்கை காட்டும் தரக்குறைவான பாடல்களும் பெருக ஆரம்பித்துவிட்டன. திரைப்பாடல் வடிவில் கவிதை காற்றில் மிதந்து வந்து, மென்மையாய் இதயம் தொடும் காலம் போய், செவிப்பறை கிழிக்கும் சப்தத்திற்குள், வார்த்தைகள் கொத்தப்படும் அவல நிலைகளும் ஆரம்பமாகிவிட்டன.

வாழ்க்கையையும், நிகழ்காலத்தையும் சமுதாயச் சிந்தனைகளையும் புறக்கணித்து எழுதப்பெறும் கவிதைகளில், நிச்சயமாய் உயிர் இருக்க முடியாது. வாழ்க்கையோடும் நிகழ்காலத்தோடும், நெருங்கிப் பேசி, சமுதாயச் சிந்தனைகளோடு அவலங்களை எதிர்க்கும் அக்கினியாகக் கவிதைகள் இன்னும் வரவேண்டும். அக் கவிதைகளின் சக்தி, இலக்கியத்தையும், சமுதாயத் தையும் இன்னுமொரு மறுமலர்ச்சிக் காலத்திற்கு இழுத்துச் செல்ல வேண்டும். புது விடியலை நோக்கி நாம் புறப்பட, நம் கவிஞர்களின் கரங்கள் நாள் குறிக்க வேண்டும்.

**செல்வி இரா. பெ. செயலெட்சுமி,**
ஆய்வு மாணவி,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - *613 001.*



இடுக்கண் வருங்கால் நகுக.
- திருக்குறள் : 621

அழகப்பா சிமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 2, கொத்துகார நல்ல வீதி, ஈரோடு, - 638 001

# ஆன்மிகமும் அறிவியலும்

செல்வன் இ. சேனாவரையன்

## முன்னுரை

மனித வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாதனவாகத் திகழ்வது ஆன்மிகமும், அறிவியலும். இவை வாழ்க்கைக்கு உறுதுணையாகத் திகழும் திறத்தைத் தத்துவங்களும், இலக்கியங்களும் உணர்த்துவதைக் காண்போம்.

## ஆன்மிகமும் அறிவியலும்

உயிர்க்கு ஆன்மா என்ற பெயரை வேதாந்த நூல்களாகிய உபநிடதங்கள் கூறுகின்றன[1]. உயிரைப் பற்றியும், அதற்குத் தலைவனாகிய இறையைப் பற்றியும், உயிர் இறையை அடைவதற்குத் தடையாக உள்ள மூன்று மலங்களைப் பற்றியும் எழும் சிந்தனை ஆன்மிகம் எனப்படும்.

இயற்கையின் ஆற்றலை உணர்ந்து, அதனை வாழ்க்கைக்கும் பயன்படுத்திக்கொள்வது அறிவியல் எனப்படும்.

இந்த ஆன்மிகத்தை மெய்ஞ்ஞானம் என்றும், அறிவியலை விஞ்ஞானம் என்றும் வழங்குவர்.

இம்மை வாழ்வுக்கு உதவும் விஞ்ஞானத்தைவிட, மறுமை வாழ்வுக்கு உதவும் மெய்ஞ்ஞானமே உயர்ந்தது. அறிவியல், காரண காரியங்களை ஆராய்ந்துகொண்டே செல்லும். காரணமின்றிக் காரியம் நிகழாது என்பது அறிவியலின் முடிவு. ஒரு காரியத்துக்கு எது காரணம், அதற்கு எது காரணம்? என அறிவியல் தன்னால் முடிந்தமட்டும் ஆராய்ந்துகொண்டே செல்லும்.

## காரணமும் காரியமும்

மரம் தோன்ற எது காரணம்? விதை. அந்த விதை தோன்ற எது காரணம்? ஒரு மரம். இப்படியே ஆராய்ந்து கொண்டு சென்றால், முதன்முதலில் ஒரு விதையோ, ஒரு மரமோ தோன்றியிருக்க வேண்டும் என்ற முடிவு தெரிகிறது.

கோழி தோன்ற எது. காரணம்? முட்டை. அந்த முட்டை தோன்ற எது காரணம்? ஒரு கோழி இப்படியே ஆராய்ந்துகொண்டு சென்றால் முடிவில் ஒரு கோழியோ, முட்டையோ முதன்முதலில் தோன்றியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவோம்.

அப்படி முதன்முதலில் விதை அல்லது முட்டை போன்ற உயிர்த் தோற்றத்திற்கு மூலமான ஒன்றை ஒருவர்

திறனறிந்து சொல்லுக சொல்லை.
- திருக்குறள் : 644

கரூர் ஷராப் வியாபாரிகள் சங்கம், கரூர்

படைத்திருக்க வேண்டும். எனவே, படைத்தவர் ஒருவர் இருக்கத்தான் வேண்டும் என்ற முடிவுக்குக் கொண்டு செல்வது ஆன்மிகம்.

இரவுபகல் எவ்வாறு தோன்றுகின்றன? இந்த வினாவுக்கு அறிவியல் என்ன விடை கூறும்? பூமி சுழலுவதால் இரவுபகல் உண்டாகின்றன என்று பதில் கூறும். பூமி ஏன் சுழலுகிறது என்று கேள்வி கேட்டால் அறிவியல் விடை கூறாமல், கூற முடியாமல் அமைதியாகிவிடும்.

மழை எப்படிப் பெய்கிறது? இந்தக் கேள்விக்கு, ஏரி, குளம், குட்டை, கடல் ஆகிய நீர்நிலைகளிலுள்ள நீர் ஆவியாக மாறி, மேலே சென்று, மேகமாகத் திரளும். குளிர்ந்த காற்று பட்டவுடன் மழையாகப் பெய்யும் என்று விஞ்ஞானம் விரிவான விடை சொல்லும்.

ஏரி, குளம், குட்டை, கடல் ஆகிய நீர்நிலைகளில் உள்ள நீர் ஏன் ஆவியாக மாறுகிறது? சூரிய வெப்பத்தால் என விடை வரும்.

### காரண கர்த்தா

சூரியன் ஏன் வெப்பமாக இருக்கிறான்? என்று கேள்வி கேட்டால் அறிவியல் பதில் சொல்லாமல் அமைதியாகிவிடும். ஆனால், ஆன்மிகமோ, "சூரியனில் வெப்பத்தை வைத்தவன் ஒருவன் இருக்கிறான்" என்று விடை பகரும்.

'தீயினுள் தெறல்நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும்நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்புநீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறைநீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களும் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ" [2]

"நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின் தண்மையும் சாயலும் திங்களுள
நின் சுரத்தலும் வண்மையும் மாரியுள
நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள
நின் நாற்றமும் ஒண்மையும் பூவையுள
நின் தோற்றமும் அகலும் நீரினுள
நின் உருவமும் ஒலியும் ஆகாயத்துள
நின் வருதலும் ஒடுக்கமும் மருத்தினுஉள" [3]

எனப் பரிபாடல் சுட்டுவது போல இயற்கைப் பொருள்களில் ஒவ்வொன்றிற்கும் சில இயல்புகள் உள்ளன. அந்த இயல்புகளை அவற்றிற்குத் தந்தவன், அந்த இயல்புகளாகவே இருப்பவன் ஒருவன் உளன். அவன் இறைவன், இயவுள், கடவுள் என்று அழைக்கப்படுவன். இவ்வாறு ஆன்மிகம் கூறும். அறிவியல் இந்த அளவுக்குச் செல்வதில்லை. செல்லுமாயின் அது விஞ்ஞானம் என்ற நிலையிலிருந்து மெய்ஞ்ஞானம் என்ற நிலைக்கு உயர்ந்துவிடும். அறிவியல் ஆன்மிகம் ஆகிவிடும்.

### தமிழ்மொழியியலில் ஆன்மிகம்

மொழியியல் அறிவியலைச் சார்ந்தது. தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த சான்றோர்கள் ஆன்மிக உணர்வுடையவர்கள். எழுத்து இன்னது என்பதை விளக்க முற்படும் பவணந்தியார்,

"மொழிமுதற் காரண மாம்அணுத் திரள்ஒலி
எழுத்து;அது முதல்,சார்பு எனஇரு வகைத்தே" [4]

என்றார். ஈண்டு ஒலியின்து நுட்பத்தை அணு என்றார். அணுத்திரள்தான் எழுத்திற்குக் காரணம். எழுத்துதான் மொழிக்குக் காரணம் என்கிறார்.

"எழுத்து உரு எழுத்து, உணர்வு எழுத்து, ஒலி எழுத்து, தன்மை எழுத்து என நான்கு வகை. ஒலி எழுத்து, சிறப்புடையதாகலின் 'சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல்' என்ற உத்தியால் எடுத்துக்கொண்டார்.

"சிதலது நீர் வாய்ச்சிறு துகளால் பெரும் புற்றுருவம் அமைந்த பெற்றியது என்ன ஐம்புலப் பேருரு ஐந்தும் ஐந்து அணுவால் இம்பரில் சமைவது யாவரும் அறிதலின், அநாதி காரணமாகிய மாயையினை ஈண்டுக் கூறாது, ஆதி காரணமாகிய செவிப்புலனாம் அணுத்திரளை எழுத்திற்கு முதற்காரணம் என்றார். இவ்வாசிரியர்க்கு மாயை உடன்பாடன்று" [5] என்கிறது நன்னூல் விருத்தியுரை.

### உலகத் தோற்றம்

உலகத் தோற்றத்திற்குக் காரணமாகச் சொல்லப்படுகின்ற மாயை முதலியவற்றை ஒப்புக் கொள்ளாமல், அணுக்களினாலேயே எல்லாப் பொருள்களும் அமைவன என்று கூறுகின்ற தமது ஆருகத சமயத்தை விளக்குதற்பொருட்டு அணுத்திரள் என்ற அவசியமில்லாத அடைமொழி கொடுத்தார்.

"நிலம்,தீ, நீர்,வளி, விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் . . . . ." [6]

என்னும் நூற்பாவில், உலகம் என்பது ஐம்பூதங்களின் சேர்க்கை எனக் கண்டறிந்து தொல்காப்பியம் கூறியது அறிவியல். இதனை,

"சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு" [7]

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக.
- திருக்குறள் : 711

**சக்தி சிமெண்ட்ஸ்,** 43 கிரேடு, டமாஸ்கஸ் ரோடு, நியூபோலேண்ட்ஸ், சேலம் - 636 016. தொ. பே. : 0427 - 447097

என்ற குறளும், அதன் உரையும் வலியுறுத்தும். சாங்கிய தத்துவத்தை இக் குறள் கொண்டு பரிமேலழகர் விளக்கி உரைப்பது ஆன்மிகம்.[8]

## எழுத்தின் பெயர்கள்

எழுத்துகளுக்கு உயிர் என்றும், மெய் என்றும் பெயரிட்டிருப்பது ஆன்மிக உணர்வுக்கு எடுத்துக்காட்டு.

"அம்முதல் ஈராறு ஆவி கம்முதல்

மெய்ம்மூ வாறுஎன விளம்பினர் புலவர்" [9]

என்னும் நூற்பாவினுக்கு, "ஆவியும் மெய்யும் போறலின் இவ்விருவகை எழுத்திற்கும் ஆவி, மெய் என்பன உவமவாகு பெயராய்க் காரணப் பொதுப்பெயராயின" [10]. என உரை கூறுகிறார் விருத்தியுரையாசிரியர்.

உயிர் தனித்தும், உடம்பொடு கூடியும் இயங்கும். அதுபோல் அகர முதல் ஔகார இறுவாய் பன்னிரண்டு எழுத்துகள் தனித்தும் மெய்யெழுத்துகளோடு கூடியும் இயங்கும். ஆதலால், அவை உயிர் எனப்பட்டன. தனித்து இயங்கும் ஆற்றலின்றி உயிரோடு சேர்ந்தே இயங்குவதால் ககர முதல் னகர இறுவாய் பதினெண் எழுத்தும் மெய் எனப்பட்டன.

## அகரமும் ஆண்டவனும்

அகரம் என்றவுடன் ஆண்டவன் நினைவு வருகிறது தமிழருக்கு.

"ஔகார இறுவாய்ப்

பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப" [11]

என்கிறது தொல்காப்பியம். அதற்கு உரை வரைந்த நச்சினார்க்கினியர், இதுவும் ஆட்சியும் காரணமும் நோக்கியதோர் குறி. மெய் பதினெட்டினையும் இயக்கித்தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிர் ஆயிற்று. இவை மெய்க்கு உயிராய் நின்று மெய்களை இயக்குமேல் உயிரென வேறோர் எழுத்து இன்றாம் பிற எனின், மெய்யில் நிற்கும் உயிரும், தனியே நிற்கும் உயிரும் வேறு என உணர்க. என்னை? அகரமுதல (குறள், 1) என்புழி அகரம் தனி உயிருமாய்க் ககரவொற்று முதலியவற்றிற்கு உயிருமாய் வேறு நிற்றலின், அவ்வகரம் தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையுடைத்தென்று கோடும். இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும் பல்லுயிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்கும் தன்மையும் போல். அது 'அ' என்ற வழியும் ஊர என விளியேற்ற வழியும், 'அகரமுதல' என்ற விரியும், மூவினங்களில் ஏறின வழியும் ஓசை வேறுபட்டவாற்றான் உணர்க" [12] என்கிறார்.

அகரம் தனித்தும், மெய்களோடு கலந்தும் நிற்பதை விளக்க முற்படுங்கால் இறைவன் தனித்தும், உயிர்களோடு கலந்தும் நிற்கும் ஆன்மிகச் செய்தி 'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்' நினைவில் தோன்றுவது கவனிக்கத்தக்கது.

மேலும், 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்ற (தொல்காப்பியம் : மொழிமரபு - 13) நூற்பாவுக்கு உரை எழுதுங்கால், 'இங்ஙனம் மெய்க்கண் அகரங் கலந்து நிற்குமாறு கூறினாற் போலப் பதினோருயிர்க் கண்ணும் அகரங் கலந்து நிற்கும் என்பது ஆசிரியர் கூறார் ஆயினார். அந்நிலைமை தமக்கே புலப்படுதாலும், பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானும் என்று உணர்க. இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற் போல, அகரமும உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது, 'அகர முதல' என்னும் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துகளெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகமென வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் எழுத்துகளில் அகரமாகின்றேன் யானே எனக் கூறியவாற்றானும் பிற நூல்களானும் உணர்க'[13] என்கிறார்.

இங்ஙனம் இலக்கணம் என்னும் அறிவியல் கலையில், ஆன்மிக உணர்வு வெளிப்படுவதை நோக்குங்கால், தமிழ்ச் சான்றோர்களின் பக்குவப்பட்ட உள்ளங்களைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

## இலக்கியத்தில் ஆன்மிகம்

இலக்கியம் என்பது ஒரு கலை. அதுவும் அறிவியல் சார்ந்த கலையே. "இலக்கியம் ஒரு படைப்பு; மேலும் அஃது ஒரு கலை. இலக்கியக் கல்வி நுட்பமான அறிவியல் அன்று எனினும், அறிவு அல்லது கல்வியின் பிரிவுகளில் ஒன்று" [14] என்பர்.

இலக்கியத்தில் உளவியல் உண்டு; வரலாற்றியல் உண்டு; நிலவியல் உண்டு; தத்துவம் உண்டு. இவ்வாறு பல

பணியுமாம் என்றும் பெருமை.

- திருக்குறள் : 978

**S. NACHIMUTHU GOUNDER & CO.**, Post Box No. 148, Ramakrishnapuram, Karur - 639 001. Phone : 23262

அறிவியற் கலைகளின் இருப்பிடமாக இலக்கியம் திகழ்கிறது. ஆதலால், அதனை அறிவியல் சார்ந்த கலை என்கிறோம்.

இலக்கியமாம் அறிவியலில், ஆன்மிகம் எவ்வாறு தலைதூக்கி நிற்கிறது என்பது ஆராயத்தக்கது.

சங்க காலத்தில் வானியல் பற்றிய மிகத் தெளிவான சிந்தனை தமிழகத்தில் இருந்தது. இதனை மெய்ப்பிக்கும் சான்றுகள் பல உள்ளன.

## அறிவியல் உண்மை

உறையூர் முதுகண்ணன் சாத்தனார்,

"செக்கர் ஞாயிற்றின் வீதியையும், அஞ்ஞாயிற்றின் இயக்கத்தினையும், அதனைச் சூழ்ந்துள்ள பார்வட்டத்தினையும், காற்று இயங்கும் திசையினையும், காற்று இன்றிச் சூன்யமாய் இருக்கும் ஆகாயத்தையும் பற்றி, அவ்விடங்களுக்கே சென்று, இஃது அன்று இவ்வாறு இருந்தது, இன்று இவ்வாறு இருக்கின்றது, நாளை இவ்வாறு இருக்கும் என்று அளந்து அறியக்கூடிய ஆற்றல் மிகுந்த கல்வியாளர்கள் இருந்தனர்" என்கிறார்.

> "செஞ்ஞாயிற்றுச் செலவும்,
> அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
> பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,
> வளி திரிதரு திசையும்
> வறிது நிலைஇய காயமும் என்றிவை
> சென்றளந்து அறிந்தோர் போல என்றும்
> இனைத்து என்போரும் உளரே" [15]

என்று பாடுகிறார் அவர்.

செஞ்ஞாயிற்றுச் செலவு, அஃதாவது சூரியனின் வேகம் விநாடிக்கு 360-லிருந்து 500 கி.மீ. என்று கருதப்பட்டது. அதில் அண்மையில் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அஃதாவது சூரியனின் வேகம் விநாடிக்கு 296 கி.மீ. என்பதே அம்முடிவாகும். இதனைக் கண்டறிந்தவர் எல். குமாசன் என்ற அறிவியலறிஞர் ஆவார்.[16] இவ்வியக்கத்தையே உறையூர் முதுகண்ணன் சாத்தனார் 'பரிப்பு' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் சூரியனின் இவ்வியக்கம் அண்டவெளியில் ஒரு மண்டலத்தோடு தொடர்பு கொண்டது என்பதைப் 'பரிப்புச் சூழ்ந்த மண்டிலம்' என்கிறார்.

பூமியைச் சுற்றியுள்ள வளிமண்டலம், ஓசோன் என்பதாகும். இதுவே விண்வெளியிலிருந்து வரும் புற ஊதாக் கதிர்களின் பாதிப்பில் இருந்தும், எரிகற்களின் தாக்குதல்களிலிருந்தும் உலகைக் காப்பாற்றுகின்றது. இக் காற்றுமண்டலம் அடிவளி மண்டலம் (Troposphere) என்றும், மேல்வளி மண்டலம் (Stratosphere) என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டுமே பூமியின் வெப்பத்தைச் சமனிலைப்படுத்தும் பணியைச் செய்கின்றன.[17] பூமிக்கு மேல்தான் வளி மண்டலம் இயங்கி வருகின்றது என்பதை "விசும்பு தைவருவளியும்" என்ற புறப்பாடல் குறிப்பிடுகிறது.[18] அந்தக் காற்று மண்டலம் பூமியை வலமாகச் சுற்றி வருகிறது என்பதை, "வலமாதிரத்தான் வளிகொட்ப" என்றும் மாங்குடி மருதனார் குறிப்பிடுகின்றார்[19]. சூரியன், சந்திரன் ஆகிய இரு சுடர்கள் கண்களைப் போல் விளங்க, முகம்போல் அமைந்த விசும்பானது, காற்றின் இயக்கம் இல்லாததும், கடத்தற்கு அரியதுமாகிய ஒரு பெருவழியாகும் என்பதை,

> "மயங்கு இருங்கருவிய விசும்பு முகனாக
> இயங்கிய இருசுடர் கண்ணெனப் பெயரிய
> வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்" [20]

என்ற புறப்பாட்டுத் தெளிவாக்குகிறது.

## குறளில் ஆன்மிகம்

இந்த அறிவியல் உண்மைகளின் பின்னணியில் வள்ளுவர் அருமையான குறள் ஒன்றைத் தருகிறார்.

> "அல்லல் அருள்ஆள் வார்க்கில்லை வளிவழங்கும்
> மல்லல்மா ஞாலம் கரி"[21]

என்கிறார். அருளுடையார்க்கு இம்மையில் ஒரு துன்பம் உண்டாகாது. அதற்குக் காற்று இயங்குகின்ற வளப்பத்தை உடைய பெரிய நில உலகமே சான்று என்பது இதன் பொருள்.

ஞாலம்-உலகம்; ஞாலுதல்-தொங்குதல். பூமியானது ஆதாரமின்றி அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது என்ற அறிவியல் உண்மையும் இந்தச் சொல்லால் சுட்டப்படுகிறது.

ஞாலத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள அடை மொழிகள் சிந்தனைக்குரியன. 'காற்று வீசுகின்ற, வளப்பம்

தமிழ்மொழி, இருந்த இடத்தில இருந்துகொண்டே உலகத்தின் பல இடங்களையும் வென்றுகொண்டே வருகிறது.

- பேரறிஞர் அண்ணா

**PREM INTERNATIONAL,** Post Box No. 20, 9/K, Kavitha Complex, Ramakrishnapuram, Karur - 639 001. Phone : 22232

பொருந்திய உலகம்' - என்றால் மற்ற உலகங்களில் காற்று வீசவில்லை; வளம் இல்லை என்பது பெறப்படுகின்றது.

மனிதன் உயிர் வாழ இன்றியமையாதவை காற்றும், உணவும். " உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே."[22] நீரும், நிலமும் வளமாக இருப்பின் உணவு கிடைக்கும். இவை இந்தப் பூமி மண்டலத்தில் மட்டுமே உண்டு. ஏனைய மண்டலங்களில் இல்லை.

இந்தப் பூமியிலும் இறைவன், ஐம்பூதங்களைப் படைத்த பின்பு, உயிர்களைப் படைக்குங்கால், ஓர் அறிவுயிராகிய தாவரங்களைப் படைத்துப் பின்னரே படிப்படியாக மனிதனைப் படைத்தான்.

அஃதாவது மனிதனைப் படைப்பதற்கு முன்பே அவன் உயிர் வாழ்வதற்குத் தேவையான காற்றையும், உணவையும் படைத்து வைத்தான். அஃது அவனுடைய அளப்பரிய அருளைக் காட்டுகிறது.

காற்றில்லாத, வளப்பம் இல்லாத மண்டலங்களில் பிறப்பது அல்லல். அந்த அல்லல் அருளாளர்களுக்கு இல்லை. அருள் என்பது தொடர்பு அற்றார் மாட்டும் செல்லும் அன்பு.[23] அந்த அருளை ஆளுபவர்களுக்கு, காற்றும், உணவும் இல்லாத பிற மண்டலங்களில் சென்று பிறக்கும் அல்லல் இல்லை. அதற்கு அவர்கள் பிறந்திருக்கும் காற்றும் வளமும் மிக்க இந்தப் பூமியே சான்று என்கிறார் வள்ளுவர்.

'சென்ற பிறவியில் அருளை ஆண்டமையால், இப்பிறவியில் காற்று வீசும் வளமான உலகில் பிறந்தீர்கள். இப்பிறவியில் அருளாளர்களாக வாழ்வோர்க்குக் காற்றும் வளமும் இல்லாத பிற மண்டலங்களில் பிறக்கும் அல்லல் இல்லை' என்கிறார் வள்ளுவர்.

மக்கள் அருளுடையராக வாழ வேண்டும்; அங்ஙனம் வாழ்ந்தால் வளமான வாழ்வு கிடைக்கும் என்று, அறிவியல் பின்புலத்தில் ஆன்மிகத்தை எடுத்துக்காட்டிய வள்ளுவர் போற்றுதற்குரியவர்.

## பெரியபுராணத்தில் ஆன்மிகம்

இறைவன் ஒருவன் இருக்கின்றான். அவனைக் காண முடியாவிட்டாலும் அவன் இருக்கின்றான்; இருக்கத்தான் வேண்டும் என்பதை, அறிவியல் ரீதியில் எடுத்துரைக்கின்றார் சேக்கிழார்.

ஒருவர் அலுவலகத்தில் பணிபுரிகின்றார். தம் பணிக்குப் பயனாக அவர் ஊதியம் பெறுகின்றார். செய்த செயலுக்குப் பயனை அவர் பெறுகின்றார் என்றால் பயன் தருபவர் ஒருவர் இருக்கத்தானே வேண்டும். தருபவர் இல்லாமல் பெறுவது எப்படி? தருக்க சாத்திரம் (Logic) என்பது ஓர் அறிவியற்கலை. அந்த அறிவியல் மூலம் ஆன்மிகச் சிந்தனை எழுகிறது.

ஒருவன் குற்றம் புரிகிறான். அதற்கான தண்டனையைப் பெறுகிறான். தண்டனை தருபவர் இல்லையேல் அவன் பெறுவது எப்படி? ஆதலால் தருபவர் ஒருவர் இருக்கவேண்டும் என்பது பெறப்படுகிறது.

இதனைச் சேக்கிழார்,

> "செய்வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்
> மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள்"[24]

எனக் குறிப்பிடுவார்.

செய்யும் செயல், அதனைச் செய்பவன், அதற்குப் பயன், அப்பயனைத் தருபவன் என நான்கே, உண்மையாக ஆராய்ந்தறிந்த பொருள்கள் ஆகும்

உயிர், அது செய்யும் நல்வினை, தீவினை ஆகிய செயல்கள், அதற்கேற்ற நன்மை, தீமைகளாகிய பயன்கள், அவற்றைத் தருபவன் என்ற நான்கும் உண்மைப் பொருள்கள். மகிழ்ச்சி அடைகிறேன் என்னும்போதே அடைவிப்பவன் இல்லாமல் அடையமுடியாது என்பது உணர்த்தப்படுகிறது. துன்பப்பட்டேன் என்னும்போதே படுத்துபவன் இல்லாமல் படமுடியாது என்பது உணர்த்தப்படுகிறது. இங்ஙனம் அறிவியல் கண்ணோட்டத்தில் ஆன்மிகம் முகங்காட்டி விளங்கியது.

## சிவஞானபோதத்தில் ஆன்மிகம்

சிவஞானபோதம் என்ற சைவசித்தாந்த சாத்திரத்தில், இந்த உலகம் உயிருள்ள பொருள்களும் உயிரில் பொருள்களும் நிறைந்ததாகக் காட்சியளிக்கிறது என்றும், அவை வாழும் இந்த உலகம் ஓர் அவை (சபை)[25] என்றும் கூறப்பட்டுள்ளது.

பலர் பல இடங்களிலிருந்து வந்து கூடுவார்கள். சபை தோன்றுகிறது. பேசுகிறார்கள்; சபை நிலைபெறுகிறது. கூடிய நோக்கம் நிறைவு பெற்றதும் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே சென்று ஒடுங்குவார்கள். நோக்கம் நிறைவேறாதபோது மீண்டும் வந்து கூடுவார்கள். இந்தச் சபையைக் கூட்டுபவன் ஒருவன் இருக்கத்தான் வேண்டும் என்று அறிவியல் ரீதியில் இறை உண்மையை வலியுறுத்துகிறது சைவசித்தாந்தம்.

உயிர்கள் 'ஆண்', 'பெண்', 'அது' என ஆண்டவனிடமிருந்து இவ்வுலகிற்கு வருகின்றன. குறிப்பிட்ட காலம்வரை இருக்கின்றன. வந்த நோக்கம் நிறைவேறியதும் அந்த ஆண்டவனிடமே சென்று

உழுவார் உலகத்தார்க்கு ஆணி.
- திருக்குறள் : 1032

THE KARUR TEXTILE MANUFACTURER & EXPORTERS ASSOCIATION,
Room No.5 (Upstairs), C.S. Complex, IV Cross, Sengunthapuram, Karur - 639 002. Phone : 22696

ஒடுங்குகின்றன. நோக்கம் நிறைவேறவில்லை எனில் மீண்டும் இங்கு வருகின்றன. மறுபிறவி உண்டு. இந்தக் கருத்துகளை அறிவியல் நோக்கில் உணர்த்தப்படும் ஆன்மிகச் சிந்தனை எனலாம்.

### முடிவுரை

சங்க இலக்கியங்கள், இலக்கணங்கள், திருக்குறள், சித்தாந்த நூல்கள் போன்ற தமிழ் இலக்கிய, அற, தத்துவ நூல்கள் ஆன்மிகத்தையும், அறிவியலையும் தம்மகத்தே கொண்டு திகழ்வதை இக்கட்டுரை உணர்த்துகிறது. அறிவியலால் உடல் இன்பமயமாக ஆகும்; ஆன்மிகத்தால் உள்ளம் இன்பமயமாக விளங்கும். அறிவியல் மரம்; ஆன்மிகம் கனி. அந்த ஆன்மிகக் கனியைச் சுவைப்பதே வாழ்க்கை என்பதை இக் கட்டுரை வலியுறுத்துகிறது.

---

1. சிவஞானபோத மூலமும் சிற்றுரையும் , ஔவை சு. துரைசாமி பிள்ளை.
2. கடுவன் இளவெயினனார், பரிபாடல், பாடல் எண் : 3.
3. மேலது, பாடல் எண் : 4.
4. பவணந்தி முனிவர், நன்னூல்.
5. நன்னூல் விருத்தியுரை.
6. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருள், மரபியல்: 11, இளம்பூரணர் உரை.
7. திருவள்ளுவர், திருக்குறள்.
8. மேலது, பரிமேலழகர் உரை.
9. பவணந்தி முனிவர், நன்னூல்.
10. மேலது.
11. தொல்காப்பியர், தொல்காப்பியம், எழுத்து, நச்சினார்க்கினியர் உரை.
12. மேலது.
13. மேலது.
14. தெனிவெல்லாக் ஆஸ்டின் வாரன், குளோரியா சுந்தரமதி (மொழிபெயர்ப்பு), இலக்கியக் கொள்கை.
15. புறநானூறு : 30 (1-6).
16. Baker and Fredrick, Astronomy, (New York, Van Nastrant Rein - hald Co., 1971, 9th Edition) P.33
17. மேலது, ப. 33.
18. புறநானூறு : 2:3
19. மதுரைக்காஞ்சி : 5.
20. புறநானூறு : 325.
21. திருவள்ளுவர், திருக்குறள் : 245
22. புறநானூறு : 18
23. திருவள்ளுவர், திருக்குறள் : 757, (பரிமேலழகர் உரை).
24. சாக்கிய நாயனார் புராணம் : 5
25. சிவஞானபோதம்.

**செல்வன் இ. சேனாவரையன்,**
ஆய்வு மாணவர்,
தமிழ்த் துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - *641 046.*



உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்.
- திருக்குறள் : 1033

**A-TEX,** 14, Sengunthapuram, II Cross, Karur - 639 002. Phone : 23050



ஜெ. ஞானகணபதி,
இரண்டாம் ஆண்டு கலை-கைவினைக் கல்வி,
பாரதியார் பல்கலைக் கூடம், பாண்டிச்சேரி.

# தமிழிலக்கியங்களில் அறிவியல் கோட்பாடுகள்

செல்வன் த. இளஞ்செழியன்

முன்னுரை

நம் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பல்வேறு இலக்கிய வகைகளையும், இலக்கண நூல்களையும் படைக்கும் பேராற்றல் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் படைத்த இலக்கியங்கள் அவர் கால மக்களின் வாழ்வியல் முறைகளையும், நாகரிக மேம்பாட்டையும் எடுத்துக் கூறுகின்றன. அவற்றின் இடையிடையே பல்வேறு அறிவியல் செய்திகள் இலைமறை காயாகக் காணப்படுகின்றன. இவ்வகையில் தமிழ் இலக்கியங்களில் மறைந்திருக்கும் அறிவியல் தொடர்பான கோட்பாடுகள், சிந்தனைகள் போன்றவற்றை எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

### 1. தமிழிலக்கியங்களில் அறிவியல்

இலக்கியத்தின் நோக்கம் இன்பம் அளிப்பது; அழகுணர்ச்சியைத் தூண்டுவது; உணர உணர வியப்பை நல்குவது; அறிவியலின் நோக்கம் இன்பம் அளிப்பதன்று ; அழகுணர்ச்சியைத் தூண்டுவதன்று; பொருள்களின் தன்மையை உள்ளது உள்ளவாறே அறியத் துணைபுரிவது. இவ்வாறு இருவேறு துருவங்களைப் போல் காட்சியளிக்கும் இலக்கியத்தையும், அறிவியலையும் புலவர்கள் தங்களை அறியாமலே ஒன்றோடு ஒன்று இணைத்துப் பல அரிய இலக்கியக் கருவூலங்களை மக்களுக்கு அளித்துள்ளார்கள். இக் கருவூலங்களில் பல்வேறு அறிவியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுக் கோட்பாடுகளாக உருவாக்கம் பெற்ற பரிணாமக் கோட்பாடு, அணுக் கோட்பாடு, கூர்தலறக் கோட்பாடு பற்றிய செய்திகளும் அறிவியல் கூறுகளான கணிதவியல், இயற்பியல், உயிரியல், வானியல், மருத்துவவியல், பொறியியல், வேளாண்மையியல் போன்ற பல்துறைச் செய்திகளும் காணக்கிடக்கின்றன. இவற்றைக் காலவாரியாகச் (1) சங்ககாலம், (2) சங்கம் மருவிய காலம், (3) இடைக்காலம் என மூன்று நிலைகளாகப் பிரித்து இக் காலகட்டங்களில் படைக்கப்பட்ட இலக்கியங்களில் ஒருசில இலக்கியங்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு அவற்றில் காணப்படும் அறிவியல் கோட்பாடுகள், கருத்துகள் போன்றவை விளக்கமாக இக் கட்டுரையில் ஆராயப்பட்டிருக்கின்றன.

### 2. சங்க காலம் - சங்க நூல்கள்

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட காலமே சங்ககாலம் என்று

யாதும் ஊரே யாவரும் கேளிர்.
- புறநானூறு : 192

N. SARAVANA CHETTY & SONS,
Marble, Cuddapah Slabs, Shahabad Stones and Granite Stone Merchants, 176, Triplicane High Road, Madras-600 005. Phone : 842265

ஆய்வாளர் கூறுவர். சங்க காலத் தமிழ்மக்களின் வாழ்வைப்பற்றி அறிவதற்குச் சங்க நூல் கருத்துகளை நன்கறிதல் வேண்டும். இன்றுள்ள தமிழ் இலக்கண நூல்களுள் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். இவ்வாறே தமிழ் இலக்கிய நூல்களுள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியன காலத்தால் பழமை வாய்ந்தவை.

## 2.1 தொல்காப்பியத்தில் அறிவியல்

தொல்காப்பியம் இலக்கண நூலாயினும் அதனுள் அறிவியல் கோட்பாடுகள் ஆங்காங்குப் பொதிந்துள்ளதைக் காணலாம். இவ்வறிவியல் கோட்பாடுகளை 1. நிலவியல், 2. கணிதவியல், 3. உயிரியல், 4. மருத்துவவியல் என நான்கு நிலைகளில் நோக்க முடிகிறது.

### 2.1.1 நிலவியல்

தொல்காப்பியர் அக்காலத்திலேயே நிலத்தினைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நால்வகையாகப் பகுத்ததும், குறிஞ்சியும் முல்லையும் வறட்சியின் கொடுமையால் தம் முறைமையில் திரிந்ததால் பாலை நிலமாகும் என்றதும், எனவே மொத்தம் ஐவகை நிலங்களென இனம் கண்டதும், அவரது அறிவியல் கண்ணோட்டத்தையும், அறிவியல் சிந்தனையையும், அறிவியல் அடிப்படையில் நெறிப்படுத்தும் முறையையும் மிகத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

### 2.1.2 கணிதவியல்

தொல்காப்பியத்தில் கணிதவியல் கோட்பாடுகள் நிறைந்திருந்தன என்பதைப் பின்வரும் செய்திகளின் வாயிலாக உணரமுடிகிறது. "தொல்காப்பியத்தில் உள்ள ஆய்த ஒலிவடிவத்திலிருந்து வளர்ச்சியடைந்த முறைதான் இப்போது கணிதப் பேரறிஞர்கள் கூறும் (Alphaphnoid Theory of Mathematics) என்பதை மேற்கு செருமனியில் உள்ள பான் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வரும் அறிஞர் ஆர். சங்கரன் நிலைநாட்டியுள்ளார்"[1] என்று வெ. கிருட்டினசாமி கூறியுள்ளார். மேலும் அரை (தொல்.எ.166), போன்ற பின்னங்களையும், ஒன்று, இரண்டு, தொண்ணூறு, நூறு, ஆயிரம் போன்ற எண்ணுப் பெயர்களையும், கலம் (தொல்.எ.169), பனை (தொல்.எ.170) போன்ற அளவுப் பெயர்களையும் தொல்காப்பியத்தில் காணும் பாங்கு கணிதவியல் கோட்பாடுகளை நிலைநிறுத்துவனவாய் அமைகின்றன.

### 2.1.3 உயிரியல்

தொல்காப்பியத்தில் உயிரியல் கோட்பாடு பின்வரும் நூற்பாவில் அமையப் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

> "ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
> இரண்டறி வதுவே யதனொடு நாவே
> . . . . . . . . . . . .
> . . . . . . . . . . . .
> ஆறறி வதுவே யவற்றொடு மனனே"
>
> - தொல். பொ. 582

ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் ஈறாக உள்ள அறுவகை உயிர்களையும் வேறுபடுத்திக் காட்டிய திறன் தொல்காப்பியரின் உயிரியல் நுண்ணறிவைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

### 2.1.4 மருத்துவவியல்

மொழிக்கு இலக்கணம் கூறியதோடு, சொற்பொருள் விரித்துக்கூறும் வகையில் பல மருத்துவக் கருத்துகளும், குறிப்புகளும் ஆங்காங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

#### 2.1.4.1 பசலை பாய்தல்

இலக்கியங்களில் பல இடங்களில் தலைவன் பிரிவினால் தலைவிக்கு உடலில் ஏற்படும் நிறவேறுபாடு பசலை பாய்தல் அல்லது பசலைநோய் என்று கூறப்பட்டுள்ளது. தலைவன் பிரிவினால் உள்ளம் மாறுபட்டு மேனி தன் நிறம் இழந்து தலைவி வருந்துவாள். தலைவி அடையும் உள்ள வேறுபாடு மேனி (skin) மூலமாக வெளிப்படுகிறது. இதைத்தான் தொல்காப்பியர்:

> "வானம் பார்த்துப் புலம்புறு காலை "
>
> - தொல். பொ. 195

என்றும்,

> "பசியட நிற்றல் பசலை பாய்தல் "
>
> - தொல். பொ. 266

என்றும் கூறுவர். இந்த மேனியின் நிறவேறுபாட்டை நோயாகக் கருதிய தன்மையை,

> "தளிரன்ன எழில்மேனி தகைவாட நோய் செய்தான்"
>
> - கலி. 40-20.

என்று கலித்தொகை உறுதிப்படுத்தும்

இக் காலத் தோல்நோய் மருத்துவர்கள் (Dermatologists) தோல், உள்ளத்தில் ஏற்படும் அழுத்தங்களின் தன்மையைத் தோற்றுவிக்கும் உடலின் பகுதியாகும் என்றும், உள்ளும் புறமும் இணைக்கும் ஒரு கருவி"[2] என்றும் கூறுவர். இக் கருத்தின் மூலமாகப் 'பசலை பாய்தல்' என்ற நிறவேறுபாடு உள்ளத்துள் எழும் உணர்ச்சிகளின் வெளிப்பாடே ஆகும் என்ற உளவியல் மருத்துவக் கோட்பாடு தொல்காப்பியத்தில் இடம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

தாய்மொழிப் பற்று யார் தடுத்தாலும், யார் மறுத்தாலும் அடங்கிவிடாது!
பொங்கித்தான் வழியும்.

- பேரறிஞர் அண்ணா

MARY ICE CREAM COMPANY, No. 97, Egmore High Road, Madras-600 008. Phone : 8254893, 8250792

### 2.1.4.2 மகப்பேறு இயல் (Obstetrics)

கருவுற்ற பெண்களுக்குச் சில வேட்கைகள் (desire) ஏற்படுவது இயற்கை. இதனைக் "கருவுற்ற காலத்துப் பெண்களுக்கு ஏற்படும் உணர்ச்சி" என்று உடல்கூற்று இயல் வல்லுநர்கள் (Physiologists), மகப்பேறு இயல் வல்லுநர்கள் கூறுவதாக டாக்டர் சி.கே. சம்பத் கூறுகிறார்.[3] இக்கால மருத்துவர் ஒருவர் "கருவுற்ற பெண்களுக்கு இவ் வேட்கைப் பெருக்கம் குறிப்பாகப் புளிப்புச் சுவை உள்ள பொருள்கள் மற்றும் வேறு சுவையுள்ள பொருள்கள் மீதே ஏற்படும்"[4] என்று கூறுகிறார். இதை ஆங்கிலத்தில் `Picca' என்பர்.

இவ்வாறு தற்கால மருத்துவர்களால் உருவாக்கப்பட்ட கோட்பாடு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பியத்தில் காணப்படுவது சிந்தித்தற்குரியது.

"வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்"

- தொல்.சொல்.371

இந் நூற்பாவில் உள்ள 'வயா' என்ற சொல் குறிப்பாகக் கருவுற்ற மகளிர்க்கு ஏற்படும் ஒருவித மனநிலை மாற்றத்தைக் (Psychiatric changes) குறிப்பதாகும். இக்கருத்தைச் சங்க இலக்கியமான ஐங்குறுநூறும் எடுத்துக் காட்டுகிறது.

"புளிங்காய் வேட்கைத் தன்றுநின்
மலர்ந்த மார்பினள் வயாஅ நோய்க்கே" - ஐங். 51:3-4

இந்த வயவு அல்லது வயா என்ற மனநிலை பற்றிய கோட்பாடு தொல்காப்பியத்தில் காணப்படுவது தமிழிலக்கியத்தில் அறிவியல் கோட்பாடு செறிந்திருப்பதை வெளிக்காட்டுகிறது.

## 2.2 சங்க இலக்கியங்களில் அறிவியல்

சங்க இலக்கியங்களில் அறிவியல் தொடர்புடைய பல்வேறு கருத்துகள் காணக் கிடக்கின்றன. இவை வானியல், இயற்பியல், பொறியியல் என்ற நிலைகளில் தனித்தனியாகக் கீழே ஆராயப்பட்டுள்ளன.

### 2.2.1 வானியல்

அறிவியல் துறைகளில் தொன்மையானதும் இன்றும் புதுமையுடையதும் என்றும் வியப்பினை உள்ளடக்கியதும் வானியல் ஆகும். இன்று பல தொலைநோக்கிகளையும், ஒளியியல் தொலைநோக்கிகளையும் கொண்டு ஆய்வதோடன்றி விண்வெளியில் ஆராய்ச்சி நிலையங்கள் அமைத்தும் காற்றிலேறி விண்ணை அறியும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளோம். ஆனால், இவற்றை நம் தமிழ்ச் சான்றோர்கள் எவ்விதக் கருவிகளின் துணையுமின்றித் தம் ஆற்றல்மிகு அறிவுக் கண்ணாலேயே தொடர்ந்து ஆராய்ந்து வைத்திருந்தனர் என்பதைக் கீழ்வரும் சான்றுகள் காட்டுகின்றன.

'வான மண்டலத்தில் உலவி வரும் கோள்களின் இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள் எவ்வாறு நில உலகில் மழை முதலாகிய நிகழ்ச்சிகளைப் பாதிக்கும் என்று உய்த்தறிந்திருந்தனர்' என்ற செய்தி புறநானூற்றில் காணப்படுகின்றது.

சனிக்கோளானது இடபம், சிங்கம், மீனம் என்னுமிவற்றோடு மாறுபட்டாலும், தூமகேது எனும் வால் நட்சத்திம் தோன்றினாலும், வெள்ளிக்கோளானது தென்திசைச் சென்றாலும் நம் நாட்டில் மழைவளம் குறையும் என்ற செய்தி,

"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும் "

- சிலம்பு. 10. 102

'மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி யோடினும்
. . . . . . . . . . . . . . . . . .
பெயல்பிழைப் பறியா புன்புலத் ததுவே

- புறநானூறு : 117.

என வரும் பாடல்கள்வழி உணரப்படும். பழந்தமிழரின் வானநூலறிவு இப் பாடல்களால் தெளிவுற விளங்கும்.

மழை பெய்யும் முறைபற்றிப் புறநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

"நீண்டொலி யழுவங் குறைபட முகந்துகொண்
டீண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல் சூன்முதிர்பு
உரும்உரறு கருவியொடு பெயல்கட னிறுத்து
வளமழை . .

- புறநானூறு : 161

இப் பாடலில் மழை உருவாவதிலிருந்து பெய்யும்வரை நடைபெறும் அனைத்து அறிவியல் செய்திகளும் இடம் பெற்றிருப்பது இன்றைய வானிலை அறிக்கையை ஒத்துக் காணப்படுகிறது.

### 2.2.2 வானியல் மற்றும் புவியியல்

"காற்று மண்டலத்தைக் கணித்தறிதல் என்பது வெறும் ஒரு துறைவளர்ச்சி மட்டுமன்று; வானியல் மற்றும்

கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு
- பாவேந்தர் பாரதிதாசன்

MAHENDRA & RAVINDRA, 41, Wellington Plaza, 90, Mount Road, Madras-600 002. Phone : 8520079, 8522710

புவியியல் தொடர்பான ஒரு பரந்துபட்ட ஆய்வு"[5] எனச் சிலம்பொலி செல்லப்பன் குறிப்பிடுகிறார். இவ்வறிவியல் கோட்பாடு,

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக"

- புறநானூறு : 66

என்ற பாடலில் வெளிப்படுகிறது. இப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள " வளி தொழில் ஆளல்" என்பது காற்று மண்டலத்தைக் கணித்தறிந்த சங்கத் தமிழரின் அறிவியல் திறத்தைக் காட்டுகிறது.

### 2.2.3 இயற்பியல் மற்றும் வானியல்

நில ஈர்ப்பாற்றல்; கதிரவனின் ஈர்ப்பாற்றல்; குறிப்பிட்ட அளவுவரை காற்று உண்டு; பின் வெற்றிடமே, என்ற அறிவியல் கருத்துகளை அள்ளித்தரும் ஒரு பாடல்:

" செஞ்ஞா யிற்றுச் செலவும்
அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இனைத்தென் போரு முளரே"

- புறநானூறு : 30

இப் பாடலில் இயற்பியல் உண்மைகளைப் பொழிந் துள்ளமை - சூரியன் பற்றிய உண்மைகள், ஆகாயம் பற்றிய செய்திகள் போன்ற பல்வேறு வானியல் உண்மைகள் அறிவியல் கோட்பாடுகளாக வெளிப்படுகின்றன.

### 2.2.4 இயற்பியல்

"ஒளியானது ஓர் ஊடகத்திலிருந்து பிறிதொரு ஊடகத்திற்குச் செல்லும்போது வளையும் என்பதை ஒளிவிலகல் (Refraction) எனக் கூறுவர்."[6] "இந்த வளைவின் காரணத்தால்தான் மாலைக் கதிரவன் மேற்குத் திசையில் மறைந்த பின்னரும் நமக்குச் செந்நிறத்தோடு காட்சி தருகிறான்''[7] என்பதும் அறிவியல் உண்மை. இவ்வுண்மையை நெறியெனக் கண்டுபிடித்தற்கு முன்னரே, இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே பழந்தமிழர் அறிந்திருந்தனர் என்பதை ஒரு புறநானூற்றுப் பாடலின் வழி அறிய இயலுகிறது.

"விசும்பு நீத்தம் இறந்த ஞாயிற்றுப்
பசுங்கதிர் மழுகிய சிவந்து வாங்கு அந்தி"

- புறநானூறு : 376

என்ற தொடருக்கு "விசும்பின் கண்ணதாகிய நீத்தத்தைக் கடந்து சென்ற ஞாயிற்றினுடைய பசிய கதிர் ஒளி குறைந்த செந்நிறங் கொண்டு மேல் திசையில் வளைந்து தோன்றும்" என உரையாசிரியர் தரும் விளக்கம் இயற்பியல் கோட்பாடாகத் தோற்றமளிக்கிறது.

### 2.2.5 பொறியியல்

தமிழிலக்கியங்களில் பொறியியல் பற்றிய உண்மைகள் பொதிந்துள்ளமையைக் கீழ்வரும் சான்றுகள் வெளிக்காட்டுகின்றன.

வணிகக் காற்றுகள் (Trade winds) என்று இன்று நாம் கூறும் காற்றுகளின் திசையும் காலமும் அறிந்து அக்காலத்தே பொறியியல் சிறப்போடு கட்டிய கப்பல் களைச் செலுத்தினர் என்ற செய்தியை வெண்ணிக்குயத்தி யாரின் பாடல் காட்டும்.

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ" - புறநானூறு : 66

பழந்தமிழ்ப் பாண்டியன் பஃறுளி ஆற்றை உருவாக்கிய செய்தி பிற்காலச் சூயசு, பனாமா கால்வாய் போன்ற பொறியியல் வெற்றிச் செய்தி ஆகலாம்.

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே " - புறநானூறு : 9

இத் தொடருக்கு நெடியோனால் ஆக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளி ஆற்று மணலினும் வாழ்க என்பது பொருள். இங்கு நெடியோனால் ஆக்கப்பட்ட என்பது இன்றைய பொறியியல் சிந்தனையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

## 3. சங்கம் மருவிய காலம் - சங்கம் மருவிய இலக்கியங்கள்

சங்கம் மருவிய காலத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் சங்கம் மருவிய இலக்கியங்கள் எனப் பெயர் பெறுகின்றன. இவ்வகையில் சங்கம் மருவிய காலத்தில் வெளிவந்த திருக்குறளில் அறிவியலின் பல்வேறு பிரிவுகளான கணிதவியல், உயிரியல், வேளாண்மையியல், மருத்துவவியல் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

### 3.1 கணிதவியல்

"அறிவியலுக்குப் பெரிதும் உதவுவது கணிதமே. எனவே, அது அறிவியலின் அரசி (Queen of Science) என்று சிறப்பிக்கப் பெறுகிறது."[8] தற்காலத்தில் குறிப்பிடும்

தமிழர்களான கவிஞர்கள், கட்டுரையாளர்கள், அறிவுப் பிரசாரம் செய்பவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் நடிப்புத் துறையில் உள்ளவர்கள் முதலிய யாவரும் தங்கள் கலைகளை மக்களுக்குப் பயன்படும் வகையில் அவற்றைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். - தந்தை பெரியார்

THE PARAMOUNT ELECTRO PLATING WORKS, No. 12, Begam Shahib Street, IV Lane, G.P. Road, Madras-600 002. Phone : 831782, 849430

சகுந்தலை எழுதும் கடிதத்திற்கு
மானும் மலர்களும்
துஷ்யந்தனை முந்திக்கொண்டனவோ!



எம். லதாராணி
(எம். டி. சித்தா) முதலாம் ஆண்டு,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

கணிதம் என்பது தமிழிலக்கியங்களில் 'எண்' என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த எண், கண்ணுக்கு ஒப்பாகும் என்று கூறுகிறார் வள்ளுவர்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" - குறள். 392

இக் குறளில் அறிவியல் அரசியினுடைய சிறப்புப் பரவியிருப்பதை நன்கு உணரலாம்.

### 3.2 உயிரியல்

உயிரியலின் ஒரு பிரிவான பூச்சியியல் (Extomology) அறிவியலுக்கு உட்பட்டது. "பூச்சிகளின் உடம்பு முன்று பிரிவுகளைக் கொண்டது. அவற்றிற்கு முதுகெலும்பு கிடையாது . முதுகெலும்பு பெறாத அவை, வெப்பத்தைத் தாங்கும் ஆற்றலைப் பெறா"[9] என்பர். இந்த அரிய கோட்பாடு,

"என்பில தனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்" - குறள். 77

என்ற குறளில் வெளிப்படுவது சிந்திக்கத்தக்கது.

### 3.3 வேளாண்மையியல் (Agriculture Science)

உழவு அறிவியலின் ஒரு பகுதியாக அமைந்தது. உழுதல், எருவிடல், நீர் பாய்ச்சுதல், களை எடுத்தல், காத்தல் ஆகிய இன்றியமையாத கட்டங்களை உடையது வேளாண் தொழில். இவை அனைத்தும் ஒரே குறளில் வெளிப்படும் பாங்கு இன்றைய அறிவியல் கோட்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" - குறள். 1038

வேளாண் அறிவியலை இந்தக் குறள் சீராகக் காட்டுகிறது.

### 3.4 மருத்துவவியல் (Medical Science)

மருந்து எனும் அதிகாரத்தில் மருத்துவம் தொடர்பான பல அறிவியல் செய்திகளை அறிய முடிகின்றது.

நோய் நாடல் (Diagnosis) ஆங்கில மருத்துவ முறையில் முதற்படியாகும். நோயாற்றும் துறையின் (Healing) முதல் விதி 'நோய்க்கான காரணத்தை அகற்றுக (Remove the cause) என்பதாகும்." [10] என மருத்துவர்கள் குறிப்பிடுவதாக மலையமான் குறிப்பிடுகிறார். இந்த விதியில் வள்ளுவர் கூறும் நோய் நாடலும், அது தணிக்கும் வாய் நாடலும் அடங்குகின்றன.

"நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் " குறள். 948

வள்ளுவர் சொன்ன அறிவியல் கோட்பாடுகளைப் பின் வந்தவர்களும் போற்றிச் சொன்னார்கள்.

"நோய் முதல் நாடின்" பெருங்கதை 1 : 35 . 38

"நோயைத் துணிந்தே உறுநோய் முதல் நாடி"
நீலகேசி : 73

என்ற தொடர்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

## 4. இடைக்காலம்

இடைக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களான காப்பியங்கள், புராணங்கள், இதிகாசங்கள், பக்தி இலக்கியங்கள் போன்றவற்றில் காணப்படும் அறிவியல் கோட்பாடு பற்றிய செய்திகள் இப் பகுதியில் ஆராயப்படுகின்றன.

### 4.1 வானியல் கோட்பாடுகள்

"வலவன் ஏவா வான ஊர்தி" - புறநானூறு : 27

வளிமறை (புறம். 196 : 12) 'மான்கண் கால்அதர்' (சிலம்பு. 5 - 8) போன்ற சொற்றொடர்கள் பண்டைத் தமிழரின் வானியல் பார்வை வளிவரும் வழி அறிவிப்பனவாய் உள்ளன.

மேலை நாட்டார் 18ஆம் நூற்றாண்டு வரை காற்றைவிட மிக இலேசான பொருள்களே காற்றில் பறக்கமுடியும் என நம்பினர். அதற்கேற்பவே தங்கள் அறிவியல் சோதனைகளை நடத்தினர். ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுந்த சிந்தாமணிப் பாடல் விஞ்ஞானத்தின் முதல்படி அறிவை நமக்கு விளக்கும். வானத்தில் பறந்து செல்லும் 'மயில்பொறி' பற்றிப் பேசுகிறார் திருத்தக்கதேவர். இதில் குறிப்பிடத்தக்கது திருகாணிப்பொறி (Steering Mechanism) பற்றிய அவரது காட்சித்திறனாகும்

"பண்தவழ் விரலில் பாவை
பொறிவலம் திரிப்பப் பொங்கி
விண்தவழ் மேகம் போழ்ந்து
விசும்புஇடைப் பறக்கும் வெய்ய
புண்தவழ் வேற்கண் பாவை
பொறிஇடம் திரிப்பத் தோகை
கண்டவர் மருள வீழ்ந்து
கால்குவித்து இருக்கும் அன்றே"

பொறியை வலமாகத் திருப்பினால் பொங்கி விண்ணில் தவழ்வதும் இடமாகத் திருப்பினால் கண்டவர்

ஜாதி - மதம் - கடவுள் ஆகியவற்றைக் கடந்தும், மூடநம்பிக்கைக்கு உள்ளாகாததும், அன்பையும் ஒழுக்கத்தையும் உயர்ந்த பண்புகளையும், ஜாதியாகவும் மதமாகவும் - கடவுளாகவும் கருதச் செய்யும் அரிய நூல்தான் குறள்.
- தந்தை பெரியார்

SAGAR INTERNATIONAL, No. 642, Mount Road, Thousand Lights, Madras-600 006. Phone : 8257154

மருள வீழ்ந்து கால் குவித்து நிற்பதுவும் என்ற கருத்துகள் அறிவியல் பார்வையில் காணத்தக்கன.

### 4.2 பரிணாமக் கொள்கை

டார்வின், உயிர்களின் வளர்ச்சியை முறையாக ஆராய்ந்து மனிதனின் தோற்ற வரலாற்றை அருமையாக விளக்கியுள்ளார். அவர் விளக்கிய கொள்கை இன்று 'டார்வின் கொள்கை'யாக விளங்குகிறது. இதனை டார்வின் கோட்பாடாக வெளிக்கொணரும் முன்பே மணிவாசகர் தாம் பாடிய சிவபுராணத்தில் மனிதனின் வளர்ச்சியைத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"
- சிவபுராணம். 26-32

சிவபுராணத்தை ஆழ்ந்து படிக்கும்போது மணிவாசகர் தாம் எடுத்த பிறவிகள் பலவற்றையும் கூறுமிடத்து டார்வினின் பரிணாமக் கொள்கையைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

### 4.3 அணுக்கொள்கை

அணு மிகச் சிறியதொரு துகள். அதனைக் கண்ணால் காண முடியாது. அரைக் கோடி அணுக்கள் ஒரு முற்றுப்புள்ளிக்குள் அடங்கிவிடும் என்பர். இந்நிலையில் அணுக்களை உடைக்க முடியும் என்று மெய்ப்பித்துக் காட்டிய சாதனை விஞ்ஞான வரலாற்றிலே குறிப்பிடத்தக்க சாதனையாகும். அணுக்களை உடைக்க முடியும் என மெய்ப்பித்து உடைத்துக் காட்டியவர் ரூதர் போர்டு. ஆனால் இத்தகு கண்டுபிடிப்புகளுக்கு முன்னரே அணுவினை உடைக்க முடியும் என்ற கருத்து, தமிழிலக்கியங்களில் காணப்படுவது நோக்கத்தக்கது.

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் "

என்ற ஔவை மூதாட்டியின் வாக்கு அணுவைப் பற்றிய அக்காலச் சிந்தனைகளை நமக்கு விளக்குகிறது.

கம்பர், 'தூணினும் உளன் ஓர் தன்மை அணுவினைச் சதகூறு இட்ட கோணினும் உளன்" என அணுவைச் சத கூறுஇட்டு, அதற்குக் 'கோண்' எனப் பெயர் கொடுத்தார்.

'அணுவை உடைக்கும் பார்வையடி'

என்றார் பாவேந்தர்.

### 4.4 சிலம்பில் பொறியியல்

நம் பழந்தமிழ் இலக்கியங்களில் கோபுரங்களும் கோயில்களும் கோட்டைகளும் ஓவியங்களும் தமிழர்தம் பொறியியல் திறனை வெளிப்படுத்தப் போதுமான சான்றுகளாக விளங்குகின்றன.

மாடம் : 'முகில்தோய் மாடம்' - சிலம்பு. 14.98
கட்டடம் : 'மாமலர் பெருஞ்சினை வாகை மன்றமும்'
- மணிமேகலை. 6.83
மண்டபம் : 'பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது'
- மணிகேலை 3.64
வாயில் : நீணெடு வாயில் - சிலம்பு.14.98
கதவம் : 'புதவக் கதவம்' - சிலம்பு 23.43
தூண் : 'பருநிலை நெடுந்தூண்' - பட்டினப்பாலை 250
சன்னல் : 'கோலச் சாளரம் குறுங்கண் நுழைந்து' - சிலம்பு 2.23
சுட்ட செங்கல் ஓவியம் : "சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பில்"
- பெரும்.405

உழவைப் போற்றும் தமிழகத்தில் பயிரியல், நிலவியல், நீர்பாய்வழி வகுக்கும் பொறியியல் போன்றன வளர்ந்தன. "ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பொறி நூற் புலமைக்குக் கல்லணை சான்றாம்''[1] சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இதற்கான சான்றுகள் ஏராளமாக உள்ளன.

### 4.5 பெரியபுராணத்தில் உறுப்பு மாற்று மருத்துவமுறை

இக்காலத்தில் மக்களின் உறுப்புகளில் ஒன்று ஊனமுற்றால் அல்லது இயங்கமுடியாத நிலையை அடைந்தால் பிற மனிதர்கள் அல்லது விலங்குகளின் உறுப்பை எடுத்துக் குறிப்பிட்ட நேரத்திற்குள் பாதிக்கப்பட்டவரின் உடம்பில் பொருத்தும் உறுப்பு மாற்று மருத்துவ முறை சிறப்பாகக் கையாளப்பட்டு வருகிறது. இம் மருத்துவமுறை பற்றிய சிந்தனையைச் சேக்கிழாரின் பெரியபுராணத்தில் காணமுடிகிறது.

கல்வியறிவில்லாத வேடன் திண்ணன், காளத்திநாதனான இறைவனின் கண்ணிலிருந்து குருதியொழுகக் கண்டு பதறி, மூலிகை மருத்துவங்களையெல்லாம் முறையே செய்த பின்னும் குருதியொழுகுதல் நில்லாமையால் வேறு என்ன செய்யலாம் என்றெண்ணியபோது,

"உற்றநோய் தீர்ப்பது ஊனுக்கு
ஊனெனும் உரைமுன் கண்டார் " - பெரியபுராணம். 172'4

மாணவர்கள் சிந்திக்க வேண்டிய ஒரு கருத்து உள்ளது ; 'மாணவர் உலகம் சரியான பாதையில்தான் போகிறதா ?' என்பதே அந்தச் சிந்தனையின் தொடக்கமாக இருக்க வேண்டும்.
- பேறிஞர் அண்ணா

SUPERFINE MARBLES & GRANITES, 58, Thayar Sahib Street, Madras - 600 002

எனும் வேடர்குலப் பழமொழியாகிய முறையிலேயே தம் கண்ணைப் பறித்து இறைவனின் கண்ணில் அப்பிக் குருதியொழுகலை நிறுத்தினார் என்ற செய்தியைப் பெரிய புராணத்தில் காண்கிறோம். இதனால் அக்காலத்தே இவ் வகை உறுப்பு மாற்று மருத்துவமுறை வழக்கத்தில் இருந்ததை அறியலாம்.

## 5. முடிவுரை

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் நாம் வியக்கத்தக்க வகையில் பல்வேறு அறிவியல் சிந்தனைகள் உவமைகளாகவும், வாழ்வின் உண்மைகளை விளக்கும் பொருள்களாகவும், மலிந்து கிடப்பதைக் காண்கிறோம். இவ்விலக்கியங்களில் சொல்லப்பட்ட அறிவியல் பற்றிய அருங் கருத்துகள் இன்றும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாகவே உள்ளன. இவற்றைத் தொகுத்து முறைப்படுத்தி மேலும் நுணுகி ஆராய்ந்தால் ஒரு சிறந்த அறிவியல் நூல் தொகுதி நமக்குக் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

---


1. கிருட்டினசாமி, வே., 'தொல்காப்பியரின் அறிவியல் புலமை 'தொல்காப்பியக் கருத்தரங்கக் கட்டுரைகள் தொகுதி 1, ப.153.
2. H. Mande Aunter, H.D., Emotion and Bodily Changes Columbia University, DPL of Medium Psychiatric, p.327
3. சம்பத், கே., 'தொல்காப்பியக் கால மருத்துவம்' வளர்தமிழ் அறிவியல் நான்காவது கருத்தரங்கக் கட்டுரைகள், ப.145
4. Geralp caption, M.D., Ph.D. An Approach of Community Mental Health, p - 73-74
5. சிலம்பொலி செல்லப்பன், சு., 'பண்டை இந்தியாவில் அறிவியல்' அறிவியல் மலர்கள் (அறிவியல் அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள். ப.190
6. ஸ்ரீநிவாசன், என். 'அறிவியல் ஆயிரம்' - மூன்றாம் பகுதி, ப. 16
7. மேலது. ப. 67
8. மலையமான், திருக்குறள் துளிகள், ப. 108
9. அசோக்குமார், வியக்க வைக்கும் விஞ்ஞான செய்திகள், ப. 68.
10. கு. கண்ணன், நோய் அறிதல், ப. 44
11. குழந்தைசாமி, வா. செ., 'பண்டைத் தமிழர் பொறியியற் புலமை'. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், மதுரை, 1981, ப.131.



செல்வன் த. இளஞ்செழியன்,
ஆய்வு மாணவர்,
தொகுப்பியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 001.





பொதுக்காரியத்தில் ஈடுபடுகிறவர் யாராவது தன் கவுரவத்தைச் சிந்திக்கிறவர் என்றால் அவர் பொதுக்காரியவாதி ஆகமாட்டார்.

- தந்தை பெரியார்

**MATHI LEATHERS PRIVATE LIMITED**, No. 18, Kumarappa Street, Periamet, Madras-600 003. Phone : 566178, 565127

# தமிழிலக்கியங்களில் அறிவியல் கோட்பாடுகள்

செல்வி ந. தேவி

## முன்னுரை

ஒவ்வோர் இலக்கியமும் தான் தோன்றிய சமுதாயத்தை உள்ளடக்கமாகக் கொண்டு திகழ்கின்றது. அறிஞர்களும், இலக்கியம் என்பது சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்கின்றனர். எனவே எந்தவோர் இலக்கியமும் தான் தோன்றிய அச்சமுதாயத்தின் பண்பாட்டையும் நாகரிகத்தையும், பொருளாதாரத்தையும், அக்கால மக்களின் பல்துறை அறிவையும், பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும் எடுத்துரைப்பனவாய் விளங்குவதைக் காணலாம். இவ்வடிப்படையில்தான் தமிழிலக்கியங்களும் மிளிர்கின்றன. இத்தகைய தமிழிலக்கியக் கடலில் அறிவியல் சிந்தனையெனும் முத்துகள் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்றன. அம்முத்துகளின் கோவையாகவும், அவற்றின் தரத்தை எடுத்துரைப்பதாகவும் இக் கட்டுரையின் போக்கு அமைகின்றது.

## தமிழ் இலக்கியத்தில் அறிவியல் பார்வை

இருபதாம் நூற்றாண்டை அறிவியல் யுகம் என்று மொழியலாம். அறிவியல் கண்டுபிடிப்புகளும் சாதனைகளும் கணக்கில் அடங்கா. அறிவியல் வளர்ச்சி பெற்று விளங்கும் கருத்துகளுக்கான வித்துகளை இலக்கியத்தில் காணலாம். சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியம்வரை நோக்குமிடத்துத் தமிழரின் அறிவியல் சிந்தனை நம்மை வியக்க வைக்கிறது. "இன்றைய மேனாட்டு அறிவியல் சிந்தனையின் சுவடுகூடப் படாத சங்க காலத் தமிழரிடையே இருந்த அறிவியல் அறிவும் உணர்வும், அதிலும் குறிப்பாக வானவியல் பற்றிக் கொண்டிருந்த கருத்தும் சிந்தனையும் சில சமயம் நம்மை வியக்க வைக்கின்றன"[1] என்கிறார் மணவை முஸ்தபா. இன்றைய நிலையில் அறிவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், மருத்துவ இயல் எனப் பல்துறைகளாகப் பல்கிப் பெருகியுள்ளன. இவ்வறிவியல் சிந்தனைகளை நோக்கும் முன்பு அறிவியல் பார்வை இலக்கியத்தில் பெற்ற நிலையினை உணர்தல் இன்றியமையாததாகும்.

"அறிவியல் நோக்கு நான்கு செயல்களைக் கொண்டதென்றும் அவற்றுள் ஒன்று விருப்பு வெறுப்பற்ற பார்வை"[2] என்றும் டாக்டர் மலையமான் கூறுகின்றார். திருக்குறளில் இப்பார்வை பற்றிய கருத்தைத் திருவள்ளுவர்:

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" குறள். 355

என்ற குறளிலும்,

தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்
- பாவேந்தர் பாரதிதாசன்

GAJALAKSHMI CHEMICAL COATINGS, 36, Royapettah High Road, Madras-600 014. Phone : 8264618, 8265877

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது தறிவு" - குறள். 423

என்ற குறளிலும் தெளிவுபடுத்தி உள்ளார். விருப்பு வெறுப்பற்ற தன்மை உடையது அறிவியல் என்பதைத் தம் சிந்தனையாக வைத்துள்ளார் எனலாம்.

### தமிழ் இலக்கியத்தில் அறிவியல்

இயற்பியலின் ஒரு பிரிவாக விளங்குவது அணுவியல். அண்மைக்கால அறிவியல் வரலாற்றில் அற்புதமான வளர்ச்சி பெற்று இருப்பது அணுவியலாகும்[3] என்கிறார் ந. சுப்புரெட்டியார். முதன் முதலில் அணுவைப் பிளக்க இயலாது என்ற கொள்கை தோன்றியது. பின்னர் ஓர் அறிஞர் அணுவைப் பிளக்க இயலும் என்ற புதிய கருத்தை வெளியிட்டார். இக் கொள்கையுடையோராய்த் தமிழ்ச் சான்றோர் சிலர் இருந்தமை இலக்கியத்தின் மூலம் புலனாகின்றது. ஔவையார் திருவள்ளுவமாலையில்,

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" திருவள்ளுவமாலை. 2

என்று அணுவாகிய துகளைப் பிளக்க இயலும் என்ற சிந்தனையை நம்முன் வைத்துள்ளார்.

கம்பரும் இக்கருத்தினை இரணிய வதைப் படலத்தின் மூலம் உணர்த்துகின்றார். இரணியன், 'இறைவன் எங்கு உள்ளான்' என்று பிரகலாதனிடம் வினவினான். அப்போது பிரகலாதன் ஓர் எளிய அணுவை நூறு பங்காகச் செய்தால் அந்தச் சிறு பகுப்பிலும் அமைத்து உள்ளான் என விடையிறுக்கின்றான்.

"சாணினு முளனோர் தன்மை
யணுவினைச் சதகூ றிட்ட
கோணினு முளன் . . . . ." கம்ப. 253

என்ற இப் பாடலில் அணுவைப் பற்றிய கம்பரின் கருத்து மிளிர்கின்றது.

அறிவியலில், நிலமும் காலமும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

" ஆங்கிலேயர் நிலம், காலம் இவற்றை முறையே `Space' என்றும் `Time' என்றும் குறிப்பிடுவர். இவை இரண்டும் உலகத் தோற்றத்தைப் பற்றிய கருத்துகளையும் இப்பூமண்டலத்தின் இயக்கத்தையும் விளக்குவதற்கு மிகவும் இன்றியமையாதன. இவை இரண்டினையும் தொடர்புபடுத்தி ஐன்ஸ்டைன் என்ற உலகப் புகழ்பெற்ற அறிவியல் மேதை "ஒப்புநோக்குக் கொள்கை" என்ற புதிய கொள்கையைக் காட்டியுள்ளார்"[4] என முத்துராசன் தம்முடைய நூலில் குறித்துள்ளார். தமிழ் இலக்கியத்தை நோக்கும்பொழுது தமிழர்களும் இச் சிந்தனை உடையவராய் விளங்கினர் என்பதற்குத் தொல்காப்பியரைச் சான்றாகக் காட்டலாம். முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று மூன்று பிரிவுகளுள், முதற்பொருள் என்பதனை,

"முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே "
- தொல். பொருள். 4

என்று நிலமும் காலமும் என இருவகையாகப் பிரித்துள்ளார்.

நீர்ப்பொருளுக்குச் சுருங்கும் தன்மை இல்லை. நீர்ப் பொருளின் இச் சுருங்கா இயல்பை அறிவியல் பூர்வமாகக் கண்டறிந்து கூறியவர் 'பாஸ்கல்' என்னும் அறிஞர் ஆவார். இப் பாஸ்கல் விதிக்குச் சான்றாக மணவை முஸ்தபா அவர்கள்,

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது. . . "

என்ற ஔவைப் பாடலை எடுத்துக்காட்டி, ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் மிகுகின்றது என்ற மற்றொரு அறிவியல் உண்மையையும் எடுத்துரைக்கின்றார்.[5]

உலகில் நிகழும் சாதாரணச் செயல்கள் அனைத்திலுமே வேதியியலின் நிகழ்வுகள் உண்டாகின்றன. இவ்விளைவுகளை நம்மால் உணரமுடிகின்றது. ஆனால் ஏன் என்ற வினாவிற்குக் கற்றவர் தவிர கல்லாதவர்கள் விடையளிக்க இயலாது. தமிழ்ச் சான்றோர் பல்துறை அறிவுடையவராய் விளங்கியமையால் இயற்கை நிகழ்வுகளை உற்றுநோக்கித் தம் பாடல்களில் தம் முத்திரைகளைப் பதித்துள்ளனர்.

சூரிய ஒளியினால்தான் தாவரங்கள் ஆற்றலைப் பெறுகின்றன. தாவரங்களின் ஒளிச்சேர்க்கைக்குச் சூரிய ஒளி பெரிதும் உதவுகின்றது. இக் கருத்தை உணர்ந்தவர் இளங்கோ அடிகள். ஆதலின்,

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரி தலான்"

என்று ஞாயிற்றைப் போற்றினார் என ந. சுப்புரெட்டியார்[6] தமது நூலில் குறித்துள்ளார்.

உயிரியல் துறை பற்றிய சிந்தனையும் தமிழ் இலக்கியத்தில் சிறப்புற அமைந்துள்ளமையைத்

மாணவர்களின் அறிவுத் தாகத்தினைத் தக்க விதத்தில் தீர்த்திட வேண்டும் ;
அறிவின் பல்வேறு கூறுகளையும் தெரிந்து தெளிந்திட வழிகாட்டிட வேண்டும்.
- பேரறிஞர் அண்ணா

PRAKASH ELECTRIC & REFRIGERATION CO., 9, West Cott Road, Royapettah, Madras - 600 014. Phone : 831724, 832079

தொல்காப்பியம் கொண்டு உணரலாம். ஒரு செல்லானது, செல் பிரிதலின் மூலம் பல்கிப் பெருகிப் பல செல் உயிர்கள் உருவாகின்றன. பல செல் உயிர்களில் ஒரு செல்லே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு வேலையும் ஒரு குறிப்பிட்ட செல் தொகுப்புகளால் செய்யப் பெறுகின்றது என்பது உயிரியல் கொள்கை. இக் கொள்கையை ஓரளவு விளக்குவதாய்,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதில் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே "

- தொல் பொருள் மரபியல் : 29

என்ற இந் நூற்பா காணப்படுகின்றது.

உயிரியல் கொள்கையாக விளங்கும் டார்வினின் கூர்தலறக் கோட்பாட்டை விளக்குவதாய்த் திருமாலின் 10 அவதாரங்கள் அமைந்துள்ளன. நீரில் வாழும் உயிராக (மச்சர்வதாரம்), நீரிலும் நிலத்திலும் வாழும் தன்மையுடைய உயிராக (கூர்மவதாரம்), நிலத்திலே மட்டும் வாழுகின்ற தன்மையுடைய விலங்காக (வராக அவதாரம்), பிறகு விலங்கும் மனிதனுமாக (நரசிம்ம அவதாரம்), அதன் பின்னரே வளர்ச்சி அடைந்த முழு மனிதனாகப் (கண்ணன், இராமன் அவதாரங்கள்), படிப்படியாக அமைந்த பத்து அவதாரங்களும் கூர்தலறக் கோட்பாட்டைத் தெளிவாக உணர்த்துகின்றன.

வானவியல் பற்றிய அறிவுடையவராய் விளங்கினர் அக்கால மக்கள் என்பதை இலக்கியங்கள் மூலமாக உணரலாம். சூரியனையும், அதனைச் சுற்றி உள்ள கோள்களையும் அறிவியல் அறிஞர்கள் (Solar System) சூரிய வட்டம், அதனைச் சுற்றியுள்ள பாதை என்று மொழிகின்றனர். இவ்வாறு வானவெளியில் காணப்படும் இக் காட்சியைப் புறநானூற்றுக் கவிஞர்,

"செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்" - புறநானூறு : 30

என்று பாடியுள்ளமை வியக்கத்தக்கதாகும்,

அறிவியலின் ஓர் அங்கமாக விளங்குவது வேளாண்மை. அவ் வேளாண்மையே உலகத்தின் உயிர் நாடியாக விளங்குகிறது. உழவே உலகிற்கு அச்சாணி. இதனையே வள்ளுவர் 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என உழவைப் போற்றுகிறார். அகல உழுவதைவிட ஆழ உழுதல் வேண்டும் என்ற கருத்தையும், நிலத்திற்கு எரு விடுதல் வேண்டும் என்றும், களை பறித்து நீர்பாய்ச்சுதல் வேண்டுமென்றும்

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்" திருக்குறள். 1037

"ஏரினும் நன்றாம் எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" திருக்குறள். 1038

என்ற குறள்களின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.

மருத்துவத் துறை பன்னெடுங் காலமாக வளர்ந்து இன்று பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது. "எல்லாப் பொருளு மிதன்பாலுள விதன்பால் இல்லாத வெப்பொருளு மில்லை" என்று திருவள்ளுவமாலை போற்றுவதற்கு ஏற்ப மருத்துவத்தைப் பற்றிய செய்திகளும் திருக்குறளில் காணப்படுகின்றன. நோய் வருவதற்கு உரிய முதன்மையான காரணம் உணவு, ஒழுக்கமின்மை எனலாம். இன்று பலருக்குக் கொழுப்புச் சத்தும், சர்க்கரையும் அதிகமாகி அதன் காரணமாய் உணவுக் கட்டுப்பாட்டில் இருக்கின்றனர். இதற்கு அடிப்படை உணவுக் கட்டுப்பாடின்மையே காரணம் எனலாம். உணவை உட்கொள்ளும்போது உண்ணுகின்ற அளவையும், முறையையும் அறிந்து உண்ணவேண்டும். அதுவே ஒருவன் நெடுநாள் வாழ்வதற்குரிய நெறியாகும் என்பதனை,

"அற்றால் அளவறிந்து உண்க, அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு"

திருக்குறள் : 943

என்ற குறளின் மூலமாக உணர்த்துகின்றார். மரத்தின் பட்டை மருந்தாகப் பயன்படும் என்ற மருத்துவ உண்மையை,

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால். . . ."

(குறள் ஒப்புரவறிதல் 217) என்ற குறள் மூலம் எடுத்துரைக்கின்றார். சங்க இலக்கியமும் மரத்திலிருந்து மருந்து எடுக்கப்படுகின்றது என்னும் செய்தியை,

"மரம்சா மருந்துங் கொள்ளார் . . . . . "

- நற் : 226

என்று கூறுகிறது.

மருத்துவச் சான்றோர் இருந்தமையைச் சங்க இலக்கியப் புலவர் பெயரின் மூலமாக அறிகிறோம். ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் என்ற மருந்தின் பெயர்களைக் கொண்ட நூல்களின் மூலம் மருத்துவச் சிந்தனைகள் மருந்து முறைகள் பற்றி உணர முடிகின்றது.

ஒழுக்கம் என்பது சொல்லுகின்றபடியே நடப்பதும், நடந்தபடியே சொல்லுவதுமே !
- தந்தை பெரியார்

VAIGAI LEATHER CORPORATION, No. 41, Perianna Maistry Street, Periamet, Madras-600 003. Phone : 567046

இன்றைய சமுதாயத்தில் மக்களுக்கு எடுத்துரைக்கப்படும் தானங்களுள் முதன்மையானதாக இருப்பது கண்தானம் ஆகும். இன்றைக்கு ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கண்களை இழந்து இயற்கையின் வளங்களைக் கண்டுணர வாய்ப்பில்லாது தவிக்கின்றனர். இம் மக்களுக்கு உதவி புரிவதற்காகப் பல்வேறு சமூகநல இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவற்றின் மூலமாக அவர்கள் பயன்பெற வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. கண் இல்லாது தவிக்கும் பார்வை அற்றோருக்கு வேறொருவரின் கண்ணைப் பொருத்தி அவர்கள் பார்வை பெற வழிசெய்துள்ளது இன்றைய அறிவியல். இன்று நடைமுறையில் செய்யப்படும் இந்நவீன கண் சிகிச்சைப்பற்றிய சிந்தனை அன்றைய இலக்கியத்தில் இடம் பெற்றிருந்ததை அறியலாம். இக் கண்மாற்றுச் சிகிச்சைமுறை கண்ணப்ப நாயனாரால் கையாளப்பட்டுள் ளமையைப் பெரியபுராணத்தில் அறியலாம்.

சிவனின் கண்ணினின்று இரத்தம் பெருகிற்று. அதைக் கண்டு கண்ணப்பனார் உள்ளம் தவித்தது. அவர் செய்வதறியாது திகைத்தார். அப்பொழுது அவருக்கு ஊனுக்கு ஊன் என்பது நினைவிற்கு வந்தது. உடனே தன்னுடைய கண்ணை எடுத்து இறைவற்குப் பொருத்தினார். இச்செய்தியை,

"மற்றவர் புகழ்ந்து வார்த்த மருந்தினாற்றி ருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா திழியக்
கண்டு
மிற்றையி னிலைமைக் கென்றோ வினிச்செயலென்று
பார்ப்பா
ருற்றநோய் தீர்ப்ப தூனுக் கூனெனு முறைமுன்
கண்டார் 821

இதற்கினி யென்க ணம்பா லிடந்தப்பி னெந்தை யார்க
ணதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் மடுக்கு மென்று
மதர்த்தெழு முள்ளத் தோடு மகிழ்ந்து முன் னிருந்து
தங்கள்
முதற்கர மடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணி லப்ப 822

என்ற இரு பாடல்களின் மூலம் உணரலாம்.

பெண்ணிற்குப் பெருமையே தாய்மைப் பேறுதான் என்பர். மழலை இன்பத்தை இலக்கியங்கள் பலவாறு பேசுகின்றன. அம் மழலையைப் பெறுவதில் கூடச் சில மருத்துவச் சாதனை நிகழ்த்தப்பெற்று இருக்கின்றது. மேனாட்டில் மருத்துவத் துறையில் ஒரு பெண்ணின் கருவை மற்றொரு பெண் தாங்கி, அவ்வுயிரை வளர்த்து உலகிற்கு அளிக்கும் மருத்துவ முறை வெற்றி அடைந்து, அம்முறை சிலரால் மேற்கொள்ளவும் படுகின்றது. உயிரைச் சுமக்கும் பெண்ணுக்கு அதற்கான ஊதியமும் அளிக்கப்படுகின்றது. தற்போது இம்முறை இந்தியாவிலும் உலாவர ஆரம்பித்து இருக்கிறது. தன் வயிற்றின் உயிரைச் சுமக்க "வாடகைத் தாயை" எதிர்பார்க்கும் விளம்பரங்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன. பெண்களில் சிலர் காலத்திற்கேற்ப இவற்றை வரவேற்று நடைமுறைப்படுத்தி உள்ளனர். ஆனால், விஞ்ஞான யுகத்தை எட்டாத காலத்தைச் சார்ந்த பரிபாடல் இதனோடு தொடர்புடைய செய்தியைத் தன்னுள் கொண்டு விளங்குகின்றது.

பரிபாடலின் ஐந்தாம் பாடல் செவ்வேளின் பிறப்புப் பற்றி எடுத்துரைக்கிறது. இறைவனாகிய சிவபெருமான் இறைவியைக் கூடி இன்புறும்போது உண்டான கருவை, இந்திரன் தன்னால் வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப இறைவனே அக் கருவைச் சேதித்து (சிதறச் செய்து) அருளினான். அக் கருவை முனிவர்கள் எழுவரும் பெற்று வேள்வித் தீயிலிட்டனர்; பின்னர் அதனைக் கார்த்திகை மகளிர் அறுவரும் உண்டு கருக்கொண்டு சரவணப் பொய்கையில் தாமரைப் பூவாகிய பாயலில் செவ்வேளைப் பெற்றதாகக் கீழ்வரும் அடிகள் உணர்த்துகின்றன.

"ஆதி யந்தணன் அறிந்துபரி கொளுவ —
மறுவறு கற்பின் மாதவர் மனைவியர்
நிறைவயின் வழாஅது நிற்சூ லினரே
நிவந்தோங் கிமயத்து நீலப் பைஞ்சுனைப்
பயந்தோ ரென்ப பதுமத்துப் பாயல்"
பரிபா. 23-49, 46-49

இருபதாம் நூற்றாண்டில் ஈடு இணையற்ற கவிஞர் பாரதியார். எதிர்காலச் சமுதாயம் அறிவியல் துறைகளில் என்னென்ன சாதனைகள் மேற்கொள்ள வேண்டும் என்னும் கனவைத் தம் பாடலின் மூலம் பறைசாற்றுகின்றார்.

"வானை யளப்போம் கடல் மீனை யளப்போம்
சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்"

என்று பாடியுள்ளமை உணரலாம். இன்று சந்திர மண்டலத்தை மனிதன் எட்டியதோடு பல்வேறு ஆய்வுகளையும் மேற்கொண்டு உள்ளான்.

### அறிவியல் கண்டுபிடிப்புகள்

இன்றைய உலகம், தொழில்நுட்பத் துறையில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளது. வானொலி, தொலைக்காட்சி போன்ற அறிவியல் கண்டுபிடிப்புகள் இன்றைய உலகத்தை மிகவும் சுருக்கிவிட்டன. உலகின் ஒரு பகுதியில் உள்ள மக்கள் கேட்டும், கற்றும் மகிழ்கின்ற நிலையை இவ்வரிய கண்டுபிடிப்புகள் உண்டாக்கி விட்டன.

கருத்துத் தெளிவும், சுதந்திரமும், செயல்திறனும் மிக்கோராய் வாழ்ந்திடும்
உளப்பாங்கும், உறுதியும் மாணவர்களிடத்தில் அமைந்திடவேண்டும்.
- பேரறிஞர் அண்ணா

LEATHERONS EXPORTS (Tanners & Exporters), 9B/2, Patnool Sardar Jung Street, Periamet, Madras-600 003. Phone : 581270

இதனை உணர்த்துவதாகப் பாரதிதாசனின் கீழ்க்கண்ட கவிதை அமைந்திருப்பதை உணரலாம்.

"ஒன்றைத்தின் றால்இவ் வுலகமக்கள் பேசவது
நன்றாகக் கேட்கும்மற் றொன்றைவா யில்போட்டால்
மண்ணுலகக் காட்சிஎலாம் மறறிங் கிருந்தபடி
கண்ணுக்கு எதிரிலே காணலாம்"

- சஞ்சீவிபருவதத்தின் சாரல்.

தமிழ் இலக்கியத்திலே பயணத்தை விரைவாக்கிய விமானம் பற்றிய சிந்தனைகளையும் காணமுடிகிறது. முதன்முதலில் புறநானூறு ஓட்டுநர் இல்லாத வானவூர்தியைப் பற்றிய செய்தியினைத் தருகின்றது. அவ் வடிகள் வருமாறு:

"வலவன் ஏவா வான வூர்தி
எய்துப என்பதஞ் செய்வினை முடித்தெனக்"

- புறம். 27. 8-9

"கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வானவூர்தி ஏறினள் மாதோ
கானமர் புரிகுழற் கண்ணகி தானென்" - சிலம்பு. 2 : 28 : 198

என்ற அடிகளில் சிலப்பதிகாரம் 'வானவூர்தி' என்ற சொல்லைப் பயன்படுத்தி உள்ளமை காணலாம். சிவக சிந்தாமணியில் திருத்தக்க தேவர், விசயை வானத்தில் பறக்கக் கூடிய பறவை உருவத்தில் அமைந்த ஊர்தியில் சென்றதாகக் காட்டுகிறார். அவ்வடிகள் கீழ்வருமாறு :

"என்புநெக் குருகி யுள்ளமொழுகுபு சோர யாத்த
அன்புமிக் கவலித் தாற்றா வாருயிர்க் கிழத்தி தன்னை
இன்பமிக் குடைய சீர்த்தி யிறைவன தாணை கூறித்
துன்பமில் பறவை யூர்தி சேர்த்தினன் றுணைவி சேர்ந்தாள்"

சீவக. 1.1. 273

இவ்வாறு தமிழிலக்கியச் சான்றோர் விமானம் பற்றிய தம்முடைய சிந்தனையை வித்திட்டுச் சென்றனர்.

## முடிவுரை

இதுகாறும் இக் கட்டுரையில் தமிழிலக்கியத்தில் அறிவியல் கோட்பாடுகள் அமைந்துள்ளமை பற்றி அறிந்தோம். இச்சிந்தனைகள் வித்தாக அமைந்துள்ளனவே தவிர, இன்று எட்டியுள்ள முறையான வளர்ச்சி நிலையினை உடையனவாய்க் காணப்படவில்லை. இச்செய்திகள சில மக்களின் நம்பிக்கைகளின் அடிப்படையில் எழும் தொன்மக் கதைகளாகவும், கவிஞர்களின் கனவுகளாகவும் கற்பனைக் கதைகளாகவும் எழுந்தவைகளாகவே அமைந்துள்ளனவென்பதையும் நாம் உணர வேண்டும். ஆனால் இக்கால இலக்கியங்கள் பலவும், சிறுவர் இலக்கியங்களும் அறிவியல் செய்திகளை நேரிடையாகவே எடுத்துரைக்கின்றன.

---

1. மணவை முஸ்தபா, காலம் தேடும் தமிழ்.
2. முனைவர் மலையமான், திருக்குறள் துளிகள், ப. 109.
3. ந. சுப்புரெட்டியார், தமிழில் அறிவியல் : அன்றும் இன்றும், ப. 32.
4. கு. முத்துராசன், சங்க காலம், ப. 49.
5. காலம் தேடும் தமிழ், ப. 28.
6. தமிழில் அறிவியல், அன்றும் இன்றும், ப. 30.

### துணைநூற் பட்டியல் முதன்மை ஆதாரங்கள்


காசி விசுவநாதன் செட்டியார், வெ.பெரி.பழ.மு. (ப.ஆ.) சிலப்பதிகாரம் சென்னை: கழக வெளியீடு ஆறாம் பதிப்பு, செப்டம்பர் ' 59.

சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.) சீவகசிந்தாமணி சென்னை: தியாகராசு விலாச வெளியீடு, மூன்றாம் பதிப்பு, ஆகஸ்ட் '22.

கம்பராமாயணம் - யுத்தகாண்டம் (முதற்பகுதி) சென்னை : கழக வெளியீடு முதற்பதிப்பு. 62.

சுப்பிரமணிய முதலியார் சி.கே. (ப.ஆ. பெரிய புராணம், கோயம்புத்தூர், சேக்கிழார் நிலையம், மூன்றாம் பதிப்பு '38.

சோமசுந்தரனார் பொ. வே. (உ.ஆ.) பரிபாடல், சென்னை: கழக வெளியீடு, முதற்பதிப்பு, துரைசாமிப் பிள்ளை, ஔவை, புறநானூறு முதற்பதிப்பு 47, மறுமதிப்பு 1967.

நாராயணசாமி ஐயர் பின்னத்தூர் அ. (ப.ஆ.) நற்றிணை நானூறு, சென்னை, கழக வெளியீடு நான்காம் பதிப்பு, பிப்ரவரி, 67.

பாரதியார், பாரதியார் கவிதைகள், சென்னை: மணிவாசகர் பதிப்பகம் - '90

பாரதிதாசன் : பாரதிதாசன் கவிதைகள் : புதுக்கோட்டை செந்தமிழ் நிலையம் ஆறாம் பதிப்பு, 86.

பாலசுந்தரம் பிள்ளை (குறிப்புரை) தொல்காப்பியம் சென்னை, கழக வெளியீடு மு.ப./ 943, ம.ப.மே, 67.

வரதராசனார் மு. (உ.ஆ.) திருக்குறள்: சென்னை, கழக வெளியீடு, இரண்டாம் பதிப்பு, பிப்ரவரி, 75.


### துணைமை ஆதாரங்கள்


சுப்புரெட்டியார் ந. தமிழில் அறிவியல் : அன்றும் இன்றும், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மு.ப. ஜூலை 90.

மலையமான் : திருக்குறள் துளிகள்: சென்னை - ஒளிப் பதிப்பகம், முதற் பதிப்பு ஆகஸ்ட். 91

முத்துராசன், கு. சங்ககாலம்: சேலம், தேன்தமிழ்ப் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, பிப்ரவரி, 85.

முஸ்தபா, மணவை, காலம் தேடும் தமிழ்: சென்னை மீரா பப்ளிகேஷன், முதற்பதிப்பு, டிசம்பர் '87

துரைசாமிப் பிள்ளை, ஔவை சு, புறநானூறு, சென்னை, கழக வெளியீடு, முதற்பதிப்பு 1947, மறுபதிப்பு 1967.



செல்வி ந.தேவி
ஆய்வு மாணவி, தமிழ்மொழித் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 5.



தமிழ் உமது முரசமாகட்டும். பண்பாடு உமது கவசமாகட்டும். அறிவு உமது படைக்கலனாகட்டும்.
- பேறிஞர் அண்ணா

JANSONS CARPET MANUFACTURERS, No. 86, Arti Arcade, Dr. Radhakrishnan Salai, Mylapore, Madras-600 004. Phone : 8270333

